
திரவிய வனத்தில் திருக்குறள்
மகாநாடு பாகம் - II
தமிழறிஞர் கே. வி. குணசேகரன்

# என்னுரை

சுமார் இருநூறு புத்தகங்களுக்கு என்னுரை எழுதிவிட்டேன். இனிச் சொல்ல எதுவுமில்லை. ஒரு குறளுக்கு ஆறு கதைகள் வீதம் எழுதியுள்ளேன். அவற்றை நீங்கள் வாசிக்கலாம். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக உரையாக இருந்த குறளைச் சிறுவர்களுக்காகக் கதைகளாக்கியுள்ளேன். விமர்சிப்பாரில்லை. இங்கு அறிஞர்கள் என்று இருப்போர் தாம் எழுதும் விடயங்களை மட்டும் விமர்சிப்பர். விருதுகள் கொடுப்பர். பராட்டுவர். வாசிக்காமலே விமர்சனம் செய்வர். ஆனால் எனது நூல்களை விமர்சிக்க மாட்டார்கள். அதற்கான அறிவு யாரிடமும் இல்லை. திருமந்திரத்தை விமர்சிக்க வேண்டுமானால் மூவாயிரம் பாடல்களைப் படித்து விளங்க வேண்டும். பகவத்கீதையை விமர்சிப்பதானால் எழுநூறு சுலோகங்களைப் படித்துத் தெளிய வேண்டும். குறளை விமர்சிக்க 1330 குறள்களைப் படிக்க வேண்டும். மூன்றையும் விமர்சிப்பதானால் 5030 செய்யுள், சுலோகம், குறள்களைத் தெளிவாகக் கற்க வேண்டும். இது இயலாத காரியம். கற்றாலும் விளங்கினால் தான் விமர்சனம் செய்யலாம். அத்துடன் ஒருவரின் விமர்சனத்தில் இருந்து அவரது அறிவை வாசிப்போர் உணர்ந்து கொள்வர் என்ற பயமும் அவர்களிடம் இருக்கிறது. விமர்சனங்கள், விருதுகள், பாராட்டுக்கள் எனக்குத் தேவையில்லை. யாராவது விமர்ச்சித்தால் நான் விட்ட பிழைகளைத் திருத்தலாம் என்று நினைத்தேன். அது இந்த ஜென்மத்தில் நடைபெறாது. சேவல், பேட்டுக் கோழிக்குக் கூறியதாம். ‘‘நான் கூவாவிட்டால், பொழுது விடியாதென்று’’ அதற்குப் பேட்டுக்கோழி சொன்னதாம், ‘‘இன்று இரவு நீ கூவாதை. பொழுது விடிகிறதா என்று பார்ப்போம்’’ என்று அன்று இரவு சேவல் கூவவில்லை. ஆனால் பொழுது விடிந்துவிட்டது. இது ஒரு அருமையான கதை. இது போன்றது தான் எனது நூல்களினது கருத்துக்களும். ........................

நன்றி

***கே.வி.குணசேகரன்***
**தமிழறிஞர்**


திரவிய வனத்தில் திருக்குறள்
மகாநாடு பாகம் - II
தமிழறிஞர் கே. வி. குணசேகரன்

# திரவிய வனத்தில் திருக்குறள் மாநாடு – II

## 1

என்றுமில்லாதவாறு திரவியவனம் மிக மிக அழகாக அலங்கரிக்கப்பட்டது. அவ்வனவாசிகள் அனைவரும் மிகவும் உற்சாகமாக மகாநாட்டிற்கான அலங்காரங்களில் ஈடுபட்டிருந்தனர். அவ்வனத்தின் தலைவரான கதிரேசன் மகாநாட்டிற்கான வேலைகளைக் கண்காணித்துக் கொண்டிருந்தார். முதலாவது மகாநாட்டைவிடப் பத்துமடங்கு சுறுசுறுப்புடன் வனவாசிகள் செயற்பட்டனர். வேறு பல வனங்களில் இருந்தும் பல தொண்டர்கள் வந்து மகா நாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். அன்று நள்ளிரவுவரை தொண்டர்கள் உற்சாகத்துடன் வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைக் கதிரேசனும், தொண்டர்களும் செய்து கொண்டிருந்தனர். நள்ளிரவானதும் கதிரேசன் அவர்களைடுக்கு அனுப்பிவிட்டு தானும் சென்று விட்டார்.

மறுநாட்காலை மகாநாடு ஆரம்பித்தது. ஆராதனைகள் முடியக் கதிரேசன் உரையாற்றினார். ‘‘சபையோர்களே, மூன்று மாதங்களுக்கு முன்பு எமது வாழும் பிரதேசமான திரவிய வனத்தில் முதலாவது திருக்குறள் மகாநாட்டை ஆரம்பித்து ஐந்து நாட்கள் மிகவும் கோலாகலமாக நடாத்தினோம். நாம் எதிர்பார்க்காத வகையில் மகாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. உலகத்தில் உள்ளவர்கள் எமது நிகழ்வுகளைப் பார்த்து ரசித்துப் பாராட்டினார்கள். பேச்சாளர்கள் தம்மை நல்லமுறையில் தயார்செய்து அருமையாகப் பேசினார்கள். இந்த மகாநாட்டைப் பல வனங்களின் தலைவர்கள் தமது வனங்களில் நடாத்துமாறு கோரினர். மகாநாட்டை ஏற்பாடு செய்தவர்கள் திருக்குறள் மகாநாட்டை முழுமையாக இங்கேயே கொண்டாட வேண்டுமென விரும்பினர். அதனால் இங்கு கொண்டாட முடிவு செய்தோம். திருக்குறள் என்பது சமுத்திரம் போன்றது. அதனால் அதனைப் பல கோணங்களிலும் ஆராயலாம். அதனால் இம் மகாநாட்டை வேறு ஒரு முறையில் பிற வனங்களில் கொண்டாடுவோம் என முடிவெடுத்துள்ளோம். அடுத்த மகாநாட்டை சிங்கராஜவனத்தில் கொண்டாட நினைத்திருக்கிறோம்.

‘‘மகாநாட்டின் உரைகளைச் சிறப்பித்துக் கூறியவர்கள், மகாநாட்டில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவில்லை என்று குறைப்பட்டுள்ளனர். கலை நிகழ்ச்சிகள் மகாநாட்டைக் குழப்பிவிடும் என்று எமது நிர்வாகசபை நினைத்ததால் தான் கலைநிகழ்வுகளை நடாத்த நாம் விரும்பவில்லை. அதன்பின் தமிழறிஞர் அதுபற்றிச் சில நாட்கள் ஆராய்ந்தார். கலை நிகழ்வுகள் என்றதும் நானும் தவறாகத்தான் புரிந்து கொண்டேன். கலை நிகழ்வுகள் மகாநாட்டின் நோக்கத்தைக் குழப்பித் திசைதிருப்பிவிடும் என்று நினைத்தமையால்தான் கலை நிகழ்வுகளைத் தவிர்த்தோம். இம்முறை கலைநிகழ்வுகளைத் தினமும் நடாத்துவதென்று தீர்மானித்துள்ளோம் என்றதும் சபையில் பெரும் கரகோசம் எழுந்தது. அது அடங்கியதும் கதிரேசன் சொன்னார். ‘‘கலை நிகழ்வுகள்’’ யாவும் திருக்குறட் பாக்களால் தான் நிகழ்த்தப்படும். அந் நிகழ்வுகளைத்

தமிழ் அறிஞர் தான் புதிய முறையில் தயாரித்துள்ளார். அது பற்றியும், முதல் நடந்த மகாநாடு பற்றியும் அவர் இப்பொழுது உரையாற்றுவார்''.

''இனிமையான காலைப்பொழுதில் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்வு அடைகிறேன். முதலாவது மகாநாட்டிற்கு வருகை தந்த சபையோர்களைவிடப் பலமடங்கு அதிகமான சபையோர் கூடியிருப்பதைப் பார்க்கத் திருக்குறளை மேலும் மேலும் ஆய்வு செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்றுகிறது. அதற்கு எல்லையே இல்லை. நினைக்க நினைக்கப் புதுப்புதுக் கருத்துக்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன''.

''அந்த வகையில் இம்முறை கலை நிகழ்ச்சிகளைப் பல்வேறு வனங்களில் வசிக்கும் கலைஞர்களுடன் கலந்துரையாடி அரங்கேற்றவுள்ளோம். கலை நிகழ்ச்சிகள் யாவும் திருக்குறள் பாக்களைக் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது. முதலில் கடவுள் வாழ்த்து வில்லில் இசைக்கப்படும். அதற்காக வேத வனத்தைச் சேர்ந்த கர்நாடக வித்தகரான சிவா மகாதேவன் தனது இசைக்குழுவினருடன் வந்துள்ளார். அவருடன் நாற்பது கலைஞர்கள் வந்துள்ளனர். இது ஒரு வித்தியாசமான நிகழ்வு. இது மட்டுமல்ல இங்கு அரங்கேற்றப்படும் அனைத்துக் கலைநிகழ்ச்சிகளும் வித்தியாசமானவையாகவே இருக்கும். சொன்னவற்றைச் சொல்வதும், பேசியவற்றைப் பேசுவதும் கேட்பவர்களின் மனங்களைச் சோர்வடையச் செய்யும். நித்திரையை வரவழைக்கும். கேட்பதை விட்டு விட்டு எழுந்து செல்ல வைக்கும். அதனால் முடிந்தவரை புதுமையாகவே யாவற்றையும் அரங்கேற்ற முடிவு செய்துள்ளோம்''.

''சிவா மகாதேவன் சங்கீத ஆசிரியர். தனது இன மக்கள் அனைவரும் சங்கீதத்தில் வல்லுனராக வரவேண்டும் என்று நினைத்து விடுமுறை நாட்களில் சங்கீத வகுப்புக்களை இலவசமாக நடத்தி வருகின்றார். அதனால் வேத வனத்தில் வளரும் சிவா மகாதேவனின் இனத்தவர்களான குரங்குகள் அனைத்தும் அங்கு பயில்கின்றன. அத்துடன் பறவைகளும் பல்வேறுபட்ட மிருகங்களும் அங்கு பயில்கின்றன. சிவா மகாதேவன் வில்லிசைக்குழு, விவாதக் குழு, நாட்டியக் குழு, தவில் மிருதங்கக் குழு எனப் பல இசைக்குழுக்களை வைத்திருக்கின்றார். இன்று அவரது வில்லிசைக் குழுவினர் கடவுள் வாழ்த்தை வில்லில் இசைப்பர்'' என்று கூறிவிட்டு தனது ஆசனத்தில் அமர்ந்தார்.

சிவா மகாதேவன் தலைமையில் இருபது கலைஞர்கள் மேடைக்கு வந்து சபையோர்களை வணங்கியபின் அமர்ந்தனர். சிவா மகாதேவன் சபையோர்களை வணங்கினார். ''சபையோர்களே முதலில் நான் இம் மகாநாட்டின் தலைவரான கதிரேசனையும், தமிழ் அறிஞரையும் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன். கதிரேசன் சிறந்த தலைவர் மட்டுமல்ல, எல்லோரையும் கவரும்படி பேசவல்லவர். அடுத்த திருக்குறள் மகாநாட்டை எமது வனமான வேதவனத்தில் நடத்துமாறு வேண்டுகின்றேன். அடுத்துத் தமிழறிஞரைப் பற்றிச் சொல்ல வேண்டும். அவர் திருக்குறளைப் பல்வேறு தலைப்புக்களில் எழுதித் தயாரித்துள்ளார். இந்த வில்லிசையையும் அவர் தான் எழுத்தித் தந்தார்.

இதைவிடத் திருக்குறள் கதைகள், கேலிச்சித்திரங்கள், நடனங்கள், பாடல்கள் எனப் பலவகையான தலைப்புக்களில் வெவ்வேறு விதமாக எழுதிக் குவித்துள்ளார். அந்தவகையில் அவருக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன். இது ஒரு புதிய முயற்சி. அதனால் மிகவும் கவனமாகக் கேட்டு உங்களின் அபிப்பிராயங்களைக் கூறுங்கள். தற்பொழுது நூல்களை விமர்சிப்பது அற்றுப்போய்விட்டது. விமர்சனம் என்பது புகழிற்காகச் செய்யப்படுவதாகத்தான் எல்லோரும் நினைக்கின்றனர். அப்படியல்ல எந்தவொரு விடயத்தையும் பூரணமாகக் கற்றவர் யாரும் இல்லை. குறைகள் பல இருக்கும். அவற்றைக் கற்றோர் சுட்டிக் காட்டினால் நாம் திருந்துவதற்கு வாய்ப்பேற்படும். புத்தகங்களானால் அடுத்த பதிப்பில் திருத்தலாம். மேடைப் பேச்சுப் போன்ற கலைநிகழ்ச்சிகளில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டினால் அடுத்த மேடையில் அவற்றைத் திருத்திப் பேசலாம். இதைக் கலைஞர்கள் உணர வேண்டும். அடுத்து நாம் நிகழ்ச்சிக்கு வருவோம். எமது வனத்தில் வசிக்கும் சகல இனப்பறவைகளையும், மிருகங்களையும் எமது இசைக் குழுக்களில் சேர்த்துள்ளோம்.

## 2

இந் நிகழ்ச்சி புதிய முறையில் தயாரிக்கப்பட்டது எனத் தலைவரும், தமிழறிஞரும், சிவா மகாதேவனும் கூறியமையால் மகாநாட்டிற்கு வந்திருந்த அனைவரும் மனங்களை மேடையில் நிலைநிறுத்தினர். சிவா மகாதேவன் தனது வில்லைத் தொட்டு வணங்கிவிட்டுப் பாட ஆரம்பித்தார்.

''தந்தனத்தொம் என்று சொல்லியே வில்லில் பாட வந்தருள்வாய் ஆதி பகவன் என்று புராணங்கள் சிறப்பித்துக்கூறும் சிவ சூரியனான சிவபெருமானே……''

''சிவா மகாதேவன் ஐயாவே………. நிறுத்துங்கள், நிறுத்துங்கள் முதலில் விநாயகரை வணங்க வேண்டும். அதை நீங்கள் செய்யவில்லை. அதைவிட ஆதிபகவன் சிவசூரியன் சிவபெருமான் என்றென்று சம்பந்தமில்லாதவற்றைக் கூறிச் சபையைக் குழப்பத்துக்கு உள்ளாக்குகிறீர்கள்'' என்றது கலையரசி என்ற குயில்.

''இசையரசியான கலையரசியே, குளம்ப வேண்டாம். சபையையும் குளப்ப வேண்டாம். யாவும் விபரமாகக் கூறுவேன். சைவசமயத்தில் உள்ள அனைத்துத் தெய்வங்களும் சிவபெருமானுக்குள் அடங்கியுள்ளன. அதனால் சிவபெருமானை நினைத்தால் அனைத்துத் தெய்வங்களையும் நினைந்து வணங்கியதை ஒக்கும். அதைவிட நாம் திருக்குறளைப் பற்றியே வில்லில் இசைத்துப்பாட வந்துள்ளோம். அதனால் வள்ளுவர் முதலாவதாக குறளில் வணங்கிய சிவபெருமானையே நானும் வணங்கினேன். யாவும் தேவைக்கேற்பவும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்பவும் மாறும். இப்போ நாம் திருக்குறளைப் பற்றிப் பாடவுள்ளதால் வள்ளுவர் பாடியதையே நாமும் பாடுவோம். இதில் குறையில்லை. ஏனென்றால் திருக்குறள் வேறு நூல்களை விட மாறுபட்டது. அது கடவுள் வாழ்த்தில் தெளிவாகத் தெரிகிறது''.

‘‘விஷ்ணு புராணங்கள் விஷ்ணுதான் சூரியன் என்கின்றன. சிவபுராணங்கள் சிவபெருமான் தான் சூரியன் என்கின்றன. சிவ மகாபுராணம் விஷ்ணுவுக்கும் திருமாலுக்கும் இடையே ஒளிப்பிழம்பாகத் தோன்றி ஒளிப்பிழம்பின் அடியையும் நுனியையும் தேடிக் கண்டுபிடிக்கும்படி கூறியபோது இருவராலும் அடி முடியைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அத்துடன் அவ் ஒளிப்பிழம்பிலிருந்து வெளிப்பட்ட அனலின் வெப்பத்தையும், தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் அவ்விருவரும், ‘‘ஆதிபகவனே, எம்மால் உம்மிடமிருந்து வரும் வெப்பத்தைத் தாங்கிகொள்ள முடியவில்லை. அதனால் நீ ஆகாயத்தின் உச்சிக்குச் சென்று சிவசூரியனாகப் பிரகாசியுங்கள்’’ என்று இரந்தனர். அதன்படி அந்த ஒளிச்சுடர் ஆகாயத்திற்குச் சென்று சூரியனாகப் பிரகாசித்தது என்று ஒரு கதை சிவமகாபுராணத்தில் உண்டு. இங்குள்ளோர் பெரியபுராணத்தையும், கந்தபுராணத்தையுமே படிக்கின்றனர். அவர்களுக்காகத் தான் இதைச் சொன்னேன்.’’

‘‘இது நீங்கள் தேவையான இடத்தில் தேவையானவற்றைத் தகுந்த ஆதாரத்துடன் கூறுவீர்கள். எதை எப்படிச் சொன்னாலும் அவர்கள் மாறமாட்டார்கள்’’ என்றது தேவன் என்ற நரி.

‘‘திருந்தாதவர்களுக்கு எதைச் சொன்னாலும் புரியாது. அதைவிடு. இப்போது நான் கடவுளை வணங்கியபின் ஒரு மாணவன் எதைச் செய்ய வேண்டும்’’ சிவா மகாதேவன் கேட்டார்.

‘‘சாப்பிட வேண்டும்’’ என்றது தமிழரசன் என்ற மான்.

‘‘உனக்கு எப்போதும் சாப்பாட்டு நினைவு தான். ஒரு மாணவன் கடவுளை வணங்கிவிட்டுப் படித்தல் வேண்டும். கல்வி தான் வாழ்வின் முன்னேற்றத்துக்கான மூலகாரணி. அதனால் நாம் கல்வியைப் பற்றி வள்ளுவர் கூறியதைப் பார்ப்போம்.’’

‘‘சிவா மகாதேவன் இசையுடன் பாடினார். பக்கவாத்திய கலைஞர்கள் அவருடைய பாடலுக்கேற்ப இசையை வழங்கினர். ‘‘கற்க கசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக’’ மீண்டும் அக்குறளை இசையுடன் பாடினார். அன்று ஏராளமான மாணவர்கள் வந்திருந்தனர். மரங்கள் சலசலக்கும் ஒலி சிறிதாகக் கேட்டது. ‘‘அன்பானவர்களே எல்லோரும் கட்டாயம் கற்க வேண்டும் என்று பெரியவர்கள் கூறிய நூல்களை குற்றமற விளங்கிக் கற்றல் வேண்டும். அவ்வாறு கற்றபின் அந்நூல்கள் கூறியபடி வாழ வேண்டும்.’’

‘‘கற்றபின் வகுப்பறைகளில் ஆசிரியர்கள் நின்று கற்பிக்க வேண்டும். தற்பொழுது சில ஆசிரியர்கள் வகுப்பு ஆரம்பித்த நேரத்தில் இருந்து வகுப்பு முடியும் வரை இருந்தே கற்பிக்கின்றனர்’’ என்று குறுக்கிட்டுச் சொன்னது ஆரூரன் என்ற காகம்.

‘‘டேய் ஆரூரா…. இடையிடையே எனது பாடல்களைக் குழப்புகிறாய்….’’ என்று சிவ மகாதேவன் கண்டிக்கச் சிவா என்ற நரி சொன்னது. ‘‘ஆரூரன் தவறாகச் சொன்னானா… உண்மையைத் தானே சொன்னான். தவறாகச் சொல்லவில்லையே’’ சபையோர் பலமாகச் சிரித்தனர்.

‘‘வள்ளுவர் அப்படிச் சொல்லவில்லை. வாழ்க்கையை வளம்படுத்தக் கூடிய நல்ல நூல்களை தெளிவாக விளங்கிக் கற்றல் வேண்டும். அவ்வாறு விளங்கிக் கற்றபின் அந் நூல்கள் கூறியவாறு வாழவேண்டும்’’ என்றார் சிவ மகாதேவன்.

‘‘உழைப்பதற்காகத் தானே கற்கிறார்கள். எல்லா நூல்களிலும் மது வகைகளைக் குடிக்கக் கூடாது. பொய் சொல்லக் கூடாது. களவெடுக்கக் கூடாது என்று சொல்கின்றன. ஐந்தாம் வகுப்புப் படிக்கும் மாணவனுக்கும் இது தெரியும். ஆனால் உயர்தர வகுப்பில் கற்பிக்கும் நல்லைநாதன் என்ற குரங்கு ஆசிரியர் பண்டிதர், கலைப்பட்டதாரி. கலாநிதிப் பட்டம் பெறப் படிக்கிறார். ஆனால் பெருங் குடிகாரன். வகுப்பு நேரங்களில் கூடக் குடித்துவிட்டுத் தான் வகுப்புக்கு வருவார். அவர் கல்விப் பணிப்பாளரின் மனைவியின் சகோதரர். அதனால் கண்டிக்க அதிபருக்குப் பயம். இப்படியான கல்வி அதிகாரிகளால்தான் எமது கல்வி அழிந்து கடை நிலைக்கு வந்தது.

‘‘நீ சொல்வது சரி. பலமுறை நாம் கல்விப் பணிப்பாளருக்குச் சொல்லியும், அவர் நடவடிக்கை எடுக்கவில்லை’’ என்றது சிவா.

‘‘எமது வனப்பிரச்சினையைச் சொல்லாதே. அதைவிடு’’ என்ற சிவமகாதேவன் அடுத்த குறளை இராகத்துடன் பாடினார். ‘‘எண்என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும் கண் என்ப’’ வாழும் உயிர்க்கு எல்லா உயிர்களுக்கும் இரண்டு கண்கள் உண்டு. ஒரு கண் எண்களான கணிதத்தைக் குறிக்கிறது. அடுத்தது எழுத்தைக் குறிப்பது. எண்ணையும் எழுத்தையும் கற்காதவனின் கண்கள் குருட்டுக்கண் என்று வள்ளுவர் சொல்கிறார்.’’

‘‘உண்மைதான் எனது தம்பி நடராசா படிக்காதவன். வியாபாரம் செய்தான். வாடிக்கையாளர்கள் தமக்குத் தேவையான பொருட்களை ஒரு கடதாசியில் எழுதி யாரிடமாவது கொடுத்தனுப்புவர். அவனுக்கு வாசிக்கத் தெரியாது. கூட்டக் கழிக்கத் தெரியாது. கடையை அவன் ஆரம்பிக்கும்போது நான் அவனுக்குப் புத்திமதி கூறினேன். அவனும், அவனது மனைவியும் நான் பொறாமையால் கூறுகிறேன் என்றனர். ஒரு மாதத்தில் கடை மூடப்பட்டது. பின் விவசாயம் செய்தான். விளைபொருட்களைச் சந்தைக்குக் கொண்டு சென்று விற்றபோது வியாபாரிகள் ஏமாற்றி விட்டனர். அந்தத் தொழிலையும் நிறுத்திவிட்டு கூலிவேலை செய்கிறான்.’’

‘‘படியாதவனின் முகத்தில் இருப்பவை கண்கள் அல்ல. அவை புண்கள் என்று வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சொன்னதையும் பலர் கேட்பதில்லை’’ என்றது சிவா.

‘‘நல்லவற்றைச் சொல்லும்போது உனக்கு மாறாட்டம் வந்துவிடும். கண்டபடி அலட்டுவாய். பேசாமலிரு’’ என்ற சிவா மகாதேவன் பாட ஆரம்பித்தார். இசைக்கலைஞர்கள் சில நிமிடங்கள் தமது கருவிகளை இனிமையாக இசைத்தனர். சிவா மகாதேவன் பாடத்தைத் தொடங்கினார். ‘‘உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்…’’ அப்படியென்றால் என்ன…? சிவா கேட்டது. ‘‘கற்றவர்கள் எப்பொழுதும் மகிழ்வுடன் சிரித்துச் சிரித்துப் பேசுகிறார்கள். அவர்களோடு பழகியவர்கள் அவர்களின் பிரிவைத் தாங்கமாட்டார்கள். இன்னும் சிறிது நேரம் பேசியிருக்கலாம் என்று நினைந்து வருந்துவர்’’.

‘‘ஓ உண்மைதான் நல்லைநாதன் மெத்தப் படித்தவர். அவரைக் கண்டவர்கள் தலைதெறிக்க ஓடி மறைவர். ஏன் அவர் கற்கவில்லையோ…..’’ சிவா கேட்டது.

‘‘கற்றலில் பல வகை உண்டு. தொழிலுக்காகக் கற்றல், புகழுக்காகக் கற்றல், வருமானத்திற்காகக் கற்றல், மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காகக் கற்றல்….’’

‘‘ஓ கற்றலில் இத்தனை வகையுண்டோ…..’’

‘‘கற்றவனுக்குத் திமிர், செருக்கு தன்னைவிடக் கற்றவர் யாருமில்லை என்ற நினைப்பிருக்கக் கூடாது. இன்னும் இன்னும் கறறு நான் தேவையானவர்களுக்கு உதவ வேண்டும் என்ற நினைப்பும், பணிவும் வேண்டும். எம்மோடு கூட வாழும் தமிழறிஞர், பெரியவர் கதிரேசனைப் போல வாழவேண்டும். கதிரேசன் கற்கவில்லை. ஆனால் கற்றோரைவிட அறிவும், மேன்மையும் உடையவர். தமிழறிஞர் கற்றவர். கற்றபடி வாழ்பவர். அவர்களைப் போல வாழவேண்டும். தமிழறிஞர் பேசினால் கேட்டுக்கொண்டே இருக்கலாம். அதற்குள் அவருக்கென ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்து விட்டதே என்று எல்லோரும் கவலைப்படுவர். இனி எப்போது அவரது பேச்சைக் கேட்கலாம் என ஏங்குவர்’’.

‘‘உண்மைதான். கதிரேசனையும், தமிழறிஞரையும் காணத்துடிப்போர் நல்லைநாதனைக் கண்டதும் ஓட்டம் பிடிக்கின்றனர். இப்போது கல்விப் பணிப்பாளர் ஓய்வுபெற்று விட்டார். அவரது மனைவியை இப்போ மாணவர்களே கேலி செய்கின்றனர்..’’

‘‘கல்வி கற்பவர்கள் எப்படி ஆசிரியர்களுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் வள்ளுவர் கூறுகிறார்…..’’

அப்போது சிவா குறுக்கிட்டுச் சொன்னது. ‘‘வள்ளுவரைப்போல பல அறிஞர்கள் மாணவர்கள் எவ்வாறு ஆசிரியரைப் பணிந்து கல்வி கற்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாணவர்கள் அறிவிற் குறைந்தவர்கள், பெற்றோர் சொற்படி நடப்பவர்கள். ஆனால் ஆசிரியர்கள் அறிவில் மேம்பட்டவர்கள். பிறருக்குப் புத்திமதி

கூறத்தக்கவர்கள். அவர்களிற் சிலர் வள்ளுவர் கூறிய படியா நடக்கின்றனர். நல்லைநாதன் போன்றோர் மாணவர்களைக் கெடுக்கின்றனர்''.

''பரந்த உலகில் எல்லோரும் ஒரு மாதிரி வாழ முடியாது. எனினும் ஆசிரியர்கள் சமூகத்திற்கு முன்மாதிரியாக வாழவேண்டும். தீயவர்கள் திருந்த மாட்டார்கள். மற்றவர்களையும் திருந்தவிட மாட்டார்கள்''.

''ஐயா, சிவா குறும்புக்காரன். அவனது பேச்சை விட்டுவிட்டு உங்களது பேச்சை ஆரம்பியுங்கள்'' என்றது கலையரசி''.

''உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் கடையரே கல்லாதார்''. மிகவும் இனிமையாக அக்குறளைப் பாடினார் சிவ மகாதேவன். பக்கவாத்தியக் கலைஞர்கள் அற்புதமாக அப்பாடலுக்கு இசை அமைத்தனர்.

''சபையோர்களே மிக மிக வறிய ஏழையொருவன் ஒரு பணக்காரனிடம் சென்று, அவனை வணங்கித் தாழ்ந்து நின்று இரப்பதைப்போல, மாணவர்கள் ஆசிரியரை வணங்கி, தாழ்ந்து நின்று கல்வி கற்க வேண்டும். அப்படிக் கற்பவர்கள் தான் மேலான நிலையை அடைவர். ஏனையோர் கற்காத மூடராவார். கற்றாலும் கற்றபடி வாழாதவர்கள் இழிந்தவராவார்''. என்று சிவமகாதேவன் இனிமையாகப் பாடினார். அவரது பாடலுக்கேற்ப இசையை இசைவல்லுனர்கள் வழங்கினர். ''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தும் ஊறும் அறிவு'' சபையோர் மிகவும் அமைதியாக இருந்து பாடலைக் கேட்டு ரசித்தனர். கதிரேசன் தமிழறிஞருக்குச் சொன்னார், ''இவ்வளவு அருமையாகச் சிவமகாதேவன் பாடுவார் என நான் நினைக்கவில்லை. தேவகானம் போல இருந்தது''.

''சபையோர்களே, நிலத்தைத் தோண்டத் தோண்ட நீர் ஊறும். அதுபோல பல்வேறு அறிவியல் நூல்களைப் படிக்கப் படிக்க அறிவு மேம்படும்''.

''நல்லைநாதன் பல்வேறுபட்ட அறிவு நூல்களைப் படித்துப் படித்து அறிவு மேம்பட்டு மூளை குழம்பிவிட்டது'' என்றது சிவா.

''கதையாதை, சிவ மகாதேவன் அதட்டினார். நீ ஒருத்தனைப் பற்றித்தான் அடிக்கடி குறுக்கிட்டுப் பேசுகிறாய். படித்த பண்புள்ள கற்றபடி வாழும் பல பெரியவர்கள் இங்கிருப்பது உனக்குத் தெரியாதா..? தமிழறிஞர், பேரறிஞர், கலையரசி போன்ற கற்ற உத்தமர்களை உனக்கு ஏன் தெரியவில்லை'' கோபித்தார் சிவ மகாதேவன்.

''சிவா கரங்கூப்பி வணங்கி, என்னை மன்னிக்க வேண்டுகிறேன். ஆத்திரத்தால் மதிமயங்கி விட்டேன்'' என்று பாடத்தொடங்க இசைக் கலைஞர்கள் அப்பாட்டிற்கு ஏற்றவாறு இசை அமைத்தனர். சபையோர் ஆர்ப்பரித்தனர்.

சிவா மகாதேவன் வில்லில் தாளத்திற்கேற்றவாறு தட்டித் தட்டி பாடத் தொடங்கினார். ‘‘யாதானும் நாடாமால் ஊர் ஆமால், என்னொருவன் சாந்துணையுங் கல்லாத வாறு’’ மீண்டும் அக் குறளை இசையுடன் பாடினார். சபையோர் மெய்மறந்திருந்தனர்.

‘‘கற்காத மூடர்களுக்குப் பிறந்த நாடு தான் சொந்தமான நாடு. ஏனைய நாடுகள் அந்நிய நாடுகளாகும். ஆனால் கற்றவர்களுக்கு உலகில் உள்ள நாடுகள் எல்லாம் பிறந்த நாடுகள் போலச் சொந்த நாடாகும்’’.

‘‘சும்மா பொருத்தமில்லாத கதைகளைச் சொல்லாதைங்கோ. ஒவ்வொரு நாடு ஒவ்வொரு மொழி பேசும். அதெல்லாம் கற்க முடியுமே. தமிழறிஞருக்கு நான்கு மொழி தெரியும். இந் நான்கு மொழியும் பேசாத நாட்டிற்குச் சென்றால் எப்படி அவர்களுடன் பேசுவது. மேடையில் உணர்ச்சி வசப்பட்டுக் கண்டபடி பேசிவிடுவீர்கள்’’ என்றது சிவா.

‘‘உலகில் வாழும் சகல நாட்டு மக்களும் ஆங்கிலத்தைப் பொதுமொழியாகக் கொண்டு அதைப் படிப்பர். இரண்டு வருடங்களுக்கு முன்பு சீனாவுக்குத் தமிழறிஞர் சென்றவர். அங்குள்ளவர்கள் தமிழறிஞரிடம் வந்து திருக்குறளைப் பற்றி பேசும்படி கேட்டனர்’’.

‘‘தமிழறிஞருக்குச் சீனமொழி தெரியுமே…? பிறகும் ஏமாற்றுக்கதை சொல்கிறீர்கள்’’ என்றது சிவா.

‘‘உனக்குச் சொந்த அறிவும் இல்லை. சொன்னாலும் புரிந்து கொள்கிறாய் இல்லை. இப்ப ஆங்கிலம் உலகின் பொதுமொழி என்று சொன்னனான். உன்னை இனிமேல் இசைநிகழ்ச்சிக்குக் கூட்ட வரமாட்டன்…’’ கோபித்தார் சிவ மகாதேவன்.

‘‘மன்னித்துக் கொள்ளுங்கோ, மன்னித்துக் கொள்ளுங்கோ, தோப்புக்கரணம் போடுறன்’’ என்று எழுந்தது சிவா.

‘‘இருடா, இருடா ஒன்றும் தெரியாது. அன்று சீனநாட்டில் உள்ள மகாநாட்டு மண்டபத்தில் ஏராளமான அறிஞர்களும், ஏனையோரும் கூடியிருந்தனர். தமிழறிஞர் திருக்குறளில் அறம் பொருள், இன்பம் பற்றி ஒரு மணிநேரம் பேசினார். ஆரம்பத்தில் அவரது பேச்சை மொழிபெயர்த்தனர். சபையோர் ஆங்கிலம் தமக்குப் புரியும் என்று கூறியதால் மொழிபெயர்க்கப்படவில்லை. அவரது பேச்சைக் கேட்ட சீனமக்கள் மறுநாளும் பேசுமாறு வேண்ட தமிழறிஞர் மறுநாளும் பேசினார். சீனப் பத்திரிகைகள் அவரது பேச்சை வெளியிட்டன. அதனால் அவருக்குப் பெரு மதிப்பும், மரியாதையும் உண்டானது. பெரும் பெரும் சீன அறிஞர்கள் இப்போதும் அவருடன் பேசி மகிழ்கின்றனர். அதன்பின் தமிழறிஞர் சீன நாடும் எனது தாய் நாடுதான். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று ஈழத்துப் புலவரான பூதத் தேவனார் கூறியது மெய்யாகிவிட்டது.

‘‘சபையோர்களே, ஒருவர் வாழும்போது கற்ற கல்வியானது அப் பிறப்பில் மட்டுமல்ல அவருக்கு ஏற்படவிருக்கும் ஏழு பிறப்புக்களுக்கும் உதவும் தன்மை வாய்ந்ததாகும் என்று வள்ளுவர் கூறுகிறார்’’. சிவா மகாதேவன் இனிமையான குரலில் அத் திருக்குறளைப்பாட இசைக்கலைஞர்கள் இசையை மீட்டினர். ‘‘ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்பு உடைத்து’’ தேனாக இனித்தது அக்குறளைப் பாடினார்.

‘‘சபையோர்களே, கடவுள் வாழ்த்தாக நான் கல்வியைப் பாடியமைக்குக் காரணம் கல்வியும் ஒரு கடவுள்தான். நன்றாகக் கற்ற ஒருவருக்கு நிகரானவர் யாரும் இல்லை. கல்வித் தெய்வமான சரஸ்வதி அவருக்கு வேண்டியவற்றையெல்லாம் அள்ளிக் கொடுப்பாள். அவர் கற்ற கல்வி அவருக்கு மட்டுமல்லாது உலகிற்கே உதவும் தன்மை வாய்ந்தது. நன்கு கற்ற விஞ்ஞானிகளால் உலகம் நன்மை பெறுகிறது. அக் கல்வி ஒருவர் எடுக்கும் ஏழுபிறவிகளுக்கும் அவரோடு தொடர்ந்து வரும். கல்வியைத் தவிர ஒருவர் தேடும் பணம், பொருள், காணி, பூமி, ஆபரணங்கள் என்பவை கூட வராது’’.

‘‘உதை நம்பச் சொல்கிறீர்களா…? பணம், பொருளைப்போலக் கல்வியும் கூட வராது. எங்கை வந்ததைக் காட்டுங்கோ பாப்பம்’’ என்றது சிவா.

‘‘எமது பாடசாலை அதிபரான ஆறுமுகம் என்ற கரடியார் வீமன் என்ற நாயை வளர்த்து வருகிறார்….’’

சிவா மகாதேவன் வில்லில் தட்ட ஆரம்பித்தபோது, ஆறுமுகம் வீமன் என்ற நாயை வளர்ப்பது எல்லோருக்கும் தெரியும். அதைச் சொல்லவே வில்லைத் தட்டுகிறீர்கள்…’’

‘‘அவசரப்படுபவனுக்கு புத்தி மட்டு என்று பெரியவர்கள் சொல்வார்கள். நீ கற்பூரம் கொழுத்த முன்னர் சன்னதம் ஆடுறாய். பொறுமையாக நான் சொல்வதைக் கேள். ஒருநாள் ஐந்தாம் தரத்தின் வகுப்பறைக்குள் ஒரு பாம்பு ஒன்று வந்துவிட்டது. ஆசிரியரும் பிள்ளைகளும் பயத்தால் அலறியபடி வெளியே சென்று விட்டனர். சிறிது நேரத்தில் சில ஆசிரியர்களும், பாதுகாப்பு ஊழியர்களும் வந்து பாம்பைத்தேடினர். பாம்பைக் காணவில்லை. எல்லா இடமும் தேடியும் பாம்பைக் காணாததால் தரம் ஐந்து மாணவர்களை ஆசிரியர் வெளியே அழைத்துச் சென்று வேப்பமரநிழலில் அமர்த்திக் கற்பித்தார்’’.

‘‘அப்போது யாரும் எதிர்பாராத வகையில் பாடசாலைக்கு வீமன் வேகமாக ஓடிவந்து ஆறுமுகத்தின் கையை நக்கியது. திடுக்கிட்டு ஆறுமுகம் திரும்பிப் பார்க்க வீமன் மிக்க மகிழ்வுடன் வாலை அசைத்தபடி குரைத்தது. ‘‘நீ ஏன் இங்கு வந்தாய். பிள்ளைகள் பயப்படப் போகிறார்கள்’’ என்று கூறியபடி வீமனை ஆறுமுகம் பிடித்தார்.

அப்போது அங்கு வந்த அவரது மகள் ஆரணி, ''மாமா வந்தபோது திறந்த பாடசாலையைச் சாத்த மறந்து விட்டார். அது இங்கே வந்து விட்டது'' என்றாள்.

''ஆறுமுகத்தின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட வீமன் தரம் ஐந்து வகுப்பறையை நோக்கி விரைவாக ஓடியது. ஆறுமுகமும் சில ஆசிரியர்களும் அதன் பின்னே சென்றனர். வீமன் தரம் ஐந்து வகுப்பறைக்குள் சென்று குப்பைகள் போடும் கூடையைத் தனது முன்னங்காலால் பிரட்டியது. அதற்குள் இருந்த பாம்பு வெளியே வர வீமன் அதைப் பிடித்துக் கொண்டது. அதன் இறுக்கமான பிடியால் பாம்பு இறந்து விட்டது. இப்போது சொல் ஒரு பிறவியில் கற்றகல்வி பிறவிகள் தோறும் தொடர்ந்து வருமா? வராதா…?''

''வரும்….வரும்… நான் புத்தியில்லாதவன்….'' என்று சிவா சொல்ல அப்படிச் சொல்லாதே. புத்தி இல்லாதவன் என்று சொல். புத்தி இல்லாதவன் என்றால் அறிவில் சூரியனை ஒத்தவன் என்று பொருள்…'' என்று சிவா மகாவேன் சொன்னார். ''அப்போது சில கோப்புக்களுடன் அங்கு வந்த வடிவேலன் என்ற குதிரை எதையோ சொல்ல வாயுன்னியது. அப்போது வீமன் வடிவேலன் அணிந்திருந்த நிறக் காற்சட்டையின் பையைக் கௌவிக் கிழித்தது. அதனுள் இருந்து இனிப்புக்கள் கீழே விழுந்தன''.

''சில காலமாக மாணவர்கள் சிலர் மயக்கமடைந்தும், தடுமாறியும், நடுங்கியும் வருகின்றனர். அதற்குக் காரணம் போதை கலந்த இனிப்புக்களை உண்பது என்று வைத்தியர் கூறியிருந்தார். ஆறுமுகமும், ஆசிரியர்களும் எவ்வளவோ முயன்றும் போதை கலந்த இனிப்பை விற்பவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அன்று வீமன் கண்டுபிடித்து விட்டது. வடிவேலன் பெரும் கடவுள் பக்தன்போல, நீறும், உருத்திராட்சமும் அணிந்திருப்பான். சிற்றூளியனான அவன் எல்லோருடனும் அன்பாகப் பேசி அனைவரையும் கவர்ந்தமையால் யாரும் அவனைச் சந்தேகிக்கவில்லை. அவன் கெஞ்சி மன்றாடிய போதும் அதைக் கவனிக்காது ஆறுமுகம் அவனைக் காவல்துறையினரிடம் ஒப்படைத்தார். இப்பசொல் ஒரு பிறவியில் கற்கும் கல்வி பிறப்புக்கள் தோறும் தொடர்ந்து வருமா…? வராதா…?''

''வரும் ஐயா வரும்'' என்றது சிவா.

சில கணங்கள் சபையைப் பார்த்த சிவா மகாதேவன் பூரிப்புடன் சிரித்தார். சபை அமைதியாக இருந்தது அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதனால் உற்சாகமடைந்த சிவா மகாதேவன் ஒன்பதாவது குறளை மிகவும் இனிமையாகப் பாடினார். சிறுவர்கள் கூட மிகவும் அமைதியாக இருந்தனர். ''தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்'' மீண்டும் அக்குறளைப் பாடினார். பின்பு, ''சபையோர்களே வள்ளுவனது வார்த்தைகள் உறுதியானவை. மிகுந்த நற்பயனைத் தருபவை. அவர் சொல்கிறார் கற்றவர்கள் எப்பொழுதும் மகிழ்வுடன் இருப்பார்கள்.

அதற்குக் காரணம் தன்னைப்போல கற்றவர்களும் தாம் கற்ற கல்வியால் பெரும் இன்பமடைவர் என்று அவர் நினைப்பதால்தான் இன்பமடைகிறார். அதனால் கற்றவர்கள் மேலும், மேலும் கற்கவே விரும்புவர்''.

''நீங்கள் இவ்வாறு சொல்கிறீர்கள். பல்வேறு வகைப்பட்ட நூல்களைக் கற்றுப் பட்டம் பெற்ற வேந்தனார் என்ற குரங்காரின் மனைவி, ''சிவா என்னுடைய கணவர் எந்தநேரமும் படித்துக் கொண்டேயிருப்பார். என்னுடைய தம்பி ஆசிரியர் மேற்கொண்டு படிப்பதில்லை. கமம் செய்கிறான். நல்ல வருமானம், அதைத் சொன்னால் கேட்கிறாரில்லை. நான்கு பெம்பிளைப் பிள்ளையள் இருக்குச் சீதனத்திற்கு எங்கை போறதோ தெரியாது'' என்று புலம்புறாள்'' அது சரி தானே.

''மேலோட்டமாகப் பார்த்தால் சரி போலத்தான் தெரியும். ஆனால் ஆராய்ந்து பார்த்தால் தான் உண்மையான நிலை தெரியும். வேந்தனாருக்குள்ள மதிப்பும் மரியாதையும் பெயரும் புகழும் இங்கு யாருக்கு இருக்கிறது…?''

அப்போது சிவா குறுக்கிட்டுச் சொன்னது, ''மதிப்பும் மரியாதையும் பெயரும் புகழும் சேரவேண்டுமா..'' இல்லை வேந்தனாரின் பெண்பிள்ளைகளைக் கரை சேர்க்குமா…? எல்லாவற்றையும் பேசலாம். ஆனால் பணமில்லாதவன் பிணமெண்டு ஒரு முதுமொழி இருக்கு''

''சிவா மகாதேவன் பலமாகச் சிரித்தார். பின்பு சொன்னார்''

''வேந்தனாரின் மூத்த மகள் விசேட வைத்திய நிபுணர். இரண்டாவது மகள் பொறியியலாளர். மூன்றாவது மகளும் நான்காவது மகளும் வைத்தியர்கள். அவர்களின் ஒரு மாத வருமானம் எவ்வளவு என்று தெரியுமா..? பல இலட்சம் ரூபா. ஒரு வருட வருமானம் ஒரு கோடி வரும். மூத்த பெண்ணை ஒரு விசேட வைத்திய நிபுணர் விரும்புகிறார். ஆனால் அவள் விரும்பவில்லை. மாப்பிள்ளையின் பெற்றோர் வேந்தனாரைச் சந்தித்துக் கதைத்தனர். அடுத்த மாதம் அவர்களுக்குத் திருமணம் நடைபெற உள்ளது. இரண்டாவது மகள் பொறியியலாளர். பட்டணத்தில் பெரும் வணிகனாக இருக்கும் தணிகாசலம், தனது இளைய மகனுக்கு அவளைத் திருமணம் செய்ய விரும்பி என்னிடம் வந்து வேந்தனாரிடம் பேசும்படி கேட்டார். நான் அதை வேந்தனாரிடம் சொல்லிச் சம்மதம் பெற்று விட்டேன். தணிகாசலம் ஊரில் உள்ள பிள்ளையார் கோவில் இராச கோபுரத்தைத் தனது சொந்தச் செலவில் கட்டுகிறார். இதைவிட வேந்தனாரின் மனைவியின் சகோதரர் சம்பாதிப்பானா…? அவனுக்கு ஒரே ஒரு பெம்பிளைப் பிள்ளை. அவள் படிக்க விரும்பவில்லை. கோடிக்கணக்கில் சொத்து இருந்தும் அவளுக்குத் திருமணமாகவில்லை என்று பெற்றோர் பெரும் துன்பப்படுகின்றனர்''.

''எல்லாம் விதிப்பயனே?'' சிவா கேட்டது

‘‘சபையோர்களே இயலாதவர்கள் தான் பல்வேறு சாட்டுக்களைச் சொல்லிச் சோம்பேறிகளாக வாழ்கின்றனர். தன்னில் நம்பிக்கை உள்ளவன் முயற்சியால் முன்னேறுவான் என்று வேந்தனார் அடிக்கடி சொல்வார். வேந்தனாருக்கு பத்து வயதாகியபோது தகப்பனார் இறந்து விட்டார். அவருக்கு ஐந்து சகோதரங்கள். மிகவும் கஷ்டப்பட்ட குடும்பம். காலையில் எழுந்து பாடசாலைக்குச் சென்று விடுவார். ஒரு மணிக்குப் பாடசாலை விட்டதும் தாமோதரன் என்ற ஒட்டகம் நடாத்திவந்த வியாபாரத் தலத்தில் சிப்பந்தியாக வேலை பார்ப்பார். கடைக்கு வாடிக்கையாளர்கள் வராத நேரங்களில் மிக்க கவனத்துடன் படிப்பார். அப்படிப் படித்துத்தான் பேராசிரியரானவர். அவரது ஐந்து சகோதரர்களும் அவரைப் போலவே ஓய்வு நேரங்களில் கற்று உயர்ந்த உத்தியோகங்களில் இருக்கின்றனர். நான் ஏழை, தகப்பன் இல்லை இது எனது விதி என்று நினைத்திருந்தால் அவர் இந்த நிலைமைக்கு வருவாரா? விதியை முயற்சியால் வெல்லலாம். வேந்தனாரின் மனைவியின் சகோதரன் சோதிடத்தில் நம்பிக்கை உள்ளவன். சாதகங்கள், சுவாமிகள், அவதாரங்கள் என்று கூறி அருள் வாக்குச் சொல்வோரின் சொற்களையே நம்புவான். இந்துக்கள் கடவுளைவிட மேற்சொன்னோர்களையே நம்புவார்கள்’’.

அப்போது சிவா குறுக்கிட்டுக் கேட்டது, ‘‘அப்ப சோதிடம் பொய்யோ…’’ சுவாமிமார், சிவனடியார் சொல்வதும் பொய்யோ…? இதுக்கு மேலை சொல்லாதைங்கோ. கல்லெறிவார்கள்’’

‘‘திருமூலரும், நாயன்மாரும் கடவுளை மட்டும் நம்புங்கள். நீங்கள் செய்யப் போகும் செயலை இறைவனிடம் ஒப்படைத்து விட்டுக் கவலைகளின்றி மிக்க மகிழ்வுடன் முயற்சி செய்யுங்கள். கடவுளின் அருளால் அச்செயல் நிறைவேறும்’’ என்று சொல்லியுள்ளார். அதனால் நான் கடவுளைத் தவிர வேறு எவனையும் நம்புவதில்லை எனது ஆறு பிள்ளைகளும் நானும் கடவுளின் அருளால் சகல செல்வங்களையும் பெற்று மகிழ்வுடன் வாழ்கிறேன்’’ சில நிமிடங்கள் மௌனமாகச் சிரித்துச் சபையோரைப் பாத்த சிவா மகாதேவன் பத்தாவது திருக்குறளை மிகவும் இனிமையாக பாடினார். பக்க வாத்தியக் கலைஞர்கள் மிகுந்த மகிழ்வுடனும் உற்சாகத்துடனும் இசையமைத்தனர்.

‘‘கேடுஇல் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடு அல்ல மற்றையவை’’ மீண்டும் அக்குறளை இனிமையாகப் பாடிய சிவா மகாதேவன்’’ அன்பானவர்களே, ஒருவன் பல்வேறு விதமான செல்வங்களைத் தமது வாழ்நாளில் தேடுகிறார். பணம், பொருள், ஆபரணங்கள், பூமி, பசுக்கள், கல்வி என்பனவெல்லாம் நாம் தேடும் செல்வங்களாகும். இவற்றுள் கல்வியைத் தவிர ஏனைய செல்வங்கள் யாவும் அழியும் தன்மை வாய்ந்தன. சில வருடங்களுக்கு முன்பு புலிகளுக்கும் சிங்கங்களுக்கும் பெரும் போர் நடைபெற்ற போது எமது காடு தீப்பற்றி எரிந்து நாசமானது. பணம், பொருட்கள் கள்வர்களால் கவரப்படும். கருணாகரச் செட்டியார் பெரும் தனவந்தர். பல வர்த்தக நிலையங்களுக்குச் சொந்தக்காரர். அவரது வியாபார நிலையங்கள் கொள்ளையிடப்பட்டும், தீயிடப்பட்டும்

அழிந்தமையினால் அவர் இப்போது வயோதிபர் மடத்தில் தங்கியுள்ளார். இலவசமாக வறியோர் முகாம்களைப் பராமரிக்கிறோம் என்று சொல்லும் பிரமுகவர்கள் அவாகளிடம் இலட்சக்கணக்காகப் பணத்தை இரகசியமாகப் பெறுகின்றனர். செட்டியார் தனது தோப்பை விற்றுப் பல லட்சம் ரூபா கொடுத்துள்ளார். வெளிநாடுகளில் இருக்கும் நம்மவர் தமது பெற்றோரைப் பராமரிக்கப் பணம் அனுப்புகின்றனர். கடவுளால் படைக்கப்பட்ட எல்லாப் பொருட்களும் அழியும். ஆனால் கல்வி அழியாது. அது பிறவிகள் தோறும் தொடர்ந்து வந்து வாழ்வளிக்கும். எனக்கு ஒரு மணி நேரமே ஒதுக்கப்பட்டது. அது நிறைவடைந்து விட்டது. அதனால் தங்களிடமிருந்து விடைபெறுகின்றேன் என்று வணங்கினார் சிவா மகாதேவன்.

மகாநாட்டின் தலைவரான கதிரேசன் மெதுவாக எழுந்து வந்து தனது தும்பிக்கையை உயர்த்தி மெதுவாக பிளிறினார். அதைக் கேட்டு உற்சாகம் மேலிட்ட சபையில் இருந்த யானைகள் பிளிறின. சிங்கங்கள் கர்ச்சித்தன. புலிகள் உறுமின. நரிகள் ஊளையிட்டன. பறவைகள் தமது இருப்பிடத்தை விட்டு எழுந்து மண்டபத்தின் மேலே பறந்தன. குயில்கள் பாடின. கிளிகளும், மைனாக்களும் இனிமையாக வாழ்த்தின. மயில்கள் ஆடின. ஏனைய மிருகங்கள் ஒளியெழுப்பித் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தின. மண்டபம் பல்வேறு ஒலிகளால் நிரம்பியது.

## 3

‘‘அமைதியாக இருங்கள். அடுத்த நிகழ்ச்சி ஆரம்பமாக இருக்கிறது’’ என்று கதிரேசன் கூறிய சில நிமிடங்களில் சபை அமைதியாயிற்று. ‘‘சபையோர்களே, தமிழறிஞர் எமக்குக் கடவுளால் அனுப்பப்பட்ட வரப்பிரசாதமானவர். அவர் எழுதாத துறையே இல்லை. திருக்குறளைக் கதைகளாகவும், கேலிச் சித்திரங்களாகவும், வில்லுப்பாட்டாகவும் இசைப் பேருரையாகவும் எழுதியுள்ளார். அவர் எனது இனத்தவர் என்பதால் நான் பெருமகிழ்வடைகிறேன். இம் மகாநாட்டில் பல்வேறு வனங்களைச் சேர்ந்த பல்வேறு அறிஞர்கள் உரையாற்றுவார்கள். இசைக்கலைஞர்கள் இசையை வாரி வழங்குவர். இவர்களுடன் தமிழறிஞரின் மாணவர்களும் பல்வேறு கலைநிகழ்சிகளை நடாத்த உள்ளனர். அத்துடன் எமது அயலில் உள்ள கலைஞர்களும் இம் மகாநாட்டில் உரையாற்றுவர். அடுத்து முதுபெரும் அறிஞரான குதிரையார் இறை மாட்சியைப் பற்றி உரையாற்றுவார். அவர் எமது வனத்தில் உள்ள பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்றவர். தமிழ்நாட்டில் உள்ள தாண்டவனப் பல்கலைக்கழகத்திலும் கலாநிதிப் பட்டம் பெற்றவர். தற்பொழுது சீனநாட்டில் உள்ள பல்கலைக்கழகமொன்றில் திருவாசகத்தை ஆய்வு செய்கிறார். தமிழறிஞரின் திருவாசகக் கதைகளை மையமாக வைத்து ஆய்வு செய்கிறார். இப்போது அவரைப் பேச வரமாறு அழைக்கின்றேன்’’.

முதுபெரும் அறிஞர், தமிழறிஞரின் அருகே சென்று அவரை வணங்கினாார், ‘‘குருவே தங்களின் நூல்களைப் படித்துதான் நான் முன்னேற்றமடைந்தேன். திருவாசகத்தைத் தேன் என்று அறிஞர்கள் சொல்வார்கள். அந்த இனிமையான தேனைக் கதைகளாக்கி அமிர்தமாக்கியுள்ளீர்கள். என்னை ஆசீர்வதியுங்கள்’’ என்று பணிந்தார்.

‘‘மூன்று கலாநிதிப்பட்டத்தோடு நிறுத்தாது தொடர்ந்து படியுங்கள். இறக்கும் வரை படியுங்கள்’’ என்று ஆசீர்வதித்தார் தமிழறிஞர். முதுபெரும் அறிஞர் பல வனங்களுக்குச் சென்று பேசுபவர். அதனால் பெரும்பாலான வனவாசிகளுக்கு அவரைத் தெரியும். அதனால் அவர் பேசத் தொடங்கு முன் சபையில் இருந்தோர் பலமாகக் கரகோசம் செய்தனர்.

‘‘சகோதரர்களே, நண்பர்களே, இங்குள்ள பலருக்கு என்னைத் தெரியும். அதனால் உரிமையுடன் தங்களைச் சகோதரர்கள் என்றும் நண்பர்கள் என்றும் விழித்தேன். இன்றைய மகாதநாட்டில் பேச வந்ததற்காக எனக்கு தந்த தலைப்பு இறைமாட்சியாகும் முன்பு ஒரு வனத்தை எடுத்துக் கொண்டால் பல சிற்றரசுகள் இருக்கும். அவர்களுக்கெல்லாம் தலைவனாகப் பேரரசன் இருப்பான். இப்போது பெரும்பாலான வனங்களில் மக்களாட்சியே நடைபெறுகிறது. அரசனின் இடத்தில் இப்போ பிரதமர் இருக்கிறார். எமது வனத்தின் பிரதமர் தனது ஆட்சிக்குட்பட்ட வனத்தை நிர்வகிக்க பல அதிகாரிகளை நியமித்திருக்கிறார். உதாரணமாக கல்விக்குப் பொறுப்பான அமைச்சர் இருக்கிறார். எமது வனம் இருபது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் தலைமை அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். கல்விக்குப் பொறுப்பான அதிகாரியை கல்விப் பணிப்பாளர் என்பர். அவரே கல்வி சம்பந்தமான அனைத்துச் செயல்களுக்கும் பொறுப்பானவராக இருக்கிறார். அதனால் அவர் தான் கல்விக்கு அரசன். அதனால் ஒவ்வொரு துறைக்கும் பொறுப்பாக உள்ளவர்கள் அத்துறைக்கு அரசன் என்றே நான் கருதுகிறேன். அதனால் இறைமாட்சி என்ற அதிகாரத்தில் உள்ள குறள்கள் பத்தும் கல்விப் பணிப்பாளருக்குப் பொதருந்தும்’’.

‘‘மிக மிக இனிமையாக முதலாவது குறளை மிகுந்த பயபக்தியுடன் இனிமையாகப் பாடினார். ‘‘படைகுடி கூழ்அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு’’ சிவா மகாதேவனின் இசை மாணவியான கலைச்செல்வி என்ற குயில் அக்குறளை மிகமிக இனிமையாகப் பாடியபடி வீணையை மீட்டியது. இன்னொரு மாணவனான ரகுராம் என்ற குரங்கு தாளலயம் பிசகாது மிருதங்கத்தை அடித்தது.

‘‘ஓர் அரசனுக்குச் சிறந்த படைவீரர்கள், உயர்ந்த குடிமக்கள், … பொருட்கள், அமைச்சுக்கள், பண்பான நண்பர்கள், பாதுகாப்பு முறைகள் ஆகிய ஆறு அங்கங்களை முழுமையாகப் பெற்றவனே அரசர்களுள் ஆண்சிங்கம் போன்றவன். இது அரசனைப் பற்றிய கணிப்பு. வள்ளுவரின் குறள்கள் எந்தத் துறைக்கும் பொருந்தும் என்று தமிழறிஞர் சொல்வார். அவரின் சொற்படி எமது வனத்தின் கல்விக்குப் பொறுப்பாக உள்ள கல்விப் பணிப்பாளரான சிவானந்தன் என்ற எருமையும் வள்ளுவர் கூறியவாறு வாழ வேண்டும்’’.

‘‘கல்வி அமைச்சு கணக்காளரை நியமித்துள்ளது. உதவிக் கல்விப் பணிப்பாளர்களை நியமித்துள்ளது. பாடவாரியாக உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும், சேவைக்கால ஆலோசகர்களையும் நியமித்துள்ளது. ஒவ்வொரு பாடசாலைக்கும் ஓர்

அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், பாட இணைப்பாளர்கள் எனப் பலரை நியமித்துள்ளது. இவர்கள் தான் அமைச்சர்கள், படை வீரர்கள், மாணவர்களை உயர்ந்த குடிமக்களாக்குவதே அரசின் நோக்கமாகும். மாணவர்கள் யாபேரும் உயர்ந்த குடிமக்களாவர். அரசு அனைவர்க்கும் பாதுகாப்பு வழங்குகிறது. கல்விப் பணிப்பாளர் உட்பட அவரது உதவியாளர்கள் மாணவர்களுக்கும், ஏனையோருக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும். ஓர் அரசன் தனது குடிமக்களைப் பாதுகாத்து அவர்களது தேவைகளை நிறைவேற்றுவது போலக் கல்விப் பணிப்பாளர்களும் மாணவர்களது நலன்களைச் சகல வழிகளாலும் மேம்படுத்த வேண்டும்''.

''மூதறிஞர் தனது பேச்சை நிறுத்திவிட்டுக் கலைச்செல்வியைப் பார்த்தார். அவள் தனது இனிமையான குரலில் அடுத்த குறளைப் பாடினாள். ''அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு'' கலைச்செல்வி பாடிமுடித்ததும் அக்குறளைத் திரும்பவும் முதுபெரும் கலைஞர் பாடிவிட்டுச் சொன்னார், எதற்கும் அஞ்சாமையும், தாராள மனப்பான்மையும் வேண்டியவற்றைக் கொடுத்தல், சகல விடயங்களைப் பற்றியும் முழுமையான அறிவு, தளராத ஊக்கம் இந்த நான்கும் அரசர்க்கு இருப்பது போல கல்விப் பணிப்பாளர்களுக்கும் இருத்தல் வேண்டும். அவை இருந்தால் தான் மாணவர்களை ஒழுக்கமுள்ள நற்பிரஜைகளாக்க முடியும்''.

''நீங்கள் சொன்ன பண்புகள் அனைத்தும் முன்பு எமது வனத்தில் கல்விப் பணிப்பாளராக இருந்த இரா சுந்தரலிங்கம் என்ற காளை மாட்டிடம் இருந்தது. அவரது காலத்தில் தான் நான் கல்வி கற்றேன். அப்போது எல்லா வனங்களிலும் பார்க்க எமது வனந்தான் கல்வியில் முதலிடத்தில் இருந்தது. இப்போது கடைசியிடத்தில் இருக்கிறோம்'' என்றது கலைச்செல்வி.

''கல்விப் பணிப்பாளர்களின் செயற்பாட்டால்தான் உலகம் முன்னேறுகிறது. இரா. சுந்தரலிங்கம் அவர்கள் தன் நலமில்லாத ஒரு செயல்வீரன். தனது மனைவியின் இனத்தவர்களின், நண்பர்களின், காசு கொடுப்பவர்களின் சொற்களைக் கேட்க மாட்டார். அவர்களுக்கு அதிபர் நியமனங்களும் வழங்க மாட்டார். திறமையை மட்டுமே கருத்திற் கொள்வார். இதனால் பல எதிரிகள் அவருக்கு இருந்தனர். ஆசிரிய சங்கங்களே எதிர்த்தன'' என்றது சிவா.

''இரா. சுந்தரலிங்கம் ஐயா, தனது சொந்த சகோதரர் ஆசிரியராக இருந்த போதும் அவருக்கு அதிபர் பதவி கொடுக்கவில்லை. அதனால் குடும்பத்தில் பல பிரச்சினைகள் வந்தன. இருந்தும் அவர் நீதி வழுவாது செயற்பட்டார். அதனால் அவரின் மகளின் திருமணம் குளம்பியது. பொறியியலாளன் ஒருவன் அவரது மகளைத் திருமணம் செய்ய விரும்பினான். அதை அவரது சகோதரன் பலவிதமான பொய்களைச் சொல்லிக் குளப்பிவிட்டான். அவர் அதற்காகக் கவலைப்படவில்லை. ''கணவன் அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்'' என்று பாட்டுப் பாடினார். அவரெல்லோ மனிதன்'' என்றது கலைச்செல்வி.

அடுத்து முதுபெரும் அறிஞர் மூன்றாவது குறளைப்பாட இசைக்கலைஞர்கள் அதற்கான இசையை வழங்கினர். ‘‘தூங்காமை கல்வி துணிவுடமை இம்மூன்றும் நீங்கா நிலன் ஆள்பவர்க்கு’’ அவர் பாடி முடித்ததும் கலைச்செல்வி அதே குறளைத் தனது இனிமையான குரலில் பாடினாள்.

‘‘சபையோர்களே காலம் தாழ்த்தாமை, மிகுந்த அறிவுடையவனாக இருப்பது, அத்துடன் தைரியமும் துணிவும் உள்ளவனாக இருந்து முடிவுகளை எடுப்பது இம் மூன்று குணங்களும் அரசனுக்கு இருத்தல் வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார். இம் மூன்று குணங்களும் சகலருக்கும் இருத்தல் வேண்டும். எந்த ஒரு நிகழ்வாவது அழைப்பிதழில் குறித்த நேரத்திற்குத் தொடங்குதல் வேண்டும். இந்த விடயத்தில் இரா சுந்தரலிங்கம் கவனமாக இருப்பார். ஒன்பது மணிக்கு ஒரு நிகழ்வு ஆரம்பமாகும் என்றிருந்தால் எட்டு ஐம்பதிற்குச் சென்று விடுவார். ஆனால் சிவானந்தன் பத்து மணிக்குத்தான் செல்வார். சிலர் அவர் வரும்வரை காத்திருப்பர். ஓரிருவர் குறித்த நேரத்திற்கு நிகழ்வைத் தொடங்கி விடுவார்கள். அவர் கல்வி சம்பந்தமான விடயங்களானாலும், இலக்கிய சம்பந்தமான விடயங்களாக இருந்தாலும், விஞ்ஞானம், அரசியல் சம்பந்தமான விடயங்களானாலும் மிகுந்த அறிவுடையவர், சான்றோர் அவையில் எந்த விடயத்தைப் பேசச் சொன்னாலும் ஆணித்தரமாகப் பேசுவார்’’.

அப்போது குறுக்கிட்டது சிவா, ‘‘முதுபெரும் அறிஞரே மனிதர்கள் தான் மிக்க அறிவுள்ளவர்கள், அழகர்கள், விஞ்ஞானிகள் என்கின்றனர். ஆனால் நடைமுறையில் அப்படியல்லவே. நன்றிக்கு நாய் என்கின்றனர். அறிவுக்கும் நாய்தான். அழகிற்கு மலர்கள், வீரத்திற்குச் சிங்கம், தந்திரத்திற்கு நரி என்று மனிதர்கள் தானே சொல்கிறார்கள். இப்போது இரா. சுந்தரலிங்கம் ஆணித்தரமாகப் பேசுவார் என்றீர்கள். அப்போ நாம் தான் மனிதர்களை விட அறிவானவர்களா….?’’.

‘‘அதில் என்ன சந்தேகம். எந்த ஒரு விடயத்திலும் யாரும் எம்மை மிஞ்ச முடியாது. மோப்பசக்தியில் எம்மவரான நாய்கள் மேலானவை. ஒரு முறை வகுப்புக்குள் புகுந்த பாம்பைக் கண்டு பிடித்தது நாய். ஆயுதங்கள், போதைப் பொருட்கள், பணம், ஆபரணங்கள் என்பவற்றை விமானப் பயணிகள் கொண்டு வந்தால் கண்டுபிடிப்பது எமது சகோதரர்களான நாய்கள். மனிதர்கள் வாழும் மிகப் பெரிய பட்டணமான யாழ்ப்பாணத்தில் உள்ள மிகமிகப் பிரபலமான பாடசாலையில் விவசாய பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியரின் வீட்டில் நின்ற மாமரம் காய்த்துக் குலுங்கியது. எமது இனத்தவர்களான பறவைகள் அங்கு சென்று பழுத்த பழங்களைக் கொத்தித் தின்றன. அதைக் கண்ட விவசாய ஆசிரியர் மரத்தில் ஏறி மாங்காய்களைப் பறித்து வீட்டினுள் வைத்தார். பத்து நாட்களாகியும் அவை பழுக்கவில்லை. அரைவாசிக்கு மேல் அழுகிவிட்டன. எம்மவரான பறவைகள் பழுக்காத காய்களை உண்பதில்லை. இப்படிப் பலவற்றைச் சொல்லலாம்’’.

‘‘இரா. சுந்தரலிங்கம் துணிவு மிக்கவர். தான் எடுத்த முடிவை எக்காரணங் கொண்டும் மாற்றாதவர். இதனால் ஆசிரிய சங்கங்கள் பெரும் நெருக்கடி கொடுத்தன.

அவருக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுத்தனர். எமது வனத்தவர் யாரும் அதை எதிர்க்கவில்லை. அவர் இடமாற்றம் பெற்றுச் செல்லும் வனத்தில் உள்ள அறிஞர்கள், பெரியோர்கள் அவரது வீடு தேடி வந்து மேளதாளங்களுடன் தமது வனத்திற்கு அழைத்துச் சென்றனர். காலம் தாழ்த்தாமை, அறிவுடமை, துணிவுடமை ஆகிய மூன்றும் உள்ளவன் சாதாரணமானவனாக இருந்தாலும் அவன் அரசனுக்குரிய பண்புகளை உடையவனாவான்''.

''உண்மைதான் ஐயா, அவர் ஓய்வுபெற்றபோது வனவாசிகள் மேளதாளங்க-ளோடும், இசை நிகழ்வுகளோடும் அவரை அழைத்துச் சென்றனர். வீதிகள் எங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொருவரும் தமது வீட்டிற்கு முன் கும்பம் வைத்து மாலைகள் சூடி வரவேற்றனர். நானும் ஒன்று போட்டேன்'' என்றது சிவா.

''கலைச்செல்வி மாறுபட்ட குரல்களில் பாடுபவள். நிகழ்வுக்கு ஏற்றது போல அவள் பாடுவாள்''. ''அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா மானம் உடையது அரசு'' மென்மையான குரலில் பாடிய கலைச்செல்வி மீண்டும் அக்குறளைக் குரல் மாற்றிப் பாடினாள்.

''சபையோர்களே, கலைச்செல்வியும் அவளது பரம்பரையினரும் இனிமையான குரலையுடையவர்கள். மனிதர்களில் இனிமையாகப் பாடக்கூடியவர்கள் பலர் இருந்தும் கலைச்செல்வியின் பரம்பரையினரையே உலகத்தவர் இனிமையான குரலுடையவர்கள் என்று போற்றிப் புகழ்ந்து கூறுவர். அது உண்மை என்று இச்சபையில் கலைச்செல்வி நிருபித்துள்ளாள். ஓர் அரசன் அறத்தையும், நீதியையும் தனது உயிரைப்போலப் பேண வேண்டும். ஒரு போதும் அறமில்லாத செயல்களைச் செய்யக் கூடாது. வீரத்துடனும், மானத்துடனும் ஆள்பவனே சிறந்த அரசன். இரா. சுந்தரலிங்கம் இடமாற்றப்பட்டபோது அந்த இடத்திற்கு வேதி. செல்வரத்தினம் என்ற குதிரை வந்தது. அவரைப் பற்றிய பல வதந்திகள் வந்தன. மிகவும் கொடூரமானவர், ஏனையவரை மதிக்க மாட்டார். தான் நினைத்ததைத்தான் செய்வார். யாருக்கும் அஞ்சமாட்டார் என்று அவர் பதவி ஏற்கு முன்பு பல விடயங்கள் வதந்திகளாகப் பரவின.''

''கதிரேசனும் நானும் எமது வனத்திலுள்ள மகாவித்தியாலயத்தின் குறைகளைக் கூறுவதற்காக அவரது அலுவலகத்திற்குச் சென்றோம். எம்மைக் கண்டதும் வாசலில் நின்ற காவலாளி உள்ளே சென்றான். சில கணங்கள்கூடச் சென்றிருக்காது. காவலாளியுடன் வெளியே வந்த ஒருவர், பெரியவர்களே, உங்களைப்பற்றிப் பல விடயங்கள் கேள்விப் பட்டனான். உங்களைச் சந்திக்க வேண்டும் என்ற நினைப்புடன் தான் பதவி ஏற்றேன். வாருங்கள்… வாருங்கள்… வாருங்கள்…'' என்று அழைத்துச் சென்று எம்மை நாற்காலிகளில் அமருமாறு அன்புடன் வேண்டினார்''.

''அவருடன் சுமார் அரைமணி நேரம் உரையாடினோம். எமது மகாவித்தியாலயத்தின் குறைகளை எடுத்துச் சொன்னோம். எமக்கொரு தரமான அதிபரைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டோம்''.

அவர் சொன்னார், ''அறமல்லாத செயல்களை நான் ஒருபோதும் செய்ய மாட்டேன். முன்பு நான் பதவி வகித்த வனத்தில் இருந்த பிரபல பாடசாலை ஒன்றிற்குச் செல்வாக்குக் காரணமாகத் தரமில்லாத ஒரு அதிபர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் ஒரு பட்டதாரி அதற்கு மேல் கற்கவில்லை. வருடாவருடம் இருபத்தைந்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு செல்வார்கள். இவர் வந்த பின்பு நாலைந்து மாணவர் மட்டும் பல்கலைக்கழகம் சென்றனர். அந்தப் பாடசாலையை முன்னுள்ள தரத்திற்குக் கொண்டு வருவதற்காகப் பல தர்மமான நடவடிக்கைகளை எடுத்தேன். அதைத் தாங்கமுடியாத அவர் ஓய்வு பெற்றுவிட்டார். அறமில்லாத செயல்களைச் செய்யக்கூடாது. அறச்செயல்களை பாகுபாடு, பாகம் பாராது செய்ய வேண்டும்'' என்றார். அவரது உறுதியான வார்த்தைகள் எம்மை மகிழ்வுறச் செய்தன. மகாவித்தியாலயத்திற்குத் தரமான அதிபரை நியமித்தார். இப்போ எமது பாடசாலை முன்னணி வகிக்கிறது.''

ஐந்தாவது குறளை முதுபெரும் அறிஞர் ஆரம்பிக்கக் கலைச்செல்வி அவருடன் சோந்து பாடினாள். ''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு'' அக்குறளை மீண்டும் இருவரும் சேர்ந்து பாடினார்கள். ''சபையோர்களே, பொருள் வரும் வழிகளைப் பெருக்கலும், வந்த திரவியங்களைச் சேர்த்து வைத்தலும், அவற்றைக் காத்தலும், காத்தவற்றை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதும் அரசனது கடமையாகும். கல்விப் பணிப்பாளரும் கல்விக்கு அரசன் என்று சொன்னேன். அரசன் மக்களுக்குத் தேவையான பொருள்களைச் சேகரிப்பான். கல்விப் பணிப்பாளர் மாணவர்களுக்குத் தேவையான பொருட்களைச் சேகரித்துப் பாதுகாத்து தேவையான மாணவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும்.''

கல்விப் பணிப்பாளர் வேதி செல்வரத்தினம் சொன்னார், ''பழந்தமிழ் நூல்கள் அனைத்தையும் சேகரிக்கச் சொல்லியுள்ளேன். அவை யாவும் வாழ்வைச் சிறப்பிக்கும் திரவியங்கள். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, ஆசாரக் கோவை போன்ற நூல்களை மாணவர்கள் தமது வாசிப்பு நூல்களாகக் கொள்ள வேண்டும். முக்கியமாக ஆசாரக்கோவை மாணவர்களுக்கு அத்தியாவசியமான ஒழுக்கம் பற்றிக் கூறுகிறது. எமது அரசும், உலக நாடுகளும் கைகழுவுதல் பற்றி இப்போதுதான் சொல்கின்றன. ஆனால் ஆசாரக்கோவை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே யாவற்றையும் கூறிவிட்டது. திருமந்திரம் உயிர்க்கொல்லி நோய்களைப் பற்றியும், அவற்றை மாற்றும் வழிகளையும் ஐயாயிரம்வருடங்களுக்கு முன்பே கூறிவிட்டது. எம்மவர் வெளிநாட்டவர் சொல்வதைத்தான் நம்புவர்''.

அடுத்து முதுபெரும் அறிஞர் ஆறாவது குறளைப் பாடினார். ''காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம்'' மூதறிஞர் பாடி முடித்ததும் கலைச்செல்வி பாடினாள்.

''ஓர் அரசன் காண்பதற்கு எளிமையானவனாகவும், கடுஞ்சொற்கள் கூறாதவனாகவும் இருந்தால் உலகத்தவர் அவனை வாழ்த்திப் புகழ்வர். இது சகலருக்கும் பொருந்தும். கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் காண்பதற்கு எளிமையானவர்.

எந்நேரமும் சிரித்தபடி உரையாடுவார். துவிச்சக்கர வண்டியில் பிரயாணம் செய்பவர் வழிதெருக்களில் பெரியவர்களைக் கண்டால் இறங்கி மகிழ்வுடன் உரையாடுவார். அவர் எந்நேரமும் அதிகாரியாகவே செயற்படுவார். ஒருமுறை அவர் சந்தையில் காய்கறிகளை வாங்கிக் கொண்டிருந்தார். ஒரு முதியவர் அவரின் அருகில் வந்து அவரை வணங்கினார். அவரது முகம் கலவரமடைந்திருந்தது. கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன. ''பெரியவரே, ஏதாவது தேவைப்பட்டால் கேளும்'' என்றார்.

''ஐயா, எனக்கு ஒரே ஒரு மகள். கர்ப்பிணியாக இருக்கின்றாள். மாப்பிள்ளை நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள வைத்தியசாலையில் பணிபுரிகிறார். அதனால் ஞாயிற்றுக்கிழமையிலும், விடுமுறை நாட்களிலும் தான் வீட்டுக்கு வருவார். மகளின் பாடசாலை எமது வீட்டில் இருந்து எட்டுமைல் தூரத்தில் உள்ளது. தினமும் அவள் மோட்டார் சைக்கிளில் சென்று வருகிறாள். இப்போ கஷ்டமாக உள்ளது. மருமகன் வேலையை விடும்படி வற்புறுத்துகிறார். நான் ஓர் ஆசிரியர். எனது பிள்ளைகளுக்கு அறக் கருத்துக்களைக் கூறி வளர்த்தமையால் எனது மகள் கற்பிப்பதை விரும்புகிறாள். மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுகிறாள். மாலை நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் கூடப் பாடசாலைக்குச் சென்று மாணவர்களுக்குக் கற்பிப்பாள். எமது ஊரில் நாவலர் பெருமான் நிறுவிய பாடசாலை ஒன்று இருக்கிறது. அதற்கு இடமாற்றம் தந்தீர்களானால் எனது மகள் தொடர்ந்து கற்பிப்பாள். இல்லாவிட்டால் வேலையை விடவேண்டி வரும்''. அவரது குரல் தழுதழுத்தது.

''இடமாற்ற விண்ணப்பப் பத்திரத்துடன் உமது மகளை வரச்சொல்லும்'' என்றார் இரா. சுந்தரலிங்கம். இதனால் இரா. சுந்தரலிங்கத்திற்குச் செல்லும் இடமெல்லாம் பேரும் புகழும் இருந்தது. மறுநாள் அந்த முதியவர் இரா. சுந்தரலிங்கத்தை அலுவலகத்தில் சந்தித்தார். அவரது மகளுக்கு உடனடியாகச் செயற்படும்படி இடமாற்றம் வழங்கப்பட்டது.

''அதிகாரி என்றால் அவர்தான் அதிகாரி. எனது சகோதரி ஆசிரியை. எமது வீட்டில் இருந்து இரண்டு மைல் தொலைவில் அவர் கற்பிக்கும் பாடசாலை இருந்தது. புரட்டாதி மாதம் மழைகாலம் தொடங்கினால் மாசி வரை மழை பெய்யும். பாடசாலைக்கு அருகாமையில் ஒரு சிற்றாறு பாய்கிறது. மழைகாலத்தில் அது பெருக்கெடுத்து ஓடும். அதனால் பாதை மூழ்கிவிடும். பிரயாணம் செய்பவர்கள் சுமார் பத்து மைல்வரை சுற்றிச் செல்ல வேண்டும். எனது சகோதரி ஓர் ஆண்மகனைப் பிரசவித்திருந்தாள். பிரசவ லீவு முடியப் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். அப்போது சிவானந்தன் தான் கல்விப் பணிப்பாளராக இருந்தவர். அவரிடம் எனது சகோதரி சென்று நிலைமையைக் கூறித் தனக்கு இடமாற்றம் தரும்படி கேட்டவள். ஐந்து வருடங்களுக்கு ஒரு பாடசாலையில் கடமையாற்றினால் இடமாற்றம் கொடுக்க வேண்டும். அதைச் சொல்லித்தான் எனது சகோதரி கேட்டவள்'' என்று சிவா சொல்லும்போது கலைச்செல்வி சொன்னாள், ''நேரே போய் கேட்டால் நடவாது. அவரது மனைவி, நண்பர்கள், உறவினர்களோடு சேர்ந்து சென்று கேட்க வேண்டும்''.

‘‘நான் அவ்வாறு தான் சொன்னேன். அவள் சொன்னாள். எனக்கு எட்டு வருடங்கள் முடிந்து விட்டன. கட்டாயம் தரவேண்டும்’’ என்று சொல்லிவிட்டுச் சென்றாள். சிவானந்தன், ‘‘அரசாங்க வேலைக்கு வந்தால் எந்தக் கஷ்டத்தையும் தாங்க வேண்டும். உமது மகள் கற்பிக்கும் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. அதனால் இடமாற்றம் தரமுடியாது. நீர் பாடசாலைக்கு அருகில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து இரும்’’ என்றவர். அதனால் ஒரு வருடம் சம்பளமற்ற லீவில் நின்றவள்’’.

‘‘சபையோர்களே, இனி ஏழாவது குறள் என்ன சொல்கின்றது என்று கூறுகின்றேன். ‘‘இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால் தான்கண் அனைத்து இவ்வுலகு’’ கலைச்செல்வி இனிமையாகப் பாடி முடித்ததும் முதுபெரும் அறிஞர் சொன்னார் ‘‘இனிய சொற்களைப் பேசத் தக்கவர்க்குப் பொருள் கொடுத்துக் காக்கின்ற அரசனுக்கு அவன் விரும்பியவை யாவும் கிடைக்கும். அன்பர்களே பொது நிறுவனங்கள், பலவற்றுடன் வேதி செல்வரத்தினம் தொடர்பு வைத்துள்ளார். அதனால் அப் பொது நிறுவனங்களும், வனத்தில் வாழும் தனவந்தர்களும் வேதி செல்வரத்தினத்தின் வேண்டுகோளுக்கிணங்க ஏழை மாணவர்களுக்கு வேண்டிய உதவிகள் யாவும் செய்யும். அரசன் இன்முகத்துடன் ஏழைகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தால் புகழ் கிடைக்கும். அந்தப்புகழ் வேதி செல்வரத்தினத்திற்கும் கிடைத்துக் கொண்டிருந்தது’’.

முதுபெரும் அறிஞர் தனது உரையை நிறுத்த கலைச்செல்வி இனிமையான குரலில் எட்டாவது குறளைப் பாடினாள். ‘‘முறைசெய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்கு இறை என்று வைக்கப்படும்’’ அக் குறளை முதுபெரும் அறிஞர் திரும்பவும் பாடினார். பின்பு சொன்னார், ‘‘நீதியாக அரசாண்டு மக்களின் குறைகளைப் போக்கும் அரசனைக் குடிமக்கள் பக்தியுடன் இறைவன் என்று அழைப்பர். வேதி செல்வரத்தினம் மாணவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்வார். ஏழை மாணவர்கள் நன்றாகப் படித்துப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானால் எமது வனத்தில் வாழும் தனவந்தர்களின் உதவியோடு மேலே கற்க உதவி செய்வார்’’.

அப்போது குறுக்கிட்ட சிவா சொன்னது, ‘‘மூன்று வருடங்களுக்கு முன்பு பேரம்பலம் என்ற கரடியார் விபத்தில் இறந்து போனார். அவரது மகள் திவ்வியா அப்போது க. பொ. த உயர்தரத்தில் கற்றுக் கொண்டிருந்தாள். அவளது தாய் முன்பே நோய்வாய்ப்பட்டு இறந்தமையால் திவ்வியா அனாதையானாள். அவளோடு கூட இருந்த அவளது பாட்டி அவளுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினாள். இதை அறிந்த வேதி செல்வரத்தினம் அவளது பாட்டியிடம் சென்று திறமைமிக்க மாணவியான அவளைக் கற்கவிடும்படி கூறி பெரும் தனவந்தரான தில்லை நடராசா என்ற மானிடம் உதவி பெற்று அவளைக் கற்கப் பண்ணினார். அவள் இப்போது வைத்தியர். இப்படிப் பலவற்றைச் சொல்லலாம். அவரை எமது வனவாசிகள் இறைவன் என்பர்’’.

சிவா கூறி முடித்ததும் கலைச்செல்வி ஒன்பதாவது குறளை இனிமையாகப் பாடினாள். ‘‘செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கும் உலகு’’ அக்குறளைத் தான் திரும்பப் பாடுகிறேன் என்று சொல்லி மிக மிக இனிமையாகப் பாடியது சிவா.

‘‘சிவா இவ்வளவு இனிமையாகத் தாளம் பிசகாது பாடுவான் என நான் நினைக்கவில்லை என்று முதுபெரும் அறிஞர் சொன்னார்’’. நல்லவற்றைச் சொன்னாலும், செய்தாலும் அதில் குறைகாண்போர் பலர் இருக்கிறார்கள். சாந்தினி என்ற நரி தன்னையும் தனது குடும்பத்தினரையும் தவிர வேறு எவரையும் உயர்வாகப் பேசியதில்லை. தனக்கு ஒரு செயல் செய்ய வேண்டுமானால் தலைகீழாக நின்று கும்பிட்டுப் போற்றிப் புகழ்ந்து தனது எண்ணங்களை நிறைவேற்றும். அதன் கதையை யாரும் பெரிதாக எடுப்பதில்லை. வேதி செல்வரத்தினம் சொல்வார் கடவுளையே குறைகூறும் பலர் பூமியில் வாழ்கின்றனர். குறைகூறுபவர்களின் கதைகளைக் கேட்டால் எதுவும் செய்ய முடியாது என்பர். நீதி தவறாத அரசர்கள் குறைகளைக் கேட்டு அக்குறை தன்னிடம் இருந்தால் அதை நீக்கிக் கொள்வார். அதனால் குறை கூறுவதும் நன்மைக்கே’’ என்றார்.

முதுபெரும் அறிஞர் கூறி முடித்ததும், கலைச்செல்வி பத்தாவது குறளைப் பாடினாள். ‘‘கொடைஅளி செங்கோல் குடி ஓம்பல் நான்கும் உடையான் ஆம் வேந்தர்க்கு ஒளி’’ தேவையானவர்களுக்கு அன்பளிப்புக்களை அளித்தல், அருள் நிறைந்த தன்மை, ஏழை எளியவர்களைக் காத்தல் ஆகிய நான்கு செயல்களைச் செய்யும் அரசன் அரசர்க்கெல்லாம் ஒளிவிழக்குப் போன்றவன்’’ என்றார் முதுபெரும் அறிஞர். தொடர்ந்து அவரே சொன்னார், ‘‘நாட்டில் பல்வேறுபட்ட கலைஞர்கள் தமது ஆக்கங்களை அரங்கேற்ற முடியாது துன்பப்படுகின்றனர். அவர்களையும், நாட்டு மக்களையும் அருள்கொண்டு நோக்கி அவர்களது ஆக்கங்களை வெளியிட உதவ வேண்டும். நீதி தவறாது நாட்டை ஆள வேண்டும். தாழ்ந்த குடிகளை உயர்த்த வேண்டும். இப்படிச் செய்யும் அரசன், அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன். இத்தகைய பண்புகள் வேதி செல்வரத்தினத்திடம் உண்டு. பாடசாலைகளுக்குத் தேவையான நன்கொடைகளைப் பெற்றுக் கொடுப்பார். அதனால் வறிய பாடசாலைகளில் பல்வேறு விதமான விளையாட்டுக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. பெரிய பாடசாலை, சிறிய பாடசாலை என்ற பேதமின்றி சகல பாடசாலைகளுக்கும் உதவிகள் பெற்றுக் கொடுப்பார். படிப்பில் அக்கறை இல்லாத மாணவர்களை உற்சாகப்படுத்திப் பரிசுகள் வழங்கி ஊக்குவிப்பார். இப்படியான நல்ல பல குணங்களையுடையவர் இவ்வளவு நேரமும் எனது வித்தியாசமான இசைப் பேச்சை அமைதியாக இருந்து கேட்டமைக்கு நன்றி. இப்பொழுது அரைமணி நேர ஓய்வு வழங்கப்படும். நீங்கள் வெளியே சென்று இங்கு நிகழ்த்தப்பட்ட பேச்சின் தன்மைபற்றிக் கலந்துரையாடுங்கள். மகாநாட்டின் இறுதிநாளில் இது பற்றிக் கலந்துரையாடலாம். வணக்கம் என்று விடைபெற்றார் முதுபெரும் கலைஞர். சபையோர் கைதட்டி ஆரவாரஞ் செய்தனர்.

## 4

இடைவேளை முடிந்ததும் சபையோர் வந்து தமது ஆசனங்களில் அமர்ந்தனர். மகாநாட்டின் தலைவரான கதிரேசன் உரையாற்றினார். ‘‘இம் மகாநாட்டை வித்தியாசமான முறையில் நடத்த வேண்டுமென்று எண்ணி முதலில் வில்லிசையை அரங்கேற்றினோம். நாம் எதிர்பார்த்ததைவிட மிக மிகச் சிறப்பாக வில்லிசை அரங்கேறியது. அருமையாக எல்லோர்க்கும் இலகுவாகப் புரியும்படி அந் நிகழ்ச்சி நடைபெற்றது. பங்கு கொண்ட கலைஞர்கள் அனைவர்க்கும் நன்றி. அடுத்து கல்லாமை பற்றி வள்ளுவர் கூறிய குறள்களைப் பேராசிரியையான கலைச்செல்வி விளக்குவார். அவர் இரட்டைக் கலாநிதி. பலர் நல்ல தொழில் கிடைத்ததும் மேற்கொண்டு கற்கமாட்டார்கள். ஆனால் கலைச்செல்வி இதற்கு மாறானவள். இறக்கும் வரை கற்பேன் எனச் சபதமிட்டுள்ளாள். அவரிடம் எந்த நூலைப்பற்றியும் கேட்கலாம். குறள்களைச் சிறுவர்களுக்குரிய சிறுசிறு கதைகளாக எழுதியுள்ளார். அவரைப் பேச வருமாறு அழைக்கின்றேன்’’.

கலைச்செல்வி பறந்து மேடைக்கு வந்தாள். கரகோசம் விண்ணைப் பிறந்தது. வில்லிசையின்போது மிக மிக இனிமையாக அவள் பாடியமையால் இனியும் இனிமையாய் பாடிப்பாடி பேசுவாள் என சபையோர் மகிழ்ந்தனர்.’’ சபையோர்களே, வள்ளுவனின் வாய்மொழி உபநிடதமாகும். அவர் சொன்னவை எவையும் பொய்த்ததில்லை. அவர் சொன்னவற்றை நாம் புத்தகங்களில் படிக்கிறோம். பேச்சாளர் பேசக் கேட்கிறோம். வானொலி, தொலைக்காட்சியூடாகவும் கேட்கிறோம். இன்று நான் கல்லாமை பற்றி நேரடியாகத் தனது அனுபவங்களைக் கூற சிவபாதம் என்ற குரங்காரை… அழைத்து வந்திருக்கிறேன். கேளுங்கள்’’

‘‘சிவபாதம் மேடைக்கு மிகுந்த அச்சத்துடன் வந்து வணங்கினார். சிறிது நேரம் பேசாமல் நின்றார். பின்பு ‘‘வணக்கம், எனக்கு எழுத பேச வாசிக்க எதுவும் தெரியாது. எனக்கு ஐந்து சகோதரர்கள். என்னைத் தவிர ஏனையோர் நன்றாகக் கற்று பெரும் உத்தியோகம் பார்க்கிறார்கள். நான் கடைசிப்பிள்ளை. அம்மாவின் விருப்பத்துக்குரிய பிள்ளை. அதனால் அம்மா என்னைக் கண்டிக்கமாட்டா. பிறர் கண்டிக்கவும் விடமாட்டா. நான் பாடசாலைக்கு புறப்பட்டு அங்கு செல்லாது காட்டில் விளையாடுவேன். அப்பாவும் ஆசிரியர்களும் கண்டிப்பார்கள். அதனால் சாப்பாட்டு நேரம் தவிர நான் வீட்டுக்குச் செல்வதில்லை. அம்மாவும் அப்பாவும் இறந்த பின் நான் பெருங்கஷ்டப்பட்டேன். எனது சகோதரர்களின் மனைவிமாருக்கு என்னைப் பிடிக்காது. அவர்கள் வாயில் வந்தபடி பேசுவர். அதனால் பிச்சை எடுத்து தின்றேன். ஊராரும் மதிப்பதில்லை. நான் படிக்காததால் நல்லவர்களும் மதிப்பதில்லை. தீயவர்களுடன் சேர்ந்து தீய செயல்களை செய்தேன். மதுவருந்தினேன். திருடினேன். இதனால் பெருந்துன்பங்கள் வந்தன. ஒருநாள் குடித்துவிட்டு வீதியைக் கடக்கும்போது எதிரே வந்த வாகனம் மோதி பெருங்காயத்துக்குள்ளானேன். எனது சகோதரர்கள் ஒருவரும் என்னை வந்து பார்க்கவில்லை’’. அடுத்தது

''இப்போ கலைச்செல்வி அம்மா தான் உதவி. நான் படிக்காததால் தான் இவ்வளவு கஷ்டமும் வந்தது. எனது மூத்த சகோதரன் பொறியியலாளன். இரண்டாவது சகோதரன் வைத்தியர். மூன்றாவது சகோதரன் ஆசிரியர். ஐந்தாவது சகோதரன் பிரதேசச் செயலர். அவர்களின் பிள்ளைகள் என்னைக் கண்டால், காணாதது போலச் சென்று விடுவார்கள். இனம், சனம், உற்றார், உறவினர், நண்பர்கள் மதிக்க வேண்டுமானால் படிக்கவேண்டும்'' என்று அழுதது சிவபாதம்

''கல்லாமை என்ற அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களையும் கலைச்செல்வி மிகவும் இனிமையாகப் பாடினாள். பக்கவாத்தியக் கலைஞர்கள் பத்துப்பேரும் அவளின் இனிமையான பாடலுக்கு இசையமைத்தனர். நான் தமிழறிஞரைக் குருவாகக் கொண்டு அவரின் சொற்படி தான் நடப்பேன். இன்றைய இந்நிகழ்வும் தமிழறிஞரின் எண்ணப்படியே நடைபெறுகிறது. இன்று ஏராளமான மாணவர்கள் வந்திருக்கிறார்கள். சிவபாதம் சொன்னதை எந்நேரமும் நினையுங்கள். அவ்வாறு நினைத்து படிக்க வேண்டும். இன்னும் இன்னும் படிக்க வேண்டும் என்ற உற்சாகம் உண்டாகும். கல்லாமை என்ற அதிகாரத்தின் முதலாவது குறளைப் பாடினாள். இசைக்குழு பாடலுக்கேற்ற இசையை வழங்கியது. ''அரங்கு இன்றி வட்டு ஆடியற்றே நிரம்பிய நூல் இன்றிக் கோட்டிகொளல்'' சபையோர்களே எக்கருமத்தைச் செய்வதாயினும் அக்கருமத்துக்குரிய கருவிகளைப் பயன்படுத்தாவிட்டால் அச்செயல் நடைபெறாது. அறிவு தரக்கூடிய பல்வேறுபட்ட நூல்களை விளங்கிக் கற்காமல் நன்றாகக் கற்றவரோடு விவாதிப்பது, சூதாடுவதற்குரிய அரங்கை உண்டாக்காது சூதாடுவதைப் போன்றதாகும். ஒரு நாள் அதிகாலைவேளை சிவரூபன் என்ற மந்தி இரண்டு காளை மாடுகளுடன் வயலுக்குச் சென்றது. வழியில் அதைக் கண்ட தில்லைநடராசா கேட்டார், ''காளை மாடுகளுடன் செல்கிறீர்கள் வயலில் மேய்க்கப் போறீங்களா..?'' ''இல்லை உழப்போறேன்'', ''உழுவதானால் கலப்பை வேணும், கலப்பை எங்கே?, ''பேரம்பலம் கலப்பையைத் தாறன் என்றவன். வாங்கி உழுவம். மாடுகளுடன் கலப்பையைக் கொண்டு வரமுடியாமலிருக்கு'' என்று கூறிவிட்டு வயலுக்குச் சென்றார். அங்கே பேரம்பலத்தைக் காணவில்லை. அவரது மனைவி சொன்னாள், ''அவர் வெளியூருக்கு போட்டார்'' என்று

அதைக் கேட்ட சிவரூபன் வீட்டுக்குச் சென்று கலப்பையை எடுத்து வந்து உழுதார். அதைக் கண்ட தில்லைநடராசா சொன்னார், ''தனக்குதனக்கென்று சொந்தமாகக் கருவிகளை வைத்திருத்தல் வேண்டும். நீ வந்த நேரத்திற்கு வயலை உழுது முடித்திருக்கலாம். வெயில் ஏறிவிட்டது. மாடுகள் பாவம்'' என்ற கலைச்செல்வி இரண்டாவது குறளைப் பாடினாள், ''கல்லாதான் சொல்கா முறுதல் முலை இரண்டும் இல்லாதாள் பெண் காமுற்று அற்று'' இல்லாதவற்றை ஒருவர் விரும்பலாகாது. முதற் குறளில் வள்ளுவன் சொன்னதைத் தொடர்ச்சியாக இதைச் சொல்கிறான். கல்லாதவர்கள் நூலின் பொருளைத் தாம் விளக்கமாக கூறுவேன் என்ற துணிவுடன் கற்றவர்களின் சபையில் பேச விரும்புவது, முலைகள் இரண்டும் இல்லாத ஒரு பெண் தாய்மை அடைய

விரும்புவதை ஒக்கும். திவ்யா மருத்துவபீட மாணவி. அவருக்குத் திடீரென்று இரத்த அழுத்தம் அதிகரித்து விட்டது. அதற்காக மருத்துவச்செலவு பல இலட்சம் ரூபாவானது திவ்யா கற்பதற்குச் சில உபகரணங்களும் புத்தகங்களும் வாங்க வேண்டியிருந்தது. அவரிடம் ஏராளமான நிலம் இருந்தது. திவ்யா தான் அவரது குடும்ப வாரிசு. அவரால் அவரது நிலங்களைப் பராமரிக்க முடியாது என்று நினைத்த பேரம்பலம் தனது தென்னந்தோப்பை விற்பதற்கு முடிவு செய்தார்.

‘‘பலரும் அதை வாங்க விரும்பினர். நாராயணன் என்ற கமுதை பேரம்பலத்திடம் வந்து சொன்னது, ‘‘ஐயா, எனக்கு ஐந்து பெண் பிள்ளைகள். குடியிருக்கும் வீட்டைத் தவிர வேறு நிலம் இல்லை. அதனால் உங்களது தோப்பை எனக்குத் தாருங்கள். அறுபது இலட்சம் ரூபா அதன் விலை என்கிறீர்கள். நான் ஐந்து இலட்சம் ரூபா தருகிறேன். மிகுதியை சிறு சிறு தொகையாகத் தந்து முடிக்கிறேன்’’.

பேரம்பலத்திற்கு சிரிப்பு வந்தது. அந்தத் தோப்பை விற்பதே உடனடியாகத் தேவைப்படும் பணத்திற்காக அதைக் கடனாகக் கேட்டால் எப்படி இருக்கும்?

‘‘எனது பிள்ளைகளை உங்களின் பிள்ளைகளாக நினையுங்கள்’’ என்றபோது பேரம்பலம் குறுக்கிட்டுச் சொன்னார். ‘‘அதைப் பொன்னுத்துரைக்குத் தருவதாகக் கூறி விலைபேசி அச்சவாரம் வாங்கி விட்டேன். சொன்ன சொல்லை மாறக்கூடாது’’ என்றார்.

பொன்னுத்துரையின் பிள்ளைகள் ஐந்து பேரும் வெளிநாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் பொன்னுத்துரையையும் மனைவியையும் தம்மோடு வந்திருக்கும்படி வற்புறுத்துகின்றனர். அதனால் பொன்னுத்துரை தனது வீட்டுப் பொருட்களை விற்கிறார். வீட்டையும் விற்கப்போவதாகச் சொல்கிறார். அப்படியிருக்கும்போதது ஏன் அவர் தோப்பை வாங்கப் போகிறார். என்று நினைத்தபடி பொன்னுத்துரையின் வீட்டிற்குச் சென்று பேரம்பலம் கூறியதைச் சொன்னபோது ‘‘பொன்னுத்துரை சொன்னார்’’ மச்சான் பேரம்பலம் நிறையக் கடன்பட்டுள்ளார். அதைக் கொடுக்கத்தான் தோப்பை விற்கிறார். நீ கடனுக்குக் கேட்டால் தருவாரா...? போதிய முதலில்லாதவர்கள் காணி, பூமி வாங்க ஆசைப்படக்கூடாது. அது முலை இரண்டும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்புவதை ஒக்கும்’’ நாராயணன் எதுவும் பேசாது சென்றான்.

‘‘சபையோர்களே, எமது வருமானத்திற்கேற்றவாறு தான் பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டும்.’’ என்ற கலைச்செல்வி மூன்றாவது குறளைப் பாடினாள். ‘‘கல்லாதவரும் நனி நல்லார் கற்றார் முன் சொல்லாது இருக்கப் பெறின்’’ கலைச்செல்வி இனிமையாகப் பாட இசைக் கலைஞர்கள் குறளுக்கு ஏற்றவாறு இசையை வழங்கினர். ‘‘சபையோர்களே, ஒருவனுக்கு எதிரி அவனது வாய் தான். தனக்குப் பெருங்கேடு வந்தபோதும் எதுவும் பேசாது மௌனமாக இருந்தால் அக்கேடு வந்த இடம் தெரியாமல் சென்றுவிடும். சொற்களுக்கு ஆயிரமாயிரம் அர்த்தம் உண்டு. ஒருவர் இன்னொருவரை

‘வாருங்கள்’ என்று வரவேற்றாலும் அவர் மனதில் குளப்பமிருந்தால் அச் சொல்லுக்குப் பல அர்த்தங்களை நினைத்து வேதனைப்படுவார். இது அவரவரது மனநிலையைப் பொறுத்தது. முக்கியமாக அறிஞர்கள் கூடியிருக்கும் அவையில் அறிஞர்களுடன் விதண்டாவாதம் இடாது மௌனமாக இருந்தால் மௌனமாக இருப்பவரை அறிஞர் விரும்புவர். அவரும் ஓர் அறிஞர் என்று நினைப்பர்’’.

‘‘வேதவனத்தில் திருமந்திர மகாநாடு பத்து நாட்கள் நடைபெற்றது. தமிழறிஞர் திருமந்திரமே திருக்குறள் என்றொரு நூல் எழுதியுள்ளளார். அதைப்பற்றித்தான் நான் பேசினேன். திருமூலர் உலகில் நடைபெறும் அத்தனை விடயங்களுக்கும் சிவன் தான் காரணம். சிவனை வணங்கினால் வேண்டியதெல்லாம் கிடைக்கும் என்று ஒவ்வொரு செய்யுளிலும் கூறிவிட்டுத்தான் அறக்கருத்துக்களையும், நோய்களைப் பற்றியும், அதை நீக்கும் வழிகளைப் பற்றியும் கூறுகிறார். திருவள்ளுவர் சிவனைப் பற்றித் திருமூலர் கூறியவற்றை விலக்கிவிட்டு அறக்கருத்துக்களை மட்டும் குறளாக்கியுள்ளார் என்று பேசினேன். ஒவ்வொரு நாளும் திருமந்திரத்தின் கருத்துக்களை வெவ்வேறு வகையில் பேசினேன். தினமும் ஒரு குதிரையார் வந்திருந்து மிகவும் அவதானமாகப் பேச்சுக்களைக் கேட்டார். எதுவும் பேசமாட்டார். அவர் ஒரு பெரிய அறிஞர் என்று நான் நினைத்தேன்’’.

‘‘பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மூன்றுபேர் வந்து அடிக்கடி தேவை இல்லாத கேள்விகளைக் கேட்டபடி இருந்தனர். ‘திருக்குறள் சமணநூல் அது எப்படி திருமந்திரமாகும்’ என்று ஒரு விரிவுரையாளர் கேட்டார். நான் பேசப்பேசக் குழப்பியபடி இருந்தார். அவரது தொல்லைகளைப் பொறுக்க முடியாத கதிரேசன் எழுந்து வந்து, ‘‘ஐயா மகாநாட்டின் கேள்விகள், சந்தேகங்கள் யாவும் இறுதிநாளில் தான் கேட்க முடியும். இது விதி, அதை மறக்காதீர்கள்’’ என்று கூறியபின் தான் அவர் பேசாதிருந்தார். குதிரையார் மகாநாடு முடியும்வரை எதுவும் பேசாது இருந்துவிட்டு மகாநாடு பத்து நாட்கள் நடைபெற்று முடிந்த பின்பு மாலை வேளை எழுந்து நின்று ‘‘அம்மா, நன்றாகப் பேசினீர்கள். நான் பெரிதாகப் படிக்கவில்லை. திருக்குறளைப் பற்றியும், திருமந்திரத்தைப் பற்றியும் அறிஞர்கள் பேசுவதைக் கேட்டுள்ளேன். திருமந்திரமே திருக்குறள் என்பது அசைக்க முடியாத உண்மை எனத் தங்களின் பேச்சு உணர்த்தியது. மிக்க நன்றியம்மா’’ என்று கைகூப்பி வணங்கினார். உண்மையில் அவர் கற்காவிட்டாலும் அறிஞர் என்றாள் கலைச்செல்வி.

அடுத்து நான்காவது குறளை மிகவும் இனிமையாகப் பாடினாள் கலைச்செல்வி. ‘‘கல்லாதான் ஒட்டம் கழியநன்று ஆயினும் கொள்ளார் அறிவுடையார்’’ ‘‘சபையோர்களே, அறிவு தரும் நூல்களைக் கற்காதவர்கள் சில சமயங்களில் சிறப்பாகப் பேசினாலும், கற்றவர்கள் அதனை அறிவுடமை என ஏற்க மாட்டார்கள். இது உண்மை. நான் ஒரு முறை அயல் வனத்திலுள்ள கோவிலுக்குச் சென்றேன். நவராத்திரி விழா ஒன்பதாம் நாள். அப்போது தவபாலன் என்ற முயலார் பேசிக் கொண்டிருந்தார். சபையோர் மிகவும்

அவதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். சொற்களின் அர்த்தத்தை உணர்ந்து அறுத்துறுத்து நல்ல வசனங்களைப் பாவித்து பேசிக் கொண்டிருந்தார். அவரது பேச்சை நான் மிகவும் விரும்பிக் கேட்டேன். அவர் உரையாற்றி முடித்ததும் அக் கோயிலின் தலைவரைக் கேட்டேன், ‘‘இப்போது பேசியது யார்? மிக மிக அழகாகக் கருத்தாளம் மிக்கதாகப் பேசுகிறார்’’ தலைவர் சிரித்துவிட்டுச் சொன்னார்.

‘‘அவர் பெரிதாகப் படிக்கவில்லை, அனைத்துக் கூட்டங்களுக்கும் செல்வார். பேச வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர். அதனால் தமிழறிஞர் பேச்சை எழுதிக் கொடுப்பார். இவர் பாடமாக்கிப் பேசுவார். நன்றாகப் பேசுவதால் தமிழறிஞர் பல மேடைகளை ஏற்பாடு செய்து கொடுப்பார்’’.

ஒரு மாதத்திற்கு முன்பு தமிழறிஞர் பிற ஊருக்குச் சென்றுவிட்டார். அப்போது அயல்வனமாகிய வேதவனத்தில் இருந்து வந்த அறிஞர் ஒருவர் வந்து தவபாலனைச் சந்தித்துச் சொன்னார், ‘‘ஐயா தாங்கள் சிறப்பாக் பேசுவதாக எமது வனத்தில் உள்ளவர்கள் புகழ்ந்து பேசுவர். நாம் ஒரு கலைவிழாவைச் செய்ய ஏற்பாடு செய்துள்ளோம். அதில் ‘ஆய கலைகள் அறுபத்து நான்கு’ என்ற தலைப்பில் தாங்கள் பேச வேண்டும்’’ என்று கேட்டுக் கொண்டார். தவபாலன் ஒப்புக் கொண்டார்.

‘‘வேற்றூருக்குச் செசன்ற தமிழறிஞர் அங்கு சில நாட்கள் தங்கியிருந்து கூட்டங்களில் பேசிவிட்டுத் தனது மூத்த மகன் வசிக்கும் கந்தவனத்திற்குச் சென்றதால் தவபாலன் பேச ஒப்புக்கொண்டன்று வரவில்லை. அவர் வருவார் வருவார் என்று எதிர்பார்த்த தவபாலன் அவர் வராமையால் குழம்பிப் போனார். இருந்தும் சமாளிக்கலாம் என்று நினைத்து முன்பு தமிழறிஞர் நவராத்திரி விழாபற்றி எழுதிக் கொடுத்த கட்டுரையை வாசித்துவிட்டு வேதவனத்திற்குச் சென்றார்’’.

வேதவன மண்டபம் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதன் அழகு தவபாலனை மெய்மறக்கச் செய்தது. மண்டபத்தில் ஏராளமானோர் கூடியிருந்தனர்.

தவபாலன் பேச வந்தபோது சபையோர் கைதட்டி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். தவபாலன் பேசத் தொடங்கினார், ‘‘சபையோர்களே, கலைகள் அறுபத்து நான்கினுக்கும் அதிபதியான கலைமகளை என்னுள்ளத்தில் இருத்தி அவளை வணங்கிப் பேச்சை ஆரம்பிக்கின்றேன். நவராத்திரி விழா ஒன்பது தினங்கள் கொண்டாடப்படுகிறது. முதல் மூன்று நாட்களும் துர்க்கையை வணங்கி வீரத்தைப் பெறுகிறோம். அடுத்த மூன்று நாட்களும் லட்சுமியை வணங்கி செல்வத்தைப் பெறுகிறோம். இறுதி மூன்று நாட்களும் சரஸ்வதிக்குரியது. கல்விதான் எமது மூலதனம். சரஸ்வதியை வணங்கி நாம் ஏனைய செல்வங்களைப் பெறுவதைவிட கல்வியைப் பெறவே முயல வேண்டும். கல்வியைப் பெற்றால் ஏனைய செல்வங்களான பணம், பொருள், புகழ், மதிப்பு, மரியாதை, செல்வாக்கு யாவும் வந்து சேரும்’’ என்று கல்வியின் சிறப்பைப் பற்றிப் பேசிக்

கொண்டிருக்கையில் சபையோர் எழுந்து வெளியே செல்லத் தொடங்கினர். பேச்சாளரை அவமதிக்கக்கூடாது என்று நினைத்து சிலர் மட்டும் மண்டபத்தில் இருந்தனர்.''

கல்லாத ஒருவர் தன்னை அறிவுடையவர் போலக் காட்டிக் கொள்ளும் தன்மை கற்றவர் அவையில் அவர் பேசும்போது அந்தப் பேச்சினால் கெட்டுவிடும் என்று வள்ளுவர் கல்லாமை என்ற அதிகாரத்தின் ஐந்தாவது குறளில் சொல்கிறார் என்று கூறிய கலைச்செல்வி அக் குறளைப் பாட இசைக்கலைஞர்கள் அதற்கேற்ற இசையை வழங்கினர். ''உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்களர் அனையர் கல்லாதவர்.'' ''சபையோர்களே, கற்காதவர் எதுவுமே விளையாத களர்நிலம் பசுமையான நிலம் போலக் காணப்பட்டாலும் எந்தப் பயிரும் விளையாது. அதுபோல அழகான தைரியமான உருவத்தை ஒருவர் கொண்டிருந்தாலும், அவரால் யாருக்கும் எந்தப் பிரயோசனமும் கிடைக்காது. உயிர் உள்ளமையால் அவர் இயங்கிக் கொண்டிருக்கிறார்''.

''ஒரு நாள் தமிழறிஞரின் வீட்டிற்குச் சென்றபோது அங்கே வேந்தனார் என்ற குரங்கு மிகுந்த கவலையுடன் இருந்தது. அதன் கண்கள் கலங்கியிருந்தன. அவரது மகன் பகீரதன் களர்நிலத்திற்கு ஒப்பானவன். என்னைக் கண்டதும் எழுந்து வணங்கிய வேந்தனார் கண்களைத் துடைத்துவிட்டு அமர்ந்தார். நான் எதுவும் பேசாததால் அவர் சொன்னார், ''அம்மா, பகீரதனைப் பற்றித்தான் மிகுந்த கவலைப்படுகிறேன். எனது ஏனைய பிள்ளைகள் நன்றாகப் படித்து நல்ல தொழிலில் இருக்கின்றார்கள். பகீரதன் படிக்கவில்லை. படிக்காவிட்டாலும் பரவாயில்லை. எந்தவிதமான அறிவும் இல்லை. இருபத்தைந்து வயதாகிறது. கடைக்குச் சென்று பொருட்களை வாங்கிவரக் கூடத் தெரியாது. காசைக் கொடுத்தால் தொலைத்து விடுவான். அதனால் நான் போனில் தேவையான பொருட்களை வியாபாரியான துரைசிங்கத்துக்குச் சொல்ல அவர் அவற்றைக் கட்டி வைத்திருந்தார். பகீரதன் துரைசிங்கத்திடம் பொருட்களை வாங்கிவந்து மரநிழலில் வைத்துவிட்டு நண்பர்களோடு சேர்ந்து விளையாடிவிட்டு வந்து பார்த்தபோது பொருட்கள் கொண்டுவந்த பை கிழிக்கப்பட்டிருந்தது. பறவைகளும், மிருகங்களும் உணவுப் பொருட்களைச் சேதமாக்கிவிட்டன. ஐயாயிரம் ரூபா நஷ்டம். இப்படிப் பல விடயங்களைச் சொல்லலாம்.'' என்று அழுதார். என்னால் அவரிற்கு ஆறுதல்கூற முடியவில்லை. கவலைப்பட்டுக் கடவுளிடம் அவனைத் திருத்து என்று முறையிடத்தான் முடிந்தது'' என்ற கலைச்செல்வி ஏழாவது குறளைப் பாடினாள்.

''நுண்மாண் நுழைபுலம் இல்லாள் எழில் நலம் மண்ம புனைபாவை அற்று'' ''சபையோர்களே, ஒருவரின் முகத்தையும் செயலையும் பார்த்து அவர் என்ன நினைக்கிறார் என்று நுட்பமாக அறிய முடியாதவனது அழகிய பலமுள்ள தோற்றம் மண்ணால் செய்த பொம்மைக்குச் சமமானது. பகீரதனது நிலை அத்தகையது. தமிழறிஞரின் பேர்த்தி காசினி. ஐந்து வயது எனினும் அதி புத்திசாலி. தமிழறிஞர் காலையில் எட்டுமணி வரை எழுதுவார் அல்லது படிப்பார். அதன்பின் உணவு உண்பார். அவர் எட்டுமணிக்குப் பிறகு எழுதாது யோசித்துக் கொண்டிருந்தால் அவள், அவரின் அருகே வந்து ''என்ன தாத்தா

யோசிக்கிறியள். வந்து சாப்பிட்டுவிட்டு எழுதுங்கோ'' என்பாள். பாடசாலையால் வந்து, ''தாத்தா எனது வகுப்பாசிரியைக்கு வீட்டில் ஏதோ நடந்து விட்டது. யோசித்துக் கொண்டிருந்தார். எமக்குப் பாடங்களைத் தந்துவிட்டு யோசித்துக் கொண்டிருந்தா ஏதோ நடந்திட்டுது'' என்று சொன்னாள். பின்பு விசாரித்துப் பார்த்தபோது அவரது இளைய மகன் விபத்துக்கு உள்ளாகியிருப்பது தெரிந்து, இது தான் புத்திசாலிகளின் அடையாளம். பகீரதன் உணர்வுகளைப் புரிந்து கொள்ளமுடியாத மரம் பொம்மை'' என்ற கலைச்செல்வி எட்டாவது குறளைப் பாடினாள்.

''நல்லார் கண்பட்ட வறுமையின் இன்னாதே கல்லார் கண்பட்ட திரு''
''சபையோர்களே, இது மிக மிக அருமையான குறள்களில் ஒன்றாகும். செல்வத்தை எல்லோராலும் தேட முடியாது. முயற்சி உள்ளவர்கள் கடும் பிரயத்தனம் செய்து ஒழுக்கமாகவும், நீதிநெறி தவறாமலும் வாழ்ந்தே பணத்தைச் சம்பாதிக்கின்றனர். அப்படிச் சம்பாதித்த பணத்தை ஒழுக்கமாக வாழ்ந்து காப்பாற்றுகின்றனர். அதற்கு முயற்சியுடன் கல்வியறிவும் தேவை''.

''அருணாசலம் என்ற யானை பெரும் வர்த்தகன். அறிவுதரும் நூல்கள் அனைத்தையும் கற்றவர், ஒழுக்கமானவர். தகுதியானவர்களுக்கு உதவி செய்பவர். அவரது ஒரே மகன் துருவன். மிகமிகச் செல்லமாக வளர்க்கப்பட்டவன். அவன் கற்பதற்காகப் பாடசாலைக்குச் சென்றபோது ஆசிரியர்கள் கற்பித்துவிட்டு வீட்டில் செய்து வருமாறு பயிற்சிகள் கொடுப்பர். வகுப்பில் குளப்படிகள் செய்யும் அவன், பாடசாலைவிட்டதும் நண்பர்களுடன் சேர்ந்து இரவு எட்டுமணி வரை விளையாடிவிட்டுப் படுத்து விடுவான். காலையில் பாடசாலைக்கென்று புறப்பட்டுச் சென்று எங்காவது நண்பர்களுடன் சென்று விளையாடுவான். அவனின் தாயார் தகப்பனுக்குத் தெரியாது பணம் கொடுப்பார். எட்டுவயதில் பாடசாலைக்குச் செல்லாது விட்டுவிட்டான்''.

''துருவனுக்கு வயது வந்ததும் தாய் திருமணம் பேசினாள். தொழில் இல்லாத அவனைத் திருமணம் செய்ய எந்தப் பெண்ணும் சம்மதிக்கவில்லை. அதனால் அருணாசலம் பெரியதொரு வர்த்தக நிலையத்தை அமைத்துக் கொடுத்து, ''துருவா, ஒழுக்கமாக வாழ். ஏழைகளுக்கு உதவி செய், தீயவர்களுடன் சேராதே'' என்று புத்திமதி கூறினார். துருவன் வியாபார நிலையத்தைப் பொறுப்பேற்றதும், அவனது நண்பர்கள் அவனை வந்தடைந்தனர். ஒரு நண்பன் சொன்னான், ''துருவா, அருகில் உள்ள மலர்வனம் என்ற காட்டில் தானியங்கள் மிகவும் மலிவு. அங்கே குளங்கள் பல உள்ளன. மாதம் மும்மாரி மொழிகிறது. அங்கு விளையும் தானியங்களை விற்க முடியாது கஷ்டப்படுவதாக எனது சித்தப்பா சொன்னார். வா அங்கு சென்று வாங்கி வருவோம்'' என்றதும், எதையும் ஆராயாது துருவன் தனது நண்பர்களுடன் மலர்வனத்திற்குப் பெருந்தொகைப் பணத்துடன் சென்றான்''.

‘‘ஏற்கெனவே துருவன் பெருந்தொகைப் பணத்துடன் வருவான் என்பதை உணர்ந்த அவனது நண்பன், தனது சகோதரர்கள் மூவரை ஆயுதங்களுடன் அனுப்பி துருவனை வழிமறித்து ஆயுதங்களைக் காட்டி வெருட்டி அவன் கொண்டுவந்த பணம் முழுவதையும் கொள்ளை அடித்துச் சென்றனர்’’.

‘‘இன்னொரு நாள் துருவன் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகப் பல இலட்ச ரூபாவைப் பட்டணத்திற்குக் கொண்டு சென்றான். வழியில் அவனது நண்பன் இன்னொருவனுடன் வந்து சந்தித்துச் சொன்னான், ‘‘துருவா, பட்டணத்தில் மொத்தமாகக் கொள்வனவு செய்யப் பல நிறுவனங்கள் உள்ளன. எல்லா இடமும் சென்று விசாரித்து விட்டுத்தான் கொள்வனவு செய்தல் வேண்டும். வா விசாரிப்போம் என்று சொல்லிப் பல நிறுவனங்களுக்கும் அழைத்துச் சென்று விசாரித்தான். ஒரு நிறுவனத்தில் விலை மிகவும் குறைவாக இருந்தமையினால் அங்கே பொருட்களைப் பல இலட்ச ரூபாவுக்குக் கொள்வனவு செய்து பார ஊர்த்திகளில் ஏற்றி வியாபார நிலையத்திற்குக் கொண்டு வந்து பிரித்துப் பார்த்தபோது பழுதடைந்த தரமற்ற பொருட்களே இருந்தன.’’

அவற்றைக் கண்ட தணிகாசலம் சுயநினைவை இழந்து விட்டார். கடையில் வேலை செய்யும் ஒரு சிப்பந்தி சொன்னான், ‘‘ஐயா, அருணாசலம் ஐயா முப்பது நாற்பது வருடங்களாகச் சின்னப்பாச் செட்டியாரிடம் தான் பொருட்களைக் கொள்வனவு செய்வார். போகும்போது அங்கு செல்லும்படிதானே உங்களுக்குச் சொன்னவர்’’ என்றபோது துருவன் எதுவும் பேசவில்லை.

சில மாதங்கள் கழிந்தன. துருவன் தனது மாமனின் மகளான அர்ச்சனாவை விரும்பி அவளிடம் சென்று சொன்னான், ‘‘அர்ச்சனா நீ எனது முறைப்பெண். முன்புதான் எனக்கு வேலை இல்லை என்று என்னைத் திருமணம் செய்ய மறுத்தாய். இப்போ நான் பெரிய முதலாளி. எப்போ திருமணத்தை வைக்கலாம்’’.

அவள் பலமாகச் சிரித்துவிட்டுச் சொன்னாள், ‘‘நான் சிவரராசாவின் மகன் ஆரூரனை விரும்புகின்றேன். அவனுக்கு வேலை கிடைத்ததும் திருமணம் செய்வேன். நீ பெரிய முதலாளி, பெரிய இடத்துப் பெண்ணைத் திருமணம் செய்’’.

‘‘தகப்பன் வருத்தக்காரன். தாய் கூலிவேலை செய்து தான் குடும்பத்தைக் காப்பாற்றுகிறாள். அதைவிட இரண்டு குமர்ப்பிள்ளைகள் இருக்கு. அவனைச் செய்துவிட்டுச் சோத்துக்கு என்ன செய்வாய்..?’’

‘‘அர்ச்சனா பல்கலைக்கழகத்தில் படிக்கிறாள். சகோததரிகள் இருவரும் பட்டதாரி ஆசிரியைகள். ஆரூரன் கலைப்பட்டதாரி. எம். ஏ. படிக்கிறார். எம். ஏ. சித்தியடைந்ததும் கலாநிதிப்பட்டப் படிப்புப் படிக்கப் போகிறாராம். பணம் அல்ல வாழ்க்கை. கற்ற நல்லவர்களின் வறுமை காலகதியில் நீங்கிவிடும். கல்லாதவனின் செல்வம் பல வழிகளாலும், பலராலும் கவரப்படும். இறுதியாக வறியவனாக வேண்டியது

தான். கற்றவன் கற்கக் கற்கச் செல்வம் பெருகும்'' என்றாள். சபையோர் அவளது பேச்சை ரசித்துக் கேட்டனர்.

''மிகுந்த மனவருத்தத்துடன் புறப்பட்ட துருவனை நோக்கிச் சொன்னாள், என் ஆசை அத்தானே, வள்ளுவரின் குறள் ஒன்றுள்ளது. படித்தால் தானே அதைப்பற்றித் தெரியும்'' என்றவள் கல்லாமை என்ற அதிகாரத்தின் ஒன்பதாவது குறளை ராகம் பிசகாது பாடினாள். ''மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத்து இலர் பாடு'' என்று பாடியவள் பாடியதை நிறுத்திவிட்டுச் சொன்னாள். ஐயா, முறை மாப்பிளையே, கற்காதவர் உயர்குடியில் பிறந்தாலும், தாழ்ந்தவரேயாவர். கற்றவர் தாழ்ந்த குடியில் பிறந்தாலும் அவர் உயர்ந்தவராவார். ஆரூரன் மிகமிகத் தாழ்ந்த குடியில் பிறந்தவர். இருப்பினும் கற்றவர் சில காலங்களின் பின் ஊரவர் அனைவரும் அவனை உயர்வாய் மதிப்பர். ஆரூரனின் தாயின் சகோதரர் மிகமிக வறியவர். அவரது மகன் வைகுந்தன் வைத்தியர். அவர் ஊரவர்க்கு இலவசமாக வைத்தியம் செய்வதால் அவரையும், அவரது குடும்பத்தையும் ஊரவர்கள் உயர்வாக மதிக்கின்றனர். சென்றவாரம் எமது மகாவித்தியாலயப் பரிசளிப்பு விழாவுக்கு வைகுந்தன் தான் பிரதம விருந்தினர். அவர் பழைய மாணவன். பரிசளிப்பு விழாவுக்கு வந்திருந்த உயர் அதிகாரிகள் கூட எழுந்து நின்று வணங்கி வரவேற்றது உனக்குத் தெரியாது. நீ மழைக்குக்கூடப் பாடசாலையில் ஒதுங்காதவன். மதிப்பும் மரியாதையெல்லாம் கல்விக்கு மட்டும்தான் உண்டு. அதை வள்ளுவர் குறளாகப் பாடியுள்ளார் என்று கூறிக் கல்லாமை என்ற அதிகாரத்தின் பத்தாவது குறளைப் பாடினாள். ''விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல் கற்றாரோடு ஏனையவர்'' இதன் பொருள் என்னவென்று உனக்குத் தெரியுமா…? அறிவுமிகுந்த நூல்களைக் கற்றவர் தான் மேன்மக்களாவர். கல்லாதவர்கள் மிருகங்கள். அப்படிப் பார்க்கையில் கல்லாத நீயும் ஒரு வள்ளுவர் சொன்ன மிருகந்தான்'' என்று கூறிவிட்டுச் சென்றாள் அர்ச்சனா. மாணவர்களே இப்போது கல்வியின் பெருமையை உணர்ந்திருப்பீர்கள். அதனால் நன்றாகக் கல்லுங்கள். தொழில் கிடைத்த பின்பும் கல்லுங்கள். இறக்கும் வரை கற்பவன் தான் ஏழேழு பிறவிகளிலும் மேலானவன்'' வணக்கம் என்று கூறி விடைபெற்றாள் கலைச்செல்வி.

## 5

முன்பு நடைபெற்ற நிகழ்வு முடிவடைந்ததும், மதிய உணவுக்கான இடைவேளை விடப்பட்டது. இடைவேளை முடிவடைவதற்கான மணி அடித்ததும் சபையோர் வந்து தத்தமது இடங்களில் அமர்ந்திருந்தனர். அடுத்து வள்ளுவர் எழுதிய கேள்வி என்ற அதிகாரத்திற்கு குமரவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் நந்தகுமார் என்பவர் விளக்கமளிப்பார் என்று நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தது. மகாநாட்டின் தலைவர் கதிரேசன் மேடைக்கு வந்து சபையோரை வணங்கிவிட்டுச் சொன்னார். ''சபையோர்களே அடுத்து நிகழ்சிநிரலின்படி பேராசிரியர் நந்தகுமார் என்ற குரங்கார் உங்களுக்கு குறளைப்பற்றிய விளக்கத்தை அளிப்பார். அவருக்கு இசைக்கலைஞர்கள் பத்துப்பேர் உதவுவர். இதுவும்

ஒரு வித்தியாசமான நிகழ்வு. கேட்டுவிட்டு உங்கள் அபிப்பிராயங்களை இறுதிநாளில் சொல்லலாம். இல்லாவிட்டால் எம்முடன் இரவு நேரம் தொடர்புகொண்டு சொல்லலாம். வணக்கம்'' என்று கூறி விடைபெற்றார் கதிரேசன்.

பேராசிரியர் நந்தகுமாரும், இசைக்கலைஞர்களும் மேடையில் வந்து அமர்ந்தனர். கலைச்செல்வி நாதஸ்வரத்துடன் வந்து அதனை ஊதிச் சரி செய்தாள். அவளை நாதஸ்வரத்துடன் கண்ட சபையோர் வியப்பில் ஆழ்ந்தனர். இரண்டுபேர் தவிலுடன் வந்து அமர்ந்தனர். அதில் ஒருவர் பெண்.

இசைக்கலைஞர்கள் தமது இசைக்கருவிகளை மீட்டி இசைமழை பொழியத் தயாரானதும், பேராசிரியர் நந்தகுமார் பேசும் இடத்திற்கு வந்து சபையோரை வணங்கினார். பின், ''சபையோர்களே, நான் கணிதபாடத்தில் தான் பட்டம் பெற்றுப் பேராசிரியரானேன். தொடர்பு சாதனங்கள் மூலம் தமிழறிஞரின் நட்புக் கிடைத்தது. அதனால் தமிழையும், சைவசித்தாந்தத்தையும் கற்றுப் பட்டம் பெற்றேன். பட்டங்கள் பெற்றால் மட்டும் போதாது. அதனால் மக்களுக்குப் பயனேற்பட வேண்டும். இம்முறை மகாநாட்டில் பேசவேண்டும் என்று வற்புறுத்தியமையால் பேச வந்துள்ளேன். அதனால் பிழைகள் எதுவும் ஏற்பட்டால் மன்னித்துக் கொள்ளுங்கள். அதுபோல் இசையரசி கலைச்செல்வி நாதஸ்வரம் கற்று இன்று முதன்முதலாக மேடையேறுகிறார். அத்துடன் மிருதங்க வித்துவான், தவில் வித்துவான், ஆர்மோனிய வித்துவான் ஆகியோர் முதன்முதலாக மேடையேறுகிறார்கள். அதனால் ஏராளமான தவறுகள் வரலாம். அப்படி வந்தாலும் சபையோர்களே, பொறுமையாக இருந்து கேளுங்கள். எல்லோரும் அமைதியாக எழுந்து நின்று கடவுளை வணங்குவோம்'' என்றதும், கலைச்செல்வி வள்ளுவரின் கடவுள் வாழ்த்தின் முதலாவது குறளை நாதஸ்வரத்தில் இரண்டு முறை வாசித்தாள்.

கடவுள் வாழ்த்து வாசித்து முடிந்ததம், கலைச்செல்வி கேள்வி என்ற அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களையும் இனிமையாக வாசித்தாள். மேளம், மிருதங்கம், கடம், உடுக்கு என்பனவற்றை வாசிக்கும் கலைஞர்கள் இசைக்கேற்றவாறு வாசித்தனர். தமிழறிஞரும் கதிரேசனும் வியப்போடு அதனை ரசித்தனர். அந்த நிகழ்வு முடிந்ததும் தமிழறிஞர் மேடைக்கு வந்து பேசினார். ''சபையோர்களே, இது ஒரு புது முயற்சி. ஒன்றைத் திரும்பத் திரும்பக் கேட்பதால் சலிப்பும், வெறுப்பும் தான் வரும். எமது கலைஞர்கள் அதைத்தாதன் செய்கின்றனர். சென்றவாரம் பெரிய புராணத்தில் சமூகத்தின் மேன்மை என்றொரு கருத்தரங்கிற்குச் சென்றேன். பத்துப்பேர் தான் வந்திருந்தனர். நாம் புதிது புதிதாக நிகழ்வுகளை நடாத்துவதால் மண்டபம் நிறைந்துள்ளது. மகாநாடு முழுவதிலும் புதிய புதிய நிகழ்வுகளை நடாத்தத் தீர்மானித்துள்ளோம். வணக்கம் என்று விடைபெற்றார் தமிழறிஞர்.

கலைச்செல்வி கேள்வி என்ற அதிகாரத்தின் முதலாவது குறளை நாதஸ்வரத்தில் வாசித்தாள். வீணையும், மிருதங்கமும் மட்டும் இசைக்கப்பட்டன. மீண்டும்

அக்குறளை வாசித்தாள். ‘‘செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை’’.

‘மிக மிக அருமை’ என்று சபையில் ஒரு குரல் ஒலிக்கப் பலர் எழுந்துநின்று மௌனமாக நின்று கையை அசைத்துத் தமது மகிழ்வை வெளிப்படுத்தினர். ‘‘சபையோர்களே, செல்வம் என்றதும் ஒருவரின் நினைவுக்கு வருவது பணம் தான். பணம் மட்டுமல்ல காணி, பூமி, ஆபரணங்கள், தோப்புக்கள், வயல்கள், மந்தைகள் யாவும் செல்வம். இவற்றையெல்லாம் முயற்சியால் தேடிக்கொள்ளலாம். தேட முடியாத செல்வங்களும் உலகில் உண்டு. நிம்மதி, மகிழ்ச்சி என்பனவும் செல்வம் தான். இவற்றைத் தேடிக்கொள்ள முடியாது. உயிர்கள் அவதிப்படுகின்றன. நல்ல பெற்றோர், நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள் இவ்வாறு செல்வங்கள் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். இச் செல்வங்கள் எல்லாவற்றையும் விடத் தலைசிறந்த செல்வம் செவியால் கேட்டறியும் செல்வமாகும். கேட்டறியாவிட்டால் ஓர் உயிரால் எதையும் செய்ய முடியாது’’

‘‘நடராசா கணித ஆசிரியர், பட்டதாாரி. அதன் பின்பும் பல்கலைக்கழகத்தில் கற்று இரண்டு பட்டங்களைப் பெற்றவர். கணிதபாடத்தில் பூச்சியம் எடுத்த மாணவர்களையும், நூறு புள்ளிகள் எடுக்க வைப்பவர். தரம் ஐந்தில் இருந்து பட்டதாரி மாணவர்கள் வரை அவரிடம் வந்து தமக்குள்ள கணிதபாடச் சந்தேகங்களைத் தீர்த்துச் செல்வர்.’’

‘‘ஆசிரியரான அவர் ஐம்பது வயதை அடைந்தபோது காதுள் உண்டான ஒரு கட்டிக்கு மருத்துவம் பார்த்தபோது அவரது இரண்டு காதுகளும் விறைத்து மரத்து பிறர் பேசுவது எதுவும் கேளாதளவிற்கு வந்துவிட்டது. அதனால் ஓய்வுபெற்று விட்டார். ஓர் ஆசிரியனுக்கு வாயும், காதும் நல்லபடி செயற்படாவிட்டால் கற்பிக்க முடியாது என்பதால் கற்பித்தலை முழுமையாகத் தவிர்த்துவிட்டார்’’.

‘‘அவரது இளைய மகள் சுமதி திருமணமாகாதவள். சாதகத்தில் சூரியனும் செவ்வாயும் ஒரு வீட்டில் இருந்தமையால் அவளுக்குப் பொருத்தமான வரனைத் தேடுவது சிரமமாக இருந்தது. சில நாட்களுக்கு முன்பு மதுரவனத்தில் வாழ்ந்த ஒரு வைத்தியரின் சாதகம் அவளுக்குப் பொருந்தியது. அது நடராசாவின் குடும்பத்திற்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. மதுரவனத்தில் உள்ள சிவகுரு என்ற குதிரை கல்யாணத் தரகன். அவன் தான் அத்திருமணத்தைப் பொருத்தியது’’.

‘‘மாப்பிள்ளை வீட்டார் பெண்ணைப் பார்க்க சனிக்கிழமை மாலை வருவதாகச் சிவகுருவுக்குச் சொல்லி அதனை பெண்வீட்டில் கூறுமாறு அறிவித்தனர். சிவகுரு பெண்வீட்டுக்கு வந்தபோது வழியில் நடராசா ஆசிரியரைக் கண்டு ‘‘ஐயா உங்களது மகளைப் பெண்பார்க்க சனிக்கிழமை மாப்பிளை வீட்டார் வருகிறார்கள். தயாராக இருங்கள்’’ என்று கூறிவிட்டுச் சிவகுரு சென்றுவிட்டான்.

''ஊரவர்களுக்கு அவரைப்பற்றித் தெரியும். பெரியவர்கள் கைகூப்பி வணங்கிவிட்டுச் செல்வர். சிறுவர்கள் அவரது கையைப் பிடித்துக்கொண்டு நடந்து செல்வர். சிறுவர்கள் மீது அன்புகொண்ட அவர் சிறுவர்களுக்கு இனிப்புக்கள் கொடுப்பார். சுமதி பொறியியலாளர் வீட்டில் இருந்து ஐம்பது மைல்களுக்கப்பால் உள்ள ஒரு நிறுவனத்தில் பணியாற்றுகிறாள். திங்கட்கிழமை காலை சென்றால் வெள்ளிக்கிழமை மாலை தான் வீடு திரும்புவாள். வெள்ளிக்கிழமை மாலையில் கைத்தொலைபேசியில் தாயாருடன் தொடர்பு கொண்ட அவள் தான் சனிக்கிழமை மாலையில் தான் வருவேன் எனக் கூறியிருந்தாள்''.

''அன்று காலை பத்து மணிக்குத் தரகருடன் மாப்பிள்ளை வீட்டார் நடராசாவின் வீட்டிற்குப் பெண் பார்க்க வந்தனர். தரகரைத்தவிர வந்தவர்களை நடராசாவின் வீட்டாருக்குத் தெரியவில்லை. இருப்பினும் நடராசா கைகூப்பி வணங்கி 'வாருங்கோ' என்று வரவேற்றார். தரகருக்கு அவர்களின் நிலையைப் பார்க்க திகைப்பாக இருந்தது. எதுவும் புரியாமல் சில கணங்கள் தடுமாறியவர். பின்பு, ''ஐயா நாம் சுமதியைப் பெண் பார்க்க வந்திருக்கிறோம். இரண்டு தினங்களுக்கு முன் ஐயாவைச் சந்தையில் சந்தித்துச் சொன்னனான்'' என்றார் தரகர்.

அப்போது தான் விடயத்தைப் புரிந்து கொண்ட சுமதியின் தாய் தனது கணவரின் நிலையைப்பற்றி விபரமாகக் கூறிவிட்டு, ''சுமதிக்கு எதுவும் தெரியாது, நான்கு மணிக்குத்தான் வருவாள் என்றாள். அதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. மாப்பிள்ளை சரவணன் சொன்னான்''. சிவகுரு சுமதியின் நிழற்படத்தைத் தந்து அவள் பணிபுரியும் இடத்தைச் சொன்னதால்தான் நானும் அம்மாவும் அங்கு சென்று பெண்ணைப் பார்த்து விட்டோம். எமக்கு விருப்பம். ஒரு நல்ல நாளாகப் பாருங்கள் திருமணத்தை முடித்து விடலாம்.''

''நான், நீங்கள் வந்திருப்பதாகச் சுமதிக்குச் சொல்லிவிட்டேன். அவள் வந்து கொண்டிருக்கிறாள். நீங்கள் இருந்து சாப்பிட்டுவிட்டுப் பெண்ணையும் பார்த்துவிட்டுச் செல்லலாம்'' என்றாள் சுமதியின் தாய் திரவியம்.

''அப்பாவுக்குத் திடீரென்று வந்த நோயால் பெரும் பாதிப்பு ஏற்பட்டு விட்டது. இன்று நல்லது நடக்க வேண்டிய நேரத்தில் இப்படியாகிவிட்டது. இப்படிப் பல துயரமான சம்பங்கள் இடையிடையே நடைபெறுகின்றன. வள்ளுவர் சொன்னதுபோல எல்லாச் செல்வங்களையும் விட மேலான செல்வம் நம் செவிச்செல்வம் தான்'' கலங்கினான் சுமதியின் சகோதரன் சிவபாலன்.

''இதுவரை கலைச்செல்வியின் இசையாலான பாடலுக்கு உரை விளக்கம் கதை சொன்னேன். அடுத்து இரண்டாவது குறளைக் கலைச்செல்வி நாதஸ்வரத்தில் வாசிப்பாள்'' என்றார் பேராசிரியர் நந்தகுமார்.

கலைச்செல்வி இரண்டாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதை நாதஸ்வரத்தில் வாசித்தாள். ''செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்'' கலைச்செல்வி வாசித்து முடித்ததும் பேராசிரியர் நந்தகுமார் பேசத் தொடங்கினார். ''சபையோர்களே உணவு உயிர்களுக்குப் பிரதானமானது. அந்த உணவு மிகுந்த மகிழ்வான வேளைகளிலும், தாங்கமுடியாத துன்பங்கள் வந்தபோதும் தேவையில்லாத பொருளாகிவிடுகிறது. சரவணன் வைத்தியராக இருந்த போதும் இசைப்பிரியன். இரவில் நாதஸ்வர இசையைக் கேட்டால் இரவு பன்னிரெண்டு மணியானாலும் சாப்பிட மாட்டான். தாய் வந்து கெஞ்சி மன்றாடித்தான் உணவை உண்ணவைப்பாள்''.

''சரவணனுக்கும் சுமதிக்கும் திருமணம் முடிந்து விட்டது. இருவரும் வேலைக்குச் செல்லுமுன் உறவினர் நண்பர்களுக்கு மதிய உணவு கொடுக்க விரும்பினர். அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அன்று புதன்கிழமை காட்டுப்பிள்ளையார் கொடியேறி ஆறாம் நாள்த்திருவிழா நடைபெற்றது. திருவிழா உபயகாரர் தமிழ்நாட்டில் மிகவும் சிறந்த நாதஸ்வர வித்துவான்களை அழைத்திருந்தனர். சரவணனும் சுமதியும் காட்டுப்பிள்ளையார் கோவிலுக்கு வந்தபோது தமிழக நாதஸ்வர தவில் வித்துவான்கள் தமது கச்சேரியை ஆரம்பித்தனர். சரவணன் மேடைக்கு அருகில் சென்று அமர்ந்து கையால் தாளம்போட்டபடி மெய் மறந்திருந்தான். அப்படியான ஓர் இனிமையான கச்சேரியை அவன் இதுவரை கேட்டதில்லை''.

''காலை பத்து மணியிலிருந்து நாதஸ்வரக் கச்சேரியைக் கேட்க ஆரம்பித்த சரவணனை அடிக்கடி சுமதி தட்டி விருந்தினர்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள். அவர்களை அழைத்த நீங்கள் அவர்கள் வரும்போது வீட்டில் இருந்து அவர்களை அழைக்க வேண்டும். அவர்களோடு அன்பாக உரையாட வேண்டும். அதை விட்டுவிட்டு இங்கே இருக்கலாமா..? என்று கேட்டாள்''.

''அருமையான கச்சேரி, தமிழ்நாட்டில் இருந்து வந்துள்ளனர். இனி இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடையாது. அம்மா, செவிக்கு இனிமையான உணவு இல்லாதபோது தான் வயிற்றுக்கு உணவு கொடுக்க வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லியுள்ளனர். அதனால் நீர் சென்று விருந்தினரைக் கவனியும்'' என்றான். வேறு வழியின்றிச் சுமதி வீட்டுக்குச் சென்று கூறியபோது சரவணனின் தாய் சொன்னாள், ''அவன் கச்சேரி முடியத்தான் வருவான். ஆதலால் வந்தவர்களுக்கு உணவைக் கொடுங்கள்''. ''சபையோர்களே, செவி மட்டுமல்ல மனம் மகிழ்வோடு இருக்கும் போதும் உணவு தேவையில்லை''.

பேராசிரியர் நந்தகுமார் தனது பேச்சை நிறுத்தியதும் கலைச்செல்வி மூன்றாவது குறளைப் பாடிவிட்டு, அதை நாதஸ்வரத்தில் வாசித்தாள். வீணை வித்துவானும், கடம் வாசித்தவரும் மெல்லிசையை வழங்கினர். அப்போது சரவணன் வந்தான். அதிகாலை ஐந்து மணிக்குச் சென்ற அவன் மாலை ஐந்து மணிக்கு வீட்டுக்கு

வந்தான். ‘‘காலையிலும் சாப்பிடவில்லை, மத்தியானமும் சாப்பிடவில்லை. ஐந்து மணிக்கு வாறியள் உடம்பு என்னாகும். ஒரு வைத்தியராக இருந்தும் உணவை நேரந்தவறாது உண்ண வேண்டும் என்று தெரியாதா..? நோயாளிகளுக்கு வேளாவேளை உணவை உண்ண வேண்டும். இல்லாவிட்டால் இரைப்பையில் புண் உண்டாகி துன்பத்தைக் கொடுக்கும் என்பீர்கள். உங்களுக்கு அது பொருந்தாதோ?’’ என்று சற்றுக் கோபமாகக் கேட்டாள் சுமதி.

‘‘அன்பே, நீர் திருக்குறளைப் படிக்கவில்லையா..? வள்ளுவர் சொல்கிறார், ‘‘இசைப்பிரியர்கள் பூமியில் வாழ்ந்தாலும், அவர்கள் விண்ணுலகில் அமிர்தத்தை உண்ணும் தேவர்களுக்கு இணையானவர்கள். அருமையான இசையைக் கேட்பவர்கள் தேவலோகத்தில் தான் அந்த நேரம் இருப்பர். அம்மா சொல்லவில்லையோ…? சொல்லியிருப்பா’’ என்றான் சரவணன்.

‘‘ம்.. ம்.. சொன்னவா, சொன்னவா. நீங்கள் விண்ணுலகில் இருக்கும்போது தேவர்களோடு முருகனும் வந்து மாமியின் சுகத்தை விசாரிப்பாராமே.. இன்று விசாரிக்கவில்லையா…?’’ சுமதி கேட்கச் சரவணன் பலமாகச் சிரித்துவிட்டுச் சொன்னான். ‘‘என்னருமை மனைவியே, எவரொருவர் பற்றுக்கள் இல்லாது இறைவன் மீது பற்று வைக்கிறாரோ, அவரிடம் அவர் வணங்கும் தெய்வம் வரத்தான் செய்யும்’’ என்றான் சரவணன் என்று கூறிவிட்டுப் பேராசிரியர் நந்தகுமார் கலைச்செல்வியைப் பார்த்தார்.

நந்தகுமாரின் பார்வையின் பொருளை உணர்ந்த கலைச்செல்வி நான்காவது குறளைப் பாடிவிட்டு அதனை நாதஸ்வரத்தில் வாசித்தாள். ‘‘கற்றிலன் ஆயினும் கேட்க அ்்.து ஒருவற்கு ஒற்கத்தின் ஊற்று ஆம் துணை’’

பேராசிரியர் நந்தகுமாரன் அக் குறளுக்கு உரையையும், விளக்கத்தையும் சொல்லத் தொடங்கினார். ‘‘சபையோர்களே, இப்போதுதான் பாடசாலைகளை உருவாக்கி மாணவர்களுக்குக் கற்பிக்கின்றனர். அதற்கு முன்பு குருகுலக்கல்விதான் நடைபெற்றது. இப்போதும் பாடசாலைக்குச் சென்று கல்வி பயிலாத பலர் அறிய வேண்டியவற்றை அறிந்தவர்களாக உள்ளனர். ஒருவரின் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் அறிந்து வைத்திருக்கின்றனர். எனது பேரனாரிடம் தான் பலபேர் வந்து சுபநேரம், ராகுகாலம், காலநிலை பற்றிய தகவல்களை அறிந்து செல்வர். அவருக்குப் பெயர் கந்தர். ஒருவர் வந்து ‘‘கந்தரப்பா, நாற்று நடப்போறன், சுபநேரத்தைச் சொல்லுங்கோ என்று கேட்டால் அவர் உடனே சொல்வார். திங்கட்கிழமை 7.32இல் இருந்து 9.02 இராகுகாலம். சுபநேரம் 12 மணியிலிருந்து ஒன்று முப்பத்திரெண்டு வரை. இப்படியே வாரத்திலுள்ள ஏழு நாட்களுக்கும் சொல்வார். இது பெரிய விடயமல்ல. அவர் தம்பையா என்ற சோதிடரது நண்பர். யாரோடு சேர்ந்திருக்கிறோமோ, அவரது அறிவு சேர்பவருக்கும் உண்டாகும். ராகுகாலம், சுபநேரம் என்பன திங்கள் தொடங்கி ஞாயிறு வரை ஒரே நேரம்தான் வரும். அதை நினைவிற் கொண்டால் சரி’’.

“முன்பு மணிக்கூடு இருந்ததில்லை. தனது நிழலைக் கொண்டு பகலில் நேரத்தைக் கணிப்பர். இரவில் நட்சத்திரங்களைக் கொண்டு கணிப்பர். அடுத்த வருடம் எவ்வாறு மழைபெய்யும் என்பதை மார்கழி மாதத்தில்வரும் தெற்கோட்டத்தைக் கொண்டு கணிப்பர். சமீபகாலமாகத்தான் விஞ்ஞான உபகரணங்கள் பாவனைக்கு வந்துள்ளன. அதற்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருமூலரால் எழுதப்பட்ட திருமந்திரத்தில் இப்படியான விடயங்கள் உண்டு. எம் முன்னோர் பழந்தமிழ் நூல்களைக் கற்றும், கற்றவரிடம் கேட்டும் எல்லாவற்றையும் அறிந்து கொண்டனர். தமிழ் அறிஞர்களோடு பழகியவர்களுக்குச் சோதிடம், இலக்கியம் யாவும் தெரியும். சந்தண மரத்திற்கு அருகே நிற்கும் மரங்களிலும் சந்தண வாசனை உண்டு. மரங்களுக்கே உணர்வு உண்டென்றால் உயிர்களுக்கு இராதா?” என்று கேட்டுவிட்டு பேராசிரியர் கலைச்செல்வியைப் பார்த்தார்.

கலைச்செல்வி ஐந்தாவது குறளைப்பாட இசைக்கலைஞர்கள் பாடலுக்கு ஏற்றவாறு இசையமைத்தனர். “இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்” “சபையோர்களே, ஒழுக்கமாக வாழப் பெரியவர்களது வார்த்தைகள் வழுக்குகின்ற வேற்று நிலத்தில் நடந்து செல்லும்போது, ஊன்றுகோல் போல உதவும்” என்று பேராசிரியர் கூறி முடித்துவிட்டுக் கலைச்செல்வியைப் பார்த்ததும், கலைச்செல்வி ஆறாவது குறளை இனிமையாகப் பாடினாள். “எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்” அவள் இனிமையாகப் பாடி முடித்ததும், பேராசிரியர் நந்தகுமார் சொன்னார், “சபையோர்களே, ஐந்தாவதும், ஆறாவதும் குறள்கள் பெரியவர்களின் வார்த்தைகளைப் பற்றியவை. அவர்கள் கூறும் சிறுசிறு சொற்கள் கூட நிறைந்த பயனைத்தர வல்லவை. நாராயணன் என்ற கமுதை மிகுந்த ஏழை. ஐந்து பிள்ளைகள். இளையவன் மூர்த்தி அவன் எட்டாம் வகுப்புப் படிக்கும்போது பாடசாலை உபகரணைங்களைக்கூட வாங்கிக் கொடுக்க நாராயணால் முடியவில்லை. அதனால் பாடசாலைக்குச் செல்லாது கூலி வேலைக்குச் செல்வான், களவெடுப்பான்”.

“அதைக் கேள்விப்பட்ட தமிழறிஞர், மூர்த்தியை அழைத்துக் கொண்டு நாராயணனிடம் வந்து சொன்னார். நாராயணா உனது நான்கு பிள்ளைகளும் படிக்கின்றனர். இளையவனைப் பற்றி உனக்குத் தெரியும். உனது சொற்களை அவன் கேட்பதில்லை. அவனை எனது வீட்டிற்குச் சில நாட்கள் அழைத்துச் செல்கிறேன்” என்றார். நாராயணன் அதற்குச் சம்மதித்தான்.

“தமிழறிஞர் அவனை அழைத்துச் சென்று அவனுக்கு வேண்டிய உணவு வகைகளைக் கொடுத்தார். சில நாட்கள் கழியச் சொன்னார், “மூர்த்தி ஒருவரது வாழ்க்கையை முன்னேற்றுவது கல்வி. பரம ஏழையாக இருந்த ஆறுமுகத்தின் மகன் சிவயோகன், தணிகாசலத்தின் உதவியோடு படித்து வைத்தியராகி விட்டான். அதுபோல நீயும் படித்தாயேயானால் உனது வாழ்வும் சிவயோகனைப் போல மாறும். அதனால் படி” என்றவர். மூர்த்தி படித்துக் கணக்காளராகி விட்டான். சென்ற வாரம் அவன் கற்ற பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவுக்கு அவன் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டான்”.

‘‘அவன் மாணவர்கள் மத்தியில் உரையாற்றும்போது, ‘மாணவர்களே, நன்றாகப் படியுங்கள். கல்வி தான் எனது வாழ்வை மாற்றியது. தமிழறிஞர் சொன்ன வார்த்தைகள் தான் எனது வாழ்வை மேம்படுத்தியது. வாழ்க்கையில் துன்பங்கள், சிக்கல்கள் வரும்போது பெரியவர்கள் சொன்ன வார்த்தைகள் ஊன்றுகோலாக மாறி வாழ்க்கையை உயர்த்தும். அதனால் பெரியவர்களான ஆசிரியர்களின் சொற்களைக் கேட்டு நடவுங்கள். அவர்கள் சிறிய சிறிய வார்த்தைகள் சொன்னாலும், அவற்றால் வரும் பயன் மிகப் பெரிதாகும். இளமையில் கல், பொய் சொல்லாதே, களவெடுக்காதே என்று சொல்லும் சிறிய வார்த்தைகள் பெரும் பயனைத் தரும்’ என்று பேசினான். அதனால் பெரியோர்களின் வார்த்தைகளைக் கேட்டு நடவுங்கள்’’ என்று கூறி நிறுத்தினார் பேராசிரியர் நந்தகுமாரன்.

உடனே கலைச்செல்வி ஏழாவது குறளை இனிமையாக நாதஸ்வரத்தில் வாசித்து விட்டுப் பாடினாள். ‘‘பிழைத்து உணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்து உணர்ந்து ஈண்டிய கேள்வியவர’’ இசைக் கலைஞர்கள் அருமையாக இசையை வழங்கினர். ‘‘சபையோர்களே அறிவு தரும் நூல்களைக் கசடறக் கற்றவர்கள் ஒருவரைத் தவறாகப் புரிந்து கொண்டாலும், வீண்வார்த்தைகளைப் பேச மாட்டார்கள். மூர்த்தி இளைஞனாக இருக்கும்போது ஒரு நாள் தமிழறிஞரிடம் வந்து, ‘‘ஐயா, நான் நண்பர்களுடன் சுற்றுலாச் செல்ல விரும்புகிறேன்’’ என்றபோது தமிழறிஞர் அவனுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்தார். அன்று நள்ளிரவாகியும் மூர்த்தி வரவில்லை. அவர் பெற்றோருடன் வாழும்போது நண்பர்களுடன் சேர்ந்து சில சமயங்களில் மதுவை அருந்தி விடுவான். தமிழறிஞரின் வீட்டுக்கு வந்தபின் அவன் நண்பர்களுடன் சேர்வதில்லை. மாலைநேரம் தமிழறிஞரின் வீட்டுக்கு வந்த நாராயணன் மூர்த்தியின் நண்பர்கள் குடித்துவிட்டு வீதியில் குளப்பம் விளைவிப்பதாகத் தமிழறிஞருக்குச் சொல்லிவிட்டுச் சென்றார்.

இரவு பன்னிரெண்டு மணிக்கு மூர்த்தி வந்தபோது தமிழறிஞர் எதுவும் பேசவில்லை. மறுநாள் காலை சொன்னார். ‘‘மூர்த்தி இரவில் வெகுநேரம் வெளியில் தங்கக்கூடாது. தீய நண்பர்களுடன் சேரக்கூடாது’’ அதன்பின் மூர்த்தி நண்பர்களுடன் ஊர் சுற்றுவதில்லை. தமிழறிஞர் ஏராளமான நூல்களைக் கற்றமையால் அவர் மூர்த்தி குடித்திருந்தாலும், கண்டித்திருக்க மாட்டார். ஏனென்றால் கண்டிப்பு சில சமயம் விபரீதமான முடிவை எடுக்க வைக்கும் என்று அவருக்குத் தெரியும். பெற்றார் சிலர் கண்டிப்பும், தண்டனையும் பிள்ளைகளைத் திருத்தும் என்று நினைக்கின்றனர்’’ என்று நிறுத்தினார்.

கலைச்செல்வி எட்டாவது குறளை நாதஸ்வரத்தில் வாசித்து விட்டுப் பாடினாள், ‘‘கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால் தோட்கப் படாதசெவி’’ ‘‘சபையோர்களே, பெரியவர்களின் அறிவுரைகளைக் கேட்காதவரின் காதுகள், செவிடர்களின் காதுகளை ஒத்தன. அன்று இரவு தமிழறிஞர் எதுவும் கேட்காதது

மூர்த்திக்குக் கவலையை அளித்தது. அதனால் தமிழறிஞரின் மனைவியின் அருகே சென்று, ‘‘அம்மா’’ என்றான்.

‘‘சொல்லு மூர்த்தி’’

‘‘அம்மா நேற்று நான் நண்பர்களுடன் சுற்றுலாவுக்குச் சென்றபோது நாம் சென்ற வாகனம் விபத்துக்குள்ளாகிவிட்டது. அதனால் தான் பிந்தி வந்தேன். அது பற்றி ஐயாவுக்குச் சொல்ல முடியவில்லை’’ கவலைப்பட்டான் மூர்த்தி.

‘‘தமிழறிஞரின் மனைவி சிரித்தாள், நீ இவ்வளவு காலமும் அவருடன் பழகியும் அவரை அறியாதவனாகவே இருக்கிறாய். அதன் பொருளைத் தவறாகச் சில சமயம் உணர்ந்தாலும், பேதமையாக வன்சொற்களைப் பேசமாட்டார். நீயோ அத்துடன் பெரியவர்களின் சொற்கேட்டு நடப்பவன். அதனால் தவறாக நடக்கமாட்டாய் என்று அவர் நம்பியிருக்கிறார். நீ நுட்பமான அறிவுடையவன். பேசத் தகாதவற்றைப் பேசமாட்டாய் என்று அவருக்குத் தெரியும். அதனால்தான் அவர் கேட்கவில்லை’’ என்றாள். அதைக் கேட்டதும் மூர்த்தியின் மனம் அமைதியடைந்தது’’ என்ற பேராசிரியர் ஒன்பதாவது குறளைப் பாடிமுடிக்க கலைச்செல்வி அதனை நாதஸ்வரத்தில் வாசித்துவிட்டுப் பதத்தாவது குறளையும் நாதஸ்வரத்தில் வாசித்தாள். அதனைப் பேராசிரியர் இனிமையாகப் பாடினார்.

‘‘செவியின் சுவை உணரா வாய் உணர்வின் மாக்கள் அவியினும் வாழினும் ஏன்?’’ ‘‘சபையோர்களே, செவியால் சுவைக்கும் உணர்வில்லாதவர்கள் தான் வாயால் உண்ணும் உணவின் சுவையை விரும்புவார்கள். இவர்கள் வாழ்ந்தாலென்ன..? இறந்தாலென்ன..?’’ என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வள்ளுவர் சொல்கிறார். உலகில் எத்தனையோ இன்பங்கள் உண்டு. இவற்றில் மேலானது இனிய இசை. மனிதர்கள் இசையை விரும்புவர். எம் இனத்தவரும் விரும்புவர். கலைச் செல்வியிடம் வீமன் என்றொரு நாய் உண்டு. அந்த நாய் இசைப்பிரியன். நாதஸ்வரம் வாசித்தால் அது அந்த இடத்தைவிட்டு நகராது. கலைச்செல்வியிடம் சென்று நாதஸ்வரத்தை வாசிக்கும்படி இரண்டு காலில் எழுந்து நின்று வணங்கும். கலைச்செல்வியின் வீட்டுக்கருகில் ஒரு பிள்ளையார் கோவில் இருக்கிறது. அது கொடியேறினால் பத்து நாட்கள் திருவிழா நடைபெறும். விசேட திருவிழாக்களுக்குத் திறமான நாதஸ்வர வித்துவான்கள் வருவார்கள். அத்தகைய நாட்களில் வீமன் சாப்பாட்டுக்குக்கூட வீட்டுக்கு வராது. அதனால் கலைச்செல்வி ஏசினால் இசையை ரசிக்கத் தெரியாதவர்கள் உயிர்வாழ்வதைவிட இறப்பது நல்லது, நான் சாகப் போறன்’’ என்று சொல்லும். சபையோர்களே எனக்கிட்ட பணி முடிவடைந்து விட்டது. இவ்வளவு நேரமும் அமைதியாக இருந்து கேட்டமைக்கு நன்றி. வணக்கம்’’ என்று விடைபெற்றார் பேராசிரியர் நந்தகுமார்.

# 6

நந்தகுமார் பேசி முடிந்ததும் கதிரேசன் வந்து சபையோரைப் பார்த்து வணங்கினார். பின், ''சபையோர்களே, அடுத்துச் சிற்றம்பலம் ஆசிரியர் அறிவு உடைமை பற்றிப் பேசுவார். அவர் பண்டிதர், கலைப்பட்டதாரி. தற்போது முதுகலைமானிப்பட்டம் பெற்றார். அதன் பின் கலாநிதிப்பட்டம் பெற எமது பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கற்று வருகிறார். அவர் தமிழ்க்கடல். தமிழ் இலக்கணத்தில் வல்லவர். பல இலக்கண நூல்களை எழுதியவர். புராணங்களைக் கோவில்களில் தொடர்ந்து பேசுபவர். எமது விநாயகர்கோவில் உற்சவ காலங்களில் விநாயக புராணத்தைத் தொடர்ந்து பேசுபவர். அவர் ஒழுக்கமானவர். எல்லோரையும் மதிப்பவர். யாரையும் புகழ்ந்து பேசி விழுந்து கும்பிடாதவர். அதனால் இலக்கியம் சம்பந்தமான பரிசுகள் எவையும் பெறாதவர். பிரமுகர்களால் மதிக்கப்படாதவர். திறமைமிக்கவர்களைத் தான் எமதுசபை மதிக்கும், கௌரவிக்கும். அதனால்தான் அவருக்கு 'இலக்கிய கலாவித்தகர்' என்ற பட்டத்தை அளித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க எண்ணியுள்ளோம். பட்டத்தை அளித்துப் பொன்னாடை போர்த்த வருமாறு பேராசிரியர் நந்தகுமாரனை அழைக்கின்றேன்'' என்றார் கதிரேசன்.

''சிற்றம்பலம் எனது மாணவன், அவனுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் சந்தர்ப்பத்தை அளித்த இம் மகாநாட்டின் குழுவினருக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்'' என்று கூறும்போது சிற்றம்பலம் தனது தும்பிக்கையால் பேராசிரியர் நந்தகுமாரனின் கால்களைத் தொட்டு வணங்கித் தன்னை ஆசீர்வதிக்கும்படி கேட்டது. பேராசிரியர் சிற்றம்பலத்தின் தும்பிக்கையைத் தொட்டு ஆசீர்வதித்தார்.

சிற்றம்பலம் பேசத் தொடங்கினார், ''சபையோர்களே, எனது வாழ்வில் பொன்னான நாள் இன்றாகும். எனது குருவான பேராசிரியரிடம் ஆசிபெற்றதைப் பெரும் பாக்கியமாகக் கருதி இச் சபையினருக்கும், கடவுளுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். இப்பொழுது கலைச்செல்வி அறிவு உடைமை என்ற அதிகாரத்தின் பத்துக் குறள்களையும் வீணையில் வாசிப்பார். பக்கவாத்தியக் கலைஞர்கள் இசை வழங்குவார்கள்''.

கலைச்செல்வி பத்துக் குறள்களையும் வீணையில் மிகமிக இனிமையாக வாசித்துவிட்டு முதலாவது குறளை இனிமையாகப் பாடினாள். ''அறிவு அற்றங் காக்கும் கருவி; செறுவார்க்கும் உள் அழிக்கால் ஆகா அரண்''. ''சபையோர்களே, தற்போதைய உளவியலாளர்கள் அறிவு உடைமை பற்றிக் கூறிய கருத்துக்களை நம் முன்னோர் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பே கூறிவிட்டனர். திருமூலர் திருமந்திரத்தின் 461ஆவது பாடலில் கருவில் உள்ள குழந்தை தாயைப் போலவே பிள்ளையின் உடலமைப்பு இருக்குமென்றும், தந்தையின் அறிவே மகவுக்கு உண்டாகும் என்று கூறியுள்ளார். திருமந்திரத்தில் உள்ள சிவனது பெருமைகளைத் திருவள்ளுவர் நீக்கிவிட்டு மிகுதியைத் திருக்குறள் ஆக்கியுள்ளார் என்று தமிழறிஞர் கூறியது உண்மை. அறிவு என்பது ஒருவருக்குத் துன்பங்கள் வராது காக்கும் கருவியாகும். அத்துடன் பகைவர்களால் அழிக்கமுடியாத பலம் மிக்க உளக் கோட்டையுமாகும்''.

‘‘உலகில் உள்ள உயிரினங்களில் நாய்களுக்குத்தான் சகல அறிவும் உண்டு. எனது மாணவனான வீமன் சபையில் கம்பீரமாக வீற்றிருக்கிறார். அவர் துப்பறியும் இலாகாவில் தலைமை அதிகாரியாகப் பணியாற்றுகிறார். ஒரு நாள் அவர் எனது வீட்டுக்கு வந்தபோது கந்தவனத்தில் இருந்து பலர் வந்திருந்தனர். நான் ஓர் ஆய்வு மகாநாட்டில் உரையாற்றிக் கொண்டிருந்தமையால் உடனே வரமுடியவில்லை. வந்தவர்கள் பொறுமையை இழந்துவிட்டனர். அப்போது வீமன் சொன்னான். ஆசிரியர் சந்தியில் வந்து கொண்டிருக்கிறார். ஐந்து நிமிடத்தில் வந்து விடுவார் என்றபோது வந்தவர்கள் ஆச்சரியப்பட்டனர். எனது மனைவி சொன்னாள், ‘‘வீமனுக்கு மோப்பசக்தி அதிகம். அவன் விமானநிலையத்தில் அதிகாரியாகக் கடமை புரிகிறான். அரசாங்கம் துப்பறியும் விடயத்தில் ஆறறிவு படைத்த பல கலாநிதிப் பட்டங்களைப் பெற்ற மனிதர்களை நம்புவதில்லை. வீமனின் இனத்தவர்களைத் தான் நம்புவர்.’’.

‘‘வீமன் விமானப் பயணிகள் கொண்டு வரும் போதைப்பொதிகள், ஆபரணங்கள், பணம், ஆயுதங்கள் போன்றவற்றைக் கண்டுபிடித்து விடும். ஒருமுறை பெரிய கைத்தொலைபேசிக்குள் பல கோடி ரூபா மதிப்புள்ள வைரக்கல்லை மறைத்து வைத்துக்கொண்டு அதனூடாகப் பேசிய ஒரு பயணியின் கையை வீமன் கௌவிப் பிடித்தது. அதைச் சோதித்துப் பார்த்த அதிகாரிகள் அந்த வைரக்கல்லைக் கண்டுபிடித்தனர்’’.

‘‘சபையோர்களே, அறிவைப் பகைவர்களால் அழிக்க முடியாது. வீமனின் அறிவு கடத்தல்காரப் பயங்கரவாதிகளுக்கு அச்சத்தைக் கொடுத்தது. அதனால் அவர்கள் பெருந்தொகைப் பணத்தை ஓர் அதிகாரியிடம் கொடுத்து வீமன் பயணிக்கும் வாகனத்துக்குள் குண்டு வைக்குமாறு சொல்லப் பணத்தைப் வாங்கிய அதிகாரி, அவர்கள் கொடுத்த நவீனமயமான குண்டை வாங்கிவந்து வீமன் பயணிக்கும் வாகனத்தில் பொருத்தி விட்டார்’’.

வீமனும் சில அதிகாரிகளும் வாகனத்தில் ஏறினார்கள். குண்டு வைத்த அதிகாரியும் வழமையாக அவ்வாகனத்தில் வீமனோடு கூட வருபவர். அன்று அவர் வராதது வீமனுக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது. வீமன் வாகனத்தைச் சுற்றி வந்தது. மிகமிகச் சிறிதாக ஒரு வித்தியாசமான சத்தம் அதற்குக் கேட்டது. உன்னிப்பாக அவதானித்தபடி வாகனத்தின் பிற்பகுதியைத் திறக்குமாறு சைகை காட்ட வாகனச் சாரதி திறந்தபோது, அதற்குள் ஓர் சக்தி வாய்ந்த குண்டு பொருத்தப்பட்டிருந்தது. அதை முகர்ந்து பார்த்த வீமன் உள்ளே சென்று அந்த அதிகாரியைப் பிடித்து வந்தது. வீமனின் அறிவு தான் அனைவரையும் காப்பாற்றியது’’ என்று கூறிச் சிற்றம்பலம் தனது பேச்சை நிறுத்தக் கலைச்செல்வி இரண்டாவது குறளைப் பாடிவிட்டு, அதை வீணையில் மீட்டினாள். ‘‘சென்ற இடத்தால் செலவிடாது தீதுு ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு’’ கலைச்செல்வி பாடி முடித்ததும், சிற்றம்பலம், ‘‘சபையோர்களே, அறிவைப் பெற்று, அதை வளர்க்க வேண்டுமென்று நினைப்பவர்கள் முதலில் தமது மனதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

மனதைக் கட்டுப்படுத்தி அதனைத் தீயவழியில் செல்லவிடாது தடுத்தால் அறிவு பெருகும். எனது சில மாணவர்கள், நான் கற்பிக்கும்போது கவனிக்காது, ஏனைய மாணவர்களுடன் கதைப்பர். தட்டித்தடவி விளையாடுவர். வீமனைப் போன்று பல மாணவர்கள் கற்பிக்கும் வேளைகளில் ஆடாமல் அசையாமல் இருந்து பாடத்தைக் கிரகிப்பார்கள். அப்படிக் கிரகித்தவர்கள் இன்று உயர்ந்த உத்தியோகங்களில் இருக்கின்றார்கள். மனதைக் கட்டுப்படுத்த முடியாத மாணவர்கள் தீய செயல்களைச் செய்து கொண்டிருக்கின்றனர். நினைவுகள் தான் செயல்களாகின்றன. நான் ஒருவருக்கு உதவி செய்ய வேண்டுமென்று நினைத்தால் உதவி செய்வேன். திருடவேண்டுமென்று நினைப்பவன் திருடுவான். வீமன் தான் தலைமை அதிகாரியாக வரவேண்டுமென்று ஒரு வருடத்திற்கு முன் எனக்குச் சொன்னவன். இப்போ அவன் தான் தலைமை அதிகாரி. எண்ணம் போலவே வாழ்வு அமையும். நல்லவற்றை நினைத்து ஊக்கமாக முயற்சித்தால் செய்ய முடியதென ஒரு செயலும் இல்லை''.

கலைச்செல்வி மூன்றாவது குறளை வீணையில் வாசித்துவிட்டு இனிமையாகப் பாடினாள். ''எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'', ''சபையோர்களே, யாராக இருந்தாலும் அவர்கள் சொல்வதை அப்படியே நம்பாது, அதன் உண்மையாகிய பொருளை அறிந்து கொள்வது தான் அறிவு என்று நான் வீமன் பத்தாவது வகுப்புப் படிக்கும்போது கற்பித்தேன். ஒரு நாள் அவன் வந்து கேட்டான். ''குருவே, இராத்திரி பக்கத்து வீட்டில் உடுக்குச் சத்தமும், பாட்டும் கேட்டது. என்னவென்று அம்மாவைக் கேட்டேன். அவர் பக்கத்து வீட்டுப் பொண்ணுக்கு பேய் பிடித்துவிட்டது அதை விரட்டுகிறார்கள்'' என்றார். நீங்கள் சிவபுராணம் கற்பிக்கும்போது புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப் பல்மிருகமாக என்று உயிர் பல பிறப்புக்களை எடுக்கும் என்றீர்கள். பிறப்பெடுத்த உயிர் எப்படிப் பேயாக மாறும்? என்று கேட்டான்''.

''நீ சொல்வது உண்மை, கடவுளை நம்பினால் எந்தத் துன்பங்களும் வராது. அவர் தனது அடியார்களைக் காப்பாற்றுவார். பேய் பிசாசு என்று எதுவும் இல்லை. சிலர் பேய், பிசாசைக் காட்டிப் பிழைப்பு நடத்துகிறார்கள். நீ நம்பாதே என்றேன். பத்தாம் வகுப்புப் படிக்கும் போதே பலவற்றையும் ஆய்வு செய்பவன். அதனால் தான் அவன் அடிக்கடி பதவி உயர்வு பெறுகிறான்'' என்றார்.

சிற்றம்பலம் பேச்சை நிறுத்தியதும், கலைச்செல்வி நான்காவது குறளை வீணையில் வாசித்தவிட்டுப் பின் பாடினாள், ''எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய் நுண்பொருள் காண்பது அறிவு'' ''சபையோர்களே, நீங்கள் மற்றவர்களுக்கு சொல்வதை விளக்கமாக அவர்களுக்குப் புரியும்படி கூற வேண்டும். பிறர் சொல்வதன் பொருளை நுட்பமாக ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். இந்த விடயத்திலும் வீமன் மிகவும் சிறந்தவனாவான். அவன் தரம் ஐந்து படிக்கும்போது எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்குப் பிரதம விருந்தினராக வீமனின் மாமனை அழைப்பதாகத் தீர்மானித்தோம். அவர் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றினார். நான்

முன்கூட்டியே அவரிடம் எமது பாடசாலையின் பரிசளிப்பு விழா பற்றிக் கூறியிருந்தேன். அவர் கொழும்பில் கல்வி அமைச்சில் நடைபெறும் கூட்டத்திற்குச் செல்ல வேண்டுமென்று கூறியிருந்தார்''.

''நான் வீமனை அழைத்து இருபத்தைந்தாம் திகதி பிற்பகல் இரண்டு மணிக்கு பரிசளிப்பு விழா நடத்தவுள்ளோம். அவருக்கு நேரமிருக்குமா எனக் கேட்டுவா என்று கூறியிருந்தேன். அவன் அவரிடஞ் சென்று அவருடன் விபரமாகக் கதைத்து விட்டு வந்து சொன்னான், ''குருவே, மாமா சனிக்கிழமைதான் வருவாராம். திங்கட்கிழமையும், புதன்கிழமையும் கல்வித் திணைக்களத்தில் கூட்டம் இருக்காம். வெள்ளிக்கிழமைகளில் பாடசாலை அதிபர்கள், அதிகாரிகளைச் சந்தித்துப் பாடசாலைகளில் உள்ள குறைபாடுகளைக் கூறும் நாளாம். அதனால் வியாழக்கிழமை பரிசளிப்பு விழாவை வைக்கட்டாம். தான் மாமியுடன் வருகிறாராம். மாமி எமது பாடசாலையின் பழைய மாணவி'' என்று சொல்லச் சொன்னவர் என்று மிகவும் தெளிவாகச் சொன்னதால் நான் அழைப்பிதழை அடித்து நேரில் கொண்டு சென்று கொடுத்தேன். அவன் விபரமாகச் சொல்லாதுவிட்டால் நான் தான் சென்றிருக்க வேண்டும். அவனைப் போலக் கேட்பவற்றை விபரமாகக் கேட்டறிந்து, பின் அதனைச் சொல்லும்போது விளங்கக்கூடிய வகையில் சொல்லக்கூடியவர்கள் மிக்க அறிவுள்ள மேலோராவார்''.

சிற்றம்பலம் தனது உரையை நிறுத்தக் கலைச்செல்வி ஐந்தாவது குறளை வீணையில் மீட்டிவிட்டு, இனிமையாகப் பாடினாள். ''உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு'', ''சபையோர்களே, ஒருவர் தனது அறிவுக்கூர்மையால், உயர்ந்தவர்களை, அறிஞர்களை, ஞானிகளை ஏன் கடவுளோடு கூட அன்பான நட்பால் பிணைத்துக் கொள்வார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான அருள்நாதன் என்ற சிங்கத்திற்கு திருமந்திரம் என்ற நூலைப் படிக்க ஆசை. தனது உதவியாளர்களிடம் கூறித் திருமந்திரப் புத்தகத்தை வாங்கிவிட்டார். பலமுறை வாசித்தும் அதன் பொருள் விளங்கவில்லை. பலர் அதைப் படித்துச் சொல்லியும் அது அவருக்குப் புரியவில்லை''.

''வீமனுக்குத் திருமந்திரத்தை நான் கற்றுக் கொடுத்தேன். அவன் மிகவும் இலகுவான மொழியில் திருமந்திரத்தைப் பற்றிக் கோவில்களில் பேசுவான். இதை அறிந்த அருள்நாதன், வீமனை அழைத்து, ''வீமா, நீ திருமந்திரத்தைப் பற்றிக் கோவில்களில் பேசுவதாகக் கேள்விப்பட்டேன். நான் அதைப்பற்றி அறிய விரும்புகிறேன். சுருக்கமாகச் சொல்வாயா'' என்று கேட்டார்.

''ஐயா, திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்ட பெரிய நூல். அது கூறாத விடயங்கள் எதுவும் இல்லை. திருமந்திரம் தமிழில் எழுதப்படாது, சமஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் எழுதப்பட்டிருந்தால் உலகையே மாற்றியமைத்திருக்கும். சமூகம், விஞ்ஞானம், மருத்துவம் குறிப்பாக கருவுற்பத்தி, காலநிலை, நோய்கள் இப்படியான பல விடயங்களை விபரமாகக் கூறுகிறது. கரு உற்பத்தி பற்றியும், நோய்கள்

உண்டாவததற்கான காரணங்கள் எவையென்றும், அவற்றை நீக்கும் முறைபற்றியும் திருமந்திரம் கூறுகிறது. சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட திருமந்திரம் பூமி வட்டவடிவமானது. அது தன்னைச் சுற்றியபடி சூரியனையும் சுற்றுகிறது என்று தற்கால வெளிநாட்டு விஞ்ஞானிகள் கூறியவற்றைத் திருமந்திரம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிவிட்டது. உடலில் பத்து இடங்களில் காற்று உள்ளது. இக்காற்று அசுத்தமடைவதால் தான் பாரிய நோய்கள் உண்டாகின்றன என்று கூறிக் காற்றைச் சுத்தப்படுத்தும் முறைகளையும் கூறுகிறது. இதை 2022ஆம் ஆண்டில்தான் இங்கிலாந்தைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர் கண்டுபிடித்மைக்கான நோபல் பரிசைப் பெற்றார்''.

''ஐயா, தமிழ்ப் புலவர்கள் நவீன விஞ்ஞானிகளை விட மேலானவர்கள். அவர்கள் தமது நூல்களில் பல விஞ்ஞானக் கருத்துக்களையும், கிரக மண்டலங்களைப் பற்றிய கருத்துக்களையும் கூறியுள்ளனர். எம்மவர் பொருளைத் தேடி அலைந்தார்களே தவிர தமிழ்ப் புலவர்களை மதிக்கவில்லை. அரசர்கள் தம்மைப் போற்றிப் புகழ்ந்து விழுந்து கும்பிட்டவர்களுக்குத்தான் பரிசுகளும், விருதுகளும் கொடுத்தனர். திருமந்திரம் கூறாதவை எதுவும் இல்லை. தாங்கள் ஓய்வாக இருக்கும் நேரங்களில் நான் வந்து திருமந்திரத்தைத் தொடர்ந்து சொல்கிறேன் என்றான் வீமன். அதனால் அவனுக்குப் பெரும் பதவி கிட்டியது. உயர்ந்தவர்களை நண்பராக்கிக் கொண்டால் பல்வேறு விதமான நன்மைகளும் கிடைக்கும்'' என்றார் சிற்றம்பலம்.

கலைச்செல்வி ஆறாவது பாடலை வீணையில் மீட்டிப் பாடினாள். ''எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு'', ''சபையோர்களே, ஒழுக்கமாக வாழும் பெரியவர்கள் எவ்வாறு வாழ்கிறார்களோ, அதுபோல வாழ்வது தான் அறிவு. அது தான் சிறந்த வாழ்வாகும். அதன் பின் வீமன் ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அருள்நாதனின் வீட்டிற்குச் சென்று, அவருக்குத் திருமந்திரத்தைப் பற்றி விரிவாகக் கூறுவான். அதை அவர் தனது நண்பர்களுக்கும் கூறுவார். அதைக்கேட்ட நண்பர்கள் பத்துப்பேர் தாமும் திருமந்திரத்தைப் பற்றி அறிய வேண்டுமென்று அருள்நாதனுக்குக் கூற அவர் அவர்களையும் திருமந்திரத்தைக் கேட்க வருமாறு அழைத்தார். அருள்நாதனுடன் தொடங்கிய நிகழ்வில் இப்போது பத்துப்பேர் சேர்ந்து கொண்டனர்.

''வீமன் துப்பறியும் இலாகாவில் அதியுயர் பதவிக்கு நியமிக்கப்பட்டான். முன்பு லஞ்சம் பெற்றுக் கொண்டு சிறு சிறு கடத்தல்களை அனுமதித்த அதிகாரிகள் இப்போது பயத்தால் திருந்தியமையால் உலகத்தில் கடத்தல் செய்ய முடியாத விமான நிலையமாய் அது மாறியது. வீமனது வளர்ச்சி என்னையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அதனால் அவனை அழைத்து ''வீமா'' செயற்கரிய செயல்களை எல்லாம் சிறப்பாகச் செய்ய எப்படி உன்னால் முடிகிறது என்று கேட்டேன். அவனது பதில் என்னை அதிர்ச்சியடையச் செய்தது''.

‘‘அவன் சொன்னான், ‘‘குருவே, தங்களது உபதேசம் தான் எனது அறிவை வளர்த்துக் கூர்மையாக்கியது. ‘‘ஒரு போதுங் கர்வம் கொள்ளாதே. நான் தான் செயலுக்கான காரணகர்த்தா என்று எண்ணிக் கர்வப்படாதே. எளியவனிடமும் நல்ல செயல்கள் இருக்கும். எளியவன் சொல்கிறான் என்று அலட்சியப்படுத்தாதே. கற்றுக் கொண்டே இரு. பெரியவர்கள் எப்படி வாழ்கிறார்களோ அதுபோல வாழப் பழகு. நீ சொல்வதை விளக்கமாகச் சொல். பிறர் சொல்வதை அலட்சியப்படுத்தாது அவதானமாகக் கேள். அதில் நல்ல பல கருத்துக்கள் இருக்கும்’’ என்றீர்கள். உங்களது வாக்கை வேதவாக்காக எண்ணி வாழ்ந்து வருகிறேன். நான் எதையும் விரும்பவில்லை. நல்லவை யாவும் என்னைத்தேடி வருகின்றன’’ என்றான். அந்த உண்மையை நான் அப்போது தான் தெரிந்து கொண்டேன்’’ என்று நிறுத்தினார் சிற்றம்பலம்.

கலைச்செல்வி வீணையை மீட்டி ஏழாவது குறளைப் பாடினாள். ‘‘அறிவு உடையார் ஆவது அறிவார் அறிவு இலார் அ∴தறி கல்லாதவர்’’, ‘‘சபையோர்களே, எதிர்காலத்தில் தமக்கு நடக்கப் போவதை முன்பே அறிந்து கொள்பவர்கள் அறிவுடையவர்கள் ஆவர். அதைத் தெரிந்து கொள்ள முடியாதவர்கள் அறிவில்லாதவர் ஆவர். காட்டில் வாழும் எமது சகோதரர்கள் எல்லோரும் அறிவுடையவர்கள். அவர்களுக்கு எதிர்காலத்தில் நடைபெறுவது தெரியும். மனிதர்கள் தான் தமது அறிவைப் பெரிதாக எண்ணி எதிர்காலத்தை அறியாது துன்பப்படுகின்றனர். பொருளைத் தேடுவது போல அறிவையும் தேட வேண்டும். அறிவு எல்லாவிதமான நற்செயல்களையும் செய்ய வைக்கும். தமிழறிஞர் எனது இரத்த உறவினர். அவர் எத்தகைய அறிஞர் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். திருக்குறள், திருமந்திரம், திருவருட்பயன், திருவாசகம் போன்ற பல அரிய நூல்களை இலகுபடுத்தி சிறுவர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டும் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றைப் பிற வனங்களில் இருக்கும் ஆதீனங்கள், அறிஞர்கள் பாராட்டி விமர்சித்துள்ளனர். அவர்கள் பாராட்டிய நூல்களைக்கூட அவர் வாழும் வனவாசிகள் பாராட்டவில்லை, விமர்சிக்கவில்லை. அவரது நூல்களைத் தான் உலகில் உள்ள வனங்களிலுள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கற்கின்றனர். அண்மையில் கல்வி அமைச்சு இலக்கிய ஆசிரியர்களுள் ஒருவரைத் தெரிவு செய்து உயர் விருதும் ‘வன இலக்கிய ரத்தினா’ என்ற பட்டமும் வழங்கியது’’.

‘‘அதை அறிந்த நானும் பல இலக்கிய கர்த்தாக்களும் அவரைச் சந்தமித்து வாழ்த்துத் தெரிவித்து, ‘‘உங்களுக்குத் தான் அவ்விருது கிடைக்கும்’’ என்று கூறினோம். அவர் சிரித்தார். பின் சொன்னார், ‘‘சிற்றம்பலம், நீ முதலாந்தர அதிபர், ஆனால் கடமையாற்றுவது மூன்றாந்தரப் பாடசாலை. பதினைந்து வருடங்களாகக் கடமை செய்கிறாய். பாடசாலை இவ் வனத்தில் மட்டுமல்ல அருகில் உள்ள ஏனைய வனங்களிலுள்ள பாடசாலைகளை விட மேலானது, சிறந்தது. பெற்றோர் உன்னைக் கடவுளாக நினைக்கின்றனர். நீ கற்ற முதலாந்தரப் பாடசாலையின் அதிபர் பதவி வெற்றிடமானபோது, நீயும் விண்ணப்பித்தாய். பழைய மாணவன் என்ற வகையில்

உனக்குத்தான் அதிபர் பதவி கிடைக்கும் என்று நீயும் ஊரவரும் நம்பினீர்கள். கிடைத்ததா, கல்விப் பணிப்பாளரின் மனைவியின் சிபார்சில் அதிபர் தரம் இல்லாத ஒருவருக்கு அப் பதவி வழங்கப்பட்டது. இரண்டாயிரம் பிள்ளைகள் கற்கும் பாடசாலை அது. அப்போது நான் என்ன சொன்னேன். இப்போது நியமிக்கப்பட்ட அதிபரின் காலத்தில் பாடசாலை மூடவேண்டிய நிலைக்கு வருமென்றேன். இன்று நானூறு பிள்ளைகள் படிக்கின்றனர்''.

''நீங்கள் தீர்க்கதரிசி. அறிவு மிக்கவர்'' என்று நான் சொன்னபோது அவர் சொன்னார், ''அண்மைக் காலத்தில் நடக்கும் சம்பவங்களைத் தொகுத்துப் பார்த்து எதிர்காலத்தைக் கணிக்க வேண்டும். அண்மைக்கால நியமனங்கள் தகுதியின் அடிப்படையில் வழங்கப்படவில்லை. ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளராக ஆரம்பக் கல்வியில் பயிற்சி பெற்ற ஒரு பட்டதாரியை நியமிக்க வேண்டும். கல்விப் பணிப்பாளர் விஞ்ஞான ஆசிரியரை நியமித்துள்ளார். இந்நிலையில் கல்வி எப்படி மேம்படும். அது போலவே இலக்கிய விருதுகளும் வழங்கப்படுகின்றன. ஏற்கெனவே வழங்கப்பட்ட விருதுகளை ஆராய்ந்தால் எனக்கு விருது கிடைக்கக் கூடிய வாய்பே இல்லை. விருதுகள், கௌரவப் பட்டங்கள் யாவும் முன்பு அரசரைப் போற்றியவர்களுக்குக் கிடைத்தது. இன்று அதிகாரிகளையும், அவரது சகாக்களையும் போற்றுவோருக்குக் கிடைக்கிறது என்றவர். அவர் சொன்னது போலவே இலக்கியத்துறையில் யாருக்கும் தெரியாத ஒருவருக்கு அவ் விருதும், பட்டமும், கௌரவமும் கிடைத்தது. சபையோர்களே, பின்பு நடக்கவுள்ளதை உங்கள் மேலான அறிவின் மூலம் அறிந்தீர்களானால் நீங்கள் தான் அறிவில் மேலானவர்களாகிவிடுவீர்கள்''.

சிற்றம்பலம் ஆசிரியர் பேச்சை நிறுத்தியதும், கலைச்செல்வி எட்டாவது குறளை வீணையில் மீட்டிப் பாடினாள். ''அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்.'' கலைச்செல்வி பாடி முடித்ததும், சிற்றம்பலம் பேசினார், ''சபையோர்களே, அஞ்ச வேண்டிய செயல்களுக்கு அஞ்சாது, அதைச் செய்வது அறிவில்லாத தன்மை. அஞ்ச வேண்டியவற்கு அஞ்சுவது மேலான அறிவுடையோரின் செயலாகும். இதை நான் விபரமாக மாணவர்களுக்குச் சொல்வேன். இதனால் எனக்குச் சில வேதனையான சம்பவங்கள் நடைபெற்றன. தயாபரன் அருணாசலத்தின் மகன். அவன் சோம்பேறி. வேலை செய்ய மாட்டான். வேலை செய்யக் கேட்போரிடமும் முற்பணமாக ஒரு தொகையைப் பெற்று விடுவான். ஆனால் வேலைக்குச் செல்ல மாட்டான். பணம் கொடுத்தவர்கள் வீடு தேடி வந்தால் தான் வீட்டில் இல்லையென்று சொல்லுமாறு வீட்டாருக்குச் சொல்வான். அவர்கள் அப்படியே சொல்வார்கள். ஆனால் தயாபரன் ''அப்பா உள்ளே இருக்கிறார். நீங்கள் வந்தால் இல்லை என்று சொல்லச் சொன்னவர் என்பான். அதனால் வீட்டில் பெரும் பிரச்சினைகள் வரும். இருந்தபோதும் தயாபரன் பொய் சொல்லமாட்டான். அருணாசலம் அவர்கள் சென்றபின் அவனை அடிப்பான். ''அப்பா, சிற்றம்பலம் வாத்தியார் மிகவும் நல்லவர். என்னில் அன்புள்ளவர். எனக்குப் பல உதவிகள் செய்பவர். அவர் பொய் சொல்லக்கூடாது என்றும், அஞ்சவேண்டியவற்றிற்கு அஞ்சாதவவன்

அறிவுடையவன் அல்ல. அஞ்சவேண்டியவற்றிற்கு அஞ்சுபவனே அறிவுள்ளவன். அவன் நன்றாகப் படித்து பெரிய உத்தியோகத்தில் அமர்ந்து என்னைப்போல உதவுவான்'' என்றார். ''பொய் சொல்வதற்கு அஞ்ச வேண்டும் என்றும் சொன்னவர். அதனால் பொய் சொல்லிக் கீழான நிலையை அடைய நான் விரும்பவில்லை''.

அதனால் கவலைப்பட்ட அருணாசலம் என்னிடம் வந்து நடந்தவற்றைச் சொன்னான். ''அருணாசலம் நீ எனது மாணவன். உனது பிள்ளை மிகவும் கெட்டிக்காரன். தொடர்ந்து படித்தால் அவன் நல்லநிலையை அடைவான். நீ கற்கும்போது பாடசாலைக்கு ஒழுங்காக வருவதில்லை. ஒழுங்காக வந்து என்னிடம் படித்த யாராவது ஒருவர் கீழ்நிலையை அடைந்தாரா? நீ கெட்டழிந்தது போல உனது பிள்ளையைக் கெட்டழிக்காதே. அவனுக்குத் தொந்தரவு கொடுத்தால் உன்னைப் போலத்தான் கேவலமாக வாழ்வான். அத்துடன் மேலான நிலைக்கு அவன் வந்தால் உனது குடும்ப வறுமை நீங்கும். உன்னை எல்லோரும் மதிப்பர். தம்பாபிள்ளை குடிகாரன் களவெடுப்பான். பொய் சொல்வான்''. அவனது மூத்த மகன் நன்றாகப் படித்து வைத்தியராகி விட்டான். அவனது ஐந்து சகோதரர்களும் நல்லநிலையில் இருக்கின்றார்கள். அதுபோலத் தயாபரனும் படித்துப் பெரிய உத்தியோகத்தனானால் உனது நான்கு பிள்ளைகளும் மேலானவர்களாகிவிடுவர். தம்பாபிள்ளையை முன்பு யாரும் மதிப்பதில்லை. இப்போ அவரது பிள்ளைகளைத் திருமணஞ் செய்ய ஊரில் உள்ள பல பிரமுகர்கள் விரும்புகிறார்கள். இது உனக்குத் தெரியும். ஆதலால் நீ தயாபரனுக்குத் தொல்லை கொடுக்காதிருந்தால் பத்து வருடங்களின் பின்பு நீ தான் இந்த வனத்தின் பிரமுகராக இருப்பாய்'' என்றேன். அதன்பின் அருணாசலம் பிள்ளைகளுக்குத் தொல்லை கொடுப்பதில்லை'' என்று நிறுத்தினார் சிற்றம்பலம்.

சிற்றம்பலம் பேச்சை நிறுத்தியதும், கலைச்செல்வி வீணையை மீட்டி ஒன்பதாவது குறளைப் பாடினாள்''. ''எதிரதாக் காக்கும் அறிவினர்க்கு இல்லை அதிர வருவதோர் நோய்'', ''சபையோர்களே, வாழ்க்கையில் வரப்போகும் இடர்ககளை அறிந்து அதற்கேற்றவாறு தன்னைத் திடப்படுத்தி எது வந்தாலும் என்னால் முடித்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளவர்களுக்கு, அவர்கள் அதிர்ச்சியடையக் கூடிய சம்பவங்கள் எதுவும் வராது. அருணாசலம் திருந்தி வாழத் தொடங்கியதும் ஒரு நாள் என்னிடம் வந்து சொன்னான், ''ஐயா, இப்போது நான் திருந்தியமையால் பலரும் எனக்கு வேலை தருகின்றனர். அதனால் நான் தினமும் ஒரு தொகைப் பணத்தைச் சேமிக்கிறேன். இருந்தும் சில சமயங்களில் சில தேவைகளுக்காகச் சேமித்த பணத்தையும் செலவு செய்து விடுகிறேன். அதனால் தினமும் ஒரு தொகையினை உங்களிடம் தந்து சேமிக்கலாமென நினைக்கிறேன். நேற்றுத் தம்பாபிள்ளை என்னைத் தேடிவந்து சொன்னார், ''அருணாசலம், நான் முன்பு பொறுப்பில்லாமல் வாழ்ந்ததால், மகன் பல்கலைக்கழகத்-திற்குத் தெரிவானபோது, நிறையப் பணம் தேவைப்பட்டது. என்னிடம் இல்லை. நான் கடனாகக் கேட்டவர்கள் பலர் நிபந்தனைகளை விதித்தனர். பேரம்பலம் தனது மகளைத்

திருமணம் செய்வதானால் அவனது முழுச்செலவையும் தான் ஏற்கிறேன் என்றார். வேறு வழியின்றி நான் சம்மதித்தேன். ஆனால், மகன் விரும்பவில்லை''.

''எதுவும் செய்ய முடியாது நான் தவித்தபோது, கதிரேசனும், தமிழறிஞரும் நிபந்தனைகள் இன்றி உதவினர். எனது மூத்த மகன் வேலையானதும், அவன் கடன்பட்டும், உழைத்தும் ஏனைய பிள்ளைகளைப் படிப்பித்தான். அதனால் கஷ்டப்படாதிருக்கச் சிறிது சிறிதாகச் சேமி'' என்றவர் என்றபோது நான் சொன்னேன், ''கவலைப்படாதை, அருணாசலம் நான் உனக்குப் பத்தாயிரம் ரூபா தருகிறேன். அதை வங்கியில் வைப்பிலிடு. மாதாந்தம் உன்னால் முடிந்ததை வங்கியில் இடு'' என்றதைக் கேட்டு அருணாசலம் வங்கியில் வைப்பிலிட்டான். அவரது மூத்தமகன் மருத்துவ-பீடத்திற்குத் தெரிவானபோது, அப்பணம் உதவியது. மகன் மருத்துவபீடத்தில் சேர, அருணாசலம் வந்து சொன்னான், ''ஐயா, எனது மகனின் படிப்புச் செலவுக்கு ஓர் இலட்ச ரூபா தேவை என்றான். உடனே நான் வங்கிக்குச் சென்று அவன் கேட்ட பணத்தை எடுத்துவந்து கொடுத்தேன். வங்கி முகாமையாளர் அரசாங்கம் கற்கும் மாணவர்களுக்கு உதவி செய்யுமாம். அதைப் பெற்றுத் தாறன்'' என்றவர். எனது மகனின் படிப்புக்கு நான் எவ்வளவு பணமும் செலவு செய்வேன். தம்பாபிள்ளையைப் போல அதிர்ச்சியடைந்து நடுங்க மாட்டேன். எல்லாம் உங்களால் தான் வந்தது'' என்று வணங்கினான் என்று கூறித் தனது பேச்சை நிறுத்தினார் சிற்றம்பலம்.

கலைச்செல்வி பத்தாவது குறளை வீணையை மீட்டிப் பாடினாள். ''அறிவுடையார் எல்லாம் உடையர்; அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்'', ''சபையோர்களே, அறிவுள்ளவர்களிடம் தேவைப்படும்போது, தேவைப்படும் பொருள் இல்லாதிருந்தாலும், அப்பொருள் எந்தவழியாலும் அவரை வந்தடையும். அறிவில்லாதவர்கள் எல்லாவற்றையும் வைத்திருந்தாலும், அது அவருக்கு உதவாது. எல்லாம் உடையவராக இருந்தாலும், அவர் ஒன்றுமில்லாதவரே ஆவார். நடராசா என்றொரு தம்பி இருப்பது உங்களெல்லோருக்கும் தெரியும். அவன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்தான். பல இலட்ச ரூபா சம்பளம். அது எடுத்தன்று தான் அவனது கையில் இருக்கும். அதனால் அவனது மனைவி கௌசல்யா சம்பள நாளன்று அவனுடன் பல்கலைக்கழகத்திற்குச் சென்று, வீட்டுக்குத் தேவையான பணத்தை அவனிடம் வாங்கி வந்து விடுவாள்''.

''பல்கலைக்கழகத்தில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், உடுபிடவைகள், உணவுகள் என்பனவற்றை வாங்கிக் கொடுப்பான். ஊரில் உள்ள வறிய மாணவர்கள் கற்க வசதியில்லாது பாடசாலைக்குச் செல்லாதிருந்தால், அவன் அவர்களின் வீட்டிற்குச் சென்று, அம்மாணவனை அழைத்துச் சென்று பாடசாலையில் விட்டுக் கற்பிப்பான். திடீரென்று பணம் அவசரமாகத் தேவைப்பட்டால் என்னிடம் வருவான். எனது மனைவிக்கு அவனைப் பிடிக்காது. அவள் அவனை ஏசுவாள். அவன் சிரிப்பானே தவிர வேறு எதுவும் பேசமாட்டான்''.

‘‘நடராசா உனக்கு ஐந்து பெண்பிள்ளைகள். அதைப்பற்றி யோசிக்காது வாழ்கிறாய். ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாகி விடுவான் என்பார்கள். நீ ஆண்டி.... என்று சொல்லும்போது அவன் சொல்வான், ‘‘அண்ணி, நீங்கள் முதுமொழியைத் தவறாகச் சொல்கிறீர்கள். ஐந்து பெண்களைப் பெற்ற ஆண்டி அரசனாவான் என்பது தான் சரி’’.

‘‘உன்னுடன் கதைத்து வெல்ல முடியாது’’ என்று கூறும் எனது மனைவி அவன் சென்றபின் என்னைக் கண்டபடி ஏசுவாள். அவன் மாலை வேளையில் ஓ. எல்., ஏ. எல் மாணவர்களுக்கு இலவசமாகக் கணிதபாடத்தைக் கற்பிப்பான். அவனது ஐந்து பெண்களும் கல்வி அறிவு மிக்கவர்கள். மூத்தவள் அர்ச்சுனா பட்டதாரி ஆசிரியை. அவளுக்குத் திருமணம் பேசி வந்தபோது மாப்பிள்ளை வீடும் ஐம்பது இலட்சம் ரூபா பணமும் சீதனமாகக் கேட்டனர்’’.

‘‘அதை அவன் எனக்குச் சொன்னவனே தவிரக் கவலைபடவில்லை. ‘‘அண்ணை உனக்கு ஐந்து பெண்கள் ஒருத்திக்கு வீடும் ஐம்பது இலட்சமும் சீதனமாகக் கேட்கின்றனர். அப்ப ஐந்து பேருக்கும் எவ்வளவு தேவை. என்னிடம் எதுவும் இல்லை என்று சிரித்தான். எனக்கு ஆத்திரம் வந்தது. பேசுவதாலும் பயனில்லை. அதனால் நான் பேசாதிருந்தேன். இரண்டு நாட்கள் கழிய ஒரு இளைஞனோடு வீட்டுக்கு வந்தான். வந்த இளைஞன் சொன்னான், ‘‘குருவே, நான் தங்களின் மாணவன், நான் அருள்பிரகாசத்தின் மகன். நான் படிக்க நடராசா ஐயா தான் உதவியவர். எனக்கு ஐந்து வயதானபோது, எனது தந்தை இறந்துவிட்டார். நான் ஒரு வர்த்தக நிலையத்தில் கூலியாக வேலை செய்தேன். ஐயாதான் என்னை அழைத்துச் சென்று கற்பித்தவர். நான் இப்பொழுது லண்டனில் வைத்தியராகப் பணியாற்றுகிறேன். எனக்கு அர்ச்சனாவைத் திருமணம் செய்ய விருப்பம். அவள் உடுத்த உடுப்புடன்கூட அவளை அழைத்துச் செல்ல விரும்பவில்லை. அவளுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் கொடுத்தே அழைத்துச் செல்லவுள்ளேன். அதற்கு நீங்கள் உதவ வேண்டும்’’ என்றான். எனது மனைவி திகைத்துத் திகிலடைந்து போனாள். ஒரு வாரத்தில் திருமணம் முடிந்துவிட்டது. அவன் அர்ச்சனாவை லண்டனுக்கு அழைத்துச் சென்று விட்டான்’’.

‘‘இரண்டு வருடங்கள் கழிய ஏனைய மூன்று பெண்களும் லண்டனுக்குச் சென்று விட்டனர். கடைசி மகள் தான் அண்ணனுடன் இருக்கிறாள். அண்ணனின் மனைவியின் சகோதரன் பெரிய வர்த்தகன். கோடிக்கணக்கில் சொத்திருக்கு. ஒரே ஒரு பெண்பிள்ளை. அவளுக்கு முப்பத்தைந்து வயதாகிறது. இன்னும் திருமணமாகவில்லை. பேசிவரும் மாப்பிள்ளையிலும், மாப்பிள்ளையின் குடும்பத்திலும் ஏதாவது ஒரு குற்றம் காண்பார்கள். அதனால் திருமணம் நடக்கவில்லை. எனது அண்ணன் அறிவு மிக்கவர், அதனால் அவரிடம் பொருட்கள் இல்லாவிட்டாலும், செல்வம் வந்து குவிகிறது. அண்ணனின் மனைவியின் சகோதரனிடம் கோடிக்கணக்கில் சொத்திருக்கு. அறிவின்மை காரணமாக அவர்கள் தமது பணத்தகுதிக்கேற்ற மாப்பிள்ளையைத் தேடுவதால் திருமணம்

தடைப்படுகிறது. இதை அண்ணா புரிந்து கொள்கிறார். அண்ணி புரிந்து கொள்ள மறுக்கிறாள். இப்படியான பலர் எமது வனத்தில் வாழ்கின்றனர்'' என்று கூறித் தனது பேச்சை நிறுத்திவிட்டுச் சபைக்கு நன்றி கூறினார் சிற்றம்பலம். அவர் பேசத் தொடங்கியதிலிருந்து பேசி முடியும் வரை கலைச்செல்வி வீணையை மெல்லியதாக மீட்டிக் கொண்டிருந்தாள்.

## 7

சிற்றம்பலம் பேசி முடித்ததும், கதிரேசன் மேடைக்கு வந்து, ''சபையோர்களே, மிகமிக அருமையான ஒரு பேச்சைக் கேட்டீர்கள். கலைச்செல்வி கலைமகளாக மாறி வீணையை மிகமிக இனிமையாக வாசித்தாள். அத்துடன் அவள் நாதஸ்வரம் வாசிப்பதிலும் வல்லவள். அடுத்து ஓய்வுபெற்ற தபால் அதிபரான முருகேசன் என்ற யானையார். குற்றங் கடிதல் என்ற அதிகாரத்தைப்பற்றி விமர்சித்துப் பேசுவார். அவர் கலைப்பட்டதாரி, முதுகலைமாணிப் பட்டம் பெற 'வள்ளுவம் சொல்லும் குடும்ப நலம்' என்ற தலைப்பில் தமிழ்நாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற வனப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தார். அக் கட்டுரை அண்மையில் நூலாக வெளிவந்து பெரும் பாராட்டுக்களைப் பெற்றது. அவரது எளிமையான அர்த்தம் நிறைந்த பேச்சை நான் பலமுறை கேட்டு ரசித்துள்ளேன். உங்களிலும் பலர் கேட்டிருப்பீர்கள். அவரைப் பேச வருமாறு அன்புடன் அழைக்கின்றேன்''.

முருகேசன் மேடைக்கு வந்தபோது சபையோர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அவருடன் பத்துக் கலைஞர்களும் மேடைக்கு வந்தனர். ஒரு சிறுமியும் வந்தாள். முருகேசன் கலைஞர்களை அறிமுகம் செய்துவிட்டுச் சிறுமியை அழைத்துச் சொன்னார், ''சபைக்கு வணக்கம் சொல். அதன்பின் நீ என்ன பேசப்போகிறாய் என்று சொல்'' என்றார்.

சிறுமியான கௌசல்யா தனது தும்பிக்கையைத் தூக்கிப் பிளிறிவிட்டு, ''சபையோர்களே, முதலில் எனது வணக்கத்தைச் செலுத்துகிறேன். நான் பாடலைப் புல்லாங்குழலில் இசைத்துவிட்டுப் பாடுவேன். நான் முருகேசரது பேர்த்தி. எனது அண்ணன் கஜமுகன் மிருதங்கம் வாசிப்பார். தங்கை மிதுலா கடம் வாசிப்பாள்'' என்று கூறிக் கலைஞர்களை அறிமுகப்படுத்திவிட்டு, குற்றங் கடிதல் என்ற அதிகாரத்தில், உள்ள பத்துக் குறள்களையும் புல்லாங்குழலில் வாசித்தாள். பின்னர் இனிமையாகப் பாடினாள். மிகமிக இனிமையாகப் பாடியதால் பறவைக்கூட்டங்கள் மேடைக்கு அருகே நின்ற மரங்களில் அமர்ந்து வாழ்த்தின. மயில்கள் ஆடின. தமிழறிஞரும் வேறு சிலரும் பாடலுக்கேற்றவாறு தாளம் போட்டனர்''.

கௌசல்யா முதலாவது குறளைப் புல்லாங்குழலில் வாசித்துவிட்டுப் பாடினாள். ''செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் பெருமித நீர்த்து'', ''சபையோர்களே, நான் குருவாகக் கருதும் தமிழறிஞரை வணங்கி, எனது சிற்றுரையை ஆரம்பிக்கிறேன்.

தமிழறிஞர் என்று தமிழ்நாட்டின் மிகப் பழைய ஆதீனமான திருவாவடுதுறை ஆதீனம் கொடுத்த பட்டம் பொருத்தமானது. அவர் இன்னொருவர் எழுதியதை எழுதாது புதுப்புதுக் கருத்துக்களை எழுதுவார். அதுவும் சிறுவர்களுக்கு விளங்கக்கூடியதாக எழுதுவார். அவர் எழுதிய நூல்களுள் ''திருமந்திரமே திருக்குறள்'', ''கீதை மந்திரம் குறள் ஓர் ஒப்பீட்டாய்வு'' என்ற நூல்கள் என்னைப் பிரமிக்க வைத்தன. திருமந்திரத்தில் உள்ள மூவாயிரம் பாடல்களையும் மிக நுணுக்கமாக ஆய்வு செய்து, அப்பாடல் வரிகள் எவ்வாறு எப்படிப் பொருத்தமான வகையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று விளக்கமாகவும், விரிவாகவும் எழுதியுள்ளார். இதுவரை யாராலும் எழுதாத எழுத்து அது. அதைப் பாராட்டவோ, விமர்சிக்கவோ யாரும் விரும்பவில்லை. அதற்குக் காரணம் பயம். இலக்கியத்தில் போதிய அறிவின்மை. இங்குள்ள பல்கலைக்கழகங்கள் திருமந்திர மகாநாடு, திருக்குறள் மகாநாடு என்று பல மகாநாடுகளை நடத்துகின்றன. அவற்றிற்குத் தமிழறிஞரை அழைப்பதும் இல்லை, அழைப்பிதழ் அனுப்புவதும் இல்லை. சரி, பிழையைச் சுட்டிக்காட்டவதுமில்லை. அதற்கு நிறைந்த அறிவு தேவை''.

''செருக்குள்ளவர்கள் தம்மைவிட அறிவாளி யாரும் இல்லை என்ற நினைப்புடன் வாழ்கின்றனர். யாராவது உண்மைநிலையை எடுத்துச் சொன்னால் அவர்களுக்குச் சினம் உண்டாகும். சினம் உண்டானவவனுக்குக் காமம் போன்ற பல சிறுமைக் குணங்களும் உண்டாகும். அதனால் நல்லனவற்றை விமர்சிக்கவோ, பாராட்டவோ மனம் வராது. இரவீந்திரராசா என்ற யானையார் பல்கலைக்கழகப் பேராசிரியர். இரண்டு கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர். தமிழறிஞரின் இனத்தவர். அவருக்குத் தமிழறிஞரைப் பிடிக்காது. சாந்தினி என்ற நரியார் தமிழறிஞரின் விசிறி என்று சொல்லி, அவருடன் நெருங்கிப் பழகுபவர். அதனால் அவரது பலம், பலவீனம் என்பன அவருக்குத் தெரியும். அவர் தமிழறிஞரிடம் நட்பாகப் பழகி அவரது விருப்பு வெறுப்புக்களை அறிந்து உடனுக்குடன் ரவீந்திரராசாவுக்குத் தெரிவிப்பார். அதனால் அவருக்குப் பல்வேறு நன்மைகள் உண்டு. இரவீந்திரராசாவின் முழு நம்பிக்கைக்கு உரியவவர் சாந்தினி. தமிழறிஞருடனும் அன்பாகவும், நெருக்கமாகவும் பழகுபவர். தனக்கு ஏதாவது தேவையேற்பட்டால் அத் தேவையைப் பூர்த்தியாக்க எதையும் செய்யத் தயங்கமாட்டார்''.

''பலர் சாந்தினியைப் பற்றிக் குறைகளைக் கூறியபோதும், தமிழறிஞர் அவற்றை நம்புவதில்லை. வனத்தில் உள்ள பல்கலைக்கழகமொன்று தமிழறிஞரைக் கௌரவித்து பட்டமும், விருதும் வழங்க வேண்டுமென்று நினைத்துச் செயற்பட்டது. அது இரவீந்திரராசாவுக்குப் பிடிக்கவவில்லை. வனங்களில் வாழும் பல பிரமுகர்கள் அவ் விருதை தமிழறிஞருக்குக் கொடுக்குமாறு சிபார்சு செய்தனர். அதைக் கொடுக்க வேண்டாமென்று நினைத்த இரவீந்திரராசா, சாந்தினியிடம் சொல்லி தமிழறிஞரின் செயற்பாடுகளை அறிந்து தனக்குக் கூறுமாறு கூறக் காசு ஆசை பிடித்து சாந்தினி தமிழறிஞரின் வீட்டுக்கு வருபவர்களைப் பற்றியும், அவரது செயற்பாடுகள் பற்றியும் உன்னிப்பாக அவதானித்து இரவீந்திரராசாவுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள்''.

அளவுக்கு அதிகமான செருக்குடைய இரவீந்திரராசா திமிருடன் பல பிரமுகர்களைச் சந்தித்து, அவ்விருதைத் தமிழ்ப் பேராசிரியர் கமலநாதனுக்குக் கொடுக்கும்படி பல்கலைக்கழக உப வேந்தருக்குக் கூறுமாறு கேட்டுக் கொண்டார். பல்கலைக்கழக உயர்மட்டக்குழு கூடி யாருக்கு அவ் விருதைக் கொடுப்பது என்று விவாதித்தது. எனினும் முடிவு எடுக்கப்படவில்லை. இதை அறிந்த தமிழறிஞர் பல்கலைக்கழக வேந்தரைச் சந்தித்து, எந்த விருதையும் நான் ஏற்க மாட்டேன் என்று கூறிவிட்டார்.

இது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பேராசிரியர் நந்தகுமார், தமிழறிஞரிடம் சென்று, ''ஐயா, சகல தகைமைகளும் உடைய தாங்கள் ஏன் அவ்வாறு உப வேந்தருக்குக் கூறினீர்கள்'' என்று கேட்டார்.

''மகனே, நீ எனது மாணவன். செருக்கும் சினமும் சிறுமையும் இல்லாது மன மகிழ்வுடன் வாழ்வது தான் உயர்ந்த வாழ்க்கை. ஒருவரின் அறிவைப் பட்டங்கள் தீர்மானிப்பதில்லை. ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒரு நூலை ஆராய்ந்து கட்டுரையாக எழுதிச் சமர்ப்பித்தால் பல்கலைக்கழகம் கலாநிதி என்ற விருதைக் கொடுக்கிறது. அந்த ஒரு கட்டுரை அறிவைத் தீர்மானிக்குமா? அது வேதனத்தையும், பதவி உயர்வையும் கொடுக்குமே தவிர அறிவைக் கொடுக்காது. அனுபவத்தால் அறிவைப் பெற்றவர்கள் தான் அறிவாளிகள். ஓர் ஆய்வுடன் ஆய்வை நிறுத்திக் கொள்பவர் அறிவாளியாகார். தொடர்ந்து பல்வேறுபட்ட நூல்களை ஆய்வு செய்தல் வேண்டும். விமர்சிக்க வேண்டும். நான் எழுதிய திருமந்திரமே திருக்குறள், கீதை, மந்திரம், குறள் ஓர் ஒப்பீட்டாய்வு என்ற நூல்களுக்காக நான் பழந்தமிழ் நூல்கள் அனைத்தையும் படித்தேன். எனினும், அவ் ஆய்வுகள் எனக்குத் திருப்தியளிக்கவில்லை. தொடர்ந்து ஆய்வு செய்து கொண்டே இருக்கிறேன். பட்டங்கள், விருதுகள் சிலருக்குத் திமிரையும், செருக்கையும் கொடுக்கும். அத்துடன் போட்டி பொறாமையை உண்டாக்கும். இப்போதே இரவீந்திரராசாவும் சாந்தினியும் எனக்கு விருது கொடுக்கக் கூடாது என்கின்றனர். எனது நோக்கம், தத்துவங்கள் யாவும் இலகுபடுத்தப்படல் வேண்டும். அவை சிறுவர்களுக்குப் புரிய வேண்டும் என்பதே. அதற்கு விருது, செல்வாக்கு, சிபாரிசு என்பன தேவையில்லை. இந்த விருதின் மூலம் பலரது அபிப்பிராயத்தை இறைவன் எனக்கு அறிய வைத்துள்ளார் அது போதும்''.

கௌசல்யா இரண்டாவது குறளைப் புல்லாங்குழலில் வாசித்துவிட்டுக் குறளை இனிமையாகப் பாடினாள். ''இவறலும் மாண்பு இறந்த மானமும் மாணா உவகையும் ஏதம் இறைக்கு'' அவள் பாடி முடித்ததும் முருகேசன், ''சபையோர்களே, பொருள் கொடுத்து உதவாத தன்மையும், பெருமை இல்லாத தன்மானமும், தகுதி இல்லாத மகிழ்ச்சியும் நாட்டை ஆளுகின்றவர்களுக்குக் குற்றங்களாகும். சபையோர்களே வள்ளுவர் அரசர்கள் மக்களை ஆண்ட காலத்தில் வாழ்ந்தமையால் அரசர்கள் எவ்வாறு அரசாள வேண்டும் என்று பல குறள்களில் கூறியுள்ளார். இன்று அரசர்களின் ஆட்சி இல்லை. எல்லோரும்

இந்நாட்டு மன்னர்கள் என்பதால் உங்கள் அனைவரையும் மன்னர்களாக நினைத்துக் கொள்கின்றேன்''.

''இக் குறளில் வள்ளுவர் கூறியது எல்லா உயிர்களுக்கும், எவ்வேளையிலும் பொருந்தும். அவர் தன்னைத் தானே புகழ்வர். கூட்டங்களில் பேச விரும்பி கூட்ட அமைப்பாளர்களிடம் சென்று தன்னை விருந்தினராக அழைக்கும்படி கேட்பார். அவருக்குத் தன்மானம் இல்லை. பேச யாராவது அழைத்துவிட்டால் அதைப் பெரிதாகக் கருதிப் பிரமுகர்களுக்குச் சொல்லிப் பெருமைப்படுவார். அதனால் மகிழ்ச்சியும் அடைவார். நீங்கள் யாரிடமாவது சென்று பேசச் சந்தர்ப்பமளிக்கும்படி கேட்பீர்களா…? ஒருவரின் தகுதியைச் சமூகம் அளந்து வைத்திருக்கிறது. அதை உணராதவரைப் பற்றிக் கவலைப்படுவதில் அர்த்தமில்லை. தமிழறிஞருக்கு விருது கொடுக்கத் தகுதியான பல்கலைக்கழகமா அது. அவர் விருதுகளை அல்ல, மேடையில் அவரைப்பற்றிப் பேசுவதையே விரும்பாதவர். அதனால் அவரைப் பற்றிய கவலையை விடுங்கள்'' என்றேன். சிற்றம்பலம் எதுவும் பேசாது எழுந்து சென்றுவிட்டார்'' என்று முருகேசன் உரையை முடித்தார்.

''கௌசல்யா மூன்றாவது குறளைப் புல்லாங்குழலில் வாசித்துவிட்டு அதைப் பாடினாள்''. ''தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாகக் கொள்வர் பழி நாணுவார்'' அவள் பாடி முடித்ததும், முருகேசன் பேசினார், ''சபையோர்களே, நான் எடுத்துச் சொன்னபோதும் சிற்றம்பலத்தின் மனம் அமைதியடையவில்லை. அவர் பேராசிரியர் நந்தகுமாரனிடஞ் சென்றபோது நந்தகுமார் சொன்னார், ''ஐயா, இப்போது தான் முருகேசர் நீங்கள் தன்னுடன் பேசியதைப் பற்றிச் சொன்னார். ஒருவரைப்பற்றி அவர் இல்லாதபோது பேசுவது குற்றம் மட்டுமல்லாமல் பாவமுமாகும். இரவீந்திரராசா குற்றம் செய்யவோ, பாவங்களைச் செய்யவோ அஞ்சமாட்டார். ஆனால் தமிழறிஞர் தான் சிறிய குற்றம் செய்தாலும் அதைப் பிழையாக எண்ணித் துன்பப்படுவர். தமிழறிஞரிடம் வந்த சாந்தினி இரவீந்திரராசாவைப் பற்றி மிகவும் கேவலமாகக் கதைத்தவர். ஆனால் தமிழறிஞர் அதைக் கேட்காது, ''நான் அவசரமாக வெளியே செல்ல வேண்டும், பின்பு சந்திப்போம்''. என்று கூறிவிட்டு அவளது கதையைக் கேட்காது சென்று விட்டார். அது சாந்தினிக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவள் இரவீந்திரராசாவைச் சந்தித்துச் சொன்னாள், ''நான் உங்களின் விடயங்கள் சிலவற்றைச் சொல்ல தமிழறிஞரிடஞ் சென்றேன். அவர் என்னுடன் பேச விரும்பாததால் எழுந்து சென்று விட்டார். இரவீந்திரராசா எப்படியானவன் என்று எனக்குத் தெரியும். நீ அவனின் கையாள். உன்னுடன் கதைப்பது ஆபத்து'' என்று சொன்னவர்.

உண்மையில் தமிழறிஞர் எதுவும் கதைக்கவில்லை. வேண்டுமென்று அவர் சொன்னதைப் பெரிதாக எண்ணிக் கவலைப்பட்டவர். ஒழுக்கமானவர்கள் தான் செய்யாதவற்றைத் தீயவர்கள் செய்ததாகச் சொன்னாலும் அதற்காகத் துன்பப்படுவர்'' என்று முருகேசன் தனது உரையை நிறுத்தினார்.

‘‘கௌசல்யா நான்காவது குறளைப் புல்லாங்குழலில் வாசித்துவிட்டு அதைப் பாடினாள்’’. ‘‘குற்றமே காக்க பொருளாகக் குற்றமே அற்றம் தரூஉம் பகை’’, ‘‘சபையோர்களே, ஒழுக்கமாக வாழும் பெரியவர்கள் சிறிய குற்றத்தைக்கூடச் செய்ய மாட்டார்கள். ஏனென்றால் ஒரு குடத்தில் சிறிய துவாரம் ஏற்பட்டாலும் அதனூடாகக் குடத்தில் உள்ள நீர் முழுவதும் வெளியேறிவிடும். சிறிய குற்றம் என்று எதுவும் இல்லை. அது பிற்காலத்தில் வதந்திகளால் பெருத்துப் பெரிய குற்றங்களாகிவிடும் என்று தமிழறிஞர் சொல்பவர். அவர் சொல்வது உண்மை. எனது நண்பனின் மகன் பத்து வயதில் இனிப்பு வாங்குவதற்காக ஒரு ரூபாயைத் திருடினான். ஏ. எல் படிக்கும்போது நண்பர்களுடன் சுற்றுலாச் செல்ல நூறு ரூபா திருடினான். அண்மையில் கைத்தொலைபேசி வாங்க ஐம்பதினாயிரம் ரூபா வீட்டில் திருடியிருக்கிறான். சிறு குற்றங்கள் காலப்போக்கில் பெரும் குற்றங்களாகிவிடும். அதனால் சிறு குற்றங்கள் என்று அசட்டையாக இருக்கக் கூடாது’’ என்று முருகேசன் தனது உரையை நிறுத்தினார்.

உடனே ‘‘கௌசல்யா ஐந்தாவது குறளைப் புல்லாங்குழலில் வாசித்துவிட்டு இனிமையாகப் பாடினாள்’’. ‘‘குற்றமே காக்க பொருள் ஆகக் குற்றமே அற்றம் தரூஉம் பகை’’, ‘‘சபையோர்களே, ஒருவனுக்கு உடனிருக்கும் பகை குற்றங்களாகும். அதனால் கூடியவரை குற்றங்களைச் செய்யாது வாழவேண்டும். எனது நண்பனின் மகனைப் பற்றிச் சிறிது நேரத்திற்கு முன்பு சொன்னேன். அவன் வீட்டில் திருடித் தான் விரும்பியவற்றை வாங்கி வந்தான். அவனது தந்தை விபத்தில் இறந்தமையால், அவனால் தந்தையிடமிருந்து திருட முடியவில்லை. திருடிச் சொகுசாக வாழ்ந்தவர்கள் கஷ்டப்பட்டு உழைக்க மாட்டார்கள். அவர்கள் உழைப்பதால் பெறும் ஊதியம் அவர்களுக்குப் போதாது. அவனது நண்பர்கள் சிலர் மோட்டார் சைக்கிள் வாங்கியபோது, அவனுக்கும் அந்த ஆசை வந்தது. யாருமில்லாத வேளை பக்கத்து வீட்டுக்குச் சென்று கதவை உடைத்து ஆபரணங்களைத் திருடி, ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கினான்’’.

‘‘இவன் தான் திருடியிருப்பான் என்று அயல்வீட்டாருக்குச் சந்தேகம் இருந்தபோதும், சாட்சி இல்லாதால் அவர்கள் பொறுமையாக இருந்தனர். அவன் மோட்டார் சைக்கிள் வாங்கியதும் அவர்கள் காவல்துறையினருக்கு முறையிட்டனர். காவல்துறையினர் அவனைப் பிடித்துத் தாக்கியபோது அவன் திருடியதை ஒப்புக் கொண்டான். இப்போ சிறையில் இருக்கிறான். குற்றம் அழிவை உண்டாக்கும். அதனால் குற்றம் செய்யாமல் இருப்பதைக் கொள்கையாகக் கொள்ளல் வேண்டும்’’ என்று நிறுத்தினார் முருகேசன்.

அவர் பேசுவதை நிறுத்தியதும் ‘‘கௌசல்யா ஐந்தாவது குறளைப் புல்லாங்குழலில் வாசித்துவிட்டு இனிமையாகப் பாடினாள்’’. ‘‘வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்’’, ‘‘சபையோர்களே, சிறு சிறு குற்றங்களைக் கூடச் செய்யக்கூடாது. ஏனென்றால் சிறு குற்றங்கள் பெரும் குற்றங்களாகக்

காலகதியில் மாறிவிடும். இதை உணர்ந்து குற்றங்கள் செய்வதற்கு முன் அதைச் செய்யாது ஒழுக்கமாக வாழாதவனது வாழ்க்கை நெருப்பின் அருகே வைத்த வைக்கோல் குவியலைப்போல எரிந்து சாம்பராகிவிடும்''.

''எனது இருப்பிடத்திற்கு அண்மையில் ஆடுகள் பல வசிக்கின்றன. ஒருநாள் சாரதா என்ற ஆடு மிகவும் மன வருத்தத்துடன் எனது வீட்டுக்கு வந்தது. அது எனது இனத்தவர் இல்லாவிட்டாலும், சைவசமயத்தைச் சேர்ந்தது. தனது வாழ்நாளில் ஒருபோதும் மாமிசத்தை உண்ணாதது. அதனால் எனது குடும்பத்தவர்கள் அதனுடன் மிகவும் அன்பாகவும், நெருக்கமாகவும் பழகி வந்தனர்''.

ஐயா, எனக்கு மூன்று ஆண்பிள்ளைகள் இருப்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் சிறுவர்கள். அவர்களுக்குச் சில நரிகளுடன் பழக்கம் உண்டு. அதனால் அவர்கள் அதனுடன் சேர்ந்து களவெடுக்கிறார்கள், பொய் சொல்கிறார்கள். பிறரை ஏமாற்றுகின்றனர். பலமுறை புத்திமதி சொல்லியும் கேட்கிறார்களில்லை. தண்டித்தாலும் அதை அவர்கள் மறந்து விடுகின்றனர். நீங்கள் மேடைகளில் பேசுவதை நான் கேட்டுள்ளேன். குற்றம் உண்டாவதற்கு முன்னமே அதை வராமல் காத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நெருப்பின் முன் வைத்த வைக்கோல் குவியலைப்போல வாழ்கை நாசமாகிவிடும். என்றீர்கள். அதற்காக அவர்களை அழைத்துக் கொண்டு குமரவனத்திற்குச் செல்லப் போகிறேன். செயற்கை தான் ஒருவரின் குணநலப் பண்புகளைத் தீர்மானிக்கிறது. நாளை நான் செல்லலாமென எண்ணியிருக்கிறேன். அதைச் சொல்லத்தான் வந்தேன்'' என்று கூறிவிட்டுச் சென்றது. சில வருடங்களின் பின் அது பிள்ளைகளுடன் வந்து சொன்னது, ''ஐயா, எனது பிள்ளைகள் தீயவர்களுடன் சேராததால் அவர்கள் சிறுசிறு குற்றங்களைக் கூடச் செய்வதில்லை. இப்போது அவர்கள் நல்லநிலையில் உள்ளனர்'' என்று மிக்க மகிழ்வுடன் கூறினாள். அவளது பிள்ளைகள் என்னை வணங்கினர்'' என்று பேச்சை முருகேசன் முடித்தார்.

''கௌசல்யா ஆறாவது குறளைப் புல்லாங்குழலில் வாசித்துவிட்டு இனிமையாகப் பாடினாள்''. ''தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின் என்குற்ற மாகும் இறைக்கு'', ''சபையோர்களே, ஒருவர் மீது நாம் குற்றம் காணுமுன் தன்னிடமுள்ள குற்றங்களை நீக்க வேண்டும். அவ்வாறு நீக்கியவர்கள் தான் பிறரது குற்றங்களை நீக்கவல்லவர்கள். மயூரன் என்ற மான் பெருங் கல்விமான். பல பட்டங்களைப் பெற்றவர். மேடைகளில் பேசுபவர். இரகசியமாக மது அருந்துபவர். ஒருநாள் அவர் மது அருந்திவிட்டு வீதியால் வரும்போது விபத்துக்கு உள்ளானார். வீதியால் சென்றவர்கள் அவரை வைத்தியசாலையில் சேர்த்தனர். அவரில் இருந்து வீசிய மதுவாடையால் அவரை அழைத்துச் சென்றவர்கள் அவர் மது அருந்தியமையால்தான் விபத்துக்குள்ளானார் என்று ஊரெங்கும் பரப்பினர்''.

‘‘அவர் சிறுவர்களுக்கு கதைகள் மூலம் நற்சிந்தனைகளைப் போதிப்பார். ஒரு நாள் அவர் உயர் வகுப்பு மாணவர்களுக்கு உரையாற்றும்போது, ‘‘மதுவைக் குடிக்கக்கூடாது அது எல்லாப் பாவங்களையும் செய்ய வைக்கும். ஒருவர் மது அருந்தாதபோது தீய செயல்களைச் செய்யக்கூடாது என்று நினைப்பார். பின் மதுவை அருந்தினால் தீய செயல்கள் யாவும் நல்ல செயல்களாக மாறிவிடும். அதன்பின் தீய செயல்களைச் செய்ய ஆரம்பித்து விடுவார்’’ என்று பேசியபோது ஒரு மாணவன் மறைந்திருந்து , ‘‘அவர் தனது அனுபவத்தைச் சொல்கிறார்!’’ என்றான். வந்திருந்தவர்கள் திகைத்து விட்டனர். யார் சொன்னது என்று விசாரித்தனர். எந்த மாணவரும் எதுவும் பேசவில்லை. அதனால் தன்னில் உள்ள குற்றங்குறைகளை நீக்கிய பின்னரே அடுத்தவரிடம் உள்ள குறைகளை ஆராய வேண்டும். இல்லாவிட்டால் மதிப்பை இழக்க நேரிடும்.’’

முருகேசன் தனது பேச்சை நிறுத்தக் கௌசல்யா ஏழாவது குறளைப் புல்லாங்குழலில் வாசித்தாள். பின்பு அதை இனிமையாகப் பாடினாள், ‘‘செயற்பால செய்யாது இவறியான் செல்வம் உயற்பாலது அன்றிக் கெடும்’’. சபையோர்களே, செய்யக்கூடிய தர்மங்களைச் செய்யாதவர்களது செல்வம் எந்தப் பயன்களுமின்றி அழிந்து போகும். அதனால் தன்னால் முடிந்தளவு தான தர்மம் செய்தல் வேண்டும். தான தர்மம் செய்யப்படும் பொருட்கள் உரு மாறி தான தர்மம் செய்தவனை வந்தடையும் என்று ஞானிகள் சொல்லியுள்ளனர். கிணற்றை இறைக்க இறைக்க ஊறும். தாவரத்தின் கிளைகளை வெட்ட வெட்டத் தழைக்கும் அது போன்றது தான் செல்வமும். கிணற்றை இறைக்காது விட்டால் துர்நாற்றம் வீசும். வெட்ட வேண்டிய கிளைகளை வெட்டாவிட்டால் தாவரம் பாதிக்கப்படும். அதுபோல தர்ம காரியங்களுக்குச் செலவு செய்யாது சேமிக்கப்படும் பணமும் பாதுகாப்பில்லாது அழியும்’’.

‘‘வேந்தனார் என்ற குரங்கு பெரிய வர்த்தகன். பொருட்களை நியாய விலையில் விற்பதால் வனவாசிகளில் பெரும்பான்மையானவர்கள் வேந்தனாரிடம் தான் பொருட்களை வாங்குவர். கடவுள் பக்தி மிக்கவர். ஆனால் ஏழைகளுக்குக்கூடத் தானதருமம் செய்யாதவர். அவரிடம் பலர் வேலை செய்தனர். ஆதித்தியன் என்ற குரங்கின் தந்தை அவரிடம் பணி செய்து இறந்து போக ஆதித்தியன் அவரது வியாபார நிலையத்தில் சிப்பந்தியாகச் சேர்ந்தான். மிக மிக ஒழுக்கமானவன். கடவுள் பக்தி உள்ளவன். அனைவரையும் மதிப்பவன். அதனால் வேந்தனாரின் வியாபார நிலையத்தில் எந்நேரமும் வாடிக்கையாளர் கூடியிருப்பர்.

‘‘ஆதித்தியனின் மகன் செந்தூரன் தரம் ஐந்து புலமைப்பரீட்சையில் சித்தியடைந்து தேசிய பாடசாலைக்கு தெரிவானான். அங்கு செல்ல உடைகள், கற்றல் உபகரணங்கள் வாங்கப் பத்தாயிரம் ரூபா தேவைப்பட்டது. ஆதித்தியன் வேந்தனாரிடம் சென்று தனது நிலமையைக் கூறி தனது மகனின் மேற்படிப்புச் செலவுக்காகப் பத்தாயிரம் ரூபா கேட்டான். அதைத் தனது மாதச் சம்பளத்தில் வட்டியுடன் கழிக்குமாறும் கேட்டான்.

வேந்தனார் இலவசமாகவோ, வட்டிப்பணம் வாங்கவோ எதுவும் கொடுக்கமாட்டார் என்பது அவனுக்குத் தெரியும்''.

''ஆதித்தியா நேற்று நான் பல இலட்ச ரூபாவுக்கு பொருட்களை கொள்வனவு செய்து விட்டேன். இரண்டு நாள் பொறுத்துக் கொள்'' என்றபோது ஆதித்தியன் சொன்னான், ''இன்று வேண்டும்'' என்றான். வேந்தனார் சொன்னார், ''யாரிடமாவது மாறு என்னிடம் இப்போது இல்லை' என்று கூறிவிட்டுச் சென்று விட்டார். அப்போது அங்கு அதைக் கேட்டுக் கொண்டிருந்த சிற்றம்பலம் என்ற யானை ''வேந்தனார் யாருக்கும் கடனோ உதவியோ செய்யமாட்டார் என்று உனக்குத் தெரியாதா? அங்கு வேலை செய்யும் ஆரூரன் என்ற குரங்கு விபத்தில் அகப்பட்ட போது உணவுப் பொருட்கள் கூட வாங்கி அவர் கொடுக்கவில்லை'' என்று கூறி ஆதித்தியனுக்கு உதவி செய்தது. ஆறு மாதங்கள் கழிந்தபின் ஒருநாள் நள்ளிரவு மின்ஒழுக்கு காரணமாக வேந்தனாரின் வியாபாரத்தலம் முற்றாக எரிந்து நாசமானது. அவர் காப்புறுதி செய்யாததால் அரசிடமிருந்து நட்டஈட்டைப் பெற முடியவில்லை. தான தர்மம் செய்யாதவனின் செல்வம் அழிப்பார் இன்றி அழியும்''.

முருகேசன் தனது உரையை நிறுத்தியதும் கௌசல்யா ஒன்பதாவது குறளை வீணையில் மீட்டிப் பாடினாள், ''வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க நன்றி பயவா வினை'', ''சபையோர்களே, தன்னைப்பற்றித் தானே போற்றிப் புகழக்கூடாது. அத்துடன் தீய செயல்கள் எதையும் செய்யக்கூடாது. அத்துடன் தன்னைத் தான் தாழ்த்தவும் கூடாது. உயர்த்தவும் கூடாது. தன்னைத் தான் தாழ்த்தினால் இயலாதவர்களாகி வாழ்க்கையில் முன்னேற முடியாத நிலை ஏற்படும். தன்னைத் தான் உயர்த்தினால் பலர் பகைவர்களாவர். செய்யும் செயல்கள் வெற்றியைத் தராது. பெரியவர்கள் மதிக்கமாட்டார்கள்''.

விதுரன் என்ற மானுக்கு ஓரேயொரு பொம்பிளைப்பிள்ளை. திருமண வயதை அடைந்ததும் திருமணமாகாது இருக்கிறது. கபிலன் என்ற மானுக்கு ஐந்து பொம்பிளைப்பிள்ளைகள். வருணன் என்ற மான் கல்யாணத் தரகர். விதுரனின் மனைவியான கோசலைக்கு மகள் திருமணமாகாது இருப்பது பெருங்கவலை. அவள் தற்போது மனநலம் குன்றியவளாக இருக்கிறாள் விதுரன் தன்னைப் பெரிதாக எண்ணி வியந்து பேசுபவன். தற்பெருமை மிக்கவன். தான் சொல்வது தான் சரி என்று நினைப்பவன். கோசலை கல்யாணத் தரகனான வருணனிடம் அடிக்கடி வந்து தனது மகளுக்குத் திருமணம் செயது வைக்கும்படி கெஞ்சுவாள். அடிக்கடி பணமும் கொடுப்பாள். விதுரன் வாங்க மறுத்தால் பணத்தை அவனது வீட்டு மேசையில் வைத்துவிட்டு சென்று விடுவாள். அவள் மனநலம் குன்றிய பின் அடிக்கடி வந்து சம்பந்தமில்லாது கதைப்பாள் அது விதுரனுக்கு தர்மசங்கடமாக இருக்கும்''.

கோசலையின் தொந்தரவைத் தாங்க முடியாத வருணன் நீதிமானான தமிழறிஞரிடம் வந்து சொன்னான். ''ஐயா விதுரனின் மனைவியின் தொந்தரவுகளைத் தாங்க முடியவில்லை. விதுரன் தற்பெருமை உள்ளவன். எதையும் நம்பாதவன். நான்

அவனது ஓரேயொரு மகளுக்கு பல திருமணங்கள் பேசியது உங்களுக்குத் தெரியும். ஒவ்வொரு மாப்பிளையைப் பற்றியும் குறைகள் சொல்வான். தன்னுடைய அந்தஸ்த்திற்கு பொருத்தமில்லை என்பான். சில தினங்களுக்கு முன் வெளிநாட்டில் இருந்து வந்த பொறியியலாளர் ஒருவருக்கு அவளது சாதகம் பொருந்தியது. காட்டுப்பிள்ளையார் கோவிலுக்கு அவள் வந்தபோது வெளிநாட்டு மாப்பிளைக்கு அவளைக் காட்டினேன். அவருக்குப் பிடித்துவிட்டது. அதை விதுரனுக்குச் சொன்னேன்''.

தமிழறிஞர் சிரித்துவிட்டுச் சொன்னார், ''வெளிநாட்டு மாப்பிளைகளை நம்ப முடியாது. அங்கே திருமணம் செய்தும் இருப்பான். குடிகாரனாகவும் இருப்பான். நன்றாக விசாரிக்க வேண்டும். என்னுடைய தகுதிக்கும், தராதரத்திற்கும் பொருந்தக்கூடிய குடும்பமாக இருக்க வேண்டும்'' என்றிருப்பரே.

''சரியாகச் சொன்னீர்கள் அவருடைய தகுதி தராதரத்திற்கு இங்கு மாப்பிளை தேட முடியாது. என்ன பெரிய தகுதி. அதைக் கேட்டால் கோபிக்கிறார். கபிலனுக்கு ஐந்து பெண்பிள்ளைகள். அவனைக் கேட்டேன் பொம்பிளையைக் காட்டு பிள்ளையார் கோவிலுக்கு வரச் சொன்னான். மூத்த மகள் தனது மூன்றாவது சகோதரியுடனும் தாயுடனும் வந்தாள். மாப்பிளைக்கு மூன்றாவது பெண்ணைத்தான் பிடித்தது. அதைக் கபிலனுக்குச் சொன்னேன், அவன், ''அது தான் விதி என்றால் அது நடக்கட்டும்'' என்றான். திருமணம் முடித்தவுடன் மாப்பிளை பெண்ணை அழைத்துக் கொண்டு வெளிநாட்டுக்குச் சென்று விட்டார்''.

''சிறிது நேரம் கழித்து வருணன் சொன்னான். சென்ற வாரம் மாப்பிளையின் கல்யாண வீட்டு வீடியோவைப் பார்த்த நண்பர்களில் இருவர் கபிலனது மூத்த பெண்ணையும், இரண்டாவது பெண்ணையும் திருமணம் செய்ய சம்மதித்தனர். அதைச் சொன்னபோது கபிலன் சொன்னான், ''ஒரு உயிர் கருவில் உற்பத்தியாகும்போதே அதன் எதிர்காலம் தீர்மானிக்கப்பட்டுவிடும் என்று காட்டுப் பிள்ளையார் கோவில் பூசாரி சொல்வார். அது உண்மை. ஐந்து பெண்களை வைத்திருக்கும் நான் எல்லாவற்றையும் காட்டுப் பிள்ளையாரிடம் ஒப்படைத்து விட்டேன். அவரின் விருப்பப்படி நடக்கட்டும்'' என்றான்.

''ஐயா, விதுரனைப் பற்றி உங்களுக்குத் தெரியும் தற்பெருமை உள்ள அவனுக்குப் பிறர் மகிழ்வாக வாழ்வது பிடிக்காது எத்தனையோரின் சம்மந்தத்தைக் குழப்பியவன். மாப்பிளையின் தகப்பனின் தூரத்து உறவினான நடேசன் என்பவனுக்கு கபிலனின் பெண்பிள்ளைகள் நடத்தை கெட்டவர்கள் என்று கூறித் திருமணத்தை குழப்ப முயன்றவன். நடேசன் கபிலனைப் பற்றி விசாரித்தபோது யாரும் குறை சொல்லவில்லை. அதனால் தான் திருமணம் நடைபெற்றது'' என்று வருணன் கூறினான் என்று கூறி முருகேசன் தனது பேச்சை நிறுத்தினார்''.

முருகேசன் பேச்சை நிறுத்தியதும் கௌசல்யா பத்தாவது குறளை வீணையில் மீட்டியவாறு பாடினாள், ''காதல காதல் அறியாமை உய்க்கிற்பின் ஏதில ஏதிலார் நூல்''

‘‘சபையோர்களே, ஒருவர் ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்து முடிக்க விரும்பினால், செய்து முடிக்கும்வரை அச் செயலைப் பற்றி யாருக்கும் சொல்லக்கூடாது. வாய் தடுமாறியோ, நம்பிக்கை காரணமாகவோ அதைச் சொன்னால் அதைப் பகைவர்கள் கெடுத்து விடுவார்கள். இதைத் தெரிந்து வைத்திருப்பவர்களை எந்தப் பகைவனாலும் வெல்ல முடியாது. பகைவர்களது சூழ்ச்சிகள் பயனற்றுப் போகும்’’.

‘‘வருணன் கல்யாணத்தரகன் மட்டுமல்ல காணி பூமி தொடக்கம் வாகனங்கள் ஈறாக வாங்கி விற்பவன். மிகவும் நேர்மையாகத் தொழில் செய்பவன். யாரையும் ஏமாற்றாதவன். அதனால் வாடிக்கையாளர்கள் அவனை முழுமையாக நம்பினர். அவன் நேர்மையாகத் தொழில் செய்வதால், அவனைப்போலத் தரகுவேலை செய்யும் சிலர் அவனுக்குப் பகைவர்களாக இருந்தனர். கபிலன் தனது நான்காவது மகளுக்குச் சீதனமாகக் கொடுக்க பெறுமதிமிக்க நல்லதொரு வீடு வாங்கித் தரும்படி வருணனுக்குச் சொல்லியிருந்தான்’’.

‘‘நாராயணன் என்ற எருமை தனது பிள்ளைகள் அனைவரும் வெளிநாடுகளில் இருப்பதால் அவர்கள் கட்டிய ஆடம்பரமான பெரிய வீட்டை விற்க விரும்பி அதை வருணனிடஞ் சொன்னது. நாராயணனும் கபிலனும் பரம எதிரிகள். பலமுறை சண்டைசெய்து காவல்துறையால் தண்டிக்கப்பட்டவர்கள். நாராயணனிடம் சென்ற வருணன் சொன்னான், ‘‘உனது வீட்டை வெளிநாட்டில் உள்ள ஒருவர் வாங்க விரும்புகிறார். அவர் அதைப் புதுப்பித்து வெளிநாட்டவர்களுக்கு வாடகைக்கு விடப்போகிறாராம். விலையைச் சொல்’’.

‘‘வாங்குபவன் யாரென்று சொல். அதன்பின் விலையைச் சொல்கிறேன். எனது எதிரிகளுக்குக் கொடுக்க நான் விரும்பவில்லை’’ என்றான் நாராயணன்.

‘‘நாராயணா, தொழில் சம்பந்தமான இரகசியங்களை யாருக்கும் சொல்லக் கூடாது. சொன்னால் பகைவர்கள் அதனைக் கெடுத்து விடுவார்கள். பொருட்களை வாங்கி விற்பது தான் எனது தொழில். முதலில் விலையைச் சொல்’’

இரண்டு கோடி ரூபா என்றான் நாராயணன்.

‘‘கூடிப்போய்ச்சு, அவர்கள் விருப்பப்படுவதால் இருபத்தையாயிரத்தைக் குறைத்துக் கொண்டு தரலாம் என்றார் வருணன். நாராயணன் பதில் சொல்லாமையால் வருணன் சென்றுவிட்டான்’’.

‘‘ஒரு வாரம் கழிய வருணன் நாராயணனிடம் சென்றான். ‘‘நான் சொன்ன விலையென்றால் தான் தருவன்’’ என்று நாராயணன் சொல்ல அதற்கு வருணன் சம்மதித்தான். அதன் பின், ‘‘யாருக்கு வீடு என்று சொல்’’ எனக்குத்தான். இப்போ வாங்குகிறேன். சில காலஞ்செல்ல யாராவது கூடுதலாகக் கேட்டால் விற்றுவிடுவேன். இது தானே எனது தொழில்’’. அதற்குப் பதில் சொல்ல நாராயணனால் முடியவில்லை.

நாராயணனுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட வருணன், மறுநாள் அவ் வீட்டைக் கபிலனுக்கு எழுதிக் கொடுத்தான். நாராயணன் கடுங்கோபம் கொண்ட போதும் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. வணக்கம்'' என்று கூறி விடை பெற்றார் முருகேசன்.

**8**

பத்து நிமிட இடைவேளைக்குப் பின் மகநாடு ஆரம்பமானது. தலைவர் கதிரேசன் மேடைக்கு வந்து, ''அடுத்ததாகப் பெரியாரைத் துணைக்கோடல் என்ற அதிகாரத்தைப்பற்றி தமிழறிஞர் உரையாற்றுவார்'' என்று கூறியபோது சபையோர் பலமாகக் கரகோசம் செய்தனர். தழிழறிஞர் சபையோரை வணங்கிவிட்டுப் பேச ஆரம்பித்தார். ''காலையில் வந்தவர்களைவிட இப்போது அதிகமானோர் வந்திருக்கிறார்கள். இது மகாநாட்டின் மீது நீங்கள் கொண்ட நம்பிக்கையை, ஆர்வத்தை, விருப்பத்தை வெளிப்படுத்துகிறது. திருக்குறளின் பெருமையை உணர்ந்து உலக நாடுகள் அனைத்தும் அதைத் தமது மொழிகளில் வெளியிட்டு வருகின்றனர். திருக்குறள் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் சுருக்கமாகவும், விளக்கமாகவும் கூறியுள்ளது''.

''இன்று நான் பெரியோர்களைத் துணையாகக் கொண்டவர்களுக்கு ஏற்படவிருக்கும் நன்மைகளைக் கூறவிருக்கிறேன். அதற்கு முன் எல்லோரும் எழுந்து நின்று இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்பாடு செய்த குழுவினருக்கும், சகல வழிகளிலும் மகாநாட்டை நடத்த உதவும் கடவுளையும் வணங்குவோம்'' என்றார். சபையோர் எல்லோரும் எழுந்து கண்களை மூடினர். கலைச்செல்வி நாதஸ்வரத்தில் கடவுள் வாழ்த்தை வாசித்தபின், பெரியோரைத் துணைகோடல் என்ற அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களையும் வாசித்தாள்.

அதன் பின் தமிழறிஞர் முதலாவது குறளை ராக சுத்தத்துடன் பாடினார், ''அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை திறன் அறிந்து தேர்ந்து கொளல்'', ''சபையோர்களே, அறம் உணர்ந்தவராகவும், தம்மைவிட வயதில் மூத்தவராகவும், நன்கு கற்றவராகவும் உள்ள ஒருவரைத் துணையாக அதாவது நட்பாகக் கொண்டால் எமக்கு வரும் துன்பங்கள் யாவும் நீங்கிவிடும். அவர் நீக்கும் வழிகளைக் கூறி அவற்றை நீக்கி வைப்பார்''.

''முல்லைவனத்தின் கரையோரங்களில் ஏராளமான மனிதர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களது வீடுகளில் தென்னை, மா, பலா, பனை போன்ற மரங்கள் உண்டு. தென்னை மரத்திலும், பனை மரத்திலும் மனிதர்கள் கள் எடுப்பார்கள். ஒருநாள் காட்டின் வெளியே வந்த தேவன் என்ற கரடி கள் விற்பனை நிலையத்துக்குள் சென்றபோது அங்கு ஒரு சாடியில் கள் இருந்தது. அதை எடுத்துத் தேவன் குடித்தது. சிறிது புளிப்பாக இருந்தாலும் அது முழுவதையும் குடித்துவிட்டுக் காட்டுக்குள் வந்து அட்டகாசம் செய்தது. அதைக் கேள்விப்பட்ட கதிரேசன் அங்கு வந்து நிலைமையை அறிந்து அவனைக்

கண்டித்தார். தேவன் மன்னிப்புக் கேட்டு இனிமேல் நான் காட்டைத் தாண்டி மனிதர்கள் வாழும் பகுதிக்குச் செல்லமாட்டேன்'' என்று கூறியது.

''தேவா, அனைத்துப் பாவங்களுக்கும் மூலகாரணியாக இருப்பது மது. மதுவைக் குடித்தால் மூளை மரத்துவிடும். பின் செய்யக் கூடாதவற்றையெல்லாம் செய் நேரிடும். பாவம், பழி, ஈவு, இரக்கம் என்பன மனதைவிட்டு அகன்றுவிடும். அதனால் தான் நீ சுயநினைவை இழந்து பலருடன் சண்டையிட்டாய். எதிரிகளின் உடைமைகளைச் சேதமாக்கினாய். அவற்றின் பெறுமதி பல இலட்சம் ரூபா. அவர்கள் காவல்துறையில் முறையிட்டால் உனக்குச் சிறைத்தண்டனை கிடைக்கும். அதன்பின் உனது குடும்பம் கெட்டழிந்துவிடும். உனது பிள்ளைகள் படிப்பில் கெட்டிக்காரர்கள். நீ சிறைக்குச் சென்றால் உனது பிள்ளைகளைக் கவனிப்பது யார்? நீ இப்போது செய்தது தவறு என்று மன்னிப்புக் கேட்கிறாய். முதல்முறை என்பதால் காவல்துறையினருக்கு புகாரிடாது விடுகிறேன். இனி இவ்வாறு நடந்தால் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

அவன் மனைவி வந்து சொன்னது, ''கதிரேசன் ஒழுக்கமானவர், பெரியவர், வயதில் முதிர்ந்தவர், கற்றவர். அவரது சொற்களைக் கேட்டு நடந்தவர்கள் அனைவரும் நன்றாக வாழ்கிறார்கள்'' என்று சொல்லும்போது தேவன் சொன்னது, ''தெரியாத்தனமாக அவ்வாறு நடந்துவிட்டேன். இனி அவ்வாறு நடக்கமாட்டேன். கதிரேசன் எல்லா உதவிகளையும் எமக்குச் செய்பவர். அத்துடன் சொன்னபடி செய்வார். அவரின் சொல்லை மீறினால் வாழமுடியாது'' என்றது.

''சபையோர்களே, அடுத்த இரண்டாவது குறளைப் பாடுகின்றேன்'' என்ற தமிழறிஞர் இரண்டாவது குறளை இனிமையாகப் பாட அதைக் கலைச்செல்வி நாதஸ்வரத்தில் வாசித்தாள். ''உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்'', ''சபையோர்களே, அறம் உணர்ந்த மூத்தவர்களான பெரியவர்கள், எமக்கு வந்த துன்பங்களை இலகுவாக நீக்கி விடுவார்கள். அடுத்துத் துன்பங்கள் மேற்கொண்டு வராது காக்கும் வழிகளையும் சொல்லித் தருவார்கள். அதனால் அத்தகைய பெரியவர்களின் வெறுப்பைச் சம்பாதிக்கக் கூடாது''.

''மாதவன் என்ற குரங்கு பல தீயவர்களுடன் சேர்ந்து தீயவற்றைச் செய்தது. காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைபட்டிருந்தது. சிறையிலிருந்து விடுதலையான பின்பும், தீயவர்களுடன் சேர்ந்தே வாழ்ந்து வந்தது. அது தேவன், கள்ளைக் குடித்துவிட்டு அட்டகாசம் செய்ததை அறிந்து அவனிடம் வந்து கேட்டது, ''கள்ளைக் குடித்தால் தீய செயல்களைச் செய்ய வைக்குமா? அது நல்ல ருசியா? எனக்குக் குடிக்க ஆசையாக உள்ளது. வா இடத்தைக் காட்டு'' என்றது.

''ஐயையோ, தெரியாத்தனமாக அன்று குடித்ததால் நான் நல்லவர்களின் நட்பை இழந்துவிட்டேன். இனிநான் குடிக்கவும் மாட்டன். உன்னுடன் கதைத்தால்

நல்லவர்கள் பலரின் உறவை இழக்க நேரிடும். முக்கியமாக கதிரேசனின் உறவை இழந்தால், எனது குடும்பம் அழிந்து விடும். எனக்கு ஐந்து பிள்ளைகள். மூத்த மகன் பல்கலைக்கழகத்தில் கற்கிறான். ஏனையோர் படிக்கின்றனர். இரண்டாவது மகன் பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் பரீட்சை எழுதியுள்ளான். கட்டாயம் கிடைக்கும் என்று சொல்கிறான். இந்த நிலையில் எனக்கு வரும் நெருக்கடிகளைப் போக்குபவரான கதிரேசனின் உறவை நீக்க முடியாது. அவர் எதிர்காலத்தில் என்னென்ன நடைபெறும், அதை முன்கூட்டியே அறிந்து எவ்வாறு நீக்குவது என்று சொல்லித் தேவையான உதவிகளைச் செய்பவர். அதனால் உன்னோடு பேச எனக்கு விருப்பமில்லை. தயவுசெய்து நீ போ'' என்றது தேவன். தேவன் உறுதியாக இருந்தமையால் மாதவன் சென்று விட்டான்''.

அடுத்து தமிழறிஞர் மூன்றாவது குறளைப்பாடச் கலைச்செல்வி அதை நாதஸ்வரத்தில் வாசித்தாள். ''அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்'', ''சபையோர்களே, ஒருவருக்கு முயற்சியின் மூலம் பல செல்வங்கள் வந்து சேரும். இவற்றுள் முதன்மையான செல்வம், பெரியோர்களின் நட்பைப் பெறுவதே. தேவனின் வீட்டைவிட்டு வெளியே வந்த மாதவனுக்குக் கள்ளைக் குடித்துப் பார்கவேண்டுமென்ற ஆசை மனதில் சிறிதாகத் தோன்றி வளர்ந்து மலையானது. அதனால் அவன் திரும்பத் தேவனின் வீட்டுக்கு வந்து சொன்னான், ''தேவா உனது நிலை எனக்குப் புரிகிறது. நீ குடிக்க வேண்டாம் வந்து இடத்தைக் காட்டு''.

''தேவா, கதிரேசன் சொல்வார், குற்றம் செய்பவனைவிடக் குற்றம் செய்பவனுக்குக் காரணமாக உள்ளவனும், அதற்குத் துணையாக இருப்பவனும் தான், குற்றஞ் செய்பவனைவிடப் பெரும் குற்றவாளி என்று சொல்வார். எனது மகள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாவாள் என்று கூறிக் குறைந்தது ஐம்பதினாயிரம் ரூபாவாவது அவளின் செலவுக்குத் தேவை என்று கூறி என்னைப் பணம் தேடச் சொன்னவர். இந்த வருடம் அவளுக்குப் படிப்பு முடிவடைகிறது. வெளிநாட்டில் உள்ள ஒரு பொறியிலாளரைத் திருமணம் செய்யுமாறு கூறுகிறார். அவரைச் செய்தால் எமது குடும்ப ஏழ்மை நீங்கும் என்றும் சொல்கிறார். அத்தகைய ஒரு பெரியவரைத் துணையாகக் கொண்டால் பெரும் புதையல் கிடைத்தது போலப் பயன்கள் பெருகும். உன்னுடன் வந்தால் உனைக் கெடுத்த பாவமும் என்னைச் சேரும். அதனால் தயவுசெய்து சென்று விடு'' என்று கை எடுத்துக் கும்பிட்டது தேவன்''.

தமிழறிஞர் நான்காவது குறளைப்பாடச் செல்வி அதை நாதஸ்வரத்தில் வாசித்தாள். ''தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாந் தலை'', ''சபையோர்களே, தம்மைவிடச் சகல வழிகளிலும் திறமையுள்ள பெரியவர்களைத் துணையாகக் கொண்டு அவர் வாழும் வழிகளைப் பின்பற்றி வாழ்வது என்பது வல்லமைகள் அனைத்திலும் பெரிய வல்லமையாகும். தேவன் தன்னுடன் பேசமாட்டான் என்று தெரிந்த மாதவன், ''தேவா, நீ எந்தக் கிராமத்திற்குப் போனாய்'' அங்கு செல்லும் வழியையாவது சொல்'' என்று இரந்தான். கதிரேசன் சொல்வார், ''ஒருவருக்கு நன்மை

உண்டாகும் வழியை மட்டும் சொல்ல வேண்டும். அணுவளவு கூடத் துன்பம் ஏற்படும் வழிகளைச் சொல்லக்கூடாது'' என்று நீ நன்மைதரும் விடயங்களைக் கேட்டால் சொல்வேன். கூட்டிச் சென்றும் காட்டுவேன். தீயவற்றை வாய் திறந்து சொல்ல மாட்டேன். நீ செல்லவிருக்கும் இடம் தீமைகள் பலவற்றைத் தோற்றுவிக்கும் இடம். அன்று நான் கள்ளைக் குடித்துவிட்டுப் போனதால் பல பெரியவர்களை ஏசியுள்ளேன். பலரின் பொருட்களை உடைத்து நாசப்படுத்தியுள்ளேன். அந்தநிலை உனக்கு வர நான் காரணகர்த்தாவாக இருக்கக் கூடாது. கதிரேசனைப் பின்பற்றி அவரைப்போல வாழ நினைப்பவன் நான். அவர் தீயவற்றை நினைக்கவும் மாட்டார், சொல்லவும் மாட்டார். அப்படி வாழும் நான், உனக்கும் உன் குடும்பத்தினருக்கும் தீமைதரும் செயலைச் செய்ய மாட்டேன். உனக்கு மூன்று பெண் பிள்ளைகள் இருக்கின்றனர். உனது பெற்றோர் முதியவர்கள். அவர்களை நீ கவனிப்பதில்லை. அந்த நிலையில் நீ குடித்தாயேயானால் உனது குடும்பம் பெரும் துன்பமடையும். அதனால் தயவுசெய்து எழுந்து செல்'' என்று தேவனைக் கைகூப்பி வணங்கியது.

தமிழறிஞர் ஐந்தாவது குறளை இனிமையாகப்பாடக் கலைச்செல்வி அதை நாதஸ்வரத்தில் வாசித்தாள். ''சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன் சூழ்வாரைக் சூழ்ந்து கொளல்'', ''சபையோர்களே, தக்கசமயத்தில் நல்ல யோசனைகளை ஆராய்ந்து சொல்லும் பெரியவர்களை நாட்டை ஆளும் அரசர்களும் வைத்திருப்பர். நாட்டை ஆளும் மன்னன் பெரும் பலசாலி. புத்திமான், வேத உபநிடதங்களைக் கற்றவன். அப்படியான அரசர்களே கற்றறிந்த பெரியவர்களிடம் முக்கிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடிய பின்பே முடிவு எடுப்பர்''.

''எதைச் சொல்லியும் எழுந்து செல்லாத மாதவனுக்கு அடிக்க வேண்டும் போல கோபம் வந்தபோதும் அதனைத் தேவன் அடக்கிக் கொண்டான். அப்போது தேவனின் சகோதரனான மாறன் அங்கே வந்தான். மாறன் அக் காட்டில் உள்ள மொத்த வியாபாரி. அவனிடம் தான் சில்லறை வியாபாரிகள் பொருட்களைக் கொள்வனவு செய்வர். அவனைக் கண்டதும் எழுந்து வணங்கினான் மாதவன். ''என்ன இந்தப்பக்கம் தம்பியைக் கெடுக்க வந்தியா…? நேற்று அவன் மனிதர்கள் வாழும் கிராமத்திற்குச் சென்று கள்ளைத் திருடிக் குடித்துவிட்டு இங்கு வந்து சண்டை பிடித்ததாகக் கேள்விப்பட்டேன். நீயும் சேர்ந்தா கள்ளுக் குடித்தாய்..? நான் ஒழுக்கமாக வாழ்பவன். எனது தம்பி குடித்துவிட்டுக் கலகஞ் செய்ததாக ஊரவர்கள் கதைக்கின்றனர். என்னுடைய மானம் போய்விட்டது'' என்று வாயில் வந்தபடி ஏசினான்''.

''நான் சேரவில்லை, ஒரு விசயத்தைக் கேட்க வந்தேன். தேவன் கதிரேசன் விரும்பாததைச் செய்ய மாட்டான் என்று கூறி என்னை அடிக்காத குறையாக வெளியேறும்படி சொல்கிறான்'' என்றான் மாதவன்.

‘‘ஓ, இவர் அவரைக் கேளாமல் எதுவுஞ் செய்யார். இவருக்கு அவர் தான் ஆலோசகர். அவர் தானாம் காட்டில் ஒழுக்கம்மிக்கவர். மற்றவை எல்லாம் ஒழுக்கம் கெட்டவையாம். நான் பொருட்களை நிதான விலைக்கு விக்கிறேன். கலப்படம் செய்வதில்லை. ஏழை வியாபாரிகளுக்குக் கடனாகப் பொருட்களைக் கொடுக்கிறேன். கோவில், பாடசாலை, மடங்கள் எல்லாவற்றிற்கும் உதவி செய்கிறேன். என்னை ஒழுக்கமானவன் என்று சொல்லமாட்டார்கள். பொருளுதவி தேவையென்றால் தான் என்னிடம் வருவார்கள்’’ என்றான் மாதவன்.

‘‘மாறனுக்கு கதிரேசனைப் பிடிக்காது. வனவாசிகள் கற்கவும், ஆலோசனை-களைப் பெறவும், தேவைகளுக்காகவும் அவரிடம் செல்வதை மாறன் அடிக்கடி கண்டிப்பான். ஆனால் கதிரேசன் எதைப்பற்றியும், சிந்திப்பதும் இல்லை, கவலைப்படுவதும் இல்லை’’.

‘‘மாறன் தேவனைப் பலவாறு ஏசிவிட்டு இறுதியாகச் சொன்னான், ‘‘பிழைக்கிற வழியைப் பார். நானும் உன்னோட தான் பிறந்தேன். எனது முயற்சியால் முன்னேறி இன்று கோடீஸ்வரனாக உள்ளேன். அவர்களின் சொற்களைக் கேட்டுக் கொண்டு இப்படியே இரு’’ என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

‘‘மாறன் சென்றபின் மாதவனுக்குத் தேவன் சொன்னான், அண்ணன் நடராசாச் செட்டியாரின் கடையில், சிப்பந்தியாகக் கடமை புரிந்தவர். அவருக்குப் பிள்ளைகள் இல்லாமையால் சொத்து முழுவதையும், அண்ணனுக்கு எழுதிக் கொடுத்தவர். அது அதிட்டம். எல்லாருக்கும் அதிட்டம் வருமா என்ன? நான் மட்டுமா கதிரேசனிடம் ஆலோசனை கேட்கிறேன். வனவாசிகள் அனைவரும் அவரிடம் தானே ஆலோசனை கேட்கின்றனர். முன்பு நாட்டை ஆண்ட பலம்மிக்க, கல்வியறிவு உடைய வீரர்களான அரசர்கள் கூடப் பெரியவர்களோடு ஆலோசித்துவிட்டுத் தான் முக்கிய முடிவுகளை எடுப்பார்கள். என்னைப்போன்று சாதாரணமானவர்கள் ஆலோசனை கேட்பதில் என்ன தவறு இருக்கிறது’’? என்று நினைத்தவாறு உள்ளே சென்றான் தேவன்.

‘‘சபையோர்களே, அடுத்து இவ்வனத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்கும் ஆதிரை என்ற பெண் குயில் ஆறாவது குறளைப் புல்லாங்குழலில் இசைத்துவிட்டுப் பாடுவாள் என்றதும், ஆதிரை மேடைக்கு வந்து சபையோரை வணங்கி விட்டு ஆறாவது குறளை புல்லாங்குழலில் வாசித்துவிட்டு அதைப் பாடினாள். ‘‘தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச் செற்றார் செயக்கிடந்தது இல்’’, ‘‘சபையோர்களே, ஆதிரை மிக மிக இனிமையாக ஆறாவது குறளை புல்லாங்குழலில் இசைத்துப் பாடினாள். அதை வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. அருமை மிக மிக அருமை. அவளை வாழ்த்துவோம்’’ என்றதும் சபையோர் கரகோசம் செய்தனர். ‘‘சபையோர்களே, அறிவிற் சிறந்த பெரியோர்களை உறவாகக் கொண்டு, அவர்களது ஆலோசனைப்படி வாழ்கின்றவர்களுக்கு பகைவர்கள் தீங்கு செய்ய அஞ்சுவர். மாதவன் வந்து தனது கணவனுடன் வெகுநேரம் கதைத்துக்

கொண்டிருப்பதைத் தேவனின் மனைவி விரும்பவில்லை. மாதவன் தீயவன். அவனை யாரும் மதிப்பதில்லை. அப்படியான ஒருவனோடு என்ன கதைக்க இருக்கிறது இவன் தான் இவருக்கு கள்ளை வாங்கி கொடுத்தானோ என்று நினைத்தவாறு தேவனின் அருகில் வந்த அவனது மனைவி சகுந்தலை, ‘‘மாதவன் தீயவன். யாரும் அவனை மதிப்பதில்லை. அவன் ஏன் இங்கு வந்தான். இன்றைக்கும் கள்ளுக் குடிக்க வருமாறு கேட்க வந்தானா? நீங்கள் கதிரேசனுடன் உறவு வைத்திருக்கிறீர்கள் என்பதற்காகத்தான் உங்கள் எதிரியான பகீரதன் உங்களைத் தாக்காது விட்டு வைத்திருக்கிறான். தனக்கிருக்கும் கோபத்துக்குத் தேவனை அடித்து முறித்துப் போடுவன். அவன் கதிரேசனோடு நெருக்கமாக இருப்பவன். அவனுக்கு அடித்தால் கதிரேசன் கோபிப்பார். கதிரேசன் கோபித்தால் வனவாசிகளும் கோபிப்பார்கள். அதனால் தான் விட்டு வைத்திருக்கிறேன். இப்ப அவன் கள்ளைக் குடித்துவிட்டும் கலகம் செய்ததால் அவர் வெறுத்து ஒதுக்கிவிட்டார். அதனால் அவனை அடிப்பன் என்று சொல்லித் திரிகிறானாம். பாதுகாப்பாக இருக்கும் பலம் மிகுந்த கதிரேசனைக் குடித்ததால் வெறுத்து விட்டீர்கள். இனி என்னென்ன நடக்கப் போகிறதோ தெரியாது’’ என்று அழுதாள். அதனால் சபையோர்களே பெரியவர்களின் உறவைத் தேடிப் பெற்றுக் கொள்ளுங்கள்’’.

ஆதிரை ஏழாவது குறளைப் புல்லாங்குழலில் இசைத்துவிட்டு அதை இனிமையாகப் பாடினாள். ‘‘இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே கெடுக்கும் தகைமையவர்’’, ‘‘சபையோர்களே, அறியாமலோ, அறியாமையாலோ தவறு செய்தாலும், கடுமையாகக் கண்டித்துக் காக்கும் பெரியவர்களைத் துணையாகக் கொண்டு வாழ்பவரை எதிர்க்கும் ஆற்றல் யாருக்கும் இல்லை. மாதவன் தீயவன். அவன் யாரையும் மதிப்பதில்லை. வயது வித்தியாசம் பாராது யாரையும் கேவலமாகப் பேசுவான். அதனால் சம்பந்தப்பட்ட சிலர் அவன் இரவில் தனியாக வரும்போது வழிமறித்துத் தாக்குவர். அவன் மிக்க வேதனையுடன் வந்து கதிரேசனுக்குச் சொல்லி அழுவான். அப்போது கதிரேசன் சொல்வார், ‘‘வினை விதைத்தவன் வினையைத் தான் அறுப்பான். நீ ஒழுக்கமா வாழ்ந்து பார். எல்லோரும் மதிப்பர். உனக்கு அடித்தவர்கள் யாரென்று விசாரித்து, அவர்களைச் சமாதானப்படுத்தினால் உனது தவறுகளுக்கு நானும் உடந்தை என்று வனவாசிகள் கதைப்பார்கள். அரசன் கூடத்தவறு செய்தால் தட்டிக்கேட்கும் பெரியவர்களை அவமதிக்கும் அரசன் தண்டித்தால் அவனது ஆட்சி கவிழ்ந்துவிடும். அரசனுக்கே அந்நிலை என்றால் எனது நிலை என்னாகுமென்று யோசி’’ என்றார்.

‘‘தன்னை ஏசிய மனைவிக்குப் பொறுமையாகத் தேவன் சொன்னான்’’. தவறு செய்பவர்களைத் தட்டிக்கேட்டுத் தண்டிப்பவர் கதிரேசன். அன்று நான் தெரியாத்தனமாகக் குடித்துவிட்டேன். இனிக் குடிக்க மாட்டேன் என்று சத்தியம் செய்ததை அவர் நம்பி மன்னித்து விட்டார். அப்படியான உத்தமரோடு கெட்டுப் போக நினைப்பவர்கள் தான் முரண்படுவர். நான் முரண்படுவனா’’ என்று தளதளத்த குரலில் சொல்ல அவனது மனைவி நம்பிவிட்டாள்.

அடுத்து எட்டாவது குறளை ஆதிரை புல்லாங்குழலில் இசைத்துவிட்டுப் பாடினாள், ‘‘இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானுங் கெடும்’’, ‘‘சபையோர்களே, தவறுகள் செய்யும்போது கண்டிப்புடன் பெரியவர்கள் கூறும் அறிவுரைகளைக் கேளாது தான் நினைத்தவாறு நாட்டை ஆளும் மன்னரைக் கெடுக்கப் பகைவர்கள் இல்லாதுவிடினும், அவன் தானே கெடுவான். துறையூர் மன்னன் ஆதித்தியன் பொருளாசை கொண்டவன். ஆடம்பரமாக விழாக்களைச் செய்பவன். அதனால் நாடு வறுமைப்பட்டது. மக்கள் அயல் நாடுகளுக்கு இடம் பெயர்ந்தனர். துறையூருக்கு அருகில் உள்ள நாடு வளவை நாடு. அது செழிப்பு மிக்கது. மன்னன் வீரபாண்டியன் எளிமையானவன், ஒழுக்கமானவன். அவன் துறையூர் மக்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்து வந்தான். அதனால் பெருமளவு மக்கள் வளவை நாட்டுக்குச் சென்றனர்’’.

‘‘துறையூரில் நாராயணன் என்றொரு பெரியவர் வாழ்ந்து வந்தார். அவர் முதலமைச்சரைச் சந்தித்துச் சொன்னார். ‘‘அமைச்சரே, நாட்டின் நிலைமையைப் பார்த்தால் இந்நாடு விரைவில் வளவை நாட்டுடன் இணைக்கப்படும் போலத் தெரிகிறது. எமது மன்னருக்கு எப்படி எடுத்துச் சொன்னாலும், அதைப் புரிந்து கொள்ள மாட்டார். வாருங்கள் மன்னரைச் சந்தித்து நிலைமையை விளக்குவோம்’’ என்று கூற முதலமைச்சர் சொன்னார், ‘‘நீங்கள் சொல்வது உண்மை, இரண்டு நாட்களுக்கு முன் அவைப்புலவர் மன்னனைச் சந்தித்து, மிகுந்த கண்டிப்புடன் நாட்டின் நிலைமையை விளக்கினார். உடனே அரசன் அவரைக் கைதுசெய்து சிறையில் அடைத்து விட்டான். நீர் சென்று சொன்னால் உம்மையும் கைது செய்து சிறையில் அடைத்து விடுவான். பெரியவர்களின் ஆலோசனையைக் கேளாத மன்னனுக்கு எதிரி அவன்தான். விரைவில் நாடு வளவை மன்னனால் கைப்பற்றப்படும் என உளவுத்தகவல்கள் சொல்கின்றன. வளவை மன்னன் நல்லவன். ஆசைகள் இல்லாதவன். தனது நாட்டை வளம்படுத்த வேண்டுமென நினைப்பவனே தவிர நாடுகளைக் கைப்பற்ற வேண்டுமென்ற நினைப்பில்லாதவன். எமது நாட்டு மக்கள் இடம்பெயர்ந்து சென்று எமது நாட்டைக் கைப்பற்றும்படி வேண்டுகின்றனர்’’.

அதைக்கேட்ட நாராயணன் சொன்னார், ‘‘வளவை மன்னன் போர் செய்யத் தேவையில்லை. போர் தொடுக்கப் போகிறோம் என்ற செய்தியைச் சொன்னால், முப்படை வீரர்களும் வளவைநாட்டுப் படையுடன் சேர்ந்து விடுவர். எமது படைத்தளபதிகள் மன்னனைக் கைது செய்து வளவை மன்னனிடம் கையளிப்பர். இல்லாவிட்டால் கொன்றுவிடுவர்’’.

‘‘பலத்துக் கதையாதீர்கள். காற்றிற்கும் காதுகள் இருக்கு’’, என்று முதலமைச்சர் கூறிச்சென்ற சில நாட்களின் பின், வளவை மன்னனால் துறையூர் கைப்பற்றப்பட்டது. முப்படை வீரர்களும், மக்களும் வளவை மன்னனைக் கோலாகலமாக வரவேற்றனர். அரசர்கள் கண்டித்து அறிவுரை கூறும் பெரியவர்களின் வார்த்தைகளைக் கேட்காவிட்டால், தன்னைத் தானே அழித்துக் கொண்டவராவர்’’.

முருகேசன் பேசுவதை நிறுத்திவிட்டு, ஆதிரையைப் பார்க்க, அவள் ஒன்பதாவது குறளைப் புல்லாங்குழலில் இசைத்துவிட்டுப் பாடினாள், ‘‘முதல் இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம் சார்பு இலார்க்கு இல்லை நிலை’’, ‘‘சபையோர்களே, பணவசதி இல்லாத வியாபாரிகளுக்கு, அதிக லாபம் வராது. அன்றன்று செலவுக்கே வருமானம் வருமோ தெரியாது. அது போலத் தக்க தருணத்தில் தம்மைத் தாங்கிக் காப்பாற்றும் துணை இல்லாத அரசனுக்கு ஆட்சி நிலைக்காது. துறையூர் மன்னன், மக்களையும், படைவீரர்களையும், மந்திரி பிரதானிகளையும் கொடுமைப்படுத்தியமையால் வளவை மன்னன் போர் தொடுக்க வேண்டும் என்று சொன்னவுடன் முப்படை வீரர்களும் வளவை மன்னனுக்கு ஆதரவு தெரிவித்தனர். மக்கள் மகிழ்வுடன் அதை வரவேற்றனர். துறையூர் மன்னன் அயல்நாட்டு மன்னர்களுடன் தொடர்பு கொண்டபோது சிலர் மறுத்தனர். சிலர் உதவி செய்வதாக கூறினரே தவிர உதவி செய்யவில்லை. அதனால் போர் செய்யாமலே வளவை மன்னனால் துறையூர் கைப்பற்றப்பட்டது’’.

‘‘குமரன் என்ற குதிரை காட்டில் கூலி வேலை செய்து வந்தது அதில் சிறிது பணத்தை மிச்சம் பிடித்து அன்றாடம் சந்தைக்குச் சென்று காய்கறிகளையும், பழங்களையும் வாங்கி வந்து விற்பனை செய்து வந்தது. வியாபாரம் செய்யும்போது தினமும் சிறு தொகைப்பணம் மிஞ்சும். அதை வைத்து வியாபாரம் செய்தது சில நாட்களில் காய்கறிகள் விற்பனையாகாது. அதனால் அதற்கு நட்டம் ஏற்பட்டது. அதன் நிலையை அறிந்த அவனது நண்பனான பாலன் என்ற குதிரை அவனிடம் வந்து, ‘’நீ செய்யும் வியாபாரத்தின் மூலம் இலாபம் அடைய முடியாது. நான் உனக்கு பத்து இலட்சம் ரூபா தருகிறேன். பொருட்களை வாங்கி விற்பனை செய்’’.

பாலன் கொடுத்த பணத்தில் குமரன் பொருட்களை மொத்தமாக வாங்கி சில்லறையாகவும், மொத்தமாகவும் வியாபாரம் செய்தான். ஒரு வருடத்தில் பாலனிடம் கடனாக வாங்கிய பணத்தை கொடுத்துவிட்டு வியாபாரம் செய்தான். அவனது மூலதனத்திற்கேற்ப வியாபாரம் பெருகியது. வியாபாரம் என்பது மூலதனத்தை பொறுத்தது என்பது அப்போது தான் அவனுக்கு விளங்கியது’’.

முருகேசன் பேச்சை நிறுத்த ஆதிரை பத்தாவது குறளைப் புல்லாங்குழலில் வாசித்து விட்டு பாடினாள். ‘‘பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே நல்லார் தொடர்கை விடல்’’, சபையோர்களே பெரியவர்களின் தொடர்பை விட்டுவிடுவது பலரது பகையை தேடிக் கொள்வதை விட பத்து மடங்கு தீமையை தருவதாகும். சபையோர்களே நல்லவர்களாகிய பெரியவர்களின் தொடர்பை விட்டு விலகினால் பல பெரியவர்களது நட்பு நீங்கும். பெரியவர்கள் தவறுகளைச் செய்தால் கண்டிப்பர். கண்டிப்பை கவனியாது தொடர்ந்து தவறுகள் செய்தால் அவர்களது உறவை முறித்து விடுவர். மாறன் என்ற கரடி தீயவன். பெரிய வர்த்தக நிலையம் ஒன்றை வைத்திருந்தான். தான் நல்லவன். நியாய

விலையில் பொருட்களை விற்பவன். கலப்படம் செய்யாதவன் என்று சொல்லிக் கொள்வான். சிலரைப் பொருள் கொடுத்து வாங்கி வைத்துள்ளான். அவர்கள் மாறனைப் பற்றி எப்போதும் உயர்வாகக் கதைப்பர்''.

''அந்த வனத்தில் மாறனின் வர்த்தக நிலையம் மட்டுமே உள்ளது. வேறு யாராவது வர்த்தக நிலையத்தை திறந்தால் அதை எரித்து விடுவான். அதனால் புதிதாக வர்த்தக நிலையத்தை தொடங்க யாரும் முன்வரமாட்டார்கள். அவனது நிலை பற்றி அடிக்கடி கதிரேசன் அவனைச் சந்தித்து கண்டிப்பார். அவன் அவரது பேச்சைக் கேளாது, ''ஐயா எனது வியாபார நிலையத்தில் பொருட்கள் கூடுதலான விலைக்கு விற்கப்படுவ-தாகவும், நிறை குறைவாகவும், கலப்படம் செய்யப்படுகிறது என்றும் சொல்கிறீர்கள். அப்படி நான் செய்யவில்லை. என்மீது பொறாமை உள்ளவர்கள் பொய்யாக செய்திகளைச் சொல்கிறார்கள். நீங்களும் எனது கடையில் தான் பொருட்களை வாங்குகிறீர்கள். எப்போதாவது நிறை குறைத்தோ, கலப்படம் செய்யப்பட்டோ இருந்ததா? ஊராரின் பொய்யான பேச்சை நம்பி வந்து கண்டிக்கும் உங்களை எனக்கு பிடிக்கவில்லை. எனது பொருட்களை குறை கூறுபவர்கள் ஏன் எனது கடையில் பொருட்களை வாங்குவான்'' என்று கடுமையாக கேட்டான்?

அவன் பிரமுகர்களுக்கு தரமான பொருட்களையே விற்பனை செய்வான். ஏனையோருக்குத்தான் கலப்படம் செய்து விற்பான். அதைக் கதிரேசன் சொல்ல விரும்பவில்லை. அவர் தனது நண்பனான வேலவன் என்ற யானையின் வீட்டுக்குச் சென்றார்''.

''வேலவனின் மனைவி யசோதை அவரைப் பெருமகிழ்வுடன் வரவேற்றாள். கதிரேசன் வந்திருப்பதை வேலையாள் மூலம் அறிந்த வேலவன் அவரைச் சந்திக்க வந்தான். ''நான் ஒரு முக்கியமான விடயமாக வந்தேன். மறுப்புச் சொல்லக்கூடாது. உடனே பட்டணத்தில் இயங்கும் உனது வியாபார நிலையத்தின் கிளையை எமது வனத்தில் திறக்க வேண்டும். இது எனது அன்புக் கட்டளை'' என்று கூறி விட்டுச் சென்று விட்டார்.''

''கதிரேசன் அவரது நீண்ட கால நண்பர். தேவன் பொல்லாதவன். எதையும் துணிந்து செய்பவன். ஈவு, இரக்கம் காட்டமாட்டான். அதனால் வேலவன் பயப்பிட்டார். அதைத் தனது மனைவியிடம் சொன்னபோது அவள் சொன்னாள், ''கதிரேசன் சொல்வதைச் செய்யாது விடமுடியாது. நீங்கள் செய்யாவிட்டால் கதிரேசன் இன்னொருவரிடம் சொல்லிச் செய்விப்பார். அவர் கோவிக்காவிட்டாலும் மனவருத்தப்படுவார். நல்லவர்களான பெரியவர்களின் தொடர்பை விட்டு விடுவது பலரது பகையை தேடிக் கொள்வதை விடப் பத்து மடங்கு தீமை உடையதென்று நீங்கள் சொல்வீர்கள். இப்போது ஏன் தயங்குகிறீர்கள். கதிரேசனை எதிர்க்க இவ்வுலகில் யாரும் இல்லை. அவர் உங்களுக்கு போதிய பாதுகாப்பு தருவார். அவரது வீட்டுக்கருகில் பெரியதொரு கட்டிடம் இருக்கிறது. அவர் அதைப் புனரமைப்பு செய்து விட்டுத்தான் உங்களிடம் வந்துள்ளார். எனவே புதிய கடையைத் திறக்க ஆயத்தமாகுங்கள்'' என்றாள்.

“வேலவன், கதிரேசன் கொடுத்த கட்டிடத்தில் பெரியதொரு பலசரக்குக் கடையைத் திறந்தார். அதன் பின் தேவனின் கடைக்கு வனவாசிகள் யாரும் செல்லவில்லை. அதனால் தேவன் கடையை மூட வேண்டியதாயிற்று. மாறன் வந்து தேவனுக்குச் சொன்னான், “அண்ணா, பெரியவர்களை பகைத்தால் பலரது பகையைப் பெற வேண்டி வரும். கதிரேசனை எமது வனத்தவர்கள் கடவுளாக எண்ணுகின்றனர். அவர் யாருக்கும் கெடுதல் செய்ததில்லை. யாரையும் கெடுத்ததில்லை. காரணமின்றி நீ பெரியவரான கதிரேசனைப் பகைத்ததால் இன்று வாழமுடியாத நிலைக்கு வந்துவிட்டாய். எல்லாம் விதியென்பாய். எல்லாம் விதியல்ல. எல்லாம் மதி. எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று பெரியவர்களுக்குத் தெரியும். அந்தப் பெரியோரோடு உறவு வைத்திருப்பவர்களும் அறிந்து கொள்வர். இனியாவது திருந்தி நட” என்றான்.

“கதிரேசன் வந்து சொன்னார், “இன்றைய மகாநாடு இத்துடன் முடிவடைகிறது. நாளைக்காலை 9.00 மணிக்கு மகாநாடு ஆரம்பமாகும். வணக்கம்”.

9

மறுநாள் மகாநாடு காலை 9.00 மணிக்கு மங்கல இசையுடன் ஆரம்பமானது. மங்கல இசை முடிவடைந்ததும் பிரமுகர்கள் மேடையில் வந்தமர்ந்தனர். மகாநாட்டின் தலைவரான கதிரேசன் மேடைக்கு வந்து பேசினார், “சபையோர்களே, இன்று நேற்றிலும் பார்க்க அதிகமானோர் வந்திருக்கிறீர்கள். ஒவ்வொரு நாளும் நடைபெறும் நிகழ்ச்சிகளை புதிய முறையில் நடத்த வேண்டும் என்று எண்ணி நடத்தி வருகின்றோம். ஒரே மாதிரியான நிகழ்வுகள் சலிப்பை உண்டாக்கும் என்பதால் புதுப்புது நிகழ்வுகளை அறிமுகப்படுத்தி வருகிறோம். அந்த வகையில் இன்று பிருந்தாவனத்தைச் சேர்ந்த நடனக்கலைஞர் குறிஞ்சிக் குமரனின் நடனக் குழுவினர் ‘சிற்றினம் சேராமை’ என்ற அதிகாரத்திலுள்ள குறள்களுக்கு நடனம் மூலம் விளக்கமளிப்பர். இம் மகாநாட்டின் நிகழ்ச்சிகள் உலகமெங்கும் ஒளிபரப்பப்படுகின்றன. பார்த்து விமர்சியுங்கள்” என்று கூறி விடைபெற்றார்.

குறிஞ்சிக்குமரன் என்ற மயிலும் அவரது குழுவைச் சேர்ந்த பத்து மயில்களும், வாத்தியக் கலைஞர்களும் மேடைக்கு வந்ததும் சபையோர் பலமாக கரகோசம் செய்தனர். குறிஞ்சிக் குமரன் தனது அழகான சிறகை விரித்து ஆடியபடி மேடைக்கு வர கலையரசி என்ற பெண் மயில் கடவுள் வாழ்த்தைப் பாடியது. இசைக் கலைஞர்கள் பாடலுக்கு ஏற்றவாறு இசையமைத்தனர். சுமார் பத்து நிமிடங்கள் குறிஞ்சிக் குமரனும் அவனது குழுவைச் சேர்ந்த பத்து மயில்களும் அழகாக தாளம் பிசகாது ஆடின. கலையரசியும் குறிஞ்சிக்குமரனின் நடனக்குழுவில் இருந்த ஐந்து மயில்களும் சிற்றினம் சேராமை என்ற அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களையும் இசையுடன் பாட மயில்கள் ஆடின.

“நடனம் முடிவடைந்ததும் கலையரசி முதலாவது குறளைப் பாடினாள் “சிற்றினம் அஞ்சும் பெருமை; சிறுமைதான் சுற்றமாய்ச் சூழ்ந்து விடும்”. குறிஞ்சிக்குமரன் தனது அழகான தோகையை முழுமையாக விரித்து காலால் தாளம் போட்டபடி பேசத்

தொடங்கினான், ‘‘சபையோர்களே, ஒழுக்கமாக வாழும் பெரியவர்கள் சிறுமதியை உடைய தீயவர்களைக் கண்டால் பேயைக் கண்டது போலப் பயப்பிடுவார்கள். இழிந்த குணத்தையுடைய சிறுமதியாளர்கள் தம்மைப் போன்ற இழிகுணம் கொண்ட சிறுமதியாளர்களாகிய தீயவர்களைக் கண்டால் மிக்க மகிழ்வுடன் அவர்களை வரவேற்றுப் பேசி மகிழ்வர். சபையோர்களே உயர்ந்தவரும் உத்தமருமான மயில்வாகனம் என்ற எருதின் வீட்டிற்கு இழிந்த குணங்களையுடைய சிவாநந்தன் என்ற நரியும், கந்தசாமி என்ற பன்றியும் சில அன்பளிப்புப் பொருட்களுடன் வந்தனர். அவர்களை வெறுப்புக் கலந்த சிரிப்புடன் வரவேற்ற துரை என்ற மான், அவர்களை அமர்ந்திருக்குமாறு கூறிவிட்டு உள்ளே சென்று மயில்வாகனத்திற்கு அவர்கள் வந்திருப்பதைக் கூறியது’’.

‘‘அதிகாலையில் அவர்கள் இருவரும் தேவையில்லாது வந்திருக்கமாட்டார்கள். யாரிடமாவது பணத்தைப் பெற்றுக்கொண்ட அவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வந்திருப்பார்கள் என்று எண்ணியபோது துரை சொன்னான், ‘‘ஐயா, நேற்று மாலை சிவபாதம் என்ற பன்றி சிவானந்தனுடனும் கந்தசாமியுடனும் சனசமூக நிலையத்தில் கதைத்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். ஆறுமுகம் என்ற எருது பத்திரிகையை வாசிப்பதுபோல இருவருக்கும் அருகில் இருந்து அவர்கள் பேசுவதைக் கேட்டான். சிவபாதம் ஏதோ ஒரு தொழிலைப்பெற விரும்பி அவர்களுக்கு அதைச் சொல்ல, அதைக்கேட்ட சிவானந்தன் ஐயாயிரம் ரூபா தந்தால் மயில்வாகனத்திற்கும் கொடுத்து உயர் அதிகாரியான இரத்தினசிங்கம் என்ற மானுக்குக் கொடுத்து நீ விரும்பிய வேலையைப் பெற்றுத் தருவதாகக் கூறியதாம்:.

‘‘துரை, அவர்கள் இருவரும் தீயவர்கள், கதைத்தாலே பணம் கேட்பார்கள். இவர்களைச் சந்தித்துக் கதைத்தால் எனக்குக் கெட்டபெயர் உண்டாகும். நல்லவர்கள் இவர்களைக் காணவே பயப்படுவார்கள். கதைத்தால் பணம் பெற்றதாக நினைப்பர். அதனால் அவர்களை நான் சந்திக்க விரும்பவில்லை என்று சொல்’’ என்றபோது துரை சொன்னான், ‘‘அவர்களோடு ஒரு விடயம் பற்றிக் கதைப்பதானால், அவர்களுக்குப் பணத்தைக் கொடுத்த பின்பே கதைக்க முடியும். ஆகையால் அவர்கள் உங்களுக்குக் கொடுக்கவென்று பணத்தைப் பெற்றிருப்பர்’’.

‘‘நான் சிவபாதத்தைச் சநதித்து யாவற்றையும் விபரமாகக் கேட்டு வருகிறேன்’’ என்றான்.

‘‘மறுநாள் துரை வந்து மயில்வாகனத்திற்குச் சொன்னான், ‘‘ஐயா, சிவபாதம் நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்று-கிறார். அவர் ஊருக்கு இடமாற்றம் பெற வேண்டுமென்று சனசமூகநிலையத்தில் இருந்த அவரது நண்பரோடு கதைத்துள்ளார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த சிவானந்தனும், கந்தசாமியும் உங்களது நண்பர்தான் கல்விப் பணிப்பாளர் என்றும், நீங்கள் தனக்காக எதுவும் செய்வீர்களென்றும் உங்கள் மூலம் கல்விப்பணிப்பாளருக்குப் பணம்

கொடுக்கலாம் என்று கூறச் சிவபாதம் அதை நம்பிப் பத்தாயிரம் ரூபா கொடுத்து விட்டான். நான் உங்களது உதவியாளன். நேற்று என்னுடன் இருவரும் கதைக்க முற்பட்டவை. இவர்களைக் கண்டாலே எனக்குப் பயம் வரும். ஏனென்றால் அவர்கள் தமக்குச் சாதகமாக என்னைப் பயன்படுத்திவிடுவர்'' குறிஞ்சிக் குமரன் பேச்சை நிறுத்தினார்.

குறிஞ்சிக் குமரன் பேச்சை நிறுத்தியதும், கலையரசி இரண்டாவது குறளைப்பாடக் குறிஞ்சிக் குமரனும் அவனது குழுவினர்களும் அழகாகத் தோகையை விரித்து ஆடினர்''. ''நிலத்து இயல்பால் நீர்திரிந்து அற்று ஆகும்; மாந்தர்க்கு இனத்து இயல்பது ஆகும் அறிவு''.

''சபையோர்களே, மழைநீரானது சேரும் நிலத்தின் தன்மைக்கேற்ப மாறுபாடு அடையும். அத்துடன் தன் நிலையையும் இழக்கும். அதுபோல ஒருவர் சேரும் நண்பர்களுக்கேற்பக் குணமும் மாறுபாடடையும். அதனால் ஒவ்வொருவரும் தாமும் தம் மக்களும் நல்லவர்களுடனேயே சேர வேண்டும். மழைநீர் பெருக்கெடுத்து வாய்க்கால் வழியாகச் செல்லும்போது கடலை அடைந்தால் தன் நிலையை இழந்து உவர் நீராக மாறிவிடும். அது போல அது நல்ல நிலத்தை அடைந்தால் சுவைமிக்க குடிநீராக மாறும்''.

சபையோர்களே, கந்தசாமியின் பெற்றோர் ஒழுக்கமானவர்கள். எல்லோருக்கும் தகுதி பாராது உதவி செய்பவர்கள் பணக்காரர்கள். அதனால் கந்தசாமியைச் செல்லமாக வளர்த்தனர். சிவானந்தன் கந்தசாமியுடன் ஒரே வகுப்பில் படித்தவன். அதனால் நண்பர்களாகினர். சிவானந்தனின் தந்தை பெரும் குடிகாரன். அவன் மதுவகைகளை வாங்கிவந்து வீட்டில் வைத்தும் குடிப்பான். தந்தை குடிப்பதைக் கண்ட சிவானந்தன் தந்தை வீட்டில் இல்லாத வேளைகளில் மதுவை எடுத்துக் குடித்து விடுவான். அதன்பின் கந்தசாமியுடன் நட்புப்பூண்டு பழகியமையால் கந்தசாமிக்கும் தகப்பன் வாங்கி வைத்த மதுவைக் கொடுப்பான்''.

''மது மயக்கத்தில் இன்பங்கண்ட கந்தசாமி தகப்பனின் பணத்தைத் திருடிவந்து சிவானந்தனிடம் கொடுக்கச் சிவானந்தன் மதுவை வாங்கிவந்து கந்தசாமிக்கும் கொடுத்துத் தானும் குடிப்பான். இப்பொழுது இருவரும் பெருங் குடிகாரர்களாகிவிட்டனர். அதனால் அவர்கள் இருவரையும் காண்போர் அவர்களால் தமக்கு துன்பங்கள் உண்டாகிவிடும் என்று எண்ணி மறைந்து விடுவார்கள். சபையோர்களே, மதுவைக் குடிப்பது பெரும் பாவம். அது தீயசெயல்கள் பலவற்றைச் செய்யத் தூண்டும். அதனால் மதுவைக் குடிக்காதீர்கள். மதுவைக் குடிப்போர் அதனை வாங்கிவந்து வீட்டில் வைத்துக் குடிக்காதீர்கள்'' என்று தனது பேச்சை நிறுத்தினார் குறிஞ்சிக் குமரன்.

கலையரசி மூன்றாவது குறளைப் பாடக் குறிஞ்சிக் குமரனது குழுவினர் தோகைகளை விரித்து ஆடினர். இசைக்கலைஞர்கள் இசையமைத்தனர். ''மனத்தான் ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தான் ஆம் இன்னான் எனப்படும் சொல்'',

‘‘சபையோர்களே, உயிர்களுக்கு இயல்பான அறிவு மனத்தால் உண்டாகும். அதுபோல இவன் இப்படியானவன் என்று மதிக்கும் மதிப்பு அவனது இனத்தால் உண்டாகும். ஒரு பிள்ளைக்குப் பெற்றோரின் குணம் பிறப்பிலிருந்து இருக்கும். அக் குணத்தை அவர்கள் சேரும் இனம் அதாவது நண்பர்கள் மாற்றி விடுவார்கள். கந்தசாமியின் பெற்றோர் மிகவும் நல்லவர்கள். அவர்களின் பெற்றோரும் மிகவும் நல்லவர்கள். எதிரிகளுக்குக்கூடத் துன்பங்கள் வரக்கூடாது என்று நினைப்பவர்கள். யாராவது அவர்களுக்குத் தீங்கு செய்தால், அது தமது விதியென்று நினைத்து வருத்தப்படுவார்கள்’’.

‘‘அப்படியான உத்தமமான பெற்றோருக்கு மகனாகப் பிறந்த கந்தசாமி சிறு வயதில் மிகவும் நல்லவனாக வாழ்ந்தவன். அவன் கற்ற பாடசாலையில் பலமுறை நல்ல மாணவன் என்ற சான்றிதழைப் பெற்றவன். சிவானந்தனுடன் சேர்ந்த பின்பு தான் மது அருந்தப் பழகினான். மது அவனை தீய செயல்களை செய்யப் பண்ணித் தீயவனாக்கியது. பன்றியோடு சேர்ந்த பசுவும் தின்னக்கூடாதவற்றையெல்லாம் தின்னும் என்பார்கள். அது உண்மை’’. என்று கூறி தனது பேச்சை நிறுத்தினார் குறிஞ்சிக் குமரன்.

கலையரசி மூன்றாவது குறளைப் பாட குறிஞ்சிக் குமரனது இசைக் குழுவினர் இசையமைக்க, நடனக் குழுவினர் நடனமாடினர். ‘‘மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு இனத்து உளது ஆகும் அறிவு’’, ‘‘சபையோர்களே ஒருவரது சிறப்பான அறிவு ஆரம்பத்தில் அவனுடைய மனத்தில் அறிவாகக் கணிக்கப்படும். ஆராய்ந்து பார்த்தால் அந்த அறிவு அவன் சேர்ந்திருக்கும் இனத்திலிருந்து பெற்றதாக அமையும். தமிழறிஞரின் உதவியாளன் செந்தூரன் என்ற நாய். அது தமிழறிஞரின் உதவியாளனாக இருந்தது. அவருடன் அவர் செல்லும் இடமெல்லாம் செல்லும். அவரது பேச்சைக் கிரகித்துக் கேட்கும். அவர் இல்லாத வேளைகளில் இலக்கியம் சம்பந்தமாக யாராவது வந்தால் அவருக்கு எல்லா உதவிகளையும் செய்து கொடுக்கும். ஒரு நாள் ஒரு பண்டிதர் தமிழறிஞரைத் தேடி வீட்டுக்கு வந்தார் அப்போது தமிழறிஞர் தனது நெருங்கிய நண்பர் ஒருவரின் பிள்ளைக்கு வெளிநாட்டில் திருமணம் நடைபெறுவதால் அங்கு சென்று விட்டார்’’.

‘‘செந்தூரன் அவரை வரவேற்று ஆசனத்தில் அமர்த்தி விட்டு, ‘‘ஐயா, தமிழறிஞர் வெளிநாடு ஒன்றுக்கு சென்று விட்டார். வர ஒரு வாரம் ஆகும்’’ என்று சொன்னபோது வந்தவர் சொன்னார், ‘‘நாளைக்கு ஒரு முக்கியமான பட்டிமன்றம் இருக்கிறது. முக்கியமான விடயங்களை அவரிடம் கேட்க வந்தேன்’’ என்று கூறச் செந்தூரன் சொன்னான், ‘‘ஐயா, என்ன விடயங்கள் என்று சொல்லுங்கள் என்னால் முடிந்த உதவிகளைச் செய்கிறேன்’’.

பண்டிதர் அவனை ஏளனமாகப் பார்த்தார். பின்பு ‘‘கௌரவர்கள் திரௌபதியைச் சபையில் துயிலுரித்த வரலாறு விதியின் காரணமாக நடைபெற்றதா?

இல்லைச் சதியின் காரணமாக நடைபெற்றதா? என்பதே விவாதத் தலைப்பு. சதியின் காரணமாக நடைபெற்றது என்று என்னை வாதிடச் சொல்கிறார்கள். எனக்கு அது பற்றி எதுவும் புரியவில்லை. தமிழறிஞரைக் கேட்கலாம் என வந்தேன்'' என்று கவலைப்பட்டார்''.

''பயப்பிடாதீர்கள் தமிழறிஞர் இதுபற்றி பெரியதோர் ஆய்வு செய்து வைத்திருக்கிறார். அதைப்படித்து குறிப்புகள் எடுத்து வைத்திருக்கிறேன். அவரைக் கேட்டு விட்டுத் தருகிறேன்''. என்று சொல்லி விட்டுத் தொலைபேசியில் அவரோடு பலமுறை தொடர்பு கொண்டும் அவரோடு பேச முடியவில்லை அதனால் செந்தூரன் சொன்னான், ''பெரியவரே, தமிழறிஞருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. நான் எடுத்த குறிப்புக்களைத் தருகிறேன், பாருங்கள்'' என்று சொல்லிவிட்டு குறிப்புக்களைக் கொடுத்தான். அதை வந்தவர் பலமுறை வாசித்தபோதும் அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் மிகுந்த கவலையுடன் இக் குறிப்புக்கள் எனக்கு விளங்கவில்லை'' என்றார்.

''செந்தூரன் அக் குறிப்புக்களை ஒவ்வொன்றாக வாசித்து விளக்கமளித்தான். சுமார் இரண்டு மணி நேரம் அதற்கு செலவானது. எல்லாவற்றையும் தெளிவாக ஐயமின்றிக் கேட்டவர் சென்று விவாதம் முடிந்த பின்பு வந்து சொன்னார், ''நீங்கள் பெரும் அறிவாளி. குறிப்புக்களுக்குச் சிறப்பான விளக்கம் அளித்ததால் எனது குழுவே வென்றது. எனது வாதம் மிகப் பிரமாதம் என்றும் நல்ல கருத்துக்களைக் கொண்டதென்றும் பலரும் பாராட்டினர். நீங்கள் உண்மையான அறிவாளி என்றபோது செந்தூரன் சிரித்துவிட்டுச் சொன்னான், ''ஐயா, எனக்கு எந்த அறிவும் கிடையாது. நான் எந்தப் புத்தகங்களையும் படித்ததில்லை. தமிழறிஞரோடு கூட இருப்பதால் அவர் சொல்வதைக் கேட்டு மனதில் பதித்து சொல்கிறேன். ஒரு மாணவன் ஒரு கட்டுரையை பாடமாக்கி பேசுவது போன்றது தான் எனது நிலை. ஒருவரது சிறப்பான அறிவு அவரது மனதில் அறிவு போலத் தோன்றும் ஆனால் அது அவரது அறிவல்ல சேர்ந்தவர்களின் அறிவு என்று ஆய்வு செய்து பார்த்தால் தான் தெரியும்''. குறிஞ்சிக் குமரன் பேச்சை நிறுத்த,

கலையரசி ஐந்தாவது குறளைப் பாடினாள். குறிஞ்சிக் குமரனின் நாட்டியக் குழுவினர் நடனமாட, இசைக்கலைஞர்கள் இசையமைத்தனர். ''மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் இனம் தூய்மை தூவா வரும்'' .

கலையரசி பாடி முடித்ததும், குறிஞ்சிக் குமரன் பேசத் தொடங்கினார், ''சபையோர்களே, ஒருவருடைய சிறப்பான அறிவு அவருடைய மனத்தின் அறிவு போலத் தோன்றினாலும் அது அவருடைய சொந்த அறிவு அல்ல. சேர்ந்தவரின் அறிவு என்பதனை முன்பு சொன்னேன். அதுபோல ஒருவரின் மனத்தூய்மையும் அவரின் செயல்களில் உள்ள தூய்மையும் அவரின் சொந்தக் குணங்கள் அல்ல. அவருடன் சேர்ந்தவர்களின் குணங்களாகும். செந்தூரனின் கூடப்பிறந்த சகோதரன் மயூரன். அவன் கந்தசாமியின் வீட்டில் வளர்க்கப்படுகிறான். செந்தூரன் சாதுவானவன். தீயவர்களைக் கண்டால்

குரைத்துத் தனது வெறுப்பைக் காட்டுபவன். ஒழுக்கமானவன், களவெடுக்காதவன், பொய் சொல்லாதவன். தமிழறிஞரின் குணங்கள் அத்தனையும் அவனிடம் உண்டு. மயூரன் கந்தசாமியைப் போன்று தீயகுணமுடையவன். தீமைகளைத் துணிந்து செய்பவன். ஒரு நாள் முயல் ஒன்று ஒரு குட்டியை ஈன்றுவிட்டு இரை தேடச்சென்றபோது நரி ஒன்று அதைப் பிடித்துத் தின்றுவிட்டது. பசியால் அழுத அந்த முயற்குட்டியைச் செந்தூரன் தூக்கிவந்து தமிழறிஞரிடம் கொடுத்தது. அது வளர்ந்தபின்பும் தமிழறிஞரின் வீட்டில் செந்தூரனுடன் விளையாடிக் கொண்டிருக்கிறது''.

''மயூரனுக்குக் கந்தசாமி வேட்டையாடப் பழக்கியுள்ளான். அவன் வேட்டையாடிப் பிடித்து வரும் மிருகங்களை வெட்டிச் சமைத்து தானும் உண்டு மயூரனுக்கும் கந்தசாமி கொடுப்பான். அதனால் மயூரன் தினமும் வேட்டையாடச் செல்லும். தீயவனான மயூரனைக் கண்டதும் மிருகங்கள் யாவும் ஓடி ஒளித்துவிடும். செந்தூரனைக் கண்டால் மிக்க மகிழ்வுடன் அவனை வரவேற்று விளையாடும். அதனால் ஒருவரின் மனத்தின் தூய்மையும், செயலின் தூய்மையும் அவர் சேரும் நண்பரைப் பொறுத்தே அமையும். அதனால் சபையோர்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளும் நல்லவர்களோடு சேருங்கள். அப்படிச் சேர்தால் மிகவும் மகிழ்வாகவும், நிம்மதியாகவும், இன்பமாகவும் வாழலாம்'' என்றார் குறிஞ்சிக் குமரன்.

கலையரசி ஆறாவது குறளைப் பாடினாள். வழமைபோலக் குறிஞ்சிக் குமரனின் நாட்டியக் குழு நடனமாடியது. இசைக்குழு இசையமைத்தது. ''மனம் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும் இனம் தூயார்க்கு இல்லை நன்று ஆகா வினை'', ''சபையோர்களே, தூய்மையான மனதை உடையவர்களுக்கு வாழும் போதும், வாழ்ந்து முடித்த பின்பும் பெயரும் புகழும் கூடிக்கொண்டே செல்லும். நல்ல இனத்தோடு தொடர்புடையவர்களுக்கு நடப்பவையெல்லாம் நல்லவையாகவே நடக்கும். ஒருவர் மனத்தூய்மையுடன் வாழவேண்டும். அத்துடன் பெரியவர்களோடு சேர்ந்து வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால், ஒருபோதும் துன்பங்கள் வந்து சேராது''.

''செந்தூரன், அழகன், வீரன் மட்டுமல்ல, தூய்மையான மனதை உடையவன். அத்துடன் பெரியவரான கதிரேசனுக்கு உதவியாக இருப்பவன். கதிரேசனிடம் எப்போதும் பெரியவாகள் வருவார்கள். அவர்களை இன்முகத்துடன் அழைத்து வந்து அவர்களுக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்து கொடுப்பான். அத்துடன் அவர்கள் செய்யச் சொல்லும் வேலைகளையும் செய்து கொடுப்பான். அதனால் பெரியவர்கள் அனைவரும் அவனைப் போற்றிப் புகழ்வர். பல்வேறு வனங்களில் உள்ள பெரியோர்கள் தமிழறிஞரின் வீட்டுக்கு வருவார்கள். அவர்களையும் செந்தூரன் மகிழ்வுடன் வரவேற்பான். அதனால் பல வனங்களிலுள்ள பெரியவர்கள் அவனுக்கு நண்பராகினர்''.

அந்த வனத்தில் மொத்த வியாபாரியாக விளங்குபவன் பார்த்திபன். அவர் கதிரேசனின் வீட்டிற்கும், தமிழறிஞரின் வீட்டிற்கும் வரும்போது செந்தூரன் அவர்களிற்குத்

தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பான். ஓய்வு நேரங்களில் பார்த்திபனின் வியாபாரத் தலத்திற்குச் சென்று அவருக்கு உதவி செய்வான்''.

தமிழறிஞரும், கதிரேசனும் அவனுக்குத் தேவையான கல்வியைக் கற்பித்தனர். அதனால் அவன் உயர்வகுப்புச் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்குச் சென்று கல்வி கற்றான். செந்தூரனின் தூய்மையான மனதையும், அவன் பெரியவர்களுக்குக் கொடுக்கும் மதிப்பையும், கண்டு மகிழ்ந்த பார்த்திபன் அவனைத் தன் ஒரே மகளான அகல்யாவுக்குத் திருமணம் செய்து வைக்க எண்ணிக் கதிரேசனுக்குத் தனது விருப்பத்தைத் தெரிவித்தார். கதிரேசன் முன்நின்று செந்தூரனுக்கும் அகல்யாவுக்கும் திருமணத்தை முடித்து வைத்தார். சபையோர்களே, மனத்தூய்மையும், சேர்ந்த இனத்தூய்மையும் ஒருவரைச் சகல வழிகளிலும் உயர்த்தி வைக்கும்'' என்று பேச்சை முடித்தார் குறிஞ்சிக் குமரன்.

கலையரசி ஏழாவது குறளைப் பாட, குறிஞ்சிக் குமரனின் நாட்டியக் குழு நடனமாடியது. இசைக்குழு இசையமைத்தது, ''மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம்; இனநலம் எல்லாப் புகழும்தரும்''. குறிஞ்சிக் குமரன் பேசத் தொடங்கினார், ''சபையோர்களே, மனதைச் சுத்தமாக வைத்திருந்தால் எல்லா உயிர்களும் அவரை விரும்பும். உதவிகள் செய்யும், போற்றிப் புகழும், வருமானத்தைப் பெருக்கும். அத்துடன் பெரியவர்களோடு அன்பாகப், பண்பாகப் பழகி வந்தால் ஆக்கத்துடன் எல்லா நன்மைகளையும் கொடுக்கும்''.

''வாதவூரன் என்ற ஒட்டகம், பெரும் தனவந்தன், நேர்மையானவர், பெரியவர்களுடன் நட்புப் பூண்டவர். அவர் ஒப்பந்தப்படி வேலையைத் தொடங்குமுன் கடவுளுக்குப் பூசை செய்வார். அப்பூசையில் பெரியவர்களும், பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள். அவர் ஒரு தடவையில் மூன்று கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஒப்பந்தம் செய்தார். அதனால் பொருட்களைக் கொடுப்பதற்குரிய தகைமை உள்ள ஒருவர் தேவைப்பட்டார். அவர் பத்திரிகை மூலம் விளம்பரஞ்செய்தார். நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பித்திருந்தனர். வாதவூரன் பார்த்திபனின் நண்பர். அதனால் தனக்குத் தேவையான பொருட்களை வழங்குவதற்குச் செந்தூரன் தான் பொருத்தமானவன் என உணர்ந்து அவனை விண்ணப்பிக்கும்படி பார்த்திபனுக்குச் சொல்லியருந்தார்.

''பார்த்திபன், செந்தூரனுக்கு அதைச் சொன்னபோது, அவன் சொன்னான், ''மாமா, நீங்கள் எனக்குத் தந்தது மிகப் பெரிய வர்த்தக நிறுவனம். அதை நல்லமுறையில் நடத்தி வந்தால் செய்யக்கூடிய நற்செயல்கள் அனைத்தையும் செய்யலாம். நீங்கள் சொல்லும் தொழிலை ஆரம்பித்தால், பெருமளவு பணம் வரும். பணத்தை ஏன் மாமா தேடுவான். மனதில் அழுக்குகள் இல்லாதிருத்தல் வேண்டும். பெரியவர்களோடு முரண்படாது சேர்ந்திருத்தல் வேண்டும். அப்படி வாழ்ந்தால் செய்யும் தொழில் பெருகும். வருமானம் அதிகரிக்கும். எனக்குப் பெரிய தொழில் உண்டு. வருமானமும் உண்டு. யாராவது தொழில் இல்லாதவர்கள் அதைப் பெற்று நல்லபடி வாழட்டும்'' என்றான். பார்த்திபன் எதுவும் பேசவில்லை'' என்று கூறிக் குறிஞ்சிக் குமரன் தனது உரையை நிறுத்தினார்.

கலையரசி எட்டாவது குறளைப் பாடினாள். மயில்கள் நடனமாடின. இசைக்குழு இனிமையான இசையை வழங்கியது, ‘‘மனநலம் நன்குடையார் ஆயினும் சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து’’, ‘‘சபையோர்களே, இயல்பாகவே சுத்தமான உயரிய மனமுடையவர்களாக இருந்தாலும், அவர்களுக்குச் சான்றோர்களின் உறவு மேலும் நல்ல அரணாக அமையும். பார்த்திபன் செந்தூரனுக்குச் சொன்னார், ‘‘மாப்பிளை, ஒருவர் நல்லவராகவும், வல்லவராகவும் இருந்தாலும் பெரியவர்களின் உறவு அவர்களை மேம்படுத்துவது போலக் காவலாகவும் இருக்கும். உங்களுக்கு வேலைப்பழு அதிகம் தான். எனினும் வாதவூரன் மிகமிக நல்லவர், ஒழுக்கமானவர், அன்பான பண்பாளர். அவரது உதவி உனக்குப் பாதுகாப்பைக் கொடுக்கும். அவர் உன்னை அளவுக்கதிகமாக நம்புகிறார். அந்த நம்பிக்கையைக் கெடுப்பது நல்லதல்ல. கடவுள் தான் இந்த உறவை வலுப்படுத்த நினைக்கிறார்’’.

‘‘முருகையா என்ற மான் இருதய நோயாளி. ஐந்து பிள்ளைகள். மூத்த மகன் ஆதவன் பல்கலைக்கழகப் படிப்பை முடித்துவிட்டு வேலை தேடி அலைகிறான். ஆதவன் ஒழுக்கமானவன். அதனால் அவனிடம் பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டு அவனைக் கண்காணித்தால் போதும். அதைவிட இந்த ஒப்பந்தத்தை எடுப்பதன் மூலம் வேலையில்லாத பல இளைஞர்களுக்கு வேலை கொடுக்கலாம். அதனால் அவர்களின் வாழ்வு வளம்பெறும். இதுவும் ஒரு வகையில் புண்ணியமான செயல்தான். ஓய்வாக இருப்பது சலிப்பைத் தருகிறது. அதனால் நான் உதவியாக இருக்கிறேன்’’ என்றபோது செந்தூரனால் அதை மறுக்கமுடியவில்லை. அதை ஏற்றுக் கொண்டான். அதனால் எப்பொழுதும் சுத்தமான மனமுடையவர்களாக இருந்தாலும், பெரியவர்களது நட்புத்தேவை. அது இடர்படும் வேளைகளில் காவலாக அமையும்’’ என்று கூறிப் பேச்சை நிறுத்தினார் குறிஞ்சிக் குமரன்.

கலையரசி ஒன்பதாவது குறளைப் பாட, குறிஞ்சிக் குமரனின் நாட்டியக்குழு அழகாக ஆடியது. இசைக்குழு இனிமையாக இசையமைத்தது, ‘‘நன்று ஆற்றல் உள்ளும் தவுறு உண்டு அவர்அவர் பண்பறிந்து ஆற்றாக் கடை’’, ‘‘சபையோர்களே, ஒவ்வொருவரின் பண்பு அதாவது குணநலன்களை ஆராயாது நன்மை செய்வது, சில சமயங்களில் தவறாக அமைந்து பெருநட்டத்தை உண்டாக்கிவிடும்’’.

‘‘செந்தூரன் வாதவூரனைச் சந்தித்தபோது, அவர் சொன்னார், ‘‘செந்தூரா, நான் உன்னை விரும்பியதற்குக் காரணம் உனது நல்ல பண்புகள் தான். வனத்தில் உள்ள யாரைக் கேட்டாலும் உன்னை அணுவளவுகூடக் குற்றம் சொல்லார்கள். பெரியவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் நீ. வழக்கமாக உருத்திரன் என்ற நரியுடன் தான் ஒப்பந்தம் செய்வேன். உருத்திரன் நல்லவன் போல நடிப்பான். சில போலியான பெரியவர்களுக்குப் பணம் கொடுத்துள்ளான். அவர்கள் இவனைப் பெரிதாகப் புகழ்வார்கள். அதனால் அவனை நம்பினேன். கதிரேசனையோ, தமிழறிஞரையோ விசாரியாது ஒப்பந்தம் செய்து கொண்டேன். அவன் தரமான பொருட்களைத் தரவில்லை. நிபுணத்துவமான

ஊழியர்களையும் வேலைக்கு அமர்த்தவில்லை. அதனால் பெரும் நட்டம் ஏற்பட்டதோடு எனக்கு அவப்பெயரும் ஏற்பட்டது. அதனால் தான் உன்னைத் தெரிவு செய்தேன். நீ எனது வேலையைப் பொறுப்பேற்றுள்ளாய் என்பதை அறிந்து பெரியவர்கள் பலர் என்னை வாழ்த்தினர். முதலாளிமார் உனது செயல்களை மெச்சித் தமது வேலைகளை என்னிடம் ஒப்படைக்கத் தயாராக உள்ளனர்'' என்று மகிழ்வுடன் கூறினார்.

''ஐயா, தாங்கள் என்மீது வைத்த நம்பிக்கையை நான் காப்பாற்றுவேன்'' என்று செந்தூரன் கூறினான். ஆகையால் சபையோர்களே, ஒருவரது நடத்தையைக் கண்டு ஏமாறாதீர்கள். அவர் உண்மையான ஒழுக்கமுள்ளவனா எனப் பெரியவர்களிடம் கேட்டறிந்த பின்பே முடிவெடுங்கள்'' என்று தனது பேச்சை முடித்தார் குறிஞ்சிக் குமரன்.

கலையரசி பத்தாவது குறளைப் பாட நடனக்குழு நடனமாடியது, ''நல் இனத்தின் ஊங்கும் துணைஇல்லை; தீ இனத்தின் அல்லல் படுப்பதூஉம் இல்'', ''ஒருவருக்கு நல்ல பெரியவர்களைவிட உயர்ந்த துணையாக எவரும் இருக்கமாட்டார்கள். அது போலத் தீயவர்களின் செயற்கை உலகில் உள்ள அனைத்துத் துன்பங்களையும், கொடுத்துச் சித்திரவதை செய்யும். வாதவூரன் செந்தூரனுக்குச் சொன்னார், பெரியவர்களின் துணை எப்போதும் நன்மையையே தரும். அவர்கள் எதிர்காலத்தை உணர்ந்தவர்கள். உருத்திரனுடன் நான் பொருள்களை வாங்க ஒப்பந்தம் செய்தது பலருக்குப் பிடிக்கவில்லை. கதிரேசன் சொன்னார், ''கவனமாக இருங்கள்'' என்று அது சாதாரணமான வார்த்தை என்று நினைத்தேன். அதில் பல நிஜங்கள் இருந்தன. உருத்திரன் எனது பெயரைச் சொல்லிக் கடனாகப் பல நிறுவனங்களில் பொருட்களைப் பெற்றான். அதற்கான பணத்தை அவன் கொடுக்கவில்லை. அதனால் அவர்கள் என்னைக் கேட்டனர். என்னைப் பற்றித் தவறாகக் கதைத்தனர். ஊரவர்களும் நான் நல்லவன் போல நடித்துப் பலரை ஏமாற்றுவதாகக் கதைத்தனர். எனது மானம் போய்விட்டது. அதனால் அக்கடன்களையெல்லாம் நான் கட்டினேன். பணம் செலவாவதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. மானம் போய்விட்டது. இழந்த மானத்தைப்பெற நான் கடுமையாக உழைத்தேன்'' என்றார். அதனால் சபையோர்களே, ஒருவரை அறியாது நம்பாதீர்கள்'' என்று தனது பேபச்சை நிறுத்தினார் குறிஞ்சிக் குமரன்.

## 10

குறிஞ்சிக் குமரன் பேசி முடித்ததும் மேடைக்கு வந்த கதிரேசன் சபையோரை வணங்கிவிட்டுச் சொன்னார், ''அடுத்துப் பேசுவார் என்று நாம் அச்சடித்த நிகழ்ச்சி நிரலில் மாற்றம் செய்ய வேண்டி உள்ளது. இப்போது சகலகலாவல்லவரான பண்டிதர் சபாபதியவர்கள் பேசவிருந்தார். அவரது தாயார் சடுதியாக இறந்தமையால் அவரால் மகாநாட்டிற்கு வருகை தர முடியவலில்லை. அவருக்காகக் குறிஞ்சிக் குமரனும், அவரது நடன இசைக்குழுவும் நிகழ்ச்சியை நடத்துவர்'' என்றதும் சபையோர் மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தனர். சபை அடங்கியதும், கதிரேசன் சொன்னார், ''இப்போது நாற்பத்தேழாம்

அதிகாரமான ‘தெரிந்து செயல் வகை’ என்ற அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களுக்கும் உரை விளக்கம், கதை சொல்லப்படும்’’.

கலையரசி முதலாவது குறளைப் பாடியபடி ஆடினாள். ‘‘அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும் ஊதியமும் சூழ்ந்து செயல்’’ பாடல் முடிந்ததும் குறிஞ்சிக் குமரன் பேச ஆரம்பித்தார். ‘‘சபையோர்களே, ஒரு செயலைச் செய்யத் தொடங்குமுன் அதற்காக ஏற்படும் செலவை அதாவது செயலைச் செய்யும்போது பொருள் அழியும். மூலதனம் இல்லாவிட்டால் தொழில் சிறப்படையாது. இலாபத்தைத் தராது. அச் செயலுக்காகச் செலவு செய்த மூலதனத்தைப் பெறச் சில ஆண்டுகாலஞ் செல்லும். சில சமயம் தவறான நடைமுறையால் மூலதனம் அழியவும் கூடும். அதனால் தான் வள்ளுவர் அதை அழிவு என்று சொன்னார். செலவு செய்தபின் வரும் வருமானத்தையும், அதன்பின் வரும் இலாபத்தையும் திட்டமிட்ட பின்பே தொழிலை ஆரம்பிக்க வேண்டும்’’.

‘‘செந்தூரன் இவற்றையெல்லாம் கணிப்பிட்ட பின்பு இலாபம் வரும் என்று தெரிந்தால் தான் மேற்கொண்டு தொழிலைச் செய்வான். இல்லாவிட்டால் அத்தொழிலைக் கைவிட்டு விடுவான். அவனது மைத்துனன் செந்தூரனைப்போல வாழவேண்டும் என்று எண்ணி ஓர் ஆடைத் தொழிற்சாலையைத் தொடங்கினான். ஆறு மாத காலத்தில் அது நட்டமடைந்ததால், அதை மூடிவிட்டுத் தொழில் இல்லாது கஷ்டப்படுகிறான். அவன் செந்தூரனிடம் வந்து கவலையுடன் சொன்னான். ‘‘நீ செய்யும் தொழிலெல்லாம் நல்ல இலாபத்தைத் தருகிறது. ஆனால் நான் செய்யும் தொழில்கள் நட்டத்தையே தருகின்றன. நான் இராசியில்லாதவன். எல்லாம் விதிப்படி தான் நடக்கும் என்பர். நான் பிறந்த நேரம் பிழை என்று கவலைப்பட்டான்’’.

‘‘மச்சான், பிறந்த நேரம், விதிப்படி எதுவும் நடப்பதில்லை என்று எமது சமயம் சொல்லுகிறது. கடவுளை நம்பு. முயற்சி செய். எல்லோரும் முயற்சி செய்கின்றனர். முயற்சி வெற்றியடைய வேண்டுமானால் செய்யப்போகும் தொழிலைப்பற்றி முழுமையாக அறிந்திருக்க வேண்டும். அத்துடன் அத்தொழிலைத் தொடங்குமுன் அதற்கான செலவையும் செலவு செய்தபின் வரும் ஆக்கத்தையும், தொழிலைத் தொடங்கியபின் வரப்போகும் இலாபத்தையும் கணித்து, அதில் இலாபமடைய முடியுமா என அறிந்தே தொழிலைச் செய்ய வேண்டும். இவற்றை நீ செய்யவில்லை. எனக்கும் ஓர் ஆடைத் தொழிற்சாலை தொடங்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. அதனால் நான் சொன்னவற்றை ஆராய்ந்து பார்த்தேன். நட்டம் ஏற்படும் என்று தோன்றியது. அதனால் கைவிட்டு விட்டேன்’’.

‘‘இங்கு போதிய தொழிலாளர்கள் இல்லை. இடவசதி இல்லை. போக்கு-வரத்துப் பிரச்சினை இருந்தது. எமது வனத்தின் காலநிலையும் ஏற்றதாக இருக்கவில்லை. அதனால் தான் அந்த யோசனையைக் கைவிட்டேன்’’ என்றான் செந்தூரன். எனவே

சபையோர்களே, நீங்கள் எதைச் செய்தாலும் செய்யும் தொழிலால் வரும் இலாப நட்டங்களை ஆராய்ந்து பாருங்கள்'' என்றார் குறிஞ்சிக் குமரன்.

கலையரசி இரண்டாவது குறளை ஆடி ஆடிப் பாடினாள். நடனக் குழுவினர் அவளோடு சேர்ந்து ஆடினர். ''தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு அரும்பொருள் யாதொன்றும் இல்''. ''சபையோர்களே எல்லோருக்கும் எல்லாம் தெரியாது. எல்லாம் தெரிந்தவர் யாரும் இல்லை. அதனால் ஒரு செயலில் வெற்றி காணவேண்டு-மானால், அச் செயலைச் செம்மையாகத் தெரிந்தவருடன் ஆலோசிக்க வேண்டும். அதன்பின் அச்செயலைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். அவ்வாறு செய்பவர்களுக்கு அரிய செயல் என்று எதுவும் இருக்காது''.

''செந்தூரன் தனது மச்சானுக்குச் சொன்னான், இன்ன செயலைச் செய்யவேண்டும் என்று திட்டமிட்டபின் அச் செயலை வெற்றிகரமாகச் செய்தவர்களிடம் சென்று அத் தொழிலைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். பின்பு அதே நினைப்புடன் தீவிரமாக முயற்சிக்க வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் செய்யமுடியாத செயல் எதுவும் இராது. இங்கு ஆடைத்தொழிற்சாலைகள் இல்லை. அதனால் தான் நீ தொடங்கினாய். உனக்கு ஆடைத்தொழிற்சாலை பற்றி எதுவும் தெரியாது. பிற வனங்களில் ஆடைத் தொழிற்சாலை உண்டு. அங்கு சென்று விசாரித்திருக்க வேண்டும். நீ அதையும் செய்யவில்லை. அப்படி இருக்க எப்படி இலாபம் வரும் என்றான் செந்தூரன். அதனால் சபையோர்களே நீங்கள் செய்யப்போவது சிறிய தொழிலாக இருந்தாலும், அதைச் செய்து வெற்றி கண்டவர்களின் வழியைப் பின்பற்றுங்கள்'' என்றார் குறிஞ்சிக் குமரன்

கலையரசி மூன்றதாவது குறளைப்பாட நடனக்குழு ஆடியது. ''ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை ஊக்கார் அறிவுடையார்'', ''சபையோர்களே, வரவிருக்கும் வருவாய் பெரிதாக இருக்கும் எனக்கருதி, தற்போது கையில் வைத்திருக்கும் மூலதனத்தை இழந்துவிடக்கூடிய செயல்களை ஒருவர் ஒதுபோதும் செய்யக் கூடாது. செந்தூரன் தனது மைத்துனனான தர்மலிங்கத்துக்குச் சொன்னான், ''மச்சான் பத்தாயிரம் ரூபா வைத்திருந்தால் எண்ணாயிரம் ரூபாவுக்கு ஏற்ற தொழிலைத் தான் செய்ய வேண்டும். அத்துடன் பெற்றோர் தமது நினைவாகத் தந்த ஆபரணங்களையோ, காணி, பூமி தோப்புக்களையோ விற்கக் கூடாது. இதை நான் முன்பே உனக்குச் சொன்னனான். நீ அதைக் கேட்கவில்லை. ஆடைத் தொழிற்சாலை இயங்கத் தொடங்கினால், பணம் பெருவாரியாக வரும். அப்போது விற்றவற்றை விடக் கூடுதலாக வாங்கலாமென்று கணக்கு வழக்குப் பாராது செலவு செய்தாய். இப்போது அதன் தாக்கம் என்னவென்று உனக்குப் புரிந்திருக்கும். நான், நீ எனது மச்சான் என்பதால் தான் சொன்னேன். இல்லாவிட்டால் யாராவது கேட்டால் தான் சொல்வேன். நான் சொன்னதை நீ கேட்கவில்லை. அதற்காகக் கவலைப்பட்டேன். ஒரு பைத்தியக்காரன் ஏதாவது உளறினாலும், அதில் ஏதாவது அர்த்தம் இருக்கும் என்று யோசிக்க வேண்டுமே தவிர, அசட்டையாக இருக்கக் கூடாது'' என்றான் செந்தூரன். அதனால் சபையோர்களே, உங்களுக்கு வேண்டாதவர்கள் ஏதாவது

கூறினாலும், அதில் அர்த்தம் இருக்கிறதா என்று சிறிது நேரம் ஒதுக்கி யோசித்துப் பாருங்கள்'' என்றார் குறிஞ்சிக் குமரன்.

கலையரசி நான்காவது குறளைப்பாட மயில்கள் ஆடின. இசைக்குழு இனிமையாக இசையமைத்தது. ''தெளிவில் அதனைத் தொடங்கார், இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர்'', ''சபையோர்களே, ஒரு செயலை எவ்வளவு கவனத்துடன் செய்தாலும், தோல்வி ஏற்படலாம். செய்யும் செயல்கள் யாவும் வெற்றியளிக்கும் என்று அகம்பாவம் கொள்ளலாகாது. தோல்வியையும் வெற்றியாக்கத் தெரிந்தவர்கள் தான் முன்னேற்றமடைவர். தமக்கு இழிவு ஏற்படக்கூடாதென்று எச்சரிக்கையோடு முயற்சி செய்பவர்கள், தம் முழுமையாக அறிந்து கொள்ளாத எச்செயலையும் செய்யத் தொடங்க மாட்டார்கள். மச்சான், நீ ஆடைத் தொழிற்சாலையைப் பற்றி அறிந்து கொள்ளவில்லை. அதனால் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களை நம்பினாய். எல்லாத் தொழிலாளர்களும் நல்லவர்கள் அல்ல. நீ பிரதம பொறியியலாளனான விதுஷன் என்ற பொறியியலாளனை அளவுக்கு அதிகமாக நம்பினாய். அவன் உன்னை நம்பவைத்துப் பொருட்களைத் திருடிவிட்டான். தேவையில்லாத பொருட்களை வாங்கி இரகசியமாக விற்று வந்தான். எல்லாவற்றையும் நான் உனக்குச் சொன்னபோதும், நீ அதில் கவனம் எடுக்கவில்லை. யார் எதைச் சொன்னாலும் அதன் உள்ளர்த்தம் என்னவென்று புரிந்து கொள்ள வேண்டும். ஒரு நிபுணத்துவம் வாய்ந்தவர் மறைமுகமாகத் தான் சொல்வார். ஏனென்றால் சந்தர்ப்ப சூழ்நிலை ஒருவனை மாற்றிவிடும். தமிழறிஞர், ''வேலை செய்வோரைக் கூர்ந்து கவனி'' என்றவர். அதன் அர்த்தம் பிரதம பொறியியலாளர் தவறாக நடக்கிறார் என்பதேயாகும். பிரதம பொறியியலாளர் பொய்யான வார்த்தைகளால் உன்னை மயக்கி வைத்திருந்தார். இனி அதைப்பற்றிக் கதைத்தால் துன்பங்கள் தான் உண்டாகும்'' என்று கூறினான் செந்தூரன். எனவே தெளிவாக அறிந்து கொள்ளாமல் எச் செயலையும் செய்யக்கூடாது'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் குறிஞ்சிக் குமரன்.

கலையரசி ஐந்தாவது குறளைப்பாட மயில்கள் நடனமாடின, ''வகையறச் சூழாது எழுதல் பகைவரைப் பாத்திப் படுப்பது ஓர் ஆறு'', ''சபையோர்களே, ஒரு செயலைச் செய்யுமுன் அச் செயலைச் செய்வதற்கான அறிவு தன்னிடம் இருக்கிறதா எனத் தெரிந்து கொள்ள வேண்டும். நீ ஒரு கலைப்பட்டதாரி. உனக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. அப்படியிருந்தும் நீ தொழிலைத் தொடங்கும்போது வேதவனத்திலுள்ள கஜமுகன் என்பவர் ஆடைத் தொழிற்சாலையைக் கடந்த பதினைந்து வருடமாக நடத்தி வருகிறார். அவர் எனது நண்பர். அவரிடஞ் சென்று தெரியாதவற்றைத் தெரிந்துகொள் என்றேன். நீ அதற்குப் பதிலே சொல்லவில்லை. தொழில் அறிவு பெறுவதற்குக் கல்வி தேவையில்லை. அக்கறையும், முயற்சியும் இருந்தால் போதும். கஜமுகன் மழைக்குக்கூடப் பாடசாலைப்-பக்கம் ஒதுங்காதவர். ஓர் ஆடைத்தொழிற்சாலையில் கூலியாளாக வேலை செய்து, தொழிலின் மீது அக்கறை கொண்டு அதனைத் தெரிந்து கொண்டவர். அவரது

தந்தை தனவந்தன். தந்தையின் உதவியோடு தொடங்கிக் கோடி கோடியாகச் சம்பாதிக்கிறார். செயலின் தன்மையை முழுமையாக உணர்ந்தது தான்'' காரணம்.

''பொருட்கள் கொள்வனவின் போது பொறியியலாளருடன் கூட இருப்பார். இயந்திரங்கள் பழுதடைந்தால் அதைத் திருத்தக் கூடியவனை இனங்கண்டே திருத்து விற்பார். இயந்திரனிருந்து கழற்றிய பகுதியை எடுத்து வந்து வைத்திருப்பார். அதனால் பழுதடைந்த உதிரிப்பாகங்களைப் பொறியிலாளர் மீண்டும் பொருத்த முடியாது. இப்படிப் பல. அதனால் எதிரிகளால் அவரைக் கெடுக்க முடியவில்லை. உனக்கு எதிரி பிரதம பொறியியலாளர். உனக்கு எதுவும் தெரியாததால் அவர் உன்னை ஏமாற்றித்தான் தன் பொருளாதாரத்தைப் பெருக்கி விட்டார். அதனால் சபையோர்களே, செயலின் தன்மையை நன்கு ஆராயாமல் செயற்பட்டீர்களானால் எதிரிகள் தான் முன்னேறுவார்கள்'' என்றார் குறிஞ்சிக் குமரன்.

சபையோரை உற்சாகப்படுத்தக் குறிஞ்சிக் குமரனின் நடனக்குழு பத்து நிமிடங்கள் நளினமாக ஆடியது. சபையோர் கரகோசம் செய்தனர். கலையரசி ஆறாவது குறளைப் பாடினாள். ''செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க செய்யாமை யானும் கெடும்'' கலையரசி பாடி முடித்ததும் குறிஞ்சிக் குமரன் சொன்னார், ''சபையோர்களே, ஒருவர் செய்யக் கூடாதவற்றைச் செய்வது கேட்டை உண்டாக்கும். அது போலச் செய்ய வேண்டியவற்றைச் செய்யாது விட்டாலும் கேடு உண்டாகும். செந்தூரன் … சொன்னான், ''மச்சான் துன்பங்களோ, இன்பங்களோ தானாக வந்து சேர்வதில்லை. அவற்றை நாம் தான் வரவழைக்கிறோம். பெரியவர்களின் அறிவுரை ஆபத்தான வேளைகளில் ஊன்றுகோல் போலச் செயற்படும். நானும் எனது நண்பனான சிவபாலனும் காட்டு வழியாக வியாபார நிமித்தம் பிரயாணஞ் செய்வது வழக்கம். வேதவனத்தின் கிழக்குப் பகுதியில் முல்லைவனம் இருக்கிறது. முல்லைவனத்தில் வாழ்வோரில் பெரும்பான்மையானோர் தனவந்தர்கள். அங்கு நாம் பொருட்களை வாகனங்களில் கொண்டு செல்வோம்''.

''நான் முதன் முதலாக முல்லைவனத்திற்குச் செல்லவிரும்பி, அதைக் கதிரேசனிடம் சொன்னேன், அவர் சொன்னார், முல்லைவனத்தில் பல தனவந்தர்கள் வாழ்கின்றனர். சில தனவந்தர்கள் நம்பிக்கைக்கு உரியவர்கள் அல்ல. ஆரம்பத்தில் வாங்கும் பொருட்களுக்கு உடனுக்குடன் பணம் தருவார்கள். பின் கடன் கேட்பார்கள். வியாபாரி கடன் கொடுக்காது தொழிலைச் செய்ய முடியாது. அவதானமாக இரு. அத்துடன் வேதவனத்தின் கிழக்குப் பகுதியில் வழிப்பறித் திருடர்கள் இருக்கின்றனர். அவர்கள் மயக்க மருந்தைத் தெளித்துக் களவெடுப்பர். அதனால் வேதவனத்தினூடாக முல்லை வனத்திற்குச் செல்லாது பிரிந்தா வனத்தினூடாகச் செல். அது பாதுகாப்பான பாதை. ஆனால் தூரம் அதிகம்'' என்றார். அதை நான் சிவபாலனுக்குச் சொன்னேன். அவன் அக்கறையாகக் கேளாது அப்பாதையூடாகச் சென்று பல்லாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை இழந்தவன். இதிலிருந்து என்ன தெரிகிறது. போகக்கூடாத வழியால் செல்லக்கூடாது. வழக்கமாக மக்கள் செல்லும் பாதையூடாகவே செல்ல வேண்டும். நீ

நம்பக்கூடாதவைகளை நம்பினாய். நம்பவேண்டியவைகளை நம்பாது விட்டாய். கதிரேசன் உனக்கு என்ன பிழை செய்தவர். எல்லோரும் நல்லவர் என்று நம்பிய கதிரேசனைப் பொறியியலாளருக்குப் பிடிக்காது. அவர் தவறுகளைக் கண்டிப்பவர். அதனால் பொறியியலாளர் அவரைப்பற்றித் தவறாக உனக்குக் கூறியவற்றை நம்பியதால் தான் உனக்கு இந்த நிலை வந்தது என்றேன்''.

''அதனால் சபையோர்களே, செய்யக் கூடாதவற்றைச் செய்வதும், செய்ய கூடியவற்றைச் செய்யாது விடுவதும் தவறாகும்'' என்று கூறிக் குறிஞ்சிக் குமரன் தனது உரையை நிறைவு செய்தார்.

கலையரசி ஏழாவது குறளைப்பாட குறிஞ்சிக் குமரன**து** நாட்டியக் குழுவினரும், இசைக்குழுவினரும் குறளுக்கேற்ற வகையில் நடனமாடி இசையமைத்தனர். ''எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு'', ''சபையோர்களே, ஒரு செயலைச் செய்யத் தொடங்குமுன், அச் செயலைச் செய்யக்கூடிய தகுதி இருக்கிறதா என எண்ணிப் பார்த்தல் வேண்டும். தொடங்கியபின் செய்யலாமா விடலாமா என்று எண்ணுவது தவறாகும். அது பெரும் துன்பங்களை உண்டாக்கும். செந்தூரன் தனது மைத்துனனுக்குச் சொன்னான், ''நீ முன்னுக்குச் செய்வேண்டியவற்றைப் பின்னுக்குச் செய்கிறாய். ஆடைத்தொழிற்சாலையால் நட்டம் ஏற்பட்டதென்றால், அந் நட்டத்திற்கான காரணங்களை ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டும். அதன்பின் அத்தொழிலில் நிபுணத்துவம் உள்ளவர்களோடு கலந்து ஆலோசித்துவிட்டுத் தவறுகளைத் திருத்த வேண்டுமே தவிரத் தொழிலை விடக்கூடாது. எல்லோருக்கும் இலாபம் தரும் தொழில் உனக்கு நட்டத்தைத் தருவது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. தொழிலைத் தொடங்குமுன் நன்கு ஆலோசித்தல் வேண்டும். அப்படி ஆலோசித்திருந்தால் இந்தநிலை வந்திராது. இப்போதும் நிலைமை கெட்டுப்போகவில்லை. நட்டமேற்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்து அவற்றைச் செயற்படுத்து. இல்லாவிட்டால் செலவு செய்த கோடிக்கணக்கான பணம் அழிந்துவிடும்'' என்றான்.

''அதனால் சபையோர்களே, செய்யும் வழிகளை நன்கு ஆராய்ந்து, அனுபவமுள்ள பெரியவர்களின் ஆலோசனைப்படியே ஒரு செயலை ஆரம்பிக்க வேண்டும். செயலைச் செய்யத் தொடங்கியபின் ஆலோசிப்பது கேட்டையே தரும்'' என்றார் குறிஞ்சிக் குமரன்.

கலையரசி எட்டாவது குறளைப்பாட நடனக்குழு நடனமாடியது. இசைக்குழு இசை அமைத்தது. ''ஆற்றின் வருந்தா வருத்தம், பலர்நின்று போற்றினும் பொத்தப் படும்'' ''சபையோர்களே, விதிமுறைப்படி செய்யப்படாத முயற்சியைப் பலர் கூடி நின்று செய்தாலும், அது முடிவுறாது. செந்தூரன் சொன்னான், ''மச்சான், எந்த ஒரு செயலையும், அதற்கெனப் பெரியவர்களால் சொன்ன விதிப்படி செய்தல் வேண்டும். விதிப்படி செய்யாத செயலுக்குப் பலர் உதவி செய்தாலும், அது நிறைவேறாது. இயற்கைகூட விதிப்படிதான்

தனது செயல்களைச் செய்கிறது. சித்திரை மாதம் சிறுமாரி என்பார்கள். மாசி மாதம் தான் கனிதரும் மரங்களும், காய்கறிப் பயிர்களும், காய்ப்பதற்காகப் பூக்கும். அப்போது மழைபெய்தால் பூக்கள் உதிர்ந்து விடும். மார்கழி மாதம் மழை வடக்குத்திசையில் இருந்து தெற்குப் பக்கமாக விரைந்து ஓடிப் பெய்யும். அதைத் தெற்கோட்டம் என்பர். தெற்கோட்டத்தில் இருந்து தான் அடுத்த வருடத்திற்கான மழைவீழ்ச்சி கணிக்கப்படுகிறது. இவ்வாறு இயற்கையின் நிகழ்வுகள் பலவற்றைச் சொல்லலாம். இயற்கையே விதிகளுக்குக் கட்டுப்பட்டது''.

''எனது நண்பன் கஜமுகன் என்பவர் ஓர் ஆடைத்தொழிற்சாலையைத் திறம்படப் பதினைந்து வருடங்களாக நடத்தி வருகிறார். ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். அவர் விதி முறைப்படி அதாவது தனது எண்ணத்திற்கேற்பச் செயற்படுகிறார். தொழிற்சாலையைத் தொடங்குமுன் அதற்கான நடைமுறைகளைக் கைக்கொண்டமையால் தனியே முடிவெடுத்து வெற்றிகரமாகத் தொழிற்சாலையை நடத்தகிறார். நீ தொடங்குமுன் உரிய செயல்களைச் செய்யாமலும், கண்டவர்களிடமெல்லாம் ஆலோசனைகளைப் பெற்றதாலும் தான் உனக்கு நட்டம் உண்டானது. உனக்குப் பலர் உதவி செய்தபோதும் அவ் உதவிகளால் முறையான பலன் கிடைக்கவில்லை'' என்றான். ''சபையோர்களே, செந்தூரன் சொன்னது உண்மை. அவன் சொன்னபடி நடவுங்கள், வெற்றி கிடைக்கும்'' என்றார் குறிஞ்சிக் குமரன்.

கலையரசி ஒன்பதாவது குறளை இனிமையாகப் பாட, குறிஞ்சிக் குமரனது நாட்டியக்குழு நடனமாடியது. இசைக்குழு இசையமைத்தது. ''நன்று ஆற்றல் உள்ளும் தவுறு உண்டு அவர் அவர் பண்பறிந்து ஆற்றாக் கடை'', ''சபையோர்களே, ஒவ்வொருவருக்கும் தனித்துவமான பண்பு உண்டு. நாம் ஒருவருக்கு உதவி செய்வதானால் அவரது பண்பை அறிந்தே உதவி செய்தல் வேண்டும். இல்லாவிட்டால் நாம் நல்லெண்ணத்துடன் செய்த உதவியை அவர் தவறாக எடுத்துக் கொள்வார். சபையோர்களே, செந்தூரன் சொன்னவற்றைக் கேட்டுக் கொண்டு நின்ற அவனது மைத்துனன் சொன்னான், ''மச்சான், நான் உன்னிடம் எனது தொழிலில் ஏற்பட்ட நடத்தை வேதனையுடன் சொல்லி உதவி பெறவே வந்தேன். நீ பெரும் அறிவாளியைப்போல உபதேசம் செய்கிறாய்'' என்றபோது செந்தூரனுக்குக் கவலையாக இருந்தது''.

''மச்சான், நான் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று உனக்குத் தெரியும். கதிரேசனும், தமிழறிஞரும் வாதவூரனுக்கு என்னைப்பற்றிச் சொன்னதால் தான் எனக்கு வாதவூரன் தனது மகளைத் திருமணம் செய்து தந்தார். அதனால் நானாக நினைத்து உதவி செய்ய முடியாது. எனது மனைவியைக் கேட்க வேண்டும். அதைவிட மாமாவுக்குச் சொல்லி அவரது விருப்பத்தை அறிய வேண்டும். ஏனென்றால் அது அவர் சம்பாதித்த பணம்''.

''தர்மலிங்கத்தின் முகம் கறுத்தது. அதைக் கவனிக்காது செந்தூரன் சொன்னான், ''திருமணமானால் நாம் செய்யும் செயல்களை மனைவிக்குச் சொல்ல

வேண்டும். ஏனென்றால் எனக்கு ஏதாவது நடைபெற்றால் நான் செய்த செயல்கள் தெரியாவிட்டால் அவள் துன்பப்படுவாள்'' என்றான். உண்மையில் தர்மலிங்கம் நேர்மையானவன் அல்ல. பலரிடம் கடன் பெற்றுவிட்டுக் கொடுக்காது திரிகிறான். அது அவனது பண்பு. அப் பண்பை ஆராயாது பணத்தைக் கொடுக்க முடியாது'' என்று நினைத்தான் செந்தூரன். அதனால் சபையோர்களே, ஒருவரது பண்பை அறியாது உதவி செய்தால் சில சமயங்களில் அது தவறாகி விடும்'' என்றார் குறிஞ்சிக் குமரன்.

நடனக்குழு நடனமாட, இசைக்குழு இசையமைக்கக் கலையரசி பத்தாவது குறளைப் பாடினாள், ''எளளாத எண்ணிச் செயல் வேண்டும் தம்மொடு கொள்ளாத கொள்ளாது உலகு'', ''சபையோர்களே, தமது நிலைக்குப் பொருந்தாதவற்றை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே, பொருத்தமற்ற செயல்களை நன்கு ஆராய்ந்தபின்பே செய்தல் வேவண்டும். செந்தூரனின் மைத்துனனான தர்மலிங்கம் ஒருபோதும் உண்மையைச் சொல்வதில்லை. ஏமாற்றுக்கதைகளைக் கூறி மற்றவர்களை ஏமாற்றுவதில் அவன் வல்லவன். அதனால் செந்தூரன் அவனுக்கு உதவி செய்ய விரும்பவில்லை. திருமணம் முற்றானபின் கதிரேசன் சொன்னார், ''மகனே, வாதவூரனைப் பற்றி உனக்குத் தெரியும். பெரிய பணக்காரன். உன்னுடைய நல்ல குணங்கள் அவனைக் கவர்ந்தமையால் அவர் தனது மகளை உனக்குத் திருமணம் செய்துதர முடிவெடுத்துள்ளார். அதனால் நீ மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். அவர் உனக்குத்தந்த சீதனத்தை நீ ஒருபோதும் உரிமை பாராட்டாதே. அதை அவரின் சொத்தாகவே நினை. உனது தேவைகளுக்கு அப் பணத்தைப் பயன்படுத்து. உறவினர், நண்பர்களுக்குக் கடன் கொடாதே. சில சமயம் அவர்கள் திருப்பித் தராவிட்டால் உன்னைப் பற்றி உனது மாமனார் தரக்குறைவாகவும் எண்ணலாம். கவனமாக இரு. அவர் விரும்பாத செயலையும் செய்யாதே. அவர் ஏற்றுக் கொள்ளக்கூடிய செயல்களை அறிந்து செய். இல்லாவிட்டால் உன்மீது அவருக்கு வெறுப்புண்டாகலாம்'' என்றவர். அதைத்தான் செந்தூரன் நினைத்தான்'' என்று கூறிச் சபையோரை வணங்கி விடைபெற்றார் குறிஞ்சிக் குமரன்.

## 11

மகாநாட்டில் கலந்துகொண்ட சபையோர் மகாநாட்டைப் பற்றிப் பலமாகப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது மேடைக்குக் கதிரேசன் வரச் சபை அமைதியானது. ''சபையோர்களே, இன்றைய மகாநாட்டின் இறுதி நிகழ்வு இது. இன்று முல்லைவனத்தைச் சேர்ந்த பசுவான சகோதரி கோமளா நடராஜன் வலி அறிதல் என்ற அதிகாரத்தைப் பற்றிப் பேசுவார். அவர் பேராசிரியர், சங்கீதத்திலும், நடனத்திலும் கலாநிதிப்பட்டம் பெற்றவர். அவரே பாடி, ஆடிப் பேசுவார். குறிஞ்சிக் குமரனது இசைக்குழு இசை வழங்கும்'' என்று கூறி விடை பெற்றார்.

இசைக்குழுவினர் மேடைக்கு வந்து ஆரமம்ப இசையை இசைத்தனர். கோமளாவுக்கு நாற்பது வயது. அவளது மகளான சிவகாமசுந்தரி என்ற மகளுடன் பாடி

ஆடியபடி வந்து சபையோரை வணங்கினாள். வணக்கத்தைப் பாடலில் பாடி ஆடிய கோமளா வலி அறிதல் என்னும் அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களையும் இசையுடன் பாடி ஆடிவிட்டு, மீண்டும் முதலாவது குறளைப் பாடியபடி ஆடினாள். ‘‘வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல்’’ பாடலை நிறுத்திய கோமளா மீண்டும் சபையோரை வணங்கிவிட்டுப் பேசத் தொடங்கினாள்.

‘‘சபையோர்களே, வலி அறிதல் என்றால் தனதும், பிறரதும் வலிமையை அதாவது திறமைகளை அறிந்து கொள்ளலாகும். வலிமை என்பது உள்ளம் சார்ந்தது. பலவீனமில்லாத, பற்றில்லாத மனதை உடையவர்கள் தான் சிறப்பாக வாழ்வர். வலிமையைக் கடவுளோ, பிறரோ தரமுடியாது. நாம் தான் மனதைப்பலப்படுத்த வேண்டும். திடமான மனது நல்லது கெட்டதை ஆய்வுசெய்து நல்ல முடிவை எடுக்கும். ஒருவர் எடுக்கும் முடிவுதான் அவரது வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. உடலை, வாழ்வை பலப்படுத்துவது மனது. அதைப் பலப்படுத்தக் கற்ற ஒழுக்கம்மிக்க பெரியவர்களின் உதவியை நாட வேண்டும். ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்து முடிக்க வேண்டுமானால், முதலின் அச் செயலின் வலிமையை உணர வேண்டும். அதன் பின் தனது வலிமையையும், தனது பகைவர்களது வலிமையையும், இரு தரப்பினர்க்கும் துணைசெய்வோரின் வலிமையையும் ஆராய்ந்து அறிந்து கொள்ளல் வேண்டும்’’.

‘‘முகுந்தன் என்ற காளை ஒரு பட்டதாரி. பல வருடங்கள் வெளிநாட்டில் தங்கி உழைத்துவிட்டு ஊரோடு வந்து ஒரு தொழில் செய்ய விரும்பிக் கதிரேசனிடஞ் சென்று தனது விருப்பத்தைத் தெரிவித்தான். அதற்கு அவர் சொன்னார், ‘‘மகனே, நீ அறிவாளி. இளவயதில் வெளிநாட்டிற்குச் சென்று கடுமையாக உழைத்துத் தனித்து ஒரு தொழிலைத் தொடங்கி ஊரில் உள்ள இளைஞர்களுக்குத் தொழில் கொடுக்க விரும்புகிறாய். அதனால் நீ மனத்தைரியமுடையவன். வலிமையானவர்கள் எதையும் தாங்குவார்கள். அவர்கள் தான் செய்யப்போகும் தொழிலின் வலிமையையும், தனது வலிமையையும், பகைவர்களுடைய வலிமையையும் அறிந்தவர்களாக இருப்பர். உனக்கு உனது மாமனான வேலவன் என்ற காளையும், அவனது குடும்பமும், அவனது நண்பர்களும் தான் பகைவர்கள். நீ தைரியமான காளை வீராதி வீரன் எதையும், பலரைப்பற்றியும், அவர்களது வலிமையைப் பற்றியும் அறிந்தவன். என்ன தொழில் செய்யப்போகிறாயோ அதைத் தைரியத்துடன் தொடங்கு’’ என்றார்.

கோமளா இரண்டாவது குறளைப் பாடிப்பாடி நடனமாடினாள். ‘‘ஒல்வது அறிவது அறிந்து அதன் கண்தங்கிச் செல்வார்க்குச் செல்லாதது இல்’’, ‘‘சபையோர்களே, கதிரேசன் சொன்னார், ‘‘ஆயிரம் பசுக்களைக் கொண்ட ஒரு பண்ணையைத் தொடங்கப் போவதாகச் சொல்கிறாய். முன்பு நீ வெளிநாட்டில் பசுக்களைக் கொண்ட பண்ணையில் தான் வேலை செய்ததாகக் கூறினாய். அதனால் உன்னால் எதைச் செய்ய முடியும் என்பதையும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அறிந்திருப்பாய். சுமார் பத்து வருடங்கள் அப் பண்ணையில் வேலை செய்தமையால், பசுக்களைப் பற்றிய

அனைத்துச் செயற்பாடுகளையும் அறிந்திருப்பாய். நீ ஒரு திறமையான பட்டதாரி. போதியளவு மூலதனம் உண்டு. நீ பெரும் முயற்சியாளன். சொல்வதைச் செய்பவன். அதனால் தாமதிக்காது செயலில் இறங்கு என்றவர்''.

கோமளா மூன்றாவது குறளைப் பாடியவாறு ஆடினாள், ''உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி இடைக்கண் முரிந்தார் பலர்'', ''சபையோர்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், முகுந்தா, சிலர் பேராசைப்பட்டுத் தனக்குத் தெரியாத தொழிலைத் தொடங்குவர். சிலர் நண்பர்கள், இனத்தவர்கள் ஒரு தொழிலைச் செய்து பெரும் பணம் சம்பாதிக்கிறார்கள் என்று எண்ணித் தொடங்குவர். இவர்கள் தம்முடைய வலிமையை அறியாது தொழிலைத் தொடங்கியவர்கள். முதலில் தனது வலிமையை உணர வேண்டும். பணமோ, கல்வியோ அறிவைத் தராது. அவற்றின் மூலம் ஒவ்வொருவர் தாம் செய்யப்போகும் தொழிலை முழுமையாக அறிந்திருத்தல் வேண்டும். நன்றாகக் கற்ற ஒருவர் பசுப்பண்ணையைத் தொடங்கலாமா. தாம் கற்ற கல்வியைக் கொண்டு தாம் செய்யப்போகும் செயலின் வலிமையை உணர்ந்து அதை முழுமையாகத் தெரிந்து கொள்ளாத பலர் தாம் தொடங்கிய செயலை இடையில் நிறுத்தியிருக்கிறார்கள். நீ அப்படியானவனல்ல. அதனால் உடனே தொழிலைத் தொடங்கு'' என்றார் கதிரேசன்.

கோமளா நான்காவது குறளினை மிகமிக இனிமையாகப் பாடியவாறு நடனமாடினாள், ''அமைந்தது ஆங்கு ஒழுகான் அளவு அறியான் தன்னை வியந்தான் விரைந்து கெடும்'', பாடி முடித்ததும், ''சபையோர்களே, கதிரேசன் முகுந்தனுக்குச் சொன்னார், ''முகுந்தா, உனக்கு எதுவும் சொல்லத் தேவையில்லை. உனது வரலாறு முழுதும் எனக்குத் தெரியும். அதனால் அனுபவப்பட்ட நீ என்னை அணுகிக் கேட்டதாலும் சொல்கிறேன். தர்மலிங்கத்தை உனக்குத் தெரியும். பரம்பரைப் பணக்காரன். அவன் ஓர் ஆடைத் தொழிற்சாலையைத் தொடங்கினான். அவனுக்கு ஆடைத்தொழிலைப் பற்றி எதுவும் தெரியாது. கைத்தொழில் அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் ஒருமுறை இங்கு வந்து இந்த வனத்தின் காலநிலை ஒரு ஆடைத்தொழிற்சாலைக்கு உகந்ததாக இருக்கிறது. தனவந்தர்கள் யாராவது ஆடைத்தொழிற்சாலையைத் தொடங்கினால் நாம் தேவையான உதவிகளைச் செய்வோம்'' என்று கூறினார்.

''அதனால் தர்மலிங்கம் ஓர் ஆடைத்தொழிற்சாலையைத் தொடங்க விரும்பினான். நண்பர்கள் அவனுக்கு உற்சாகத்தைக் கொடுத்தனர். ஆனால் அதைப்பற்றித் தெரிந்தவர்களிடம் அவன் ஆலோசனை கேட்கவில்லை. தன்னைத்தான் பெரிதாக நினைப்பவன். அத்துடன் தனக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்புடன் வாழ்பவன். அதனால் அவனது தொழிற்சாலை மூடப்பட்டுவிட்டது. நீ அப்படியானவன் அல்ல. எல்லாம் தெரிந்திருந்தும் எதுவும் தெரியாத என்னை வந்து கேட்கிறாய்''.

''என்றபோது முகுந்தன் சொன்னான், ''ஐயா, கற்றல் மூலமும், அனுபவமூலமும் பலர் தாமறிந்தவற்றைச் சொல்வர். சிலருக்கு இறைவனுடன் தொடர்பு உள்ளது. அவர்கள்

எதிர்காலத்தை ஞானத்தின் மூலம் அறிந்து சொல்வர். அதனால் தான் உங்களிடம் கேட்டேன். என்னை ஆசீர்வதியுங்கள்'' என்று பணிந்தான் முகுந்தன்''.

''கோமளா ஐந்தாவது குறளைப்பாடியவாறு நடனமாடினாள், ''பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்'', ''சபையோர்களே, முகுந்தன்; சொன்னான் ஐயா, தொழில் சம்பந்தமான விடயம் வேறு, அருள் சம்பந்தமான விடயம் வேறு. கற்றவர்கள் எல்லோரும் அருளாளர்களாக இருக்கமாட்டார்கள். சிறுவயதிலிருந்தே நான் உங்களை அறிவேன். நான் பிறந்த சில நாட்களில் எனது தாய் இறந்துவிட்டாள். அப்பா வளர்த்த பசுதான் எனக்குத் தாயானது. அப்பா ஐந்து பசுக்களை வளர்த்து அதன் வருமானத்தில் தான் என்னையும் எனது மூன்று சகோதரிகளையும் வளர்த்தவர். பின்பு நான் வெளிநாட்டிற்குச் சென்றபோது பசுக்களைப் பராமரிக்கும் பண்ணையில் எனக்கு வேலை கிடைத்தது. அதனால் தான் இந்தப் பண்ணையை விரும்பி ஆரம்பிக்கின்றேன். இது மிகமிகக் கடுமையான தொழில் என்றபோது'',

''கதிரேசன் சொன்னார், ''மகனே அர்ப்பணிப்புடன் செய்யும் தொழில்கள் யாவும், கடினமானவைதான். அதை இலகுவானதென்று நினைத்துச் செய்தால் அக்கறை இராது, அர்ப்பணிப்பு இராது. மிக மிக மெல்லிய பொருளான மயில் இறகைக்கூட வண்டியில் ஏற்றிச் சென்றால், அதன் அச்சு முறிந்துவிடும். அதனால் எச்செயலையும் ஒருபோதும் இலகுவானது என்று நினைத்தலாகாது'' என்றார் கதிரேசன்''.

கோமளா ஆறாவது குறளைப் பாடியபடி நடனமாடினாள், ''நுனிக்கொம்பர் ஏறினார் அ∴கறந்து ஊக்கின் உயிர்க்கிறுதி ஆகி விடும்'' ஐயா, உங்களிடம் வந்ததால் உயர்ந்த ஆக்கபூர்வமான ஆலோசனைகளை கூறுவீர்கள் என்று தான் வந்தேன். நான் வெளிநாட்டில் தேவைக்கு அதிகமான பணத்தைச் சம்பாதித்து விட்டேன். நல்லதொரு இயந்திரமயமான தொழிற்சாலையை என்னால் ஆரம்பிக்க முடியும். ஆனால் என்னை வளர்த்தாளாக்கிய பசுக்கள் மேலிருந்த பாசத்தால் தான் பண்ணையை அமைக்க விரும்பினேன். எனது நண்பன் ஒருவன் ஆடைத் தொழிற்சாலை ஒன்றை அமைத்துள்ளான். அதில் பங்குதாரராக என்னைச் சேரும்படி வற்புறுத்தினான். நான் அதை விரும்பவில்லை. இங்கு பசுக்களை வளர்ப்போரை ஊக்குவிக்கவே விரும்புகிறேன். அவர்கள் பசுக்களை வளர்த்துப் பாலைக் கறந்து எனக்கு தந்தால் நான் உரிய பணத்தைக் கொடுப்பேன். அதை எல்லோருக்கும் சொல்லுங்கள்''.

''என்றபோது கதிரேசன் சொன்னார்,'' செய்யும் தொழிலை விரிவுபடுத்த வேண்டுமே தவிரப் புதிய தொழிலை ஆரம்பிக்கக்கூடாது. ஒரு தொழிலில் உச்சகட்ட வருமானத்தைப் பெற்றவர் இன்னொரு தொழிலை ஆரம்பிக்காது, செய்யும் தொழிலை விருத்தியாக்க வேண்டும். அதனால் ஆடைத் தொழிற்சாலையில் முதலீடு செய்யாதே. ஒரு மரத்தின் உச்சிக்கொப்பு வரை ஏறியவர் அதற்கு மேலும் ஏற விரும்பினால் அது உயிருக்கே ஆபத்தாக முடியும்'' என்றார்.

கோமளா ஏழாவது குறளைப் பாடியபடி ஆடினாள், ‘‘ஆற்றின் அளவு அறிந்து ஈக; அது பொருள் போற்றி வழங்கும் நெறி’’, ‘‘சபையோர்களே, தான தர்மம் செய்வதாக இருந்தால் கூட தனது வருமானத்தின அளவுக்கு ஏற்றபடி தான் செய்தல் வேண்டும். அது தான் பொருளைப் போற்றி வாழும் வழியாகும். காங்கேயன் என்ற குதிரை ஒரு சிறு வியாபாரி. இரக்க குணம் மிக்கவர். தான தர்மம் செய்வதில் மிக்க விருப்பமுடையவர். யாராவது வந்து தனது பிள்ளைக்கு வருத்தம் கடுமையாக உள்ளது. மருந்து வாங்க ஆயிரம் ரூபா தேவை என்று சொன்னால் உடனே கொடுத்து விடுவார். தனது வருமானத்தைப் பற்றிச் சிந்திக்காது கேட்டதைக் கொடுத்து விடுவார். அதனால் அவர் நடத்தி வந்த வியாபார நிலையத்தை மூட வேண்டியதாயிற்று. மூடிய பின் கதிரேசனிடம் சென்று  தனக்கு உதவி செய்யுமாறு இரந்து கேட்டார்’’.

‘‘அதற்கு கதிரேசன்  கண்டிப்புடன் சொன்னார், காங்கேசு, ஒவ்வொருவரும் தானம் செய்வதனாலும் அல்லது கோவிலுக்கு கொடுப்பதனாலும் தனது வருமானத்திற்கு உட்பட்டதாகவே இருத்தல் வேண்டும். தனது வருமானத்திற்கு மேல் ஒருபோதும் செலவு செய்தல் ஆகாது. அத்துடன் இரப்பவனைப் பற்றி முழுமையாக அறிந்த பின்பே, தனது வருமானத்திற்கு உட்பட்ட ஒரு தொகையையே கொடுக்க வேண்டும். எனவே இனிமேலாவது கவனமாக செயற்படு. நான் ஒரு தொகைப் பணத்தை தருகிறேன் அதைக் கட்டாயம் திருப்பித் தரல் வேண்டும்’’ என்று சொல்லிக் கொடுத்தார். புண்ணியத்தை விரும்பித்தான் தானம் கொடுக்கப்படுகிறதே தவிர பணத்தின் அளவைப் பொறுத்துக் கொடுக்கப்படுவதில்லை’’ என்றவர். அதனால் தானம் செய்யும்போது அவதானமாக இருங்கள்’’ என்றான் கோமளா.

கோமளா எட்டாவது குறளைப் நடனமாடியபடி பாடினாள், ‘‘ஆகு ஆறு அளவு இட்டிது ஆயினும் கேடில்லை போகு ஆறு அகலாக் கடை’’, கதிரேசன் காங்கேசனுக்குச் சொன்னார்,’’ காங்கேசா, வருமானம் என்பது அவரவரது முயற்சிக்கேற்ப வருவது. சிலரிடம் பரம்பரைச் சொத்துக்கள் இருக்கும். அதன் மூலம்  பெரும் வருமானத்தைப் பெறலாம். வருமானம் ஒரு பொருட்டல்ல சேமிப்புத்தான் முக்கியமானது. வருமானத்திலும் பார்க்க அதிகமான செலவு செய்பவர் கோடீஸ்வரனானாலும் அவன் காலப்போக்கில் பரம ஏழையாகி விடுவான். வருமானம் சிறிதானாலும் ஒரு சிறு தொகையைச் சேமித்தால் காலகதியில் அவன் பணக்காரனாகி விடுவான். நீ சிறு வியாபாரி வருமானம் போதாது என்று எண்ணாது ஒரு சிறு தொகையை மிச்சம் பிடி. நீ வசதியானவன் ஆவாய்’’ என்றவர். அதனால் சபையோர்களே செலவு செய்வதில் அவதானமாக இருங்கள்’’ என்றாள் கோமளா.

கோமளா ஒன்பதாவது குறளைப் பாடியவாறு நடனமாடினாள், ‘‘அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்’’, ‘‘காங்கேயனுக்கு கதிரேசன் சொன்னார், சிறிய வருமானம் ஆனாலும் அதில் சிறிதளவைச் சேமிக்க வேண்டும். அத்துடன் தனது வருமானத்தின் அளவைத் தெரிந்து அதற்களவாகச் செலவு

செய்யாவிட்டால் வாழ்க்கை இனிப்பது போலத் தோன்றினாலும் காலப்போக்கில் கசந்து அழிந்துவிடும். இந்த இரு விடயங்களினால் தான் உனது வாழ்வில் கஷ்டங்கள் மிகுந்து வருகின்றன. உனது வருமானத்தின் அளவை நீ தெளிவாக உணர்ந்து இருந்தால் செலவு செய்வதில் கவனம் செலுத்தி இருப்பாய். சென்ற வாரம் உனது மகனின் ஐந்தாவது பிறந்த தினத்தை ஆடம்பரமாகக் கொண்டாடினாய். அது உனது மகனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்று நீ நினைத்தாய். மறு நாள் அவன் ஒரு கணிதப்புத்தகம் தேவையெனக் கேட்டபோது என்னிடம் வந்தாய். கற்கும் வறிய பிள்ளைகளுக்கு உதவ வேண்டும். ஆனால் ஆடம்பரமாக விழாவைக் கொண்டாடிவிட்டு புத்தகம் வாங்க இரப்பது நல்ல செயலல்ல. புத்தகம் தான் முக்கியம். செலவைக் குறைத்து இருந்தால் புத்தகத்தை நீ வாங்கி இருக்கலாம். உனது மனைவியின் சகோதரன் பணக்காரன். அவன் உனக்கு உதவ மாட்டான். ஏனென்றால் நீ வருமானத்திற்கு அதிகமாக செலவு செய்வாய். அவன் தேவைக்கும் அளந்து அளந்து தான் செலவு செய்வான்'' தொடர்ந்து கதிரேசன் கூறுவதை வேறு வழியின்றி கேட்டுக் கொண்டிருந்தான் காங்கேயன்'' என்றான் கோமளா.

கோமளா பத்தாவது குறளைப் பாடியவாறு நடனமாடினாள், ''உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை வளவரை வல்லைக் கெடும்'' '' தனது வருமானத்தை அறிந்து அதற்கேற்றவாறு வாழாது மற்றவர்களுக்கு உதவுவோரின் சொத்துக் காலப்போக்கில் அழிந்துவிடும். கதிரேசன் காங்கேயனுக்குச் சொன்னார், ''காங்கேயா, உனது முன்னேற்றத்தைப் பற்றி நீயும் சிந்திப்பதில்லை. மற்றவர்கள் சொல்வதையும் கேட்பதில்லை. உனது உடலில் எந்தவிதமான குறைகளும் இல்லை. உனது மைத்துனன் உன்னைப் போலத் தான் சிறு வியாபாரியாக இருந்தான். அவன் தனது வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமித்தபடியால் இன்று ஒரு பெரும் வியாபாரியாக மாறியுள்ளான். பெரிய வியாபாரிகள் பெருந்தொகையான பொருட்களைக் கடனாகக் கொடுக்கிறார்கள். நீ அதை அறிந்து பெரும் வியாபாரிகளைக் கேட்டபோது அவர்கள் தர மறுத்துவிட்டனர். அதற்கு என்ன காரணம் என்று யோசித்தாயா…?''

''உனக்கு ஒரு மொத்த வியாபாரி கடனாகப் பொருட்களைத் தந்தவன். அதை விற்று நீ அவனது பணத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அப்பணத்தை நீ உனது சகோதரன் வந்து நாளை மறுதினம் தருகிறேன் என்றதும் கொடுத்துவிட்டாய், தனக்கு மிஞ்சினது தான் தானம் என்பாபர்கள். யாரோ இரங்கித் தந்த பொருளை விற்றவுடன் கொடுத்திருக்க வேண்டும். இதை உணராத உனக்குப் புத்திமதி கூறுவதில் பயனில்லை? என்று மிக்க கவலையுடன் கூறினார்? என்று கூறிக் கோமளா தனது உரையை நிறைவு செய்தாள். சபையோர் கரகோசம் செய்தனர்.

## 12

அன்று காலை ஒன்பது மணிக்கு மகாநாடு ஆரம்பமானது. வெளியூர்களில் இருந்து வரும் பார்வையாளர்களுக்குத் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்பட்டதால்

அவர்கள் எட்டு மணிக்கே வந்து முதல்நாள் நடைபெற்ற மகாநாட்டு நிகழ்வுகள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். கதிரேசன் மேடைக்கு வந்து கரங்கூப்பி வணக்கம் தெரிவித்தார். சபையோர் கரகோசம் செய்து அவரை வரவேற்றனர். ‘‘இரண்டு நாட்கள் மகாநாடு நல்லபடி முடிவடைந்தது. இன்று தமிழறிஞர் ‘காலம் அறிதல்’ என்ற அதிகாரம் பற்றிப் பேசுவார். தமிழறிஞரைப் பற்றி எனக்குத் தெரிந்த அத்தனையும் உங்களுக்கும் தெரியும். இம் மகாநாடு நடப்பதற்குக் காரணியாக இருப்பவர் அவர்தான். இன்று அவர் புதிய புதிய கருத்துக்களை உங்களுக்குக் கூறுவார். அவரைப் பேச வருமாறு அன்புடன் அழைக்கிறேன்’’ என்று கூறிய கதிரேசன் சென்று தனது ஆசனத்தில் அமர்ந்தார்.

தமிழறிஞர் மேடைக்குப் பேசவந்தபோது, சபையோர் மகிழ்ச்சியாரவாரம் செய்தனர். அவர் சபையோரைச் சிரம்தாழ்த்தி வணங்கினார். ‘‘சபையோர்களே, உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்வடைகிறேன். வள்ளுவர் முக்காலத்திற்கும், எக்காலத்திற்கும் பொருந்தக்கூடியதாகவே குறள்களை இயற்றினார். அதற்கென ஒரு கருத்து இல்லை. பல கருத்துக்கள் உள்ள பொக்கிசம் அது. காலம் அறிதல் என்றவுடன் சோதிடம் தான் எல்லோரதும் நினைவுக்கு வரும். சமயநூல்கள் கடவுளை மட்டும் நம்புங்கள். உலகில் நடப்பவை யாவும் கடவுளின் கட்டளைப்படிதான் நடைபெறுகின்றன. உலகில் கடவுளால் படைக்கப்பட்ட அனைத்தும் சக்தியில்லாதவை. தாமே தனித்து இயங்கமுடியாதவை. கடவுளின் அருட்சக்திதான் அவற்றை இயக்குகின்றன. எல்லோரும் கடவுளை வணங்குகிறார்கள். ஆனால் நம்புவதில்லை’’.

‘‘அவர்கள் சோதிடர்களையும், தம்மைக் கடவுளின் அவதாரம் என்று சொல்பவர்களையும், பண்டாரி, பூசாரிகளையுமே நம்புகின்றனர். கடவுளை நம்பினோர் ஏனையவற்றை நம்பமாட்டார்கள். சோதிடம் பொய்யானது, அதைச் சிலர் பிழைக்கும் தொழிலாகவே வைத்திருக்கின்றனர். காலத்தை அறிதல் என்பது ஓர் அரசன் தனது எதிரியை வெல்ல வேண்டுமானால் அவர் பலவீனமாக இருக்கும் சந்தர்ப்பத்திலே படையெடுக்க வேண்டும். மாணவன் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமானால் நன்றாகப் படிக்க வேண்டும். கடவுளை வணங்க வேண்டும். கடவுள் அம் மாணவனுக்காகப் பரீட்சை மண்டபத்திற்கு வந்து உதவி செய்ய மாட்டார். பரீட்சைக்கு வரும் வினாக்களை ஆசிரியர்கள் மூலமோ, கனவுகளின் மூலமோ அறிவிப்பார். வள்ளுவர் காலம் அறிதல் என்னும் அத்தியாயத்திலுள்ள பத்துக் குறள்களிலும் இதையே விளக்கியுள்ளார்’’.

முதலாவது குறள் காலம் பற்றி இவ்வாறு கூறுகிறது, ‘‘பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது’’, என்று இனிமையாகப் பாடிய தமிழறிஞர், அதற்கு உரையும், கதையும் சொன்னார், ‘‘சபையோர்களே, பகலில் கோட்டான் எனும் வலிமைமிகுந்த ஆந்தைக்குக் கண் தெரியாது. அதனால் காக்கை அதனைப் பகலில் கொன்றுவிடும். அதுபோலப் பகைவனை வெல்ல நினைக்கும் அரசனுக்குச் சாதகமான காலம் எதுவென்று தெரிந்து தாக்க வேண்டும்’’.

‘‘அரசடி வளமான நாடு. மாதம் மும்மாரி பொழிவதால் அங்கு எப்பொருளுக்கும் தட்டுப்பாடு இல்லை. மன்னன் தாண்டவராஜன் ஆடம்பரப் பிரியன். மக்களும் ஆடம்பரப் பிரியர்கள். அவன் ஒவ்வொரு மாதத்திலும் வரும் பௌர்ணமியை விழாவாக ஒவ்வொரு ஊரிலும் விமர்சையாகக் கொண்டாடுவான். அரசனும், மக்களும், படைவீரர்களும் மிக்க மகிழ்வுடன் பௌர்ணமி விழாவிலே கலந்து கொள்வர். பல்வேறு வகையான கலைநிகழ்ச்சிகள் அங்கு அரங்கேற்றப்படும். நூல்கள் வெளியிடப்படும்’’.

‘‘சுந்தரபுரம் மிகவும் வறிய நாடு. கடந்த ஒரு வருடமாக மழை பெய்யாததால் மக்கள் பெரும் துன்பப்பட்டனர். அதன் அருகில் இருக்கும் நாடு பவளபுரம். வசதியான நாடு, பவளபுர மன்னனுக்கு அரசடி மன்னனைப் பிடிக்காது. அதனால் அரசடி மன்னன் பவளபுரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று நினைத்து அரசடி மன்னனோடு சேர்ந்து அதற்கேற்ற காலம் வரும்வரை காத்திருந்தான். அன்று சித்திராப் பௌர்ணமி தினம். அரசடி மன்னன் அதைக் கோலாகலமாக ஆற்றங்கரையில் கொண்டாட ஏற்பாடு செய்தான். அன்று அரசடி மன்னனும், மக்களும் மிக்க மகிழ்வுடன் ஆற்றங்கரையில் கூடி இருந்தனர்’’.

‘‘சுந்தரபுர மன்னனும், பவளபுர மன்னனும் அந்த விழாவில் கலந்து கொள்ளும் பார்வையாளர்களைப் போலத் திறமையாக படைவீரர்களுடன் சென்று அரசடி மன்னனைக் கைது செய்தனர். அதனால் சபையோர்களே, காலம் தான் முக்கியமானது. அதற்காகச் சோதிடர்களை அணுகாதீர்கள். கடவுளை நம்புங்கள். ஒரு மாணவன் பரீட்சை எழுதும்நாள் அட்டமியில் வருகிறது. அதனால் அவன் பரீட்சை எழுதாது விடலாமா..? ஒருவருக்குப் புதிதாக வேலை கிடைக்கிறது. அன்று கட்டாயம் பதவி ஏற்க வேண்டும். அன்று அட்டமி நவமி அதனால் பதவி ஏற்காது விடலாமா..? காலம் எனும்போது சந்தர்ப்ப சூழ்நிலைகளை மட்டும் கருத்தில் கொள்ளுங்கள்’’ என்று தனது பேச்சை முடித்தார் தமிழறிஞர்.

தமிழறிஞர் இரண்டாவது குறளை இனிமையாகப் பாடினார், ‘‘பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு’’, ‘‘ஒருவர் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப அதாவது காலத்திற்கேற்ப வாழ்ந்தால் செல்வம் ஒருபோதும் அவனை விட்டு நீங்காது. காலம் தான் செல்வங்களைக் கட்டிக் காக்கும் கயிறாகும். அடக்க முடியாத காளை மாட்டை அடக்க மூக்கணாங்கயிற்றைப் பயன்படுத்துவர். ஒவ்வொருவரும் தான் செய்யும் தொழிலில் இலாபம் அடைய வேண்டும் என்று கருத்தினால் காலத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

‘‘வேலவன் என்ற குதிரை ஒரு வர்த்தகன். அவன் முதன் முதலாக வெளிநாட்டு வனம் ஒன்றிலிருந்து பொருட்களைக் கப்பலில் ஏற்றித் தனது வனமான முல்லைவனக் கடற்கரையில் இறக்கித் தனது வர்த்தக நிலையத்திற்குக் கொண்டு வந்தான். வழியில் வாகனம் விபத்துக்குள்ளானது. அதனால் வேறு ஒரு வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி வர்த்தக நிலையத்திற்குக் கொண்டு வந்தபோது அன்று முழுவதும் அட்டமி இருந்தது.

‘‘சோதிடர்கள் அன்று செவ்வாய்கிழமை என்றும் மறுநாள் புதன்கிழமை பகல் இரண்டு மணிவரை அட்டமி இருக்கிறதென்றும், அதன்பின் நவமி இருப்பதால் பொருட்களை வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு இறக்கும்படி கூறினர். வேலவன் தனது நண்பனான கோபாலன் என்ற குதிரைக்குச் சொன்னான், ‘‘நூறு பாரவூர்த்திகளில் பொருட்களை ஏற்றினோம். முதலாவதாக வந்த பாரவூர்த்தி தான் பழுதடைந்தது. அதனால் ஏனைய பாரவூர்த்திகளில் இருந்த பொருட்கள் பண்டகசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுவிட்டன’’.

‘‘ஒரு சில பக்தருக்குத் தீட்டுத் துடக்கு என்று எதுவும் கிடையாது. பூமி தன்னைத்தான் சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றுவதால் தான், இரவு, பகல், பருவ காலங்கள், நாள், நட்சத்திரம், திதி என்பன வருகின்றன. அவற்றை நம்பத் தேவையில்லை என்று ஐயாயிரம் வருடங்களுக்கு முன் திருமூலர் கூறியிருக்கிறார். சைவர்கள் சித்தாந்த நூல்கள் கூறுவதையும், கடவுளையும் நம்ப வேண்டும். உலகில் இவற்றை நம்புவது சைவர்கள் மட்டும்தான்’’.

‘‘சோதிடரான மைனா குறுக்கிட்டுச் சொன்னது, ‘‘நீ பேசுவது விதண்டாவாதம், சோதிடம் பொய் என்கிறாயா…?’’ அதற்கு வேலவன் சொன்னான், ‘‘சோதிட மாமணி என்று உங்களுக்கு நீங்களே பட்டம் சூட்டியதோடு, சோதிடம் பார்த்து வருகிறீர்கள். நீங்கள் சாதகம் பார்த்து நாள், நட்சத்திரம் பார்த்துத் திருமணம் செய்து வைத்த நாராயணன் என்ற மானின் மகளை, அவளது கணவன் திருமணம் செய்து ஆறாவது மாதம் விட்டுவிட்டுச் சென்று இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து விட்டான். இதைப்பற்றிச் சோதிடத்தில் கண்டுபிடிக்க உம்மால் முடியவில்லை. இன்று நூற்றுக்கு மேற்பட்ட பாரவூர்த்திகளில் பொருட்களை ஏற்றி வந்தேன். முதலாவது பாரவூர்த்தி விபத்துக்குள்ளானது. சோதிட முறைப்படி பெருங்கேட்டை உண்டாக்கும். வெள்ளிக்கிழமை தான் இறக்க வேண்டும் என்றீர்கள். இரண்டு நாட்கள் பாரவூர்த்திகளின் வாடகைக் கட்டணம் ஐந்து இலட்சம் ரூபா. பொருட்கள் பழுதடைந்தால் பெரும் நட்டம். ஐயா, காலம் தான் செல்வத்தைக் கட்டி வைத்திருக்கும் கயிறு. காலம் என்பது சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்தது’’ என்றான் வேலவன். சோதிடர் அதன்பின் பேசவில்லை.

தமிழறிஞர் நான்காவது குறளை இனிமையாகப் பாடினார், ‘‘ஞாலம் கருதினும் கைகூடும் காலம் கருதி இடத்தால் செயின்’’, வேலவன் சோதிடருக்குச் சொன்னான், ‘‘சோதிடம் உண்மையானதா, பொய்யானதா என்பது பற்றி ஆராயத் தேவையில்லை. கடவுளின் மீது நம்பிக்கை வைத்துப் பிரார்த்தித்து விட்டுச் செய்தால் தலைக்கு வரும் ஆபத்து தலைப்பாகையுடன் சென்றுவிடும் என்பார்கள். இது மழை காலம் மழைகாலத்தில் மழை பெய்யும். காற்று வேகமாக வீசும். மழைகாலத்தில் கப்பலில் பொருட்களை ஏற்றக்கூடாது என்று சொல்லலாமா…? பெரு மழையால் மரம் ஒன்று வீதியில் பாறி

விழுந்துவிட்டது. அதை அப்புறுப்படுத்திவிட்டுப் பாரவூர்த்திகளைக் கொண்டு வருவதை விட்டுவிட்டு நாளையும், கோளையும் பார்க்கலாமா…? வீதியில் பாறிவிழுந்த மரத்தை அகற்ற அரசுக்கு அறிவித்தால் அவர்கள் வந்து செயற்பட நாளாகலாம் அதற்குள் தாமதக் கட்டணம் அதிகரித்துவிடும். அதனால் எனது செலவில் கூலியாட்களையும், பாரவூர்த்திகளையும் அமர்த்தி ஒரு மணித்தியாலத்துக்குள் பொருட்களைக் கொண்டு வந்துவிட்டேன். இது கெட்ட சகுனம் அல்ல. இயற்கையின் சீற்றம். இதை எதிர்பார்த்துத்தான் செயல்வீரர் கருமமாற்றுவர் செயலை முடிப்பதற்குரிய கருவிகளுடன் காலத்தையும் அறிந்து செயற்பட்டால், இயலாத செயல் என்று எதுவும் இருக்காது. ‘‘சோதிடர் எதுவும் பேசவில்லை. தனது சகாக்குச் சொன்னார், கெடுகுடி சொற்கேளாது’’ என்று. சபையோர்களே, செயலை முடிப்பதற்குரிய கருவிகளுடன், காலத்தையும், இடத்தையும் அறிந்து செயற்பட்டால் அரிய செயல் என்று எதுவும் இல்லை’’.

தமிழறிஞர் ஐந்தாவது குறளை இனிமையாகப் பாடினார், ‘‘காலம் கருதி இருப்பர், கலங்காது ஞாலம் கருது பவர்’’, ‘‘சபையோர்களே, இந்த உலகத்தில் அடைய முடியாத ஒரு பொருள் இல்லை. நினைத்தது நடக்க வேண்டுமானால் எதைப்பற்றியும், எண்ணிக் கலக்கம் கொள்ளத் தேவையில்லை. தக்ககாலம் வரும்வரை காத்திருக்க வேண்டும். பனம்பழத்தில் சுவையான உணவு தயாரிக்கலாம். அது வருடத்தில் ஒருமுறைதான் காய்த்துப் பழுக்கும். பனம்பழத்தை உண்ண விரும்புகின்றவர்கள் அது காய்த்துப் பழுக்கும்வரை பொறுமையாக இருத்தல் வேண்டும். அது போலத்தான் மா, பலா, தோடை என்பன காய்க்கும் சந்தர்ப்பம், சூழ்நிலை அடிக்கடி வராது. காலத்தை அறிந்தவன் சந்தர்ப்ப, சூழ்நிலைகளை உருவாக்குவான்’’.

‘‘வேலவன் அயல்நாடுகளில் உள்ள வனங்களில் உள்ள பொருட்களை வாங்கிக் கப்பலில் ஏற்றிக்கொண்டு வந்து, வியாபாரஞ் செய்வான். சில காலங்களில் கப்பலை வாடகைக்குப் பிடிப்பது கஷ்டமாக இருக்கும். அப்போது கூடுதலான பணத்தைக் கொடுத்தே கப்பலை வாடகைக்கு அமர்த்த முடியும். அதனால் இரண்டு கப்பல்களை வாங்க வேண்டும் என்ற முடிவோடு தனது தந்தையிடம் அதைச் சொன்னான். அவர் சோதிடத்தில் அசையாத நம்பிக்கை உடையவர். அவர் சோதிடர்களிடஞ்சென்று வேலவனின் சாதகத்தைக் காட்டியபோது, அவர்கள் இப்பொழுது காலம் சரியில்லை. அட்டமத்துச் சனி நடைபெறுகிறது. இரண்டு வருடங்களின் பின் வாங்குவது தான் சிறப்பானது’’ என்றனர். அதைத் தந்தை வேலவனுக்குச் சொன்னார். அவன் எதுவும் பேசவில்லை’’.

‘‘சில நாட்கள் கழியச் சிவபாலன் என்ற ஒரு கப்பலின் சொந்தக்காரனான எருது வேலவனிடம் வந்து சொன்னான். ‘‘வேலவா, எனக்கு எண்பது வயதாகிறது. கப்பல் தொழிலை நல்லமுறையில் நடத்த முடியவில்லை. என்னிடம் ஐந்து கப்பல்கள் உண்டு. அவற்றை விற்பதாக முடிவு செய்துள்ளேன். பலர் விலைக்குக் கேட்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு விற்க எனக்கு விருப்பம் இல்லை. நான் முதியவர்களுக்கான ஓர் இல்லத்தை

வைத்து நடாத்துகிறேன். எனக்குப் பிள்ளைகள் இல்லை. இனத்தவர்கள் நண்பர்களை நம்ப முடியவில்லை. உன்னை நான் பலவருடங்களாகக் கண்காணித்து வருகிறேன். உன்மீது எனக்கு முழுமையான நம்பிக்கை இருப்பதால், மூன்று கப்பல்களை விலைக்குத் தருகிறேன். இரண்டு கப்பல்களை இனாமாகத் தருகிறேன். அவற்றில் இருந்து வரும் வருமானத்தைக் கொண்டு எனது முதியோர் இல்லத்தையும், பாடசாலையையும் சிறப்பாக நடத்து என்றார்''. அதனால் சபையோர்களே, உயர்வாக எண்ணுங்கள். அந்த எண்ணங்களைப் பற்றியே சிந்தியுங்கள். காலப்போக்கில் அது நிறைவேறும்'' என்று தனது பேச்சை முடித்தார் தமிழறிஞர்.

தமிழறிஞர் ஆறாவது குறளை இனிமையாகப் பாடினார், ''ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர் தாக்கற்குப் பேரும் தகைத்து'', ''சபையோர்களே, ஊக்கமுடையவன் ஒரு செயலை எண்ணி முடிவெடுத்தபின் அடக்கமாக இருப்பது தனது பலத்தைப் பெருக்குவதற்காகும். சண்டையிடும் ஆட்டுக்கடாவானது தாக்கும் வேகத்தை அதிகரிப்பதற்காப் பின்னாற் சென்று பின் மூர்க்கத்துடன் தாக்குவதை நீங்கள் கண்டிருப்பீர்கள். சிவபாலன் சொன்னார், ''வேலவா, நீ பல கப்பலை வாங்கி விற்கும் தரகர்களிடம் கப்பல்களை வாங்குவதைப் பற்றி விசாரித்ததாக அறிந்தேன். அப்படியிருந்தும் நான் கப்பல்களை விற்கப்போவதாக அறிவித்தும் நீ அதைப்பற்றிக் கதைக்க வரவில்லை. அதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்குமென்று நினைத்துக் காத்திருந்தேன். நீ வராமையால் தான் நான் உன்னைத்தேடி வந்தேன். நீ வராமைக்கான காரணம் என்ன?''

''ஐயா, இது எனக்குப் புதிய தொழில், அதைப்பற்றி அறிந்து கொள்ளவே தாமதித்தேன். அத்துடன் ஐந்து கப்பல்களை வாங்குமளவிற்கு என்னிடம் பணம் இருக்கவில்லை. புதிதாகவும் வாங்கப் பணம் போதாது. யாராவது ஓரிரு கப்பல்களை விற்க முயற்சி செய்தால் வாங்குவோம் என நினைத்திருந்தேன்''.

அப்போது சிவபாலன் சொன்னார், ''ஒரு பலசாலி பின்வாங்குவது தனது பலத்தை அதிகரிக்கவே, ஒரு தனவந்தன் பின் வாங்குவது தனது தொழிலை எப்படி மேம்படுத்தலாம் என்று சிந்திப்பதற்கு. ஒரு புத்திசாலி பின்வாங்குவது தனது புத்தியைக் கூர்மைப்படுத்த என்று புரிந்து கொண்டேன். நீ எனது எண்ணங்களையும் பூர்த்தி செய்வாய் என நம்புகிறேன்'' என்றார் என்று கூறி அடுத்த குறளுக்கான உரை விளக்கக் கதையைக் கூறுகிறேன்'' என்றார் தமிழறிஞர்.

தமிழறிஞர் எழாவது குறளை இனிமையாகப் பாடினார், ''பொள் என ஆங்கே புறம்வேரார் காலம் பார்த்து உள்வேர்ப்பர் ஒள்ளியவர்'', ''புத்திசாலிகள், பகைவர் தீங்கு செய்தால் தமது கோபத்தை உடனே காட்டமாட்டார்கள். அப்பகைவரை வெல்லக்கூடிய காலம் வரும்வரை பொறுத்திருப்பர். ஆனால் அவரது உள்ளத்தில் அந்த எண்ணம்

வலுப்பெற்றிருக்கும். சிவபாலனின் சகோதரனின் மகன் உருத்திரன். அவன் கப்பலில் பொருட்களை ஏற்றி இறக்குவதற்குத் தரகனாக இருப்பவன். அவனுக்கு வேலவனைப் பிடிக்காது. கப்பலில் பொருட்களை ஏற்றும்போது வேலவனின் பொருட்களைக் கடைசியாகத்தான் ஏற்றுவான். சில சமயங்களில் கப்பலில் ஏற்றவேண்டிய பொருட்கள் அதிகமானால் வேலவனின் பொருட்களை ஏற்றமாட்டான். கப்பல் திரும்பி வந்தாலும் அதில் முதலாவதாக ஏற்றமாட்டான். அதனால் வேலவனுக்கு நட்டம் ஏற்படும். அவனைப் பழிவாங்க முடியாதிருப்பதை எண்ணிக் கோபப்பட்டாலும் எதுவும் செய்யமுடியாது பொறுத்திருப்பான்''.

வேலவன் சிவபாலனின் ஐந்து கப்பல்களையும் வாங்கியபின் கப்பலில் பொருட்களை ஏற்றவும், இறக்கவும் நாதன் என்ற மானை வேலவன் வேலைக்கு அமர்த்தியிருந்தான். பொருட்களை ஏற்றி இறக்க விரும்புவோர் நாதனுடன் மட்டும் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் அறிவித்தான். அதனால் உருத்திரனது தரகுத்தொழில் பாதிப்படைந்தது. அதைக் கண்ட உருத்திரனின் தந்தை சொன்னார், ''மகனே, வினைவிதைத்தவன் வினையைத் தான் அறுக்க வேண்டும். வேலவன் மிகமிக நல்லவன். நீ அவனது வியாபாரம் பகைவரிடம் பணம் பெற்றுக்கொண்டு பல தீமைகளைச் செய்தாய். அதன் பயனை இப்போது அனுபவிக்கிறாய்'' என்றார் என்று கூறித் தமிழறிஞர் தனது பேச்சை நிறைவு செய்தார்.

தமிழறிஞர் எட்டாவது குறளை இனிமையாகப் பாடி அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், ''செறுநரைக் காணின் சுமக்க; இறுவரை காணின் கிழக்கு ஆம் தலை'', ''சபையோர்களே, சாதகமான காலம் வரும்வரை ஒருவர் பகைவர்கள் செய்யும் பழிவாங்கல்களைப் பொறுத்திருத்தல் வேண்டும். பகைவருக்குக் கெட்டகாலம் வரும்போது அவர்களது தலை தானாகவே கவிழும். இது தான் மகனே உனக்கு நடந்தது'' என்று உருத்திரனது தந்தை சொன்னார். அவர் மேலும் சொன்னார், ''மகனே, யாரையும் கெடுக்க வேண்டும் என்று மனதால்கூட நினைக்கக் கூடாது. ஏனென்றால் நினைவைத் தான் மனது நிலைநிறுத்த முடியும். நன்மையையும், தீமையையும் தீர்மானிப்பது செயல்கள். செயல்கள் நல்லதாக இருந்தால் துன்பம் வராது. நீ செய்த செயல்கள் எவையும் நல்லவையல்ல. தீமை செய்யும்போது இன்பமாகத்தான் இருக்கும். வேலவனின் பொருட்களை நீயும், உனது தீய நண்பர்களும் உரிய நேரத்திற்கு ஏற்றாது விட்டுவிட்டு, அவன் படும் வேதனையைச் சொல்லிச் சொல்லிச் சிரித்தீர்கள். ஓடும் சக்கரத்தைப் போன்றது காலம். சக்கரத்தின் ஒரு பகுதி எப்போதும் கீழேயோ, மேலேயோ நிற்க மாட்டாது. அது உருண்டு கொண்டே இருக்கும். அன்று நீங்கள் அவனுக்குக் கொடுத்த கஷ்டத்தால் அவனுக்கு நட்டமேற்பட்டது. இன்று அவனது நடத்தையால் உங்கள் வாழ்வு அழிந்து விட்டது. இது காலத்தின் செயல்'' என்றார் உருத்திரனது தந்தை'' என்று கூறித் தமிழறிஞர் தனது பேச்சை நிறுத்தினார்.

தமிழறிஞர் ஒன்பதாவது குறளை இனிமையாகப் பாடி அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், ‘‘எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே செய்தற்கு அரிய செயல்’’, ‘‘சபையோர்களே, ஒருவருக்கு நல்லகாலமும் வரும், கெட்ட காலமும் வரும். நல்லகாலம் வந்தால் அதை நல்லமுறையில் பயன்படுத்திச் செயற்கரிய செயல்களைச் செய்தல் வேண்டும். அப்படிச் செய்பவர்களின் வாழ்வில் கெட்ட காலம் வராது’’.

‘‘சபையோர்களே, வேலவன், சிவபாலனின் முதியோர் இல்லத்தையும், அவர் நடத்திய இலவசப் பாடசாலையையும் விஸ்தரித்தான். அயல் வனங்களில் உள்ள முதியவர்களைத் தனது முதியோர் இல்லத்தில் சேர்த்தான். அது போல ஏனைய வனங்களில் உள்ள வறிய மாணவர்கள் கல்வி கற்பதற்காக அவர்கள் வாழும் வனங்களில் இலவசப் பாடசாலைகளை நிறுவினான். ஏழைகளுக்காக ஓர் இலவச மருத்துவமனையையும் நிறுவினான். அதைக் கேள்விப்பட்ட சிவபாலன், வேலவனிடம் வந்து சொன்னார், ‘‘வேலவா, நான் செயற்பட்டதை விட நீ சிறப்பாகச் செயற்படுகிறாய். நான் இந்த வனத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் தான் உதவினேன். நீ அயல் வனங்களில் உள்ளவர்க்கும் உதவுகிறாய், நான் மிகவும் மகிழ்கிறேன்’’ என்ற போது,

‘‘வேலவன் சொன்னான், ‘‘ஐயா, ஒருவரிற்கு கிடைத்தற்கரிய காலம் வந்து அமைந்தால், தன்னாலான உதவிகள் அனைத்தையும், செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இறைவன் அள்ளிக் கொடுப்பார் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது உண்மை. எனது வியாபாரம் முன்பு இருந்ததைவிடப் பத்து மடங்கு பெருகிவிட்டது. கடவுள் அள்ளித் தருகிறார். உங்களுக்கு இனத்தவர்கள், நண்பர்கள் எனப் பலர் இருந்தும் என்னிடம் கப்பல்களைத் தந்தீர்கள். அதற்கான காரணங்களையும் சொன்னீர்கள். அதன்படி தான் நடக்கிறேன். கடவுள் தருகிறார், நான் கொடுக்கிறேன்’’ என்றான் வேலவன்’’ என்று கூறித் தனது உரையை நிறுத்தினார் தமிழறிஞர்.

தமிழறிஞர் பத்தாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், அதற்கான கதையையும் சொன்னார், ‘‘கொக்குஒக்க கூம்பும் பருவத்து; மற்றுஅதன் குத்து ஒக்க சீர்த்த இடத்து’’, ‘‘சபையோர்களே, கொக்கு தான் விரும்பிய பருமனான பெரிய மீன் தனக்கருகில் வரும்வரை வேறு நினைவுகள் இன்றி ஒற்றைக் காலில் நிற்குமாம். பொறுமைக்கு உதாரணமாகக் கொக்கைச் சொல்வார்கள். இவ்வாறு வேலவன், சிவபாலனுக்குச் சொன்னான். ஐயா, வியாபாரம் என்பது வேறு தொழில்களைப் போன்றதல்ல. அதற்கு எதிரிகள் அனேகர். சிறந்த நண்பன் என்று சொல்லப்படுபவனும் வியாபார விடயத்தில் எப்போ எதிரியாக மாறுவான் என்று சொல்ல முடியாது’’.

‘‘ஐயா, நான் யாரையும் எதிரியாகக் கருதுவதில்லை. ஆனால், என்னைப் பலர் எதிரியாகக் கருதி வஞ்சம் தீர்க்க முயல்கின்றனர். சிறுசிறு எதிரிகளை நான் கண்டு

கொள்வதில்லை. அவர்கள் தமது தேவைகள் நிறைவேறவில்லை என்று கோபம்கொள்வர். அப்போது ஏதாவது ஒரு தேவை ஏற்பட்டால் வந்து கூனிக்குறுகி நிற்பர். இவர்களால் என்னையல்ல யாரையும் எதிர்க்க முடியாது. எனக்குப் பரம எதிரியாக ஒரு சிலர் இருந்தனர். அவர்களை நான் கடுமையாகத் தண்டித்தமையால், அவர்கள் செய்த தொழில்களையே இழந்துள்ளனர். அன்றன்று வாழ முடியாது கஷ்ரப்படுகின்றனர். அவர்ககளை நான் கடுமையாகத் தண்டித்தமையால் தான் இப்போது எனக்கு எதிரிகள் இல்லை. என்னை எதிர்க்கப் பலர் பயப்படுகின்றனர்'' என்று வேலவன் கூறினான். அது உண்மை, அதனால் சபையோர்களே, எதிரிகளை அடிக்கடி தாக்காது கொக்கைப் போலப் பொறுத்திருந்து தாக்குங்கள். அவ்வாறு தாக்கினால் பகைவர் பகை கொள்ள அஞ்சுவர்'' என்று கூறி உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

## 13

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு மகாநாடு ஆரம்பித்தது. மேடைக்கு விழாக் குழுவினருடன் வந்த கதிரேசன் கடவுள் வாழ்த்துப்பாடி முடித்ததும், தனது பேச்சைத் தொடங்கினார், ''கடந்த இரண்டு நாட்களைவிட இன்று அதிகமானோர் வந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. இன்று அசோக வனத்தைச் சேர்ந்த திருமதி நாகராஜன் பூரணாம்பாள் இடர் அறிதல் என்னும் அத்தியாயம் பற்றி விரிவான உரை நிகழ்த்துவார். அவர் ஓர் ஆசிரியர். கலாநிதிப் பட்டம் பெற்றவர். நல்ல பேச்சாளர். அவர் இப்போது பேசுவார்'' என்று கூறி அமர்ந்ததும், பூரணாம்பாள் சபைக்கு வணக்கம் தெரிவித்தாள். பின், ''சபையோர்களே, இந்தத் திருக்குறள் மகாநாட்டில் பேசும் வாய்ப்பைத் தந்தமைக்காகச் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்றிகூறிக் கொள்கின்றேன். ஒரு செயலில் வெற்றி பெறுவதற்கு எவையெவை முக்கியமானவை என்று வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிவிட்டார். இதற்கு மேல் இதைப்பற்றி யாரும் கூறமுடியாது'' என்ற பூரணாம்பாள் முதலாவது குறளைப் பாடினாள்''.

''தொடங்கற்க எவ்வினையும்; எள்ளற்க முற்றும் இடங்கண்ட பின் அல்லது'', ''சபையோர்களே, ஒரு செயலை முழுமையாகச் செய்து அதில் வெற்றியடையும் வாய்ப்பு ஏற்படும் வரை அதைத் தொடங்கக்கூடாது. பகைவரை வலிமை இல்லாதவர் என்று நினைக்கவும் கூடாது. வேலவன் மிகவும் கண்டிப்பானவன். ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தானேயானால் அதற்காகச் செய்யவேண்டிய செயல்களை எல்லாம் இரகசியமாகச் செய்து முடிப்பான். அதில் போதிய வருமானம் கிடைக்கும் என்றால் தான் அதற்கான முடிவை எடுப்பான். அதை யாருக்கும் சொல்லமாட்டான். சிவபாலனின் தோப்புக்கு அருகில் ஐம்பது ஏக்கர் தென்னந்தோப்பு விற்பனைக்கு வந்தபோது வேலவன் அதை யாருக்கும் தெரியாது வயலின் சொந்தக்காரன் சொன்ன விலையைக் கொடுத்து வாங்கிவிட்டான். அதில் ஒரு தும்புத் தொழிற்சாலையை அமைக்க விரும்பி இரகசியமாக அதற்கான செயல்கள் யாவற்றையும் முடித்து விட்டான்''.

‘‘அந்தத் தோப்பை யார் எதற்காக வாங்கினார்கள் என்ற விபரம் யாருக்கும் தெரியாது. சிவபாலன் வேலவனது வீட்டுக்கு வந்து சொன்னார், ‘‘வேலவா, எனது தென்னந்தோப்புக்கு அருகில் உள்ள தோப்பை யாரோ வாங்கி அதில் ஒரு கட்டிடம் கட்டுகிறார்கள். யார் வாங்கியது? என்ன தேவைக்காகக் கட்டிடம் கட்டுகிறார்கள் என்று தெரியவில்லை. தோப்பை விற்றவனைக் கேட்டால் பட்டணத்தில் உள்ள ஒருவனுக்கு விற்றதாகச் சொல்கிறார். அதை யாரென்று அறி’’.

‘‘வேலவன் சிரித்துவிட்டுச் சொன்னான், ‘‘ஐயா, உங்களது வார்த்தைகளை வேத வாக்காகக் கருதுபவன் நான். எனக்குத் தொழில் நிமிர்த்தம் பல எதிரிகள் இருக்கிறார்கள். அது உங்களுக்குத் தெரியும். யாருக்காவது தெரிந்தால் குழப்பிவிடுவார்கள். அதனால் தான் நான் யாருக்கும் சொல்லாமல் அத்தோப்பை வாங்கி ஒரு தென்னந்தும்புத் தொழிற்சாலையைக் கட்டினேன்’’ என்றான்.

‘‘சபையோர்களே, ஒரு செயலைச் செய்து முடிக்கும்வரை அதைப்பற்றி யாருக்கும் சொல்லாதீர்கள். சொன்னால் பகைவர்கள் அதைச் செய்ய விடமாட்டார்கள்’’ என்றாள் பூரணாம்பாள்.

பூரணாம்பாள் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கு உரை விளக்கம் கதை என்பவற்றைச் சொன்னாள், ‘‘முரண்சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் அரண்சேர்ந்தாம் ஆக்கம் பலவும் தரும்’’, ‘‘சபையோர்களே சிவபாலன் சொன்னார், ‘‘நீ செய்தது சரி. முன்பு பலர் அத்தோப்பை விலைக்கு வாங்க முயற்சித்தனர். தோப்புக்கு சொந்தக்காரன் அதிக விலை சொன்னதால் யாரும் வாங்க விரும்பவில்லை. நீ பெரும் புத்திசாலி. அதனால் அவர் சொன்ன விலைக்கே இரகசியமாக வாங்கி விட்டாய். தோப்பை விற்றவன் நீ சொன்னபடி நடந்தமையால் எதிரிகளால் உன்னை பழிவாங்க முடியவில்லை. நீ புத்திசாலி. தனவந்தன். இருந்தபோதும் நல்லவர்களைப் பக்கத்துணையாகச் சேர்த்துக் கொள். அதனால் உனது வலிமை அதிகரிக்கும்’’ என்று சிவபாலன் சொன்னபோது வேலவன் சொன்னான், ‘‘ஐயா, நான் அத்தோப்பை வாங்கமுன் கதிரேசனோடு கலந்துரையாடி அவரது ஆலோசனைகளையும் பெற்றேன். அவரின் துணை எனக்கு போதும் என்றான்’’ என்ற பூரணாம்பாள், ‘‘சபையோர்களே, நீங்கள் எல்லாம் அறிந்த புத்திசாலியாக இருந்தாலும் பெரியவர் ஒருவரின் நட்பைப் பெறுங்கள். அந்த நட்பு உங்களுக்குப் பாதுகாப்பாக அமையும்’’ என்றாள் பூரணாம்பாள்.

‘‘பூரணாம்பாள் மூன்றாவது குறளை இனிமையாகப் பாடி அதற்கான உரையையும் விளக்கத்தையும் கதையையும் சொன்னாள், ‘‘ஆற்றாரும் ஆற்றி அடுப, இடனறிந்து போற்றார்கண் போற்றிச் செயின்’’, ‘‘சபையோர்களே, முறைப்படி செய்யும் செயல்கள் கட்டாயம் வெற்றியைத் தரும். வெற்றியடைய விரும்புவோர், செயலுக்கேற்ற பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்தல் வேண்டும். எதிரிகளின் வலிமையை உள்ளபடி

அறிந்து, அதற்கேற்ற வகையில் திட்டங்களை உருவாக்கிச் செயற்பட்டால் வலிமை இல்லாதவர்களும் வெற்றியைப் பெறுவர். சபையோர்களே, சிவபாலன் சொன்னார், ‘‘வேலவா, வெற்றியடைய வேண்டுமானால் மேற்கொள்ளவுள்ள செயலுக்கு பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்தல் வேண்டும். அத்துடன் எதிரிகளின் பலத்தையும், பலவீனத்தையும் அறிந்து அவர்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி வெற்றி காண வேண்டும். இரண்டையும் நீ முறைப்படி செய்துள்ளாய். நீ தொழிற்சாலைக்குத் தெரிவு செய்த இடம் பொருத்தமானது. சுற்றிவர சுமார் 1000 ஏக்கர் நிலத்தில் தென்னை பயிராகியது. அயலிலுள்ள காடுகளிலும் தென்னையைப் பயிரிட்டுள்ளனர்’’.

‘‘போக்குவரத்து வசதிகள் இருக்கிறது. தொழிலாளர்கள் இருக்கின்றனர். அதைவிட நீ இரகசியமாகச் செயற்பட்டவிதம் அருமையானது. பாராட்டுக்குரியது. அந்தத் தோப்பின் உரிமையாளர்களின் பிள்ளைகள் வெளிநாட்டில் வசிப்பதால் தாயையும், தகப்பனையும் அங்கு அழைத்துச் செல்ல விரும்புகின்றனர். இதைத் தெரிந்து கொண்டவர்கள் தோப்பை மலிவாக வாங்க நினைத்தனர். ஆனால் நீ அவர் சொன்ன விலைக்கே தோப்பை வாங்கிவிட்டாய். அதனால் உன் மீது மதிப்புக் கொண்ட தோப்பின் உரிமையாளர் நீ சொன்னவாறே நடந்து கொண்டார். அத்துடன் உனது எதிரிகளின் செயற்பாடுகளை நீ அறிந்தவன். அதனால் அவர்களால் உன்னை வெல்ல முடியாது’’ என்றார். ஆகவே சபையோர்களே, வெற்றி பெற இடம் முக்கியமானது. எதிரிகளின் பலத்தை அறிவதும் முக்கியமானது. இரண்டும் சரிப்பட்டால் பலவீனமானவனும் வெற்றி பெறுவான்’’ என்றாள் பூரணாம்பாள்.

‘‘பூரணாம்பாள் நான்காவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு, அதற்கான உரையையும் விளக்கத்தையும் கதையையும் சொன்னாள், ‘‘ எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன் அறிந்து துன்னியார் துன்னிச் செயின்’’ சபையோர்களே, செயலுக்கு பொருத்தமான இடம் எதுவென அறிந்து, எதிரியை நெருங்கிச் செயற்பட்டால், வென்றுவிடலாம். எண்ணிய பகைவனையும் வென்றுவிடலாம். சபையோர்களே, சிவபாலனுக்கு வேலவனின் செயல்கள் அச்சரியத்தைக் கொடுத்தன. அவன் செய்யும் செயல்கள் யாவும் வெற்றியைக் கொடுத்துக் கொண்டே இருந்தன. அது எப்படிச் சாத்தியமாகிறது என்று எண்ணிய அவர், வேலவனைக் கேட்டார், ‘‘வேலவா உன்னை நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நீ செய்யும் செயல்கள் எல்லாவற்றிலும் வெற்றியடைகிறாய். அது எப்படி என்று சொல், ‘‘வேலவன் சொன்னான், ‘‘ஐயா, நீங்கள் எனக்குத் தந்த தென்னந்தோப்புக்கு அருகில் இருந்த தென்னந்தோப்பை அதன் உரிமையாளர் விற்கப் போவதாக எனது நண்பன் ஒருவன் சொன்னான். உடனே அதை நான் வாங்கியதற்குக் காரணம், தும்புத் தொழிற்சாலையை ஆரம்பிக்கவே. எனது நம்பிக்கைக்குரிய தொழிலாளர் சிலர் என்னைக் குறை கூறுவர். அதனால் எதிரிகள் அவர்களைத் தம் வசப்படுத்த நினைப்பர். ஏற்கனவே அதைத் தெரிந்து கொண்ட அவர்கள் எனது பகைவர்களிடம் என்னை மிகவும் தரக் குறைவாகப் பேசி, அவர்கள் எனக்கெதிராகச் செய்யப் போகும் செயல்களை அறிந்து எனக்குச் சொல்வர். எதிரிகளை நெருங்கி அழிப்பதற்கு இதை விடச் சிறந்த வழி எதுவும் இல்லை.

அதனால் எதிரிகள் எனக்குப் பயப்படுவர்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான்'' என்ற பூரணாம்பாள் சொன்னாள், ''சபையோர்களே, வேலவனைப் போலப் புத்திசாலியாகச் செயற்பட்டு எதிரிகளை அழித்தொழியுங்கள்'.

''பூரணாம்பாள் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு, அதன் உரையையும் விளக்கத்தையும் கதையையும் சொல்லத் தொடங்கினாள், '' நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும் புனலின் நீங்கின் அதனைப் பிற'' ''சபையோர்களே, வலிமை என்பது ஒரு விடயத்தில் மட்டும் இருந்தால் போதாது. செயலில் ஈடுபடும் ஒவ்வொரு செயலையும் வெல்ல வித்தியாசமான வலிமை அதாவது வல்லமை வேண்டும். ஆழமான நீர்நிலைகளில் முதலை ஏனைய உயிர்களை விடப்பலம் மிகுந்ததாக இருக்கும். அதனால் அது எந்த உயிரையும் மிகவும் இலகுவாக வென்று விடும். ஆனால் அது தரைக்கு வந்துவிட்டால் பலமில்லாத சிற்றுயிரே அதனைக் கொன்றுவிடும். இதை நல்ல முறையில் உணர்ந்தவன் வேலவன். அதனால் தான் அவன் ஈடுபடும் எல்லாச் செயல்களிலும் வெற்றி பெறுகிறான். அவன் சிவபாலனுக்குச் சொன்னான், ''ஐயா, தான் செய்யும் செயல்களில் தொடர்ந்து வெற்றி பெற வேண்டுமானால், பல்வேறு வகைகளில் பல்வேறு விதமாக வலிமையைப் பெறவேண்டும். பலம் மிகுந்த முதலை நீரில் எந்தப் பலசாலியையும் இலகுவாக வெல்லும். ஆனால் அது நீரை விடடு வெளியேறித் தரைக்கு வந்தால், சிற்றுயிர்கள் கூடக் கொன்றுவிடும். அதனால் நீரில் முதலையாகவும், தரையில் சிங்கமாகவும் உருமாற வேண்டும் என்றவன். அது தான் உண்மை. அதனால் நீங்கள் செயல்களுக்கேற்ற வல்லமைகளைப் பெறாவிட்டால் தோல்விகளை தான் உண்டாகும்'' என்றாள் பூரணாம்பாள்.

''பூரணாம்பாள் ஆறாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும் கதையையும் சொல்லத் தொடங்கினாள், '' கடல் ஓடும் கார்வல்; கடல் ஓடும் நாவாயும் ஓடா நிலத்து'' சபையோர்களே, தேரானது கடலில் ஓடாது. தனது திறமைகளைப் பெருமையுடன் சொல்லிக் கொண்டிருந்த வேலவனுக்குச் சிவபாலன் சொன்னார், ''வேலவா நீ சொல்வதை என்னால் ஏற்க முடியாது. கதிரேசன் சொல்வார், ''எவ்வாறு முயன்றாலும் சில செயல்களைச் செய்யவே முடியாது. ஒவ்வொருவரும் எதை எதைச் செய்ய முடியுமோ அதையதைத் தான் சொல்வர். உதாரணமாக ஆழமான கடலில் வேகமாகச் செல்லும் கப்பல் தரையில் ஓடமாட்டாது. தரையில் ஓடும் வாகனங்கள் கடலில் ஓடாது. அதுபோலச் சில தனித்துவமான பண்புகள் இவ்விடத்தில் இருக்கலாம். ஆனால் முழுவதும் இருக்காது. உதாரணமாகச் சொல்லப் போனால் உன்னால் எமது வீட்டின் முன்பாக உள்ள உயரமான பனைமரத்தில் ஏறமுடியுமா? அதற்கு உனது வல்லமையைப் பயன்படுத்து பார்ப்போம். மலர்களில் உள்ள தேனைத் தேனீ சேகரித்து வைத்திருக்கிறது. உன்னால் அதைச் செய்ய முடியுமா..? நீ வர்த்தகன். அதில் கைதேர்ந்தவனாக இருக்கலாம். ஆசிரியர்த் தொழில் செய்வாயா,.? என்று கேட்டான். வேலவன் அதற்கு பதில் சொல்லவில்லை'' என்று தனது உரையை நிறைவு செய்தாள் பூரணாம்பாள்.

‘‘பூரணாம்பாள் ஏழாவது குறளை இனிமையாகப்பாடி அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறினாள், ‘‘அஞ்சாமை அல்லால் துணைவேண்டா, எஞ்சாமை எண்ணி இடத்தான் செயின்’’ சபையோர்களே, செய்யப்போகும் செயலின் முழுமையான பண்புகளைக் குறைவிடாது எண்ணி தக்க இடமறிந்து முயற்சி செய்தால் வெற்றி பெறுவதற்கு, அஞ்சாமையைத் தவிர வேறு எதுவும் வேண்டியதில்லை, என்று சொன்ன வேலவன், தொடர்ந்து சொன்னான், ‘‘ஐயா, புதிதாக ஒரு செயலைச் செய்வதனால் முதலில் அஞ்சக்கூடாது. அடுத்துத் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். அவதானத்துடன் முயற்சித்தால் செய்ய முடியாதது என்று எதுவும் இல்லை. எனது நண்பன் சிங்காரம் என்ற நாய் துப்பறியும் இலகாவில் சேர்ந்து பயிற்சிக்குப் பின் போதைப்பொருட்கள், சட்டவிரோதமான ஆயுதங்கள், பணம், ஆபரணங்கள் என்பவற்றைக் கண்டுபிடிக்கிறது. அதைச் செய்ய மனிதர்களாற் கூட முடியவில்லை. அதற்கு காரணம் அஞ்சாமையும், முறையான பயிற்சியும் தான். பயிற்சி பெற்றால் மரத்தில் அல்ல மலையிலும் ஏறலாம் என்று வேலவன் சொன்னான். அது உண்மை. செயற்கரிய செயல்களைச் செய்ய வேண்டுமானால், அச்சங் கொள்ளக் கூடாது. பயிற்சி பெற வேண்டும்’’ என்றாள் பூரணாம்பாள்.

‘‘பூரணாம்பாள் எட்டாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு, அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னாள், ‘‘ சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான் ஊக்கம் அழிந்து விடும்’’, ‘‘சபையோர்களே, சிறிய படையை உடைய சிறிய நாட்டின் அரசனாக இருந்தாலும், அவன் படைப்பலம் மிக்க பேரரசனின் நட்பைப் பெற்றிருந்தால் அவனை எதிரிகளால் வெல்ல முடியாது. வேலவன் சிவபாலனுக்குச் சொன்னான், ஐயா, சிற்றரசன், பேரரசனுடன் நட்பு கொண்டிருந்தால் அவனை எதிர்க்க பகைவர் அஞ்சுவர். அது தெரிந்த நான் கதிரேசனுடன் நல்லுறவு வைத்திருக்கிறேன். அதனால் என்னை எதிர்க்க எனது எதிரிகள் அஞ்சுவர். உங்களது தோப்புக்கு அருகில் உள்ள தோப்பை வாங்க முடிவு செய்த நான் முதலில் கதிரேசனைச் சந்தித்து அந்தத் தோப்பை வாங்கித் தரும்படி கேட்டேன். அந்தத் தோப்பின் சொந்தக்காரன் எனது பரம எதிரி. நான் சென்று கேட்டால் கடைசி வரையும் தரமாட்டான். அதனாற்றான் கதிரேசனை அனுப்பினேன். அவர் சென்று கதைத்து முற்பணத்தை கொடுத்து விட்டு வந்துவிட்டார்.’’

‘‘அதன் பின் எனக்குத்தான் தோப்பு என்று அறிந்து வேதனைப்பட்டார். எனினும் கதிரேசனுடன் முரண்பட்டால் வேறு பல பிரச்சினைகள் வருமென்று நினைத்து எதுவும் பேசாது தோப்பை எனக்குத் தந்துவிட்டார். சிலர் எனக்கு கொடுக்க வேண்டாமென்று இரகசியமாகச் சொன்னனர். பகிரங்கமாகச் சொல்லப் பயம்.’’ என்றான் வேலவன். எனவே சபையோர்களே, நல்ல ஒழுக்கமுள்ள பெரியவர்களின் துணை பகைவரை அஞ்சச் செய்யும் என்று கூறி தனது பேச்சை நிறைவு செய்தாள்.

‘‘பூரணாம்பாள் ஒன்பதாவது குறளை இனிமையாகப் பாடி, அதற்கு உரையும் விளக்கமும் கதையும் சொல்லலானாள், ‘‘சிறைநலனும் சீரும் இலர் எனினும்

மாந்தர் உறைநிலத்தோடு ஒட்டல் அரிது'', ''சபையோர்களே, பலம்மிக்க கோட்டையையும், வலிமைமிக்க போர்வீரர்களையும் ஓர் அரசன் கொண்டிராவிடினும், அவனது நாட்டிற்குச் சென்று அவனை வெல்ல நினைப்பது அரிதான செயலாகும். அழகன் மிகமிக வீரம் மிகுந்த ஆட்டுக்கடா. நீளமான தனது கூரிய கொம்பால் பல நரிகளைக் குத்திப் பெருங்காயத்துக்குள்ளாக்கியமையால் நரிகளுக்கு அவனது பெயரைக் கேட்டாலே வியர்த்து விறுவிறுக்கும். அவன் தனது இனத்தவர்களுடன் ஒரு மலையடிவாரத்தில் அரண் அமைத்து வாழ்ந்து வருகிறான்''.

''வளவன் என்ற நரி அழகன் கூட்டத்துடன் மலையடிவாரத்தில் மேயும்போது பலமுறை ஒரு ஆட்டுக்குட்டியையாவது பிடித்துத் தின்றுவிட வேண்டும் என்று நினைத்து முயற்சித்தது. எந்நேரமும் விழிப்புடன் இருக்கும் அழகன் வளவனைத் தூரத்தில் கண்டதும் மறைந்திருந்து அதைத் தாக்கித் துரத்திவிடும். ஆட்டின் இறைச்சியைப்போலச் சுவைமிகுந்த இறைச்சி வேறு எதுவும் இல்லை என்று அவனது நண்பனான குமார் என்ற நரி சொன்னபின், எப்படியாவது இன்று இரவு ஒரு ஆட்டைப் பிடித்துத் தின்றுவிட வேண்டும் என்ற நோக்குடன் வளவனும் குமாரும் திட்டமிட்டு வேறு பல நரிகளையும் அழைத்துக் கொண்டு அழகன் தனது இனத்தவர்களுடன் தங்கியிருந்த மலைச்சாரலுக்குச் சென்றது''.

''மரங்கள் அடர்த்தியாக நின்றமையால், அம் மலைச்சாரல் கடும் இருட்டாக இருந்தது. அழகன் தனது இருப்பிடத்தைச் சுற்றிப் பல பொறிக் கிடங்குகள் அமைத்திருந்தது. அதற்குள் நச்சு முட்களைப் போட்டிருந்தது. ஆட்டுக் குட்டிகள் சத்தமிட்டுக் கொண்டிருந்தன. அதனால் வளவன் சத்தம் வந்த திசையை நோக்கிச் சென்றது. அதற்குப் பின்னால் ஐந்து நரிகள் சென்றன. திடீரென்று நிலம் பிளவுபட்டதைப் போலிருந்தது. கணநேரத்துள் வளவனும் ஐந்து நரிகளும் பொறிக்கிடங்குள் விழுந்தன. அவற்றின் உடலெங்கும் முட்கள் ஏறி இரத்தம் வழிந்தது''.

''விடியும் நேரம் நரிகள் ஊளையிடும் சத்தம் கேட்டு, அழகனும், அவனது இனத்தவர்களும் வெளியே வந்து பார்த்தபோது அவர்கள் வெட்டிவைத்த குழிகளுக்குள் நரிகள் விழுந்து கிடந்தன. அவர்கள் வைத்த பொறிக்குள் பல நரிகள் அகப்பட்டமையால், பெருங்குரலெடுத்து ஊளையிட்டன. அப்போது ஒரு நரி வளவனுக்குச் சொன்னது, ''பலவீனமானவர்கள், வசிக்கும் இடத்திற்குக்கூடப் பலசாலிகள் போருக்காகச் செல்லக் கூடாது என்று நான் சொல்ல என்னைக் கேலி செய்தீர்கள். இப்போ என்ன நடந்தது பார்த்தீர்களா…?'' அழகன் ஐந்து நாட்கள் வரை நரிகளைக் குழிகளிலிருந்து வெளியேற்றவில்லை. அதனால் பெருந் துன்பப்பட்ட வளவன், ''இனிமேல் எக்காரணங் கொண்டும் ஆடுகளைப் பிடிக்க முயற்சிக்கேன். என்னை மன்னித்து விட்டுவிடுங்கள் எனக் கெஞ்சியதால், அழகன் அவர்களை வெளியே செல்ல அனுமதித்தது. அதனால் எக்காரணங் கொண்டும் எதிரிகளைத் தாக்க அவர்களது இருப்பிடத்திற்குச் செல்லக்கூடாது என்று கூறித் தனது உரையை முடித்தாள் பூரணாம்பாள்.

‘‘பூரணாம்பாள் பத்தாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதன் உரையையும், கதையையும் சொன்னாள், “கால் ஆழ் களரின் நரி அடும்; கண் அஞ்சா வேல் ஆள் முகத்த களிறு’’, ‘‘போர்க்களத்தில் ஆயுதங்களுடன் போரிட்டு வென்ற யானை கூடச் சேற்றில் புதையுண்டால் நரிகள் அதைக் கொன்றுவிடும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். வளவா இது உனக்குத் தெரியாதா, எந்தப் பெரிய பலசாலியும், பலவீனமடைந்தால் அதைச் சிற்றுயிரும் கொன்றுவிடும். நீ தந்திரமுள்ளவன், பிறரை இலகுவில் ஏமாற்றக் கூடியவன். பெரும் பலங்கொண்ட சிங்கத்தைத் தனது புத்திக்கூர்மையால் முயல் கொன்றகதையை நீ கேள்விப்பட்டதில்லையா..? உன்னைப் பற்றியும், உனது தோழர்களைப் பற்றியும், எனக்குத் தெரியும். அதனால் தான் உங்களைப் போன்றவர்கள் எம்மைத் தாக்காதிருப்பதற்காகப் பல குழிகளை வெட்டி அதனுள் கூரிய முட்களைப் போட்டோம். அதனால் மாட்டிக் கொண்டீர்கள். இனிமேல் நீங்கள் வந்து குழிகளுக்குள் விழுந்தால் மண்ணைப்போட்டு மூடிவிடுவோம்’’ என்று எச்சரித்தது அழகன். அதன் பின் வளவனோ அவனது கூட்டத்தினரோ அவர்களைக் கண்டால் ஒதுங்கிச் சென்றுவிடுவர். பலசாலியானாலும், பலவீனப்பட்டால் உயிர்தப்ப முடியாது’’ என்று கூறித் தனது உரையை நிறைவு செய்துவிட்டுச் சபையோரை வணங்கி விடைபெற்றாள் பூரணாம்பாள்.

## 14

பூரணாம்பாள் உரையாற்றி முடிந்ததும், விழாவின் தலைவரான கதிரேசன் மேடைக்கு வந்து, ‘‘சபையோர்களே, அடுத்துத் தெரிந்து தெளிதல் என்ற அதிகாரத்தில் உள்ள கருத்துக்களைக் கோமளா இதை உங்களுக்கு விரிவாகச் சொல்வார்’’ என்று கூறிச் செல்லக் கோமளா மேடைக்கு வந்து சிரம் தாழ்த்தி வணங்கினாள், ‘‘சபையோர்களே, ஒருவரைத் தொழிலுக்காகவோ அல்லது அவரது நட்பை விரும்பியோ தேர்ந்தெடுக்கும் போது என்னென்ன நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று தெரிந்து தெளிதல் என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறுகிறார். அவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கூறினாலும், அவை இப்போது மட்டுமல்ல எப்போதும் பொருந்துவனவாகவே உள்ளன’’ என்று கோமளா, முதலாவது குறளை இனிமையாகப் பாடினாள். ‘‘அறம்பொருள் இன்பம் உயிர் அச்சம் நான்கின் திறம் தெரிந்து தேறப்படும்’’, ‘‘சபையோர்களே, வேலவனுக்கு வேலைப்பழு அதிகரித்தமையால், அவன் சிவபாலனிடம் வந்து சொன்னான், ‘‘ஐயா, எனது பொறுப்புக்கள் சிலவற்றை ஓர் உதவியாளரை நியமித்து, அவரிடம் பொறுப்புக்கள் சிலவற்றை ஒப்படைத்துவிட்டு, அவரைக் கண்காணிக்கலாம் என முடிவு செய்துள்ளேன். அதற்கு நம்பிக்கையான ஒருவர் இருந்தால் சொல்லுங்கள்’’ என்றார்.

சிறிது நேரம் யோசித்த சிவபாலன் சொன்னார், ‘‘ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் போது, அவர் அறம், பொருள், இன்பம், தனது உயிருக்கு அஞ்சுகின்ற அச்சம் என்ற நான்கு வகையான தன்மைகளையும், நன்றாக ஆராய்ந்தபின்பே தெரிவு செய்ய வேண்டும்.

அப்படியானவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பது சிரமமானது. என்னிடம் சுகிர்தன் என்ற மான் உதவியாளராக வேலை செய்தது. நான் தொழிலைக் கைவிட்ட பின்பு அவன் என்ன செய்கிறான் என்று தெரியவில்லை. அவன் ஒழுக்கமானவன். ஒரு வேலையில் மிகக் கவனமுடையவன். ஒரு நாளாவது நேரம்பிந்தி வேலைக்கு வந்ததில்லை. பொய் பேசமாட்டான். பொருட்களைத் தான் விற்ற விலைக்கே பணத்தைத் தருவான் முன்பு வேலை செய்தவன் இரண்டு ரூபாய்க்கு தேங்காயை விற்றால் ஒன்றரை ரூபாவுக்குத்தான் விற்றேன் என்பான். வியாபாரிகளுக்கு கூடுதலாக தேங்காய்களைக் கொடுத்து விலையைக் குறைத்துச் சொல்லச் சொல்வான். இவ்வாறு பல மோசடிகளைச் செய்வான். சுகிர்தன் அப்படியானவனல்ல. அறம் உணர்ந்தவன். பிறரின் பொருள் மீது ஆசைப்படாதவன். எப்பொழுதும் மகிழ்வுடன் இருப்பான். தனக்குக் கெட்ட பெயர் வரக்கூடாது என்று மிகவும் அவதானமாக நடந்து கொள்வான். அவனைப் பற்றி விசாரித்துப் பார்க்கிறேன்'' என்றார்.

''மறுநாட் காலை சிவபாலன் வந்து சொன்னார், ''சுகிர்தன் வரச் சம்மதித்துள்ளான். அவன் வேலை செய்யும் முதலாளி சந்தேகப்பேர்வழியாம். அவன் ஒழுக்கமானவன். சுடுசொற்களைத் தாங்கமாட்டான். அவதானமாக இரு'' என்றார். என்று கூறித் தனது பேச்சை நிறைவு செய்தாள் கோமளா.

இரண்டாவது குறளைப் பாடிய கோமளா, அதன் உரையையும் விளக்கத்தையும் கதையையும் சொன்னாள். ''குடிப் பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும் நாண் உடையான் கட்டே தெளிவு'' ''வேலவா, சுகிர்தனுடைய குடும்பத்தவர்கள் குற்றச் செயலைச் செய்ய அஞ்சுவார்கள். நிலை தடுமாறிய போதும் குற்றத்தை உண்டாக்கக் கூடிய பொய்யான வார்த்தைகளைக் கூறமாட்டார்கள். சுகிர்தனின் தந்தை வேலை செய்யும் தொழிற்சாலையில் பெருநட்டம் ஏற்பட்டுவிட்டது. அதன் முதலாளி சுகிர்தனை அழைத்துச் சொன்னார், ''வடிவேலா, உன்னைப் பற்றி எனது பங்காளிகள் எல்லோருக்கும் தெரியும்... தொழிற்சாலையில் உற்பத்தியான பலலட்சம் ரூபாய் பொருட்கள் களவாடப்பட்டுவிட்டதாக முகாமைத்துவக் குழுவிற்குச் சொல்லி காவல்துறைக்கு புகாரளித்துள்ளேன். உன்னை அரிச்சந்திரன் என்று எமது முகாமைத்துவக் குழு நினைத்திருக்கிறது. நீ களவு போய்விட்டதென்றால் அவர்கள் நம்புவார்கள். களவு போய்விட்டது என்று சொல் உனக்கு நான் ஒரு லட்சரூபா தருகிறேன்'' என்றவர். விசாரணை அன்று கதிர்வேலன் தலைமறைவானதால் முதலாளி தான் களவாடி விட்டு களவு போனதாகச் சொன்ன பணத்தைக் கட்ட வேண்டியதாயிற்று. அதன் பின் வடிவேலன் அங்கு வேலைக்குச் செல்லவில்லை. அப்படியான தந்தைக்குப் பிறந்தவன் உயிர் போனாலும் குற்றச் செயல்களைச் செய்யமாட்டான். பொய் சொல்ல நினைப்பதே பெரும் பாவம் என்று கருதுபவன். அதனால் தான் அவனை நம்பி உனக்குச் சொன்னேன். அவன் தீயவனாக இருந்து குற்றச் செயல்களையும், பாவச் செயல்களையும் செய்தால், என்னில் உள்ள நம்பிக்கை உனக்கு இல்லாமற் போய்விடும் என்றவர். அதனால் ஒருவரைச் செயலுக்காகவோ, நட்புக்காகவோ தேர்ந்தெடுக்கும்போது, அவர் நற்குடியிற் பிறந்தவரா

என்றும் குற்றங்களையும், பாவங்களையும் செய்யாதவரா என்று ஆராய்ந்து முடிவெடுத்த பின்பே சேருங்கள்'' என்றாள் கோமளா.

கோமளா மூன்றாவது குறளை இனிமையாகப் பாடி விட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், ''அரிய கற்று ஆசு அற்றார் கண்ணும் தெரியுங்கால் இன்மை அரிதே வெளிறு'', சபையோர்களே, ஒருவன் நல்ல குடியிற் பிறந்தால் தான் நல்ல குணங்கள் வரும். நல்ல குடியிற் பிறக்காமல் கற்கவேண்டிய அரிய நூல்களையெல்லாம் கசடறக் கற்றாலும் ஆராய்நது பார்த்தால் சில அறியாமைகள் இருக்கும்'' என்ற சிவபாலன், தொடர்ந்து சொன்னார், ''நூல்கள் குற்றங்களையும், பாவங்களையும் செய்யக்கூடாது என்று கூறுகின்றன. அவற்றையெல்லாம் படித்த பண்டிதரான கந்தையா என்ற நரி, தனது பெற்றோர் செய்த தீய செயல்களை மறைமுகமாகச் செய்யும். முக்கியமாகப் பொய் சொல்லும் பொய் தான் அனைத்து பாவங்களுக்கும் மூல காரணியாவது. ஒரு பொய்யை மறைக்கப் பல பொய்கள் கூறவேண்டி வரும்.''

சுகிர்தனின் தந்தை வேலை செய்த தொழிற்சாலையில் தான் பண்டிதர் கந்தையாவின் தந்தையும் வேலை செய்தார். முதலாளி திருட்டுப் போனதாகச் சொன்னது உண்மை என்று காவல்துறையின் தலைமை அதிகாரிக்குச் சொன்னார். தலைமை அதிகாரி அதை நம்பாது எனது தந்தையிடம் கேட்க அவர் உண்மையைக் கூறி விட்டார். அதனால் கந்தையாவின் குடும்பத்திற்குப் பெரும் அவமானம் ஏற்பட்டது.'' பண்டிதர் கந்தையா நன்றாகப் படித்து நல்ல உத்தியோகம் பார்த்தபோதும் ஊரவர்கள் அவரை நம்புவதில்லை. சபையோர்களே, கற்றபடி வாழ்வது தான் மேலான சிறந்த வாழ்க்கை. கற்றவர்களின் அறியாமை நூல்களின் கருத்துக்களில் இருக்கவேண்டுமே தவிர வாழ்க்கையில் இருக்க்ககூடாது'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் கோமளா.

கோமளா நான்காவது குறளை இனிமையாகப் பாடி, அதன் உரையையும், விளக்கத்தையும், அதற்கான கதையையும் சொன்னாள், ''குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்'' சிவபாலன் சொன்னார், ''நீ என்னிடம் உனக்கொரு உதவியாள் தேவை. பொருத்தமான ஒருவனைச் சொல்லுங்கள் என்ற செய்தியை அறிந்த பலர் என்னிடம் வந்து தமக்கு அந்த வேலையை பெற்றுத் தரும்படி கேட்டனர். சிலருக்குச் சிலர் சிபாரிசும் செய்திருந்தனர். சுகிர்தன் என்னிடம் வரவில்லை. அவனது தந்தை வழக்கம்போல என்னிடம் வந்து கதைத்துவிட்டுச் சென்றவரே தவிர சுகிர்தனின் பேச்சே எடுக்கவில்லை. பண்டிதர் கந்தையா மகனுக்காக வந்து கதைத்தவர். பண்டிதரின் மகன் ஆதவன் பலமுறை வந்து கதைத்தவன். ஆதவனின் மாமனும் வந்து கதைத்தவர்.''

''நான் ஒவ்வொருவரின் குணங்களை ஆராய்ந்தேன். ஆதவன் ஆறு மாதங்களுக்கு முன் ஒரு நாள் வந்து, தனது தந்தைக்குச் சுகமில்லை என்று கூறி

மருத்துவச் செலவுக்கென பத்தாயிரம் ரூபா வாங்கினவன் ஓரிரு நாட்களில் திருப்பித் தந்து விடுவதாகக் கூறியவன் ஆறு மாதங்களாகிவிட்டன. அடிக்கடி வருவான். காசுக் கதையைக் கதைக்கமாட்டான். எனது மனைவி கேட்பாள். அவன் சிரித்தபடி தாறன்'' என்பான். தரமாட்டான். அவன் மிக மிக நல்லவன், கீழ்ப்படிவுள்ளவன், சொன்ன வேலைகளை உடனே செய்து தருபவன். ஆனால் பேச்சில் நிதானம் இல்லாதவன். முதலில் ஒருவரின் குணங்களை ஆராய வேண்டும். அதன் பின் அவனது குற்றங்களை ஆராய வேண்டும். இரண்டில் எது கூடுதலாக இருக்கிறதோ அதைக் கொண்டே அவருக்கு உதவி செய்வதா வேண்டாமா என முடிவெடுக்க வேண்டும். நான் ஆய்வு செய்ததில் சுகிர்தன் தான் மேலானவனாக இருந்தான்'' என்று கூறினார். அதனால் சபையோர்களே, நீங்கள் எது செய்வதாக இருந்தாலும் மேற்சொன்ன இரண்டு விடயங்களையும் ஆராய்ந்த பின்பு முடிவெடுங்கள்'' என்றாள் கோமளா.

கோமளா ஐந்தாவது குறளை இனிமையாகப் பாடி, அதன் உரையையும், விளக்கத்தையும், சொன்னாள், ''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்'' சபையோர்களே, சிவபாலன் வேலவனுக்குச் சொன்னார்,'' வேலவா ஒருவரைப் பற்றி முழுமையாக அறிய வேண்டுமானால் அவர் செய்யும் செயல்களை உன்னிப்பாக அவதானித்து ஆராய வேண்டும். செயல்கள் தான் ஒருவரது பெருமையான குணங்களையும், சிறுமையான தீய குணங்களையும் உரசி ஆராய்ந்து சொல்லும் உரைகல்லாகும். முன்பு ஆதவன் தினமும் எனது வீட்டுக்கு வருவான் எனது மனைவி அவனின் மீது அன்பு வைத்திருந்தாள். அதனால் அவனுக்கு உணவு கொடுப்பாள். அவன் கேட்கும் பொருட்களையும் கொடுப்பாள். அவன் என்னிடம் வாங்கிய பணத்தைப் பலமுறை கேட்டும் அவன் திருப்பித் தராமையால் அவனைக் கண்டித்தாள். அதன் பின் அவன் வீட்டுக்கு வருவதை நிறுத்தி விட்டான்.''

சுகிர்தன் அப்படியானவன் அல்ல. அவனுக்கு பணத்தட்டுப்பாடு ஏற்பட்டால் என்னிடம் கேட்கமாட்டான். எனது மனைவியிடம் தான் கேட்பான். பணத்தை வாங்கிவிட்டு திருப்பித் தருவதாகச் சொன்ன நாளிற்கு முன்பே கொடுத்துவிடுவான். எனது மனைவி வட்டிப் பணம் வாங்காதால் அதற்குப் பதிலாக வீட்டு வேலைகளைச் செய்து கொடுப்பான். விறகு கொத்துதல், தேங்காய் உரித்தல், வீட்டைச் சுத்தம் செய்தல் போன்ற வேலைகளைச் செய்வான். பணம் கொடுத்தால், ''அம்மாவின் வீட்டு வேலைகளைச் செய்துவிட்டுப் பணம் வாங்கலாமா!'' என்பான். இப்படி இருவரைப்பற்றியும் பல சொல்லலாம், என்றவர். அதனால் சபையோர்களே, பெரியவர்கள் உங்களை மதித்து, நீங்கள் கேளாமலே முக்கியமான உதவிகளைச் செய்யவேண்டுமானால், நல்ல செயல்களைச் செய்யுங்கள். அச் செயல்கள் தான் உங்கள் மீது மதிப்பையும், நம்பிக்கையையும் உண்டாக்கும்'' என்று கூறித் தனது உரையை முடித்தாள் கோமளா.

கோமளா ஆறாவது குறளை மிகவும் இனிமையாகப் பாடிவிட்டு அதற்கு உரையையும், விளக்கமும், கதையும் சொன்னாள், ''அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்று

அவர் பற்று இலர் நாணார் பழி'', ''சபையோர்களே, சிவபாலன் வேலவனுக்குச் சொன்னார், ''வேலவா, என்னிடம் பலர் வந்து ஆலோசனை கேட்பார்கள். பின், ''ஐயா, உங்களால் எப்படி எங்களால் தீர்மானிகப்பட முடியாத விடயங்களுக்கெல்லாம் சரியான முடிவைக் கூறுகிறீர்கள்'' என்று கேட்பார்கள். இதை கேள்வியை நீயும் கேட்டாய். ஒருவரது செயல்கள் தான் அவரைப் பற்றிய சரியான முடிவை எடுக்க உதவுகின்றன. அத்துடன் ஒருவர் தனது குடும்பத்தினர், ஊரவர், அயலவர், நண்பர்கள், சுற்றத்தவர்களுடன் பழகும் முறையைப் பற்றியும், அவரது பெருமைகள் பற்றியும், சிறுமைகள் பற்றியும் அறிந்து கொள்ளலாம். சுற்றத்தாருடன் தேவையில்லாது முரண்படுபவர்களை நம்பக்கூடாது. அவர்களுக்கு நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்ற நினைப்பிராது. பொது நோக்கு இராது. மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் இராது. மொத்தத்தில் உலக வாழ்வில் பற்றில்லாதவர்களாகவே இருப்பர். பற்றுள்ளவர்கள் அடுத்தவர்களுடன் மகிழ்ச்சியுடன் உரையாடுவர். உதவி செய்வர், யாருடனும் முரண்பட மாட்டார்''.

''ஒருமுறை எனக்கு நம்பிக்கையுள்ளவர்கள் என்று நான் நினைத்த ஒருவர் சுகிர்தனைப் பற்றித் தவறாகக் கூறிவிட்டார். அதை நம்பித்தான் சுகிர்தனை ஏசியதோடு ஐந்து நாட்கள் வேலையையும் நிறுத்தி அதற்கான சம்பளத்தையும் கொடுக்கவில்லை. அவன் அதைப் பெரிதாக எடுக்கவில்லை. கதிரேசனிடம் சென்று தனது கவலையை வெளிப்படுத்தி, ''ஐயா, சிவபாலன் ஐயா மிகவும் நல்லவர். என்னை ஒருபோதும் ஏசியது கூட இல்லை. அப்படியிருக்க நான் செய்யாத குற்றத்தைச் செய்ததாகச் சொல்லி, எனது சம்பளத்தையும் நிறுத்திவிட்டார். அது எனது விதியே தவிர அவரில் குற்றமில்லை. இப்போது உணராவிட்டாலும் ஒரு நாள் உணர்வார்'' என்று கூறினான்.

அதன்பின் நான் ஆராய்ந்து பார்த்ததில், அவனில் குற்றம் இல்லை எனத் தெரிந்து கொண்டேன். சுற்றத்தவருடன் முரண்பாடுடையவனாக இருந்திருந்தால் என்னை அவன் குறைகூறியிருப்பான். சுற்றத்தவர்களுடன் மகிழ்வாகப் பேசி வாழ்பவன். அடுத்தவர்கள் குற்றம் செய்தாலும் அதைப் பெரிது படுத்த மாட்டான் என்றவர். அதனால் சுற்றத்தவர்களுடன் தொடர்பில்லாதவர்களை ஒரு போதும் நம்பாதீர்கள்'' என்று கூறித் தனது பேச்சை நிறைவு செய்தாள் கோமளா.

கோமளா ஏழாவது குறளை இனிமையாகப்பாடி அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறினாள், ''காதன்மை கந்தா அறிவு அறியார்த் தேறுதல் பேதைமை எல்லாம் தரும்'', ''சபையோர்களே, சிவபாலன் வேலவனுக்குச் சொன்னார், ''வேலவா, எனது தந்தை தொழில் நுட்பங்களை அனைத்தையும் முழுமையாக அறிந்தவர். அதனால் அவர் எனக்கு எல்லாவற்றையும் விபரமாகச் சொன்னமையால், தான் என்னால் வெற்றிகரமாக எனது தொழிலைச் செய்ய முடிந்தது. அதனால் தான் நீ ஆலோசனை கேட்டபோது என்னால் சொல்ல முடிந்தது. நான்ஒரு முறை ஒரு தொழில்நுட்பவியலாளரை நட்புக் காரணமாகத் தெரிவு செய்தபோது அவர் சொன்னார், ''மகனே நீ உன்னுடன் கூடப் படித்த ஒருவனை நட்புக் காரணமாக முக்கியமான பொறுப்பைக் கொடுக்கத்

தீர்மானித்துள்ளாய். நான் அவனுடன் கதைத்ததிலிருந்து அவனுக்கு தொழில் பற்றி அறிய வேண்டியவற்றை அறியாதிருக்கிறான். அப்படியானவனை அன்பின் காரணமாக நீ நியமிக்கப் போவதாகச் சொல்கிறாய். அதனால் உனக்குப் பல துன்பங்கள் வந்து சேரும் என்றவர். அதை நான் பின்புதான் உணர்ந்து கொண்டேன். அதனால் தான் உனக்கு நான் நல்லவற்றைச் சொல்ல முடிந்தது. நீ ஒரு தொழில் அதிபர். அதனால் தான் எனக்குச் சொல்லவேண்டும் என்று தோன்றியபோதெல்லாம் சொல்கிறேன். நீ அவற்றைத் தெரிந்து வைத்திருக்கிறாய். இருந்தும் சொல்ல வேண்டும் போல் எனக்குத் தோன்றியதால் சொன்னேன், என்றார். அது முழுமையான உண்மை, என்று கூறித் தனது பேச்சை நிறைவு செய்தாள் கோமளா.

அடுத்துக் கோமளா எட்டாவது குறளை இனிமையாகப்பாடி அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், ‘‘தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை தீரா இடும்பை தரும்’’, ‘‘சபையோர்களே, சிவபாலன் வேலவனுக்குச் சொன்னார், ‘‘வேலவா, எனது பொறுப்புக்களையெல்லாம் உன்னிடம் ஒப்படைத்தமையால் தான் இவற்றைச் சொல்கிறேன். நீ மூன்று உயர்ந்த உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக விண்ணப்பம் கோரியுள்ளாய். எனது இனத்தவர் ஒருவன் விண்ணப்பித்துவிட்டு என்னிடம் வந்து அந்த உயரிய பதவியைத் தனக்குப் பெற்றுத்தருமாறு கேட்கிறான். அவன் அப் பதவிக்குப் பொருத்தமில்லாதவன். அதைவிட உனது தந்தை நேற்று என்னிடம் வந்து தனது சகோதரியின் மகன் அப்பதவிக்கு விண்ணப்பித்திருப்பதாகவும், அதனால் தனது சகோதரி என்னிடம் வந்து அவனை அப்பதவிக்கு நியமிக்குமாறு உன்னிடம் சொல்லுமாறு வற்புறுத்தியதாகவும், சொன்னார். அவன் ஒரு பொறியியலாளராம். அவனை அவனது மேலாளர் லஞ்சம் பெற்றமைக்காக வேலை நீக்கம் செய்துள்ளாராம். அவனை நியமிக்க வேண்டாம் என்று என்னைச் சொல்லச் சொன்னார். இவையாவும் உனக்குத் தெரியும். நீ ஆராயாமல் எதையும் செய்ய மாட்டாய். அன்பின் காரணமாக ஆராயாது செய்தால் அது உனக்கு மட்டுமல்ல உனது நிறுவனங்களுக்கே தீராத பல துன்பங்களைக் கொடுக்கும் என்று உனக்குத் தெரியும் என்று சொன்னவர். அதனால் தான் சொல்கிறேன் என்றவர் என்று சிவபாலன் கூறியவர். அது முற்றிலும் உண்மை. அதனால் சபையோர்களே, ஆராயாமல் ஒருபோதும் யாரையும் நம்பக்கூடாது. நம்பினால் நம்புபவர்களுக்கு மட்டுமல்ல, நம்புபவரின் பரம்பரைக்கே துன்பங்கள் பலவும் வரும்’’ என்று கூறித் தனது பேச்சை நிறைவு செய்தாள் கோமளா.

அடுத்துக் கோமளா ஒன்பதாவது குறளை இனிமையாகப்பாடி அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னாள், ‘‘தேறற்க யாரையும்; தேராது தேர்ந்தபின் தேறுக தேறும் பொருள்’’, சிவபாலன் சொன்னவற்றை அமைதியாகக் கேட்ட வேலவன் சொன்னான், ‘‘ஐயா, எனது தகப்பனார் கண்டிப்பானவர். நான் இரக்கம் காரணமாக அவனுக்குப் புத்திமதியைக் கூறி வேலையைக் கொடுத்துவிடுவேன் என்ற பயத்தால் தான் உங்களிடம் வந்து சொன்னவர். தொழில் விடயத்தில் நான் இனத்தவர்கள், நண்பர்கள், சுற்றத்தவர்கள் என்று சிந்திப்பதே இல்லை. உரிய

தகைமைகளுடன் ஒழுக்கம் மிக்கவர்களைத்தான் தேர்ந்தெடுப்பேன். கல்வித் தகைமை இல்லாவிட்டால் அதை வேலையில் சேர்ந்து பின்பு கற்றுப் பெற்றுக் கொள்ளலாம். ஒழுக்கமில்லாதவர்களைத் திருத்துவது முடியாத காரியம். இதை அறிந்த அம்மா ''தம்பி அவனைத் திருத்த முடியாது. பலமுறை பல தொழிற்சாலைகளில் வேலை செய்தபோது முதலாளிமார் எச்சரித்தும், வேலையிலிருந்து நீக்கியும் அவன் திருந்தவில்லை. அவனுக்கு உதவி செய்வதானால் பணத்தைக் கொடுத்து உதவி செய் என்றவர். யாராக இருந்தாலும் நன்றாக ஆராய்ந்த பின்பே பொறுப்புக்களைக் கொடுத்தல் வேண்டும். இவனை நன்கு ஆராயத் தேவையில்லை. அவனது நடத்தை பற்றி ஊரே அறியும். அப்படியிருக்க எனது தொழிற்சாலையில் பொறுப்பான பதவியைக் கொடுப்பேனா?'' என்று வேலவன் சொல்லச் சிவபாலன் சொன்னார், ''எனக்கு உன்னைப் பற்றித் தெரியும். உனது தந்தை வந்து சொன்னமையால் தான் சொன்னேன்'' என்று கூறித் தனது உரையை முடித்தாள் கோமளா,

கோமளா பத்தாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், ''தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா விடும்பை தரும்'', ''சபையோர்களே, சிவபாலன் வேலவனுக்குச் சொன்னார், ''எப்படித்தான் ஆராய்ந்து பழகினாலும், சிலரது குணங்களை அறிந்து கொள்ள முடியாது. தீயவர்கள் ஏனையோருடன் மிகமிக அவதானமாகவே பழகுவர். எனக்கு நாதன் என்றொரு மான் நட்பாக இருந்தது. அது நெடுந்தூரத்திற்கு அப்பாலுள்ள கந்தவனம் என்ற வனத்தில் வாழ்ந்த தனது மாமனின் மகளைத் திருமணம் செய்து அங்கேயே தங்கிவிட்டது. ஒரு நாள் நாதனும் மனைவியும் பிள்ளைகளும் எனது வீட்டுக்கு வந்தபோது சிவலிங்கம் என்றொரு நாயும் கூட வந்தது. அவர்கள் சென்றபின் சிவலிங்கம் எனது வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்தான். அப்போது அவன் ஏழைகளுக்கு உதவுவான். தினமும் காட்டுப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று பிள்ளைகளுக்குத் தேவாரம் சொல்லிக் கொடுப்பான். நாதனின் நண்பன் என்ற படியால் அவனை நம்பினேன். அவன் ஒரு திருடன். நகரில் உள்ள தங்க ஆபரணக்கடையை இவனும், இவனது கூட்டாளிகளும் உடைத்துத் திருடினர். அவன் சில தங்க நகைகளைக் கொண்டு வந்து எனது வீட்டில் மறைத்து வைத்தது எனக்குத் தெரியாது. இவனது நண்பன் ஒருவன் காவல்துறையினரிடம் அகப்பட்டமையால் காவல்துறையினர் எனது வீட்டுக்கு வந்து, சோதனை செய்தபோது மறைத்து வைக்கப்பட்ட தங்க ஆபரணங்களைக் கண்டு பிடித்தனர்.

''அந்த வழக்கில் இருந்து மீளப் பலகாலம் சென்றது. அதனால் எனது நிம்மதி போய்விட்டது. அதை இப்போது நினைத்தாலும் பெரும் துன்பமாக இருக்கும். அதனால் பிறப்பில் இருந்தே என்னுடன் நட்பாகப் பழகிய நாதனைச் சந்தித்தேன். அவனுக்கும் இத் திருட்டுக்கும் சம்பந்தம் இருக்குமென்று நினைத்து அவனது உறவை முற்றாகத் துண்டித்து விட்டேன். ஒரு முறை கடல் கடந்த வனத்தில் இருந்து எனக்குக் கப்பலில் அனுப்பிய பொருட்களைக் கடற் கொள்ளைக்காரர்கள் கொள்ளையடித்துவிட்டனர். அதனால் பெரும் நட்டமடைந்த நான் எனது வியாபார நிலையத்தை மூடிவிட்டேன். அன்றன்று ஏற்படும்

தேவைகளைக்கூடச் சமாளிக்க முடியவில்லை. கடன்காரர்கள் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தனர். அதைக் கேள்விப்பட்ட நாதன் வந்து போதியளவு பணஉதவி செய்து வியாபார நிலையத்தைத் திறந்து வைத்தான். அவன் உதவாவிட்டால் நான் தற்கொலைதான் செய்திருப்பன்'' என்று சிவபாலன் கூறினார். அதனால் சபையோர்களே, ஒருவரை ஆராயாது நம்புவதும், ஆராய்ந்து நம்பியவரைச் சந்தேகிப்பதும் நீங்காத பெரும் துன்பத்தைத் தரும்'' என்று கூறிக் கோமளா தனது உரையை நிறைவு செய்தாள்.

## 15

கோமளா உரையாற்றி முடிந்ததும், இடைவேளை விடப்பட்டது. இடைவேளை முடிந்ததும், கதிரேசன் மேடைக்கு வந்து சபையோரை வணங்கிவிட்டுச் சொன்னார், ''அடுத்து வித்தியா கலாபூஷணம் சுந்தரலிங்கம் அவர்கள் 'தெரிந்து வினையாடல்' என்ற அதிகாரத்தில் கூறப்பட்ட மெய்யியல் கருத்துக்களை விரிவாகக் கூறுவார். அவர் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியபோது சகல வனங்களும் கல்வியில் முன்னணியில் இருந்தன. எம்மை எச் சக்தியாலும் வெல்ல முடியாது என்ற நிலை இருந்தது. அவர் ஓய்வு பெற்றதோடு கல்வியும் ஓய்வுபெற்று விட்டது. அன்று முதல் நிலையில் இருந்த கல்வி இன்று கடைநிலைக்குச் சென்றுவிட்டது. செயல்வீரரான சுந்தரலிங்கம் ஒரு தரமான பேச்சாளராவார். அவரது பேச்சைக் கேட்டுப் பாருங்கள்''.

சுந்தரலிங்கம் மேடைக்கு வந்து , ''சபையோர்களே, தெரிந்து வினையாடல் என்றால், ஒருவனை எல்லாவகையாலும் ஆராய்ந்த பின்பே அவரைச் செயலில் ஈடுபடுத்த வேண்டும். நான் எனது சேவைக்காலம் முழவதையும் கல்விக்காக அர்ப்பணித்துச் செயலாற்றியமையால். ஒருவரைப் பற்றி முழுமையாக அறியும் வழிகளை நான் அறியவில்லை. கல்வி சம்பந்தமாகவே சிந்திப்பேன், செயற்படுவேன். ஆசிரியர்களினதும், அதிபர்களினதும், கல்விசார்ந்த ஊழியர்களையும், மாணவர்களின் நன்னடத்தை, அறியும் திறமை, தலைமைத்துவப் பண்பு, அவர்களின் கல்வி சார்ந்த செயற்பாடுகளின்படியே அறிந்து கொள்வேன். அதனால் ஆசிரியர்களும், அதிபர்களும், கல்விசார் ஊழியர்களும், மாணவர்களின் நலன்களில் மிகுந்த அக்கறை உடையவர்களாக இருப்பர். அதனால் பாடசாலைகளுக்கிடையில் ஒவ்வொரு செயலிலும், பெரும் போட்டியிருக்கும். ஒவ்வொருவரும் தத்தமது ஆளுமையைப் வெளிப்படுத்துவர். அப்படியானவர்களைப் பாராட்டிப் பரிசளிப்பேன். அதனால் முழுவனத்திலும் எமது வனமே முதன்மை நிலையில் இருந்தது''.

''எனது மருமகன் வெளிநாட்டிற்குச் சென்று, போதியளவு பணம் சம்பாதித்து வந்து, இங்கே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க முடிவுசெய்து என்னிடம் வந்து, ''மாமா, நீங்கள் பல்லாயிரம் பேரை நிர்வகித்தீர்கள். அதனால் நான் ஆரம்பிக்க இருக்கும் தொழிற்சாலைக்கு ஆலோசகராக இருந்து வழி நடத்துங்கள்'' என்றான். மருமகனே, எனக்குப் பாடசாலை முகாமைத்துவம் தான் தெரியும். எனது, நண்பனான சிவபாலனுக்குத்

தொழில் அனுபவம் உண்டு. அவனைக் கேட்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சிவபாலனிடஞ் சென்று கேட்டேன். அவன் சொன்னான், ''நான் தொழிற்சாலையை நிர்வகித்த காலத்தில் நட்டம் தான் ஏற்பட்டது. அதனால் அதை வேலவனிடம் ஒப்படைத்து விட்டேன். அவனது நிர்வாகத்தில் எனது தொழிற்சாலை பாரிய வளர்ச்சியடைந்து பல இலட்ச ரூபாவை வருமானமாகத் தருகிறது. வேலவன் உத்தமன். உதவி செய்யத் தயங்காதவன். என்று கூறி அவனை அழைத்து வந்தார்''.

''சபையோர்களே, அவன் திருக்குறளை இனிமையாகப் பாடி அதன்மூலம் நான் கேட்ட கேள்விகளுக்கு முழுமையான விடையச் சொன்னான்''.

''நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த தன்மையான் ஆளப்படும்'', ''ஐயா, பழைய காலத்தில் அரசர்கள் தான் நாட்டை ஆண்டனர். அவர்கள் நீதியாகவும், மக்களின் உணர்வுகளை அறிந்துமே நாட்டை நிர்வகித்தனர். அதனால் அவர்கள் ஒருவனைச் செயலுக்குத் தகுந்தவனா என ஆய்வு செய்த பின்புதான், அவனைச் செயலில் ஈடுபடுத்துவர். அப்போது குருகுலத்தில் குரு சகல வித்தைகளையும் கற்பிப்பார். மாணவர்ககள் சகல வித்தைகளும் அறிந்தவர்களாக இருப்பர். அவர்கள் மாணவர்களின் திறமைகளையும், மாணவர்களின் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்களில் அவர்கள் நடந்து கொண்ட விதங்கள் பற்றி ஆய்வு செய்வர். அவர்கள் செய்த நல்ல செயல்களையும், தீய செயல்களையும் ஆராய்ந்து நன்மை தருகின்ற செயல்களைச் செய்தவனையே செயலில் வல்லவன் என்று கூறுவர். அவனை அரசன் ஏற்றுக் கொள்வான்''.

''அதைத்தான் நான் நடைமுறைப்படுத்துகிறேன். எனது தும்புத் தொழிற் சாலைக்கு ஒரு முகாமையாளர் தேவை என விளம்பரப்படுத்தினேன். பலர் விண்ணப்பித்திருந்தனர். எனது தந்தையின் சகோதரியின் மகனும் விண்ணப்பித்திருந்தான். அவன் பெண்களின் விடயத்தில் பலவீனமானவன். பாடசாலையில் கற்கும்போதே பிரச்சினைப்பட்டவன். மது அருந்துவான். விண்ணப்பங்களைப் பரிசீலித்து ஒவ்வொரு விண்ணப்பதாரிகளையும் இரகசியமாக விசாரித்துவிட்டு முடிவெடுத்துக் கொண்டு கதிரேசனைச் சந்தித்தேன். அவர் கடவுள் பக்தி மிக்கவர். கண்களை மூடிக் கடவுளைப் பிரார்த்திவிட்டுச் சொல்வார். அவர் சொன்னால் கடவுள் சொன்னதைப் போலாகும் என்று எல்லோரும் நம்புவர்''.

நான் ஒரு கூலித்தொழிலாளியின் மகனான ஒருவனைத்தான் முகாமையாளராக நியமிப்பதாக நினைத்திருந்தேன். கண்விழித்த கதிரேசன், ''ஆறுமுகம் என்ற காளையின் மகன் நகுலனை நியமனம் செய்'' என்றார். நான் அதிர்ச்சியடைந்து விட்டேன் என்றான் வேலவன்''. சபையோர்களே, நமது முன்னோரான புலவர்கள் விஞ்ஞானம், தொழில்நுட்பம், மருத்துவம் எனச் சகல துறைகளிலும் வல்லவர்களாகவே இருந்தனர்.

வேலவன் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு எனது கேள்விகளுக்கு விடை சொன்னான், ''வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை ஆராய்வான் செய்க வினை'', ''ஐயா, ஒரு திறமையான தொழிலாளி பொருள் வரும் வழிகளைக் கண்டுபிடித்து, அதற்குப் பொருத்தமான தொழிலாளர்களை நியமித்து பொருள் வரும் வழிகளைப் பெருக்க வேண்டும். அத்துடன் அவற்றை வளப்படுத்தி வருமானத்தை அதிகரிகச் செய்தல் வேண்டும். அவற்றைச் செயற்படுத்தும்போது பல துன்பங்கள், இடர்கள், சிக்கல்கள் வரும் அவற்றையெல்லாம் முறைப்படி நீக்கி வருமானத்தைப் பெருக்கக்கூடியவனைத்தான் செயலுக்குரியவனாகக் கருத வேண்டும்''.

''நகுலன் உத்தமன், ஒழுக்கமானவன், அவன் தொழிலாளர்களை அழைத்துச் சொன்னான், ''தோழர்களே, நான் ஒரு கூலித்தொழிலாளியின் மகன். எனது தந்தை பல இடங்களிலும் சென்று வேலை செய்வார். வேலை கொடுப்போர் அவரை ஓர் அடிமையாகவே கருதினர். இங்கு அவ்வாறு நடைபெறாது. எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற முன்பு வாழ்ந்தோர் சொல்வர். நான் சொல்கிறேன், ''நீங்கள் எல்லோரும் இத்தொழிற்சாலையின் முதலாளிகள். அதனால் அயராது உழையுங்கள். புதிய புதிய செயற்பாடுகளை நீங்கள் செய்வீர்களானால் அதற்கேற்ற சம்பளம் தரப்படும்''. என்று கூறி அவனும் ஒரு தொழிலாளியாகச் செயற்பட்டான்.

''சில நாட்கள் கழிந்தன. நகுலன் ஐந்து பேரை என்னிடம் அழைத்து வந்தான், ''ஐயா, தென்னம் பொருட்களில் பல பெறுமதிமிக்க பொருட்களைச் செய்யலாம் என்கின்றனர். அமுதா என்ற மான். சிரட்டையில் பலவிதமான அழகிய சிற்பங்களை உருவாக்கியுள்ளார். இவற்றிற்கு வெளிநாட்டில் மதிப்பு உண்டென்றம் கூறுகிறார்'' என்று கூறிச் சிரட்டையில் செய்த கைவினைப் பொருட்களைக் காட்டினார். அவை என்னைப் பிரமிக்க வைத்தன. செய்யும்படி சொன்னேன். அவர் தனக்குச் சில ஆயுதங்களும், பத்து உதவியாட்களும் தேவை என்றார். அவர் கேட்டவற்றை எல்லாம் கொடுக்கும்படி நகுலனுக்குச் சொன்னேன்''.

இவர் வாசுதேவன், மின்சாரத்தின் மூலம் இயங்கும் தேங்காய் துருவும் இயந்திரமொன்றைச் செய்துள்ளார்'' என்று அந்த இயந்திரத்தால் தேங்காய் துருவிக் காட்டினார். அதற்கும் சம்மதம் தெரிவித்தேன். இவ்வாறு நகுலன் பல புதுப்புதுத் தொழில்களை ஆரம்பித்தான். அதனால் வருமானம் பத்து மடங்கானது'', சுந்தரலிங்கம் சொன்னார், ''இத்தகைய அறிவு என்னிடம் இல்லை, அதனால்தான் நான் அவ்வாறு சொன்னேன் என்ற சுந்தரலிங்கம், வேலவா மேற்கொண்டு சொல்'' என்றார்.

''வேலவன் மூன்றாவது குறளைப் பாடிவிட்டுச் சுந்தரலிங்கத்திற்குச் சொன்னான், ''அன்பு அறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும் நன்கு உடையவன் கட்டே தெளிவு'', ''ஐயா, செயலுக்காக நாம் தெரிந்தெடுப்பவன் அன்புள்ளவனாகவும், அறிவு

மிக்கவனாகவும், ஒரு விடயத்தைச் சந்தேகமின்றிச் செயற்படுத்தக்கூடியவனாகவும், அவா என்ற ஆசை இல்லாதவனாகவும் இருத்தல் வேண்டும். நகுலன், எல்லாத் தொழிலாளர்-களுடனும் அன்பாகப் பழகுவான். பண்பாகப் பேசுவான். தொழிலாளிகளின் குடும்பத்தினருக்கு நோய் வந்தால், உரிய வைத்தியசாலையை நாடும்படி கூறுவான். அவர்களின் கல்வித் தேவைகளை அறிந்து உதவுவான். மேலும் கற்கும்படி வற்புறுத்துவான். பொருட்களின் மீது ஆசைப்படமாட்டான். தொழிலாளரைக் கொண்டு தனது வேலைகளைச் செய்விக்க மாட்டான். அதனால் அனைவரும் அவன் செய்யச்சொன்ன எல்லாவற்றையும் செய்து முடிப்பர். ஒருமுறை தொழிலாளி ஒருவரின் மகன் விபத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் இருந்தான். உடனடியாக அப் பிள்ளைக்கு இரத்தம் கொடுத்ததோடு, இரவு முழுவதும் அவர்களுடன் கூட இருந்து உதவி செய்தான்''.

''எனது நண்பர் ஒருவன், நகுலனின் நடத்தையைப் பார்த்துவிட்டு, ''அவன் உன்னிடம் நல்ல பெயர் எடுக்க நடிக்கிறான். பொறுத்த நேரத்தில் அதை நீ உணர்வாய் என்றவன், அவனுக்கு என்ன சொல்லியும் புரியவைக்க முடியாது என்று உணர்ந்த நான், ''நீ எப்படியாயினும் அவனைச் சோதனை செய் என்றேன். அவன் இன்னொருவரை அழைத்துச் சென்று அவர் வெளிநாட்டில் வேலை செய்கிறார் என்று கூறி, அவனை அங்கே அழைத்துச் செல்வதாகக் கூறியதோடு, நான் கொடுக்கும் சம்பளத்தை விட மூன்று மடங்கு அதிகமாகவும் தரலாம் என்றும் சொன்னார்'', ''முதலாளி எனக்கு எந்தக் குறையையும் வைக்கவில்லை. நான் வேலையில்லாது கஷ்டப்பட்டபோது எனக்கு வேலை தந்தவர். அவரது நல்ல பண்புகள் எனக்குப் பிடித்தமையால், பல தொழில்களை ஆரம்பித்துள்ளேன். முதலாளியும், தொழிலாளர்களும் என்னில் அன்பும், நம்பிக்கையும் வைத்துள்ளனர். ஊரில் இருக்கும் எனது பெற்றோரையும், மனைவி கயையும், உறவினர்களையும் விட்டுவிட்டு வர நான் விரும்பவில்லை. பணம், தான் வாழ்க்கை அல்ல'' என்றவன். அதைக்கேட்ட எனது நண்பன், நீ புண்ணியம் செய்தவன், பெற்றோர், மனைவி, மக்கள், முதலாளி, தொழிலாளி என்பவர்கள் அமைவது இறைவன் கொடுத்தவரம். இறைவன் உனக்கு அனைத்தையும் தாராளமாகத் தந்துள்ளார்'' என்றவன் சபையோர்களே, நகுலன் கூறியவை அனைத்தும் உண்மையானவை. இன்னும் பலவற்றைக் கூறினான். அவற்றையும் சொல்கிறேன்'' என்றார் சுந்தரலிங்கம்.

''நான்காவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், அதற்கான கதையையும் நகுலன் சொன்னவன். அதை அப்படியே உங்களுக்கும் சொல்கிறேன்''. ''எனை வகையான் தேறியக் கண்ணும் வினைவகையான் வேறு ஆகும் மாந்தர் பலர்'', ''ஐயா, எப்படித்தான் ஒருவரை ஆராய்ந்து நல்லவர் என்ற முடிவுக்கு வந்த பின்பு, அவரைச் செயலிலீடுபடுத்தும்போது மனமாற்றம் அடைபவரும் உள்ர். இதைக் கண்டுபிடிப்பது சிரமமானது. நகுலன் வேலைத்தலத்தில் உள்ள அனைவரையும் சமமாக மதிப்பவன். அவன் தொழிற்சாலையில் உள்ள சகல விடயங்களையும், கவனித்து அவை சரியாக நடைபெறுகின்றனவா என்று ஆராய்வான். தோப்பில் ஆயிரக் கணக்கான தென்னைகள் உள்ளன. தேங்காய்களைப் பறித்து

மலைபோலக் குவித்திருப்பார்கள். அதை உரிப்பதற்குப் பல தொழிலாளர்கள் இருப்பார்கள். பலகாலமாக ஒருவன் தேங்காய்களுக்குப் பொறுப்பாக இருந்தான். அவனை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு இன்னொருவனை நகுலன் நியமித்துவிட்டுத் தினமும் பறிக்கப்படும் தேங்காய்களின் எண்ணிக்கையைக் குறிப்பதற்கும் ஒருவரை நியமித்தான்.

முன்பு மாதாந்தம் சராசரியாகப் பத்தாயிரம் தேங்காய்கள் பறிக்கப்பட்டதாகக் கணக்கு இருந்தது. தற்பொழுது பதினையாயிரம் தேங்காய்கள் பறிக்கப்பட்டன. மாதத்தில் இவ்வளவு பெரிய மாற்றம் வராது என நினைத்த நகுலன் மூன்று மாதங்கள் தொடர்ந்து அவதானித்தான். ஒரு தேங்காய் பறிக்கும் தொழிலாளியை அன்புடன் அழைத்து விசாரிக்க அவன் நடந்தவற்றை விபரமாகக் கூறினான். தேங்காய் ஏற்றிச் செல்லவரும் பாரவூர்த்தியில் மேலதிகமாகத் தேங்காய் ஏற்றப்பட்டது தெரிய வந்தது. அதை ஏற்றியது முதலாளியின் சகோதரியின் மகன். அவன் மிகவும் நல்லவன், ஒழுக்கமானவன். பிறரின் பொருட்களில் ஆசையில்லாதவன் என்று கதிரேசனும் கூறியதால் தான் முதலாளி அவனை நியமித்தார். பணம் மனதை மாற்றும். குற்றச் செயல்களைச் செய்ய வைக்கும். பழி பாவங்களைப் பற்றியோ, பாவ புண்ணியங்களைப் பற்றியோ சிந்திக்க விடாது'' என்று நகுலன் சொன்னபின்பு தான் அவை பற்றிச் சிந்தித்தேன்'' என்று கூறினார் சுந்தரலிங்கம்.

''சபையோர்களே, எனது மருமகன் ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்காக என்னிடம் ஆலோசனை கேட்டபோது, நான் எனது நண்பனான சிவபாலனிடம் கேட்க, அவன் தொழிலில் மிகவும் தேர்ச்சி பெற்றவனான வேலவனையும், நகுலனையும் அழைத்து வந்து எனக்குச் சொன்னதை நான் அப்படியே உங்களுக்குச் சொல்கிறேன். ''வேலவன் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னான். ''அறிந்து ஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான் சிறந்தான் என்று ஏவற்பாற்று அன்று'', வேலவன் சொன்னான், ''ஐயா, ஒரு செயலை நன்கு செய்பவனை விட்டுவிட்டு, வேறு ஒரு காரணத்துக்காக வேலை செய்யத் தெரியாதவனைச் சிறந்தவன் என்று எண்ணி முடிவெடுத்து செயலைச் செய்வித்தால் பல்வேறுபட்ட துன்பங்கள் வந்து சேரும். எனது நண்பனான சிவராமன் என்ற குதிரையிடம் அருளன் என்ற குதிரை முகாமையாளராகப் பணியாற்றியது. அருளன் சகல விடயங்களையும் அறிந்தவன். ஒழுக்கமானவன். சிவராமன் தொழிலில் நட்டமேற்பட்டதாகக் கூறி அவ்வூர்த் தனவந்தரான சிவானந்தன் என்ற குதிரையிடம் கடனாகப் பணம் பெற விரும்பினான். சிவானந்தன் முதியவர். பிள்ளைகள் இல்லாதவர். அதனால் அவரது சொத்தை அபகரிக்க நினைத்தான். சிவானந்தன் தனது சகோதரியின் மகனான வைகுந்தன் என்ற குதிரையை முகாமையாளராகச் சேர்க்கும்படி கூறினார். அதனால் சகல தொழில்களிலும் வல்ல அருளனை விலக்கிவிட்டு வைகுந்தனை முகாமையாளராக நியமித்தான்''.

''வைகுந்தனுக்கு முகாமைத்துவம் பற்றி எதுவும் தெரியாது. அதனால் தொழிலாளர்களுடன் முரண்பட்டான். சிவராமனை மதியாது தான் நினைத்தவாறு நடந்தான். அத்துடன் சிவராமனைப் பற்றித் தவறாகக் கூறி வந்தான். அதனால் சிவானந்தன்

சிவராமனுக்குப் பணம் தரமறுத்து விட்டார். தொழிற்சாலையில் வேண்டுமென்றே குளப்பத்தை விளைவித்தான் வைகுந்தன். அதனால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். சிவானந்தன் செய்வதறியாது தடுமாறினான்'' என்று வேலவன் கூறினான். அதனால் எச்செயலைச் செய்வதானாலும், அச் செயலைச் செய்யக்கூடியவனையே தெரிந்து ஒப்படைத்தல் வேண்டும். இல்லாவிட்டால் செயலை முடிக்க முடியாததோடு பல துன்பங்களும் வந்து சேரும்'' என்றார் சுந்தரலிங்கம்.

தொடர்ந்து சுந்தரலிங்கம் பேசினார், ''சபையோர்களே, வேலவன் ஆறாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னான், ''செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு எய்த உணர்ந்து செயல்'', சபையோர்களே வேலவன் சொன்னான், சிவராமன் பெரும் துன்பப்பட்டுப் போனார். மிகவும் நேர்மையாகவும், தொழில் நுட்பங்கள் அனைத்தும் தெரிந்தவனாகவும் கடமையாற்றிய அருளனைப் பொருளாசை கொண்டு பல்வேறு துன்பங்களைக் கொடுத்து அவனை வேலையில் இருந்து நீக்கியமைக்காகக் கடவுள் கொடுத்த தண்டனை இது. என்று தினமும் சொல்லிச் சொல்லி அழுவார். அருளன் திறமையானவன். அவன் செய்ய வேண்டிய வேலைகளை ஆராய்ந்து, காலத்திற்கேற்றவாறு செயற்படுவான். தொழிலாளர்களுடன் முரண்பட மாட்டான். தன்னைவிடக் கீழானவர்கள் கூறும் வார்த்தை-களையும் பொறுமையாகக் கேட்பான். பின்பு அவற்றில் ஏதாவது உண்மை இருக்கலாம் என்று ஆராய்வான். அப்படியான திறமைமிக்கவனைக் காரணமின்றி நீக்கியதால்தான் இவை யாவும் நடைபெற்றன என்று வருந்தினார் சிவராமன். அதனால் சபையோர்களே, செயலைச் செய்பவனின் திறமையை ஆராய்ந்து, அவன் செய்ய வேண்டிய செயல்களை ஆராய்ந்து, காலத்திற்கேற்ற வகையில் செயற்படுபவனிடம் தான் செயல்களை ஒப்படையுங்கள்'' என்றார் சுந்தரலிங்கம்.

''சபையோர்களே, வேலவன் சொன்னான், ''நான் இட்டபணியை அதற்கேற்ற வழிமுறைகளைக் கையாண்டு, இவன் வெற்றிகரமாகச் செய்து முடிப்பான் என்று முடிவு கட்டியபின்பே அச்செயலை அவனிடம் ஒப்படைத்தல் வேண்டுமென்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் குறளின் மூலம் சொல்லியிருக்கிறார். ''இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன்கண் விடல்'', சிவராமன் பழந்தமிழ் நூல்கள் பலவற்றைப் படித்துவிட்டு, அதன் உரையையும், விளக்கத்தையும் சொல்பவர். குறளின் மீது அவருக்கு விருப்பம் அதிகம். எதற்கெடுத்தாலும் குறளையே உதாரணமாகப் பேசுபவருக்கு இது தெரியாமற் போனது வியப்பிற்குரியது. ஆராய்ந்து பார்த்தால் இது விதியென்றே கூறுதல் வேண்டும். இப்போது சொல்கிறார், ''நான் சிவானந்தனின் பணத்தைக் கவரவேண்டும் என்ற நினைவில் சிவானந்தன் கூறியபடியே தொழிற்சாலையை நடத்தினேன். சிவானந்தனின் பேச்சைக்கேட்டு ஒழுக்கமானவனான அருளனைப் பொய்க்குற்றச்சாட்டுக்கள் கூறி விலத்தினேன். அதனால் தான் இவ்வளவு கஷ்டங்களும் எனக்கு வந்தன என்று கூறி அழுகிறார். இது கண்கெட்ட பின் சூரிய

நமஸ்காரம் செய்வது போன்றது என்று வேலவன் சொன்னான். அவன் சொன்னவை யாவும் உண்மையானவை என்றார் சுந்தரலிங்கம்.

''சபையோர்களே, வேலவன் சொன்னான், ''சிவராமன் பேராசையால் சிவானந்தனின் சொத்து முழுவதையும் கவரலாம் என்று எண்ணித்தான் செயற்பட்டார். வைகுந்தனுக்குத் தொழிலில் அக்கறை இல்லை. அவன் நண்பர்களுடன் சேர்ந்து மதுவைக் குடித்துவிட்டு ஆடிப்பாடிக் குதூகலமாக வாழ்ந்தவன். சிவானந்தனிடம் கடனாக ஒரு கோடி ரூபா கேட்டிருந்தார். அதைத் தருவதாகச் சிவானந்தன் ஒப்புக் கொண்டிருந்தார். அதனால் பணம் வாங்கும் வரைக்கும் வைகுந்தனுக்குத் தொழில் கொடுப்போம். பணத்தை வாங்கியபின் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வைகுந்தனை வேலையில் இருந்து நீக்கலாம் என நினைத்தார். அதைப் புரிந்து கொண்ட சிவானந்தன் தனது எண்ணங்கள் நிறைவேறும் வரை பணத்தைக் கொடாது சாக்குப் போக்குகள் சொல்லி வந்தார். அதனாலும், வைகுந்தனின் நிர்வாகத் திறமையின்மையாலும் சிவராமனின் தொழில் அழிந்துவிட்டது''. வள்ளுவர் சொன்னதையும், எனது பேரராசை மறக்க வைத்துவிட்டது. ''வினைக்கு உரிமை நாடிய பின்றை அவனை அதற்குரியன் ஆகச் செயல்'', அதாவது இந்தச் செயலைச் செய்து முடிக்க இவன் தான் தகுதியானவன் என்று தெளிவாக உணர்ந்த பின்பே, அதைச் செய்யும் பொறுப்பை அவனிடம் ஒப்படைக்க வேண்டும். இது தெரிந்தும் பண ஆசையால் எதுவும் தெரியாத வைகுந்தனிடம் செயலைச் செய்யும் பொறுப்பைக் கொடுத்து ஏமாந்து விட்டேன்'' என்று தினமும் அழுவதாக வேலவன் கூறினான்''. ''சபையோர்களே, செயலை நல்லமுறையில் செய்து முடிக்காதவனிடம் செயலை ஒப்படைத்தால் சிவராமனைப் போலத்தான் ஒப்படைப்பவர் தினமும் சொல்லிக் கொண்டு அழுவார்'' என்றார் சுந்தரலிங்கம்.

''சபையோர்களே, வேலவன் மிகுந்த புத்திசாலி. அவன் ஒரு திறமையானவன். தொழில் அதிபர் என்பதை அவனது கதைகளில் இருந்து உணர்ந்து கொண்டேன். அவன் தொடர்ந்து குறள் ஒன்றைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும் சொன்னான், ''வினைக்கண் வினை உடையான் கேண்மை வேறாக நினைப்பானை நீங்கும் திரு'', ''ஐயா, முயற்சியுடைய திறமைசாலியின் உறவை ஒருபோதும் முறிக்கலாகாது. அவன் முரண்பாடாக எதையாவது சொல்லிவிட்டால், அதை ஏன் சொன்னான் என்று ஆராய வேண்டுமே தவிர, உடனடியாக முடிவை எடுக்கக் கூடாது. ஏனென்றால் முயற்சியுடைய செயல்திறன் மிக்கவனின் உறவைத் துண்டித்தால், அவனோடு சேர்ந்து செல்வங்கள் யாவும் சென்றுவிடும்''.

''எனது தொழிற்சாலையில் பொறியலாளராகக் கடமையாற்றிய யாதவன் என்ற குரங்கு மிகவும் நேர்மையானவன். தீய பழக்கங்கள் அற்றவன். அவனுக்கும் எனது உறவினனான தொழில்நுட்ப உத்தியோகத்தருக்குமிடையில் பெரியதொரு முரண்பாடு ஏற்பட்டமையால் இருவரும் மோதிக் கொண்டனர். அப்போது யாதவன், ''உனது மைத்துனனை விட்டால் உனக்கு யாரும் தொழில்தர மாட்டார்கள். உனக்கு வேலையே

தெரியாது. இவரை விட்டால் எனக்குப் பலபேர் வேலை தருவார்கள். இது ஏதோ வேலை செய்ய முடியாதவர் என்று அவர் நினைக்கிறாரா? நான் இல்லாவிட்டால் தொழிற்சாலையை மூடவேண்டும். முதலாளி எப்போதும் உனக்கு உதவி செய்தபடி இருக்கிறார். அதனால் தொழிலாளர்களின் வெறுப்புக்குள்ளாகியிருக்கிறார். முதலாளி என்பவர் பக்கம் சாராது நீதியுள்ளவராக இருத்தல் வேண்டும்'' என்று கூறியுள்ளான்''.

''இதைக் கேட்டுக் கொண்டிருந்த பலர் எனக்குக் கூறினர். எனினும் நான் அவரை அழைத்து எதுவும் கேட்கவில்லை. ஒரு வாரம் செல்ல அவன் என்னிடம் வந்து சொன்னான், ''ஐயா, நான் அன்று சொல்லக்கூடாத வார்த்தைகளைக் கூறியும், நீங்கள் அதைப்பற்றிக் கேட்கவில்லை. அது உங்களது பெரும் தன்மை. ஆனால் அதை ஏன் கூறினேன் என்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அவன், தான் முதலாளியின் நெருங்கிய உறவினன் என்ற திமிரில் தொழிலாளர்களுடன் மோசமாக நடந்து கொள்கிறான். அதை உங்களுக்குச் சொல்ல எனக்கு விருப்பமில்லை. தொழிலாளர்கள் வெறுப்படைந்தால் தமது வேலைகளைச் சரியாகச் செய்ய மாட்டார்கள்…'' என்றபோது நான் சொன்னேன், ''யாதவா, நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லை. நீ அப்படிப் பேசுவாயென அவன் எதிர்பார்க்கவில்லை. அதனால் அவன் பயந்து விட்டான். உன்னை, நான் ஒருபோதும் வேலையைவிட்டு அனுப்பமாட்டேன் என்று அவனுக்குத் தெரியும். எனது மனைவியும் அவனது தந்தையும் அவனை எச்சரித்துள்ளனர். இருவரும் இல்லை எல்லோரும் உன்னைத்தான் நம்புவர். தொழிலாளர்கள் இப்போது அவன் அடங்கியதால் மகிழ்வுடன் வேலை செய்கிறார்ககள் என்றபோது யாதவன் சொன்னான், ''உங்களது மனைவியும், மாமாவும் என்னோடு இது சம்பந்தமாகக் கதைத்தார்கள்'', ''சபையோர்களே, ஒழுக்கமான, நல்ல முதலாளி உறவைக் காரணமின்றித் துண்டிக்கமாட்டான். அத்துடன் எவரின் பேச்சையும் கேட்கமாட்டான். முயற்சியுடைய திறமையானவனின் தொடர்பையும் நீக்கமாட்டான்'' என்றார் சுந்தரலிங்கம்.

''சபையோர்களே, வேலவன் சொன்னான், ''ஐயா, நான் சொல்பவை யாவும் எனது முகாதைத்துவக்கருத்தல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் சொன்ன கருத்துக்கள்,'' என்று கூறி விட்டுக் குறளை இனிமையாகப் பாடினான். வேலவன், ''நாடோறும் நாடுக மன்னன்; வினைசெய்வான் கோடாமை கோடாது உலகு'' ''ஐயா, வள்ளுவர் எவ்வளவு அர்த்தமுள்ளதாகச் சொல்லியுள்ளார் தெரியுமா, தொழில் செய்பவனின் மனம் வேதனைப்படும்படி தொழில் கொடுப்பவன் நடந்து கொண்டால் தொழில் கெடாது. அத்துடன் உலகமும் கெடாது. எனவே தொழில் கொடுப்பவன் தொழிலாளர்களது மனம் கோணாதபடி நடக்க வேண்டும். திருக்குறளைப் படிக்குமாறு கூறியவர் கதிரேசன் அதற்கு விளக்கம் தந்தவர் தமிழறிஞர். அதனால் அந்த வரிகள் எனது மனதில் கற்சிலையில் பதித்த எழுத்துக்களாகப் பதிந்து விட்டது. அதை அழிக்கமுடியாது. அதனால் தான் நான் யாதவனை எதுவும் கேட்கவில்லை. மாமனாருக்குச் சொன்னேன். அவர் உலகமறிந்தவர். நீதி நியாயம் தெரிந்தவர். அதனால் அவர் தனது இனத்தவனை அழைத்து எச்சரித்துள்ளார். அதனால் அவன் அடங்கிவிட்டான். யாதவனை

முழுமையாக நானும் எனது மனைவியும் மாமனாரும் புரிந்து வைத்திருக்கின்றோம். யாதவன் தொழிலாளர்களது நலனுக்காகத் தான் என்னைப் பேசியுள்ளான்.'' என்று வேலவன் சொன்னபோது நான் ஆச்சரியப்பட்டேன். இவை யாவும் எனக்குத் தெரியாது மருமகன் கேட்டபடியால் அவற்றை அறிந்து கொண்டேன்'' என்றார் சுந்தரலிங்கம்.

சுந்தரலிங்கம் உரையாற்றி முடிந்ததும் கதிரேசன் வந்து சொன்னார், ''நாம் எதிர்பார்த்ததை விடச் சிறப்பாகத் திருக்குறள் மகாநாடு நடைபெற்று வருகிறது. பேச்சாளர்கள் மிகவும் திறமையாகப் பேசுவதாகப் பிற வனங்களில் வாழும் அறிஞர்கள் எமக்குத் தெரிவித்த வண்ணம் இருக்கின்றனர். அதற்காகப் பேச்சாளர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். அடுத்துச் சுற்றம் தழால் என்ற அதிகாரத்தை விளக்கிக் கூறத் தமிழறிஞரை அழைக்கிறேன்''என்று கூறிவிட்டுச் செல்லத் தமிழறிஞர் மேடைக்கு வந்து கரங்கூப்பி வணக்கம் தெரிவித்தார். ''சபையோர்களே, வித்திப்படி தான் வாழ்க்கை அமைகிறது. முயற்சி உள்ளவனாக அறிவுள்ளவனாக எதையும் தாங்கும் மனமுடையவனாக இருப்பதற்கும் காரணம் விதிதான் என்று எண்ணாது சுற்றத்தவருடன் இணைந்து மகிழ்வுடன் வாழ்ந்தால் விதியையும் வெல்லலாம். வெல்ல முடியாதென்று எதுவும் இல்லை. ஒருவரால் முடியாத செயலை இன்னொருவர் இலகுவாகச் செய்து முடித்து விடுவார். எல்லாச் செயல்களும் செய்து முடிக்கப்படுகின்றன என்று வள்ளுவர் கூறுகிறார், ''பற்று அற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல் சுற்றத்தார் கண்ணே உள'' ''சபையோர்களே, ஒருவர் வறியவரான காலத்திலும் அவரது உறவை விரும்பி அவரைப் பாராட்டிப் பேசும் குணம், நல்ல உறவினரிடம் எப்போதும் இருக்கும். ஏழையாவதும் பணக்காரனாவதும் விதியென்று ஏற்கனவே கூறினேன். எனது தந்தை ஒரு விவசாயி. கதிரேசனது தந்தையும் விவசாயி. நான் சிறுவனாக இருக்கும்போதே எனது தந்தை நோய்வாய்ப்பாட்டுவிட்டார். எனது தந்தையும் கதிரேசனது தந்தையும் இணை பிரியாத நண்பர்கள். தந்தை நோயாளியான பின்பு நான் படிப்பதை விட்டுவிட்டேன். அதை அறிந்த கதிரேசனது தந்தை என்னை அழைத்துச் சென்று கற்பித்தார். தேவையான பொருட்களை வாங்கித் தந்தார். அதனால் தான் எமது குடும்பம் வாழ்ந்தது. சில வருடங்களின் பின் எனது தந்தை இறந்துவிட்டார்.''

சிறிது நேரம் பேசாதிருந்த தமிழறிஞர் கண்களைத் துடைத்து விட்டுப் பேசினார். அவரது குரல் கரகரத்தது, ''நல்லவர்களின் உறவு பலரை வாழ வைக்கும். எமது தந்தை இறந்த பின்பும் அவர் எமக்கு உதவியதோடு, அவர்கள் பழகிய விதத்தையும் பெருமையாகக் கூறுவார். இவ்வாறு எல்லோரும் வாழ்ந்தால் உலகில் பஞ்சம், பசி, ஏழ்மை என்பது இருக்காது''

''சபையோர்களே, வள்ளுவர் சொல்கிறார், ''விருப்பு அறாச் சுற்றம் இயையின் அருப்பு அறா ஆக்கம் பலவும் தரும்''. ''ஒருவருக்கு அன்பு நீங்காத உறவு கிடைத்தால், அது அவனுக்குத் தொடர்ச்சியாகச் சகல செல்வங்களையும் கொடுக்கும். வள்ளுவர்

கூறியது இன்றும் பொருத்தம் உள்ளதாகவே இருக்கிறது. கதிரேசனது தந்தை பல அறிஞர்களுடன் தொடர்புள்ளவர். அதனால் அறிஞர்கள் அவரை மதித்து வந்தனர். பரமேஸ்வரன் என்ற ஒட்டகம் எமது ஊரில் பெரும் வணிகன். அவன் கதிரேசனது நண்பன். கதிரேசன் சொல்வதையெல்லாம் செய்பவன். கதிரேசனது தந்தை எனது கல்விக்கு உதவி செய்யுமாறு கேட்டார். பரமேஸ்வரனின் ஒரு சகோதரன் பண்டிதர். அவர் என்னை அழைத்துச் சென்று கற்பிப்பார். அதனால் தான் நான் கல்வியில் பெரும் விருப்பங் கொண்டு படித்தேன்''.

''பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த மயூரன் என்பவர் பரமேஸ்வரனின் மனைவியின் உறவினர். அதனால் பரமேஸ்வரன் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவரின் உதவியால் தான் என்னால் பல்கலைக்கழகத்தில் மூன்று பட்டங்களையும் பெற முடிந்தது. கதிரேசனின் தந்தையின் அன்பு நீங்காத உறவு தான் என்னை இந்நிலைக்கு உயர்த்தியது. அதனால் சபையோர்களே, அன்பு நீங்காதவர்களின் உறவை எந்த வழியிலாவது பெறுங்கள். அது உங்களுக்குப் பல்வேறு வகையான செல்வங்களை அள்ளித் தரும்''.

தமிழறிஞர் மூன்றாவது குறளைப் பாடினார். ''அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக் கோடு இன்றி நீர்நிறைந்து அற்று'', ''அன்பான சபையோர்களே, சுற்றத்தாருடன் இனிமையாகப் பேசிப் பழகாதவர்களுடைய வாழ்க்கை, கரையில்லாத குளம் நீரால் நிறைந்திருப்பதைப் போன்றது. முன்பு வாழ்ந்த அரசர்கள் பெய்யும் மழைநீரின் ஒரு துளிகூடக் கடலுக்குப் போகக் கூடாது என்று நினைத்துப் பல குளங்களை ஆழமாக வெட்டினர். அதன் கரையை உயர்த்தினர். அதனால் மழைநீர் முழுவதும் அங்கு தங்கி நின்றமையால் நாடு செழித்தது. கரை இல்லாத குளத்தில் மழை பெய்யும்போது மட்டும் மழைநீர் தேங்கி நிற்கும், மழைவிட்டதும் போய் விடும்''.

''எனது தாயாரின் சகோதரன், மது அருந்திவிட்டுத் தீய செயல்கள் அனைத்தையும் ஈவு இரக்கமின்றிச் செய்பவன். அவனைப் போலவே அவனது பிள்ளைகளும் இருந்தனர். அதனால் அம்மா என்னை அவர்களுடன் பேச விடுவதில்லை. பாடசாலைக்கும் அவர்கள் ஒழுங்காக வருவதில்லை. ஆசிரியர்கள் கண்டித்தால் அவர்கள் சென்று தந்தையிடம் கூறத் தந்தை நன்றாகக் குடித்துவிட்டு வந்து கலகம் செய்வார். அதனால் அவரோடும், பிள்ளைகளோடும் யாரும் பேசுவதில்லை. கண்டால் விலகிச் சென்று விடுவார்கள்''.

''ஒரு நாள் எனது அம்மாவின் சகோதரன் குடித்துவிட்டுத் தள்ளாடியபடி வீதியால் வந்தபோது வாகனம் ஒன்று அவரை மோதிவிட்டது. வழிப்போக்கர்கள் யாரும் அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவில்லை. பலமணி நேரம் கழித்து அதைக்கேள்விப்பட்ட கதிரேசன் அவரை அழைத்து வந்து வைத்தியசாலையில் சேர்த்தார். இரத்தம் அதிகமாக வெளியேறியதால் இரத்தம் தேவை என அறிவித்தும், யாரும்

கொடுக்க முன்வரவில்லை. ‘‘இவன் பிழைத்தால் கரைச்சல் சாகட்டும்’’ என்று சிலர் கூறிவிட்டுச் சென்றனர். கதிரேசன் தானும் இரத்தம் கொடுத்து வேறு மூவரையும் இரத்தம் கொடுக்கச் சொல்ல, அவர்களும் கொடுத்தனர். கதிரேசன் காலை உணவை உண்ணாது இரத்தம் கொடுத்தமையால் மயக்கம் அடைந்து விட்டார். அதைக் கேள்விப்பட்ட ஆயிரக்கணக்கானோர் வைத்தியசாலைக்கு வந்து விட்டனர். அதனால் சபையோர்களே, சுற்றத்தாருடன் மனம் கலந்து, அன்பாகப் பேசுங்கள்’’ என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

‘‘தமிழறிஞர் நான்காவது குறளை இனிமையாகப் பாடிய பின் அதன் உரையையும், அதற்கான விளக்கத்தையும் கதைமூலம் விளக்கினார்’’, ‘‘சுற்றத்தால் சுற்றப் படஒழுகல்; செல்வந்தான் பெற்றத்தால் பெற்ற பயன்’’, ‘‘சபையோர்களே, ஒருவர் சுற்றத்தவர்களுடன் மகிழ்வாக சுற்றியிருக்கத்தக்கதாக வாழ்வது என்பது அவன் செல்வத்தைப் பெற்றதனாலாகிய உயர்ந்த பயனாகும். கடவுள்தான் எல்லாவற்றையும் கொடுக்கிறார். கிணற்றைப் படைத்தார். நன்நீரைத் தருகிறது. இறைக்க இறைக்க ஊறுகிறது. மரங்களைப் படைத்தான் காய், கனிகளைத் தருகிறது. வெட்ட வெட்ட தழைக்கிறது. பசுவைப் படைத்தார் தாயைப் போலப் பால் தருகிறது. அறிவில்லாத அவையே தரும்போது, அறிவுள்ள மனிதன் ஏன் தானதர்மம் செய்யாது வாழ்கின்றான். கிணறு இறைக்க இறைக்க ஊறுவதுபோலப் பொருளைக் கொடுக்கக் கொடுக்க வந்து சேரும். நான் பெரும் பணக்காரன் அல்ல. என்னுடைய வருமானத்திற்கேற்றபடி கொடுக்கிறேன். எனக்குத் தேவை ஏற்படும்போது, பணம் வந்து சேர்கிறது’’ என்று கதிரேசனின் தந்தை சொல்வார்’’.

‘‘கதிரேசன் மகளுக்குத் திருமணம் பேசினார்கள். அப்போது அவரது கையில் காசு இல்லை. ஐம்பதினாயிரம் ரூபா இனாமாகத் தரும்படி மாப்பிள்ளை வீட்டார் கேட்டதாகக் கல்யாணத் தரகன் சொன்னான். அவர் கலங்கவில்லை. கடவுள் உதவுவார் என்று சொல்லிவிட்டு எதுவும் செய்யாதிருந்தார். அவரிடம் பணம் பெற்று வைத்தியராக இருக்கும் ஒருவன் வந்து, ‘‘ஐயா, எனது தந்தை எனக்கு ஐந்து வயதாகும் முன் நோய்வாய்ப்பட்டு இறந்து விட நீங்கள் தான் எனக்கு கல்வி கற்க உதவினீர்கள். அதன் பெறுமதியை என்னால் தர முடியாது. அதனால் நீங்கள் விரும்பினால் உங்களது மகளை எனக்குத் திருமணம் செய்து தாருங்கள். எனக்குச் சீதனமாக எதுவும் தேவையில்லை’’ என்றான். தாயும் சம்மதித்தாள். மாமன் பலத்த எதிர்ப்புத் தெரிவித்து தனது மகளைத் திருமணம் செய்றுமாறு வற்புறுத்திய போதும், அவனும் தாயும் மறுத்துவிட்டனர். அடுத்த முகூர்த்தத்தில் திருமணம் நடைபெற்றது. அதனால் சபையோர்களே, ஒருவரைச் சுற்றிச் சுற்றத்தவர் அன்புடன் இருப்பது அவர் பெற்ற செல்வத்தின் பயனாகும்’’. என்று கூறிப் பேச்சை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

''தமிழறிஞர் ஐந்தாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும் கதையையும் கூறினார்'', ''கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய சுற்றத்தால் சுற்றப்படும்'', ''சபையோர்களே, சுற்றத்தவர்களுடன் இனிமையாகப் பேசி, அவர்களுக்குத் தேவையேற்படும்போது, அவர்களுக்கு உதவி செய்து வாழ்பவர்களைச் சுற்றத்தார் ஒருபோதும் பிரிந்து செல்ல மாட்டார். கதிரேசனின் தந்தையின் தந்தையின் காலத்தில் இருந்து இருபத்தைந்து ஏக்கர் கோவிலுக்குச் சொந்தமான வயலை அவர்கள் செய்து வந்தனர். புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட கோவிலின் தலைவர் அந்த வயலை விடும்படி கூற, அவர் மறுபேச்சு பேசாது விட்டுவிட்டார். ஊரவர்கள் விடவேண்டாம் என்று சொன்னபோது, அவர் சொன்னார், ''இவ்வளவு காலமும் அந்த வயலில் இருந்து வருமானத்தைப் பெற்றேன். இனி இன்னொருவர் பெறட்டும். அது தான் கடவுளின் விருப்பம்'' என்றவர்.

எதிரிகளுடன் கூட அவர் அன்பாகப் பேசுவார். அவர்கள் கஷ்ரப்படும்போது வலியச் சென்று உதவுவார். அதனால் எல்லோரும் அவரை மதித்தனர். அடுத்த வருடம் கோவில் தலைவரை மாற்றி விட்டார்கள். அதனால் புதிய தலைவர் அந்த வயலைத் திரும்பவும் கதிரேசனது தந்தையிடம் கொடுக்க அவர் ஒரு ஏழையிடம் கொடுத்து அவர் வயலைச் செய்வதற்கான உதவிகளையும் செய்தார். அதனால் அவரைச் சுற்றி இருந்த சுற்றத்தவர், இப்போது கதிரேசனுடன் சேர்ந்திருக்கின்றனர். அன்பு தான் அனைவரையும் கவர்ந்திழுக்கும் காந்தக்கல்'' என்று கூறித் தன் பேச்சை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

''தமிழறிஞர் ஆறாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், அதற்கான கதையையும் சொன்னார்'', ''பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின் மருங்கு உடையார் மாநிலத்து இல்'', ''சபையோர்களே, பெரும் கொடையாளியாகவும், கோபங் கொள்ளாதவனாகவும் வாழ்ந்து வந்தால், அவனைப் போன்ற சுற்றத்தை உடையவன் இவ்வுலகில் யாரும் இல்லை. சிவகுரு என்ற பன்றி முன்கோபி. எடுத்தெறிந்து கதைப்பவன். கதிரேசனின் தந்தையைக்கூட அவன் மதித்ததில்லை. ''எனக்குப் பணம், பொருள் தேவையில்லை. பணம், பொருள் தேவையானவர்கள் தான் அவரைக் கும்பிட வேண்டும். அதைத்தான் அவரும் விரும்புகிறார். அதைப் பயன்படுத்திப் பலர் வாழ்கின்றனர். அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. என்ன பைத்தியம் தெரியுமா…? தன்னை விழுந்து கும்பிட வேண்டும் என்ற பைத்தியம்''.

''பாடசாலைக்குச் சென்ற சிவகுருவின் மூத்தமகன் பாடசாலையில் மயங்கி விட்டான். வைத்தியசாலைக்கு அவனைக் கொண்டு சென்றபோது, அவனைப் பரிசீலித்த மருத்துவர், ''இதய நோய் என்றும், வைத்தியசாலையில் குறைந்தது ஒரு மாதம் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டும் என்றும் கூறினார். அதைக்கேட்ட சிவகுரு அதிர்ச்சி அடைந்தான். அன்றன்று உழைப்பது அன்றன்று செலவுக்குப் போதாது. அதனால் கலக்கத்துடன் சென்றான்''.

அவன் பலரிடம் கைமாற்றாகப் பணத்தைக் கேட்டபோது யாரும் கொடுக்கவில்லை. கதிரேசனின் தந்தை அவனது வீட்டிற்குச் சென்று சொன்னார், ‘‘என்னிடம் இப்போது பணம் இல்லை, எனது மோதிரத்தைத் தருகிறேன். அடைவு வைத்துவிட்டுப் பணத்தை எடு. பற்றுச்சீட்டைக் கொண்டு வந்து தா’’ என்றவர். சிவகுரு கொடுத்த பபற்றுச்சீட்டை வாங்கிய கதிரேசனது தந்தை சில நாட்களின் பின் பணத்தைக் கொடுத்து மோதிரத்தை மீண்டார். இன்றுவரை சிவகுரு காசைக் கொடுக்கவில்லை. அவருடன் கூட இருந்து அவரின் வேலைகளைச் செய்கிறான். சபையோர்களே, கதிரேசனது தந்தையின் குணம் தான் அவருக்குச் சுற்றத்தைச் சேர்த்தது. இந்தக் காட்டில் அவருக்குள்ள சுற்றத்தைப் போல யாருக்கும் இல்லை என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

‘‘சபையோர்களே, காகங்களைப் போலத்தான் கதிரேசனது தந்தை வாழ்ந்து வந்தார். ஏழைகள் யாரும் சமைக்காவிட்டால் தனது வீட்டில் சமைத்த உணவைக் கொண்டு சென்று கொடுப்பார். உணவு தேவை என்று கேட்பவர்கள் எந்நேரம் வந்தாலும் உணவு கொடுப்பார். அப்போது அயலவர்கள் உதவி செய்வர். எங்காவது தூர இடம் சென்றால் அயல் வீடுகளில் உள்ள சிறுவர்களுக்கும் இனிப்புக்கள் வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பார். அவரது மனைவி ஒரு நாள் நோய்வாய்பட்டு விட்டாள். அதனால் அவளால் எழுந்து நடமாட முடியவில்லை. அவளுக்கு உதவியாகப் பலர் வந்தனர். போட்டி போட்டு உணவு வகைகளைச் சமைத்துக் கொடுத்தனர். ‘‘சபையோர்களே, தனக்குக் கிடைத்த உணவைப் பகிர்ந்து உண்பவர்களுக்கு வாழ்வில் ஒரு போதும் உணவுப் பஞ்சம் உண்டாகாது’’ என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

‘‘சபையோர்களே, தலைமைப் பதவிகளில் இருப்போர் முன்பு அரசர்கள் இருந்தனர். தற்பொழுது திணைக்களத்தலைவர்கள் எல்லோரையும் ஒரு மாதிரியாகப் பாராது, அவர்களது தகுதியறிந்து நடந்து கொண்டால், அது அனைவரையும் கவர்ந்து மகிழ்ச்சியாக்கும், ‘‘பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின் அதுநோக்கி வாழ்வார் பலர்’’. ஒவ்வொருவரினதும் தகுதி தராதரம் பதவி ஆகியவற்றை மனதில் வைத்தே அவரவரை மதித்தல் வேண்டும். ஆசிரியருக்கு ஒரு வகையான மதிப்பு, கல்வி சார் உயர் அதிகாரிக்கு இன்னொரு வகையான மதிப்பு, மாணவர்களுக்கு வேறொரு மாதிரியான மதிப்பு, அதாவது ஒவ்வொருவரையும் தனித்தனியாகவே மதிப்பீடு செய்தல் வேண்டும்.

கதிரேசனின் தந்தையார் அவ்வாறு தான் நடந்து வந்தார். தந்தையைப் பிறந்தவுடனேயே இறந்தவன் திவாகரன் என்ற மான். திவாகரனின் கல்விக்கான செலவு முழுவதையும் கதிரேசனின் தந்தையே ஏற்றார். அவன் பொறியியலாளராக வந்தபின் தனவந்தர் ஒருவரின் மகளைத் திருமணம் செய்து இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தான். ஒருநாள் அவன் மனைவி பிள்ளைகளுடன் கதிரேசனின் தந்தையின் வீட்டுக்கு வந்தபோது அவரது வீட்டு முற்றம் பெருக்கப்படாது குப்பைகள் எங்கும் இருந்தன. உடனே திவாகரன் பிற்பக்கம் சென்று விளக்குமாற்றை எடுத்து வந்து முற்றத்தைத் துப்பரவு செய்ய

ஆரம்பித்தான். அவனது மனைவி அதைக்கண்டு பதறிப் போனாள். கதிரேசனின் தந்தை வந்து சொன்னார், ''மகனே, நீ எனது வீட்டுக்காரனாக வளர்ந்தாய். இப்போது பொறியியலாளர். நீ இந்த வேலையைச் செய்வதைக் கண்டால் பிறர் கேலி செய்வர். உனது மனைவிக்குப் பிடிக்காது. அவள் தனது பெற்றோருக்குச் சொல்லிக் குறைப்படுவாள். நான் முதியவன். வீட்டு வேலை செய்ய வருபவனின் பிள்ளைக்குச் சுகமில்லை. அதனால் அவனை வரவேண்டாம் என்று சொல்லி விட்டேன். எனது பேரப்பிள்ளைகள் வந்து சுத்தம் செய்வர். நீ உள்ளே வந்து இரு''

திவாகரன் எதையோ சொல்ல முயற்சித்தான். ''நீ எதையும் சொல்லத் தேவையில்லை''. மதிப்பு, பாசம், அன்பு என்பன மனதில் இருந்தால் போதும். அவரவரது தொழிலுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் அதுவும் அறிவுள்ளவர்கள் கட்டாயம் கொடுத்தால் வேண்டும்'' என்றபோது திவாகரன் எதுவும் பேசாது உள்ளே சென்றான். ''சபையோர்களே, மதிப்பென்பது கல்வியால் வருவது, பணத்தால் வருவது, அறிவால் வருவது. உதாரணமாகக் கல்வி கற்ற ஒருவரை நாம் மதிக்கவில்லை. அவர் கற்ற கல்வியையே மதிக்கிறோம். பணத்தைக் கொடுத்தால், அந்தப் பணத்தால் தான் அவனுக்கு மதிப்பு, மரியாதை, புகழ் என்பன கிடைக்கின்றன. சாதாரணமானவர்களுக்கு அவை கிடைப்பதில்லை'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

''சபையோர்களே, சிலர் ஆராயாது அவசரமாக முடிவெடுத்துத் தம்முடன் அன்பாக பழகுபவரை வெறுத்துப் பிரிந்து செல்வர். சில நாட்களின் பின் தான் எடுத்த முடிவு சரியானதல்ல என்று புரிந்து கொள்வர். அப்படிப் புரிந்து கொண்டவர் வெட்கத்தைப் பாராது மீண்டும் வந்து சேர்ந்து கொள்வர் என்ற தமிழறிஞர் ஒன்பதாவது குறளைப் பாடினானர்'', ''தமர் ஆகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக் காரணம் இன்றி வரும்'' என்று வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிவிட்டார். எனது மாமன் பெருங்குடிகாரன். குடித்துவிட்டுத் தீய செயல்களை மனம் கூசாது செய்வார். ஊரில் அவருக்கு மதிப்புக் கிடையாது. அப்படியான ஒருவரின் மகளைக் கதிரேசனின் தந்தையார் எனது தம்பிக்குத் திருமணம் செய்து வைத்து விட்டார். எனக்கு அது பிடிக்கவில்லை. அவரது வீட்டுக்குச் சென்று, சற்றுக் கோபமாக ஏசிவிட்டு வந்துவிட்டேன். அவர் எதையோ சொல்ல முற்பட்டார் நான் அதைக் கேட்காது வந்துவிட்டேன்''.

''தீய செயல்களைச் செய்பவர்கள் அதற்கான நீதியற்ற காரணங்களைச் சொல்வர். அது போலத்தான் இவரும் சொல்வார் என்று நினைத்தேன். சில நாட்கள் கழியத்தான் எனக்கு உண்மை புரிந்தது. எனது தம்பி அவளுடன் குடும்ப உறவில் ஈடுபட்டமையால் அவள் கர்ப்பமாகி விட்டாள். அவளது தாய் கதிரேசனின் தந்தையிடம் அதைச் சொல்லி அழ, அவர் தம்பியை அழைத்துப் புத்திமதிகள் கூறித் திருமணம் செய்து வைத்துள்ளார் என்பதை அறிந்த நான் அவரின் வீட்டுக்குச் சென்று அவருடன் கதைத்தேன். அவர் எதையும் பொருட்படுத்தாது அன்புடன் கதைத்தார். ''சபையோர்களே, ஒரு பெரியவர் ஒரு செயலைச் செய்தால் அதை உடனே தவறு என்று நினைக்காது,

அதற்கான காரணங்களை ஆராய வேண்டும். அதன் பின்பே தீர்மானம் எடுக்க வேண்டும்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

தமிழறிஞர் பத்தாவது குறளைப் பாடி, அதன் உரையையும், விளக்கத்தையும், அதற்கான கதையையும் சொன்னார்'', ''உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன் இழைத்து இருந்து எண்ணிக் கொளல்'', ''சபையோர்களே, தம்மைவிட்டுக் காரணம் கூறாது பிரிந்து சென்றுவிட்டுப் பின் தனது பிழையை உணர்ந்து வந்து, சேர்ந்தவர்களை நன்கு ஆராய்ந்த பின்பே, உறவாக்கிக் கொள்ள வேண்டும்'' என்று வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறியதை நான் படித்திருந்தும், அந்த நேரம் வந்த ஆத்திர மிகுதியால் காரணங்களை ஆராயாது பிரிந்து சென்றது மட்டுமன்றி அவரைத் தரக்குறைவாகவும் பேசிவிட்டதை நினைக்க அவமானமாக இருந்தது. எனினும் கதிரேசனின் தந்தை எந்தவித மாறுபாடுமின்றி என்னுடன் பழகி வந்தார்''.

''எனது மனச்சாட்சி என்னைக் குத்திக்காட்டியபடி இருந்ததால் நான் அவரின் அருகில் சென்று, ''ஐயா, எனது தம்பியின் காதலி கர்ப்பமாக இருக்கிறாள் என்பதை அறியாததால்தான் நான் அவ்வாறு நடந்து கொண்டேன். அது எனது பிழை'' என்றபோது அவர் சொன்னார், ''மகனே, ஒருவனை ஆராயாது பழகக்கூடாது. பழகியவனை ஆராயாது வெறுக்கக்கூடாது. எவ்வளவு தான் உத்தமர்களாக இருந்தாலும், சந்தர்ப்ப சூழ்நிலைகள் மனதைத் தடுமாறச் செய்வதால், அது கலங்கிச் செய்வதறியாது பாதகமான செயல்களையும் செய்து விடும். இது மனதின் இயல்பு. மனதை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. உனது தம்பியின் காதலைப்பற்றி உனது தந்தையுடன் கலந்தாலோசித்துத்தான் முடிவெடுத்தேன். உனது தந்தை நேர்மையானவர். உண்மையான காரணத்தைப் புரிந்து கொண்டார். அதனால் தான் அவர் ஒப்புக் கொண்டார். நடந்தவற்றை நானே மறந்து விட்டேன். நீ அதையிட்டுக் கவலைப்படாதே'' என்றவர். ''சபையோர்களே, காதலிப்பவர்கள் ஏதோ ஒரு விதமாக எண்ணங்களுக்காட்பட்டுக் காதலிக்கின்றனர். அதன் பின்தான் குடும்பம், சீதனம், சாதி, சமயம் பற்றி ஆய்வு செய்து கலங்குகின்றனர். அப்படியான ஒரு காதல்தான் எனது தம்பியின் காதல். இதை மாற்ற முடியாது'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

## 16

''அன்று காலை ஒன்பது மணிக்கு மூன்றாவது நாள் மகாநாடு ஆரம்பித்தது. முதலிரு நாட்களைவிடப் பார்வையாளர்கள் அதிகமாக வந்தமையால், அவர்கள் அமர்வதற்கு ஆசனங்கள் போதாதிருந்தமையால், கதிரேசன் நாற்காலிகளை வாடகைக்கு எடுத்து வந்து அடுக்கிவிட்டு மேடைக்கு வந்து பேசினார், ''சபையோர்களே, நான் மிகமிக மகிழ்வுடன் இருக்கிறேன். வரவர பார்வையாளரின் தொகை அதிகரித்த வண்ணம் உள்ளது. வெளிநாடுகளுக்கும் இம் மகாநாடு ஒளிபரப்பப்படுவதால் அவர்களும்

உற்சாகமாகக் கேட்கின்றனர். பேச்சாளர்கள் தம்மை நன்கு ஆயத்தப்படுத்தி அர்ப்பணிப்புடன் செயற்படுவதால், நல்ல நல்ல புதுப்புதுக் கருத்துக்களைக் கூறுகின்றனர். பொருத்தமான கதைகளையும் கூறுகின்றனர். இன்று உங்களுக்கு நன்கு அறிமுகமான பேராசிரியர் நந்தகுமார் அவர்கள் 'பொச்சாவாமை' என்ற அதிகாரத்தின் கருத்துக்களை விபரமாகக் கூறுவார்'' என்று கூறிவிட்டு அமர்ந்தார்.

பேராசிரியர் நந்தகுமார் மேடைக்கு வந்து சபையோருக்கு வணக்கம் தெரிவித்தார், ''சபையோர்களே, தற்பொழுது நூல்களைப் படிப்பதும், பேச்சுக்களைக் கேட்பதும் அருகி வருவதாகப் பேச்சாளர்கள் மேடைகளில் கூறி வருகின்றனர். அதற்குக் காரணம் தாம் தாம் என யாரும் உணர்வதில்லை, அதனால்தான், தமிழறிஞர் இம் மகாநாட்டைப் புதியமுறையில் கொண்டாட விரும்பிக் குறள்களுக்குப் பொருத்தமான கதைகளைக் கூறுமாறு வேண்டினார். அது மிக மிகக் கடுமையான விடயம். ஆனால் தமிழறிஞருக்கு ஒரு தூசான விடயம். அவர் ஒவ்வொரு குறளுக்கும் பத்துப் பதினைந்து கதைகளைக் கூறுவார். அதை நாம் கேட்டுப் பேசி வருகிறோம். அதனால் பேச்சைக் கேட்க மக்கள் குவிகின்றனர். அதனால் நான் பேச்சாளருக்குச் சொல்வது என்னவென்றால் பேசியதைப் பேசாதீர்கள, மக்களுக்குத் தெரிந்தவற்றையும் பேசாதீர்கள் என்பதேயாகும்''.

பேராசிரியர் நந்தகுமார் முதலாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதற்கு விளக்கமளித்தார். ''இறந்த வெகுளியின் தீதே சிறந்த உவகை மகிழ்ச்சியின் சோர்வு''.

''சபையோர்களே, அளவுக்கதிகமான மகிழ்ச்சியால் மூளை மரத்துவிடும். அதனால் செய்யும், செய்யப்போகும் செயல்கள் நினைவுக்கு வராது. அந்தப் பெரு மகிழ்சியான செயல் தான் மூளை பூராகவும் இருந்து மனதைக் கல்லாக்கிச் செயற்பாடு அற்றதாக்கி விடும். இது மிகவும் கோரமான ஒரு நிலை. அதனால் அந்நிலையை அளவு கடந்த கோபங் கொள்ளும் நிலையைவிடத் துன்பங்கள் பலவற்றையும் தரவல்ல நிலை என்று பெரியவர்கள் கூறுவர்''.

''கருணாகரன் என்ற குரங்கு கணிதப் பட்டதாரி ஆசிரியர். ஆசிரியர்க்குரிய அனைத்துப் பண்புகளும் உள்ளவர். கடமையைத் திறமையாகச் செய்பவர். அவரிடம் கணிதத்தைக் கற்ற எவரும் சித்தியடையாது விட்டதில்லை. எல்லாப் பாடங்களிலும் சித்தியடையாத மாணவன் கூடக் கணிதபாடத்தில் சித்தியடைந்து விடுவான். அவரது மகள் ராதா திருமணம் செய்து பத்து ஆண்டுகள் கழிந்தும் குழந்தையைப் பெறவில்லை. அதனால் மாப்பிள்ளையின் தாயும், சகோதரர்களும், இனத்தவர்களும் தனது பிள்ளைக்கு வேறு ஒரு பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்ய நினைத்துப் பெண்ணையும் பார்த்தனர். ஆனால் மாப்பிள்ளையான பார்த்திபன் மறுத்து வந்தான்''.

''மாப்பிள்ளையை நினைத்துப் பெருமைப்பட்டவாறு காரில் வந்த கருணாகரன் காட்டுப் பிள்ளையார் கோவிலின் முன் காரை நிறுத்திவிட்டு இறங்கிவந்து கற்பூரம் கொழுத்தி விநாயகரை வணங்கினார். அப்போது அங்கு வந்த குருக்கள்,

‘‘வாத்தியாரையா, இன்றைக்குப் பாடசாலைக்குப் போகவில்லையா’’ என்று கேட்டார். இல்லை இன்று அதிபர் தரம் ஒன்றிற்குப் பரீட்சை நடைபெறுகிறது. அதை எழுதப் போகிறேன்’’ என்றார். அதைக் கேட்ட குருக்கள், ‘‘இப்ப நீங்கள் அதிபர் தானே’’ என்றார். ‘‘இல்லை முன்பு இருந்த அதிபர் ஓய்வெடுத்து விட்டார். நான் பிரதி அதிபர். புது அதிபர் வரும்வரை அதிபரின் கடமைகளைச் செய்கிறேன்’ என்றபோது அவரது கைத்தொலைபேசி அலறியது’’.

‘‘கருணாகரன் தன் கைத்தொலைபேசியை எடுத்தபோது, ‘‘ஐயா, நான் வைத்தியர் முகுந்தன் பேசுகிறேன். உடனடியாக எனது வைத்தியசாலைக்கு வரவும். மிகமிக முக்கியமான விடயம் பேச வேண்டும்’’ என்று கூறித் தொடர்பைத் துண்டித்தார். கருணாகரன் தடுமாறிப் போனார், பின்னர் வைத்தியரைச் சந்தித்துவிட்டு செல்வோம் என்று நினைத்து வைத்தியசாலைக்குச் சென்றார். அவரது மாப்பிளையும், வைத்தியரும் வேறு சிலரும் நின்றனர். கருணாகரனைக் கண்ட வைத்தியர் சொன்னார், ‘‘ஐயா, உங்கள் நெடுநாள் கனவு நிறைவேறிவிட்டது. உங்களது மகள் கர்ப்பமாக இருக்கிறாள்’’ என்றார். கருணாகரன் சிலையாக நின்றார். அவரால் பேசமுடியவில்லை. பார்க்குமிடமெல்லாம் சுற்றுவது போல இருந்தது. இரண்டு தினங்களுக்கு முன் வந்த மாப்பிளையின் தாய் தனது மகனுக்கு ‘அடுத்த வாரத்தில் திருமணம் செய்து வைப்பேன்’, என்று கூறியது நினைவுக்கு வந்தது’’.

‘‘தனது உறவினர் அனைவருக்கும் இனிப்புக்கள் வாங்கிக் கொடுத்தார். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இனிப்பு வாங்கிக் கொண்டு பாடசாலைக்குச் சென்றபோது அங்கு வேலை செய்யும் ஓர் ஆசிரியர் கேட்டார், ‘‘ஐயா, இன்றைக்குப் பரீட்சை முடிந்து விட்டதா? நன்றாக எழுதினீர்களா?’’ என்று கேட்டபோது கருணாகரன் பெரிதாகச் சிரித்துவிட்டுச் சென்றார். அப்போது அந்த அசிரியர் இன்னொரு ஆசிரியருக்குச் சொன்னார், ‘‘கருணாகரன் ஐயாவின் கதையைப் பார்த்தால் பரீட்சையைத் திறமாக எழுதியிருக்கிறார் போலத் தெரிகிறது’’.

‘‘அவர் நல்ல கெட்டிக்காரன். அவர் அதிபராக வந்துவிட்டால் மிகவும் நல்லது. நேர்மையானவர் என்று அந்த ஆசிரியர் சொன்னார். ‘‘சபையோர்களே, கருணாகரன் பரீட்சை எழுதவில்லை. அளவு கடந்த மகிழ்ச்சியால் யாவற்றையும் மறந்து விட்டார். அதனால் அவருக்குக் கொடுக்க இருந்த அதிபர் பதவி இல்லாமல் போயிற்று. சம்பளத்திலும் பெருந்தொகையை இழந்துவிட்டார். பின்பு அதனால், பெருங்கவலைப்-பட்டார்’’ என்று கூறி நந்தகுமார் தனது உரையை நிறைவு செய்தார்.

பேராசிரியர் நந்தகுமார் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறினார். ‘‘பொச்சாப்புக் கொல்லும் புகழை

அறிவினை நிச்ச நிரப்புக்கொன்று ஆங்கு'', ''சபையோர்களே, அளவுக்கதிகமான மகிழ்ச்சி பல துன்பங்களைத் தரும். அது தொடர்ந்து வரும் வறுமையைவிடக் கொடுமையானது. அளவு கடந்த சினத்தைவிடக் கொடுமையானது. அது அறிவையும், புகழையும் அழித்து விடும். கருணாகரன் அதிபர் தரத்திற்கான பரீட்சையை எழுதாததை அறிந்த கல்விப் பணிப்பாளர் அவரை அழைத்துச் சொன்னார், ''நீங்கள் உப அதிபராகக் கடமையாற்றும் பாடசாலை மிகமிகப் பெரியது. இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். நூற்றைம்பது ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். நீர் பரீட்சையில் சித்தியடைவீர் என்ற நினைப்பில்தான் நான் புதிய அதிபரை நியமிக்கவில்லை'',

''நான் நேர்மையானவன், நீதியானவன், ஒழுக்கமுள்ளவன். நீதிக்குப் பிறம்பாக எதுவும் செய்யமாட்டேன், பிற கல்விப் பணிப்பாளர்கள் இலஞ்சம் பெற்றுக் கொண்டு அதிபர் பரீட்சையில் சித்தியடையாதவர்களை அதிபர்களாக நியமிக்கின்றனர். நான் அவ்வாறு செய்யமாட்டேன். உமது பாடசாலைக்குப் பரீட்சையில் சித்தியடைந்த ஓர் அதிபரை நியமித்துள்ளேன். உம்மிடம் உள்ள பொருட்கள் அனைத்தையும் உடனே அவரிடம் ஒப்படைக்கவும்''.

''கருணாகரனுக்கு தலையில் இடிவிழுந்தது போலிருந்தது. அது அவருக்குப் பெரும் அவமானமாக இருந்தது. அதனால் அவர் பதவியில் இருந்து ஓய்வு பெறுவதற்கான கடிதத்தை அனுப்பினார். அவரது எதிரிகள் அவரைக் கேலி செய்தனர். அதனால் சபையோர்களே, எவ்வளவு மகிழ்ச்சியடைந்தாலும் அல்லது துன்பப்பட்டாலும் அதற்காக உங்கள் அறிவை இழக்காதீர்கள்'' என்று கூறிய பேராசிரியர் தனது உரையை நிறைவு செய்தார்.

பேராசிரியர் நந்தகுமார் மூன்றாவது குறளை இனிமையாகப் பாடி அதற்கு உரையும், விளக்கமும் சொன்னார், ''பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அது உலகத்து எப்பால்நூ லோர்க்கும் துணிவு'', ''சபையோர்களே, மறதி உள்ளவர்களுக்கு வாழ்வில் ஒருபோதும் புகழ்வரமாட்டாது என்று உலகில் உள்ள அனைத்து நூல்களும் கூறுகின்றன. மறதி என்பது ஒரு நோய் அல்ல. முதியவர்களுக்குச் சில சமயங்களில் மறதி ஏற்படலாம். ஆனால் இளையோர்க்கு மறதி எக்காரணங் கொண்டும் ஏற்படக் கூடாது. கருணாகரன் உன்னதமான ஒரு கணித ஆசிரியர். ஆசிரியர்கள் எதையும் மறக்கக் கூடாது. மறந்தால் புகழ் அழிந்து கெட்டபெயர் உண்டாகும். கல்வித் திணைக்களத்திற்கு அவர் சென்றால் பெரியதொரு பாடசாலையின் அதிபர் என்று பலரும் வரவேற்பர். நகரில் பல பாடசாலைகள் இருந்தபோதும் அவர் பணியாற்றிய பாடசாலையின் பெறுபேறுகள் மிகமிகச் சிறப்பாகவும், உயர்வானதாகவும் இருப்பதால், அவர் தான் அடுத்த அதிபர் என்றும், அவருடன் நல்லமுறையில் பழகினால் தான் தரம் ஒன்றிற்கு அனுமதி எடுக்கலாம் என்று பலரும் நினைப்பர்''.

‘‘முன்பு அப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் விபத்தொன்றில் சிக்கியதால் ஆறு மாதங்கள் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றவர். பின்பு அவர் பாடசாலைக்கு வந்தபோதும் கருணாகரனே பாடசாலையின் அனைத்துப் பொறுப்புக்களையும் ஏற்று அப்பாடசாலையின் பெறுபேற்றை மாகாண மட்டத்தில் உயர்த்தியவர். அத்துடன் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும், அப்பாடசாலையின் பெறுபேறுகளை உயர்த்தியவர். அதனால் தான் கல்வித் திணைக்களம் முன்னைய அதிபர் ஓய்வு பெற்றதும் அவரிடம் பாடசாலையை ஒப்படைத்தது. அவர் பரீட்சையில் கட்டாயம் சித்தி அடைவார் என்றே அனைவரும் நினைத்திருக்கையில் அவர் பரீட்சைக்குச் செல்லாதது அனைவருக்கும் ஏமாற்றத்தை அளித்தது’’.

‘‘அதனால் கல்வித் திணைக்களத்திலும், ஊரிலும் அவரின் புகழ் அற்றுப் போனதால் யாரும் அவரை முன்புபோல மதிப்பதில்லை. அவர் யோசித்துப் பார்த்தார், அவர் படித்த நூல்கள் எல்லாம் மறதியுள்ளவர்களின் அறிவும், புகழும் அழிந்து விடும் என்றே கூறியுள்ளன. தன்னால் தனக்கு வந்த நிலையை எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்’’ என்று கூறிப் பேராசிரியர் நந்தகுமார் தனது உரையை நிறைவு செய்தார்.

பேராசிரியர் நந்தகுமாரன் நான்காவது குறளை இனிமையாகப் பாடி அதற்கு உரையும், விளக்கமும், கதையும் சொன்னார், ‘‘அச்சம் உடையார்க்கு அரண் இல்லை; ஆங்கு இல்லை பொச்சாப்பு உடையார்க்கு நன்கு’’, ‘‘சபையோர்களே, அற்பமான சிறிய செயல்களுக்குக்கூடத் தேவையில்லாது பயந்து நடுங்குபவர்களைப் பலம் மிகுந்த கோட்டைக்குள் பலருடன் இருந்தாலும் பயத்தால் நடுநடுங்கிக் கொண்டேயிருப்பர். அது போல மறதி உடையவர்களுக்கு எல்லாச் செல்வமும் இருந்தாலும் அதனால் பயன்பெற மாட்டார்கள்’’.

‘‘கோகுலன் என்ற ஆடு எதற்கும் பயப்படும் சுபாவமுடையது. அது காட்டுக்கு மேயச் செல்லும்போது கறையான் புற்றைக் கண்டாலும் உடனே தாயிடம் ஓடிவந்து, ‘‘அந்தப் புற்றுக்குள் பாம்பு இருக்கிறது’’ என்று சொல்லிப் பயப்படும். சில தினங்களுக்கு முன்பு இதன் நண்பனான கண்ணன் என்ற ஆடு ‘‘நண்பா, இங்கு பேய் உலாவுகிறது. அது யாரையாவது கண்டால் கழுத்தில் கடித்து இரத்தத்தை உறிஞ்சி விடுமாம்’’ என்று சொன்னபின் கோகுலன் காட்டுக்கு மேயச் செல்வதில்லை. தாய் ஆடு, ‘‘மகனே, எதற்கும் பயப்படாதே. பேய், பிசாசு என்று எதுவும் இல்லை. வேறு யாராவது பயந்து காட்டுக்குச் சென்று மேயாது இருக்கிறார்களா? பயப்படாது செல் என்று கூறியபோதும், பயத்தால் கோகுலன் செல்வதில்லை. அதைக்கண்டு சிரித்த அவனது சகோதரன், பலமுள்ள இரும்புக் கோட்டைக்குள் மேய விட்டாலும் பயப்படுவான்’’ என்று கேலி செய்வான். அதைக் கோகுலன் பெரிதாக எடுக்க மாட்டான்’’.

‘‘அதுபோல மறதி உள்ளவரிடம் எல்லாச் செல்வமும் இருந்தாலும் அவர் அதனால் பயனடைய மாட்டார். சபையோர்களே, முருகேசன் என்ற எருமை ஒரு வியாபாரி.

உறுதியானவர், ஆனால் மறதிக்காரர். காலையில் அவரது மனைவி வந்து, ‘‘இன்று எமது திருமண நாள்’’ வடை, பாகாசத்துடன் விசேடமாகச் சமைத்துள்ளேன். மதியம் சாப்பிட வீட்டிற்கு நேரத்துடன் வாருங்கள். காட்டுப் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று பூசை செய்ய வேண்டும்.’’ என்றாள்.

‘‘அவர் அதற்குச் சம்மதித்துவிட்டு மனைவி கொடுத்த உணவுப் பொதியை வாங்கித் தான் தினமும் கொண்டு செல்லும் பைக்குள் வைத்துவிட்டுக் கடைக்குப் புறப்பட்டார். மதிய நேரம் உண்பதற்காகப் பையைப் பார்த்தபோது சாப்பாட்டுப் பொதியைக் காணவில்லை. அதை அங்கு வேலை செய்யும் ஒருவன் உண்டு விட்டுச் சொன்னான், ‘‘ஐயா, இன்றைக்குக் கல்யாண நாள். அதனால் அம்மா வீட்டிற்கு வந்து சாப்பிடுவீர்களென உணவுப் பொதியை வைக்காது விட்டிருப்பா. வீட்டுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு வாருங்கள்’’ என்றான். முருகேசன் சாப்பிடுவதற்காக வீட்டிற்குப் புறப்பட்டார்’’.

இன்னொரு நாள் இரவு ஒன்பது மணிக்குக் கடையைப் பூட்டிவிட்டுத் திறப்பைக் கொண்டு வந்து முருகேசனிடம் கொடுத்தான். ஆனால் அவன் அதைப் பூட்டவில்லை. இரவு அவனும், அவனது நண்பனும் ஏராளமான பொருட்களை எடுத்துச் சென்றுவிட்டுத் திருடர்கள் பூட்டை உடைத்துத் திருடிவிட்டார்கள்’’ என்று சொன்னான். அதை முருகேசன் நம்பிக் காவல்துறையில் புகாரிட்டார். இன்னொரு நாள் பல இலட்ச ரூபாவிற்குப் பல்வேறு விதமான பொருட்களை வாங்கிப் பாரவூர்த்தியில் ஏற்றிவிட்டுத் தனது கடையின் விலாசத்தைக் கொடுத்து அங்கு கொண்டுவா என்று சொன்னார். அவன் கொண்டு சென்று கொடுக்கவில்லை. அவன் எழுதிக்கொடுத்த பாரவூர்த்தியின் இலக்கம் பிழையாக இருந்தமையால் காவல்துறையில் புகாரிட முடியவில்லை. இவ்வாறு முருகேசன் மறதியால் பல இலட்ச ரூபாவை இழந்துள்ளார். மறதி என்பது கவனக் குறைவாலும், அக்கறை இன்மையாலும் தான் பெரும்பாலும் வரும். அதனால் அவதானமாக இருங்கள்’’ என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் பேராசிரியர் நந்தகுமாரன்.

‘‘முன்உறக் காவாது இழுக்கியான் தன்பிழை பின்ஊறு இரங்கி விடும்’’, பேராசிரியர் நந்தகுாரன் ஐந்தாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், ‘‘சபையோர்களே, முருகேசன் அடிக்கடி மறதியால் பொருட்களை இழப்பதையிட்டுக் கவலைப்பட்ட அவரது மனைவி, மீனாட்சி அவரைக் கதிரேசனது வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அவருக்கு முருகேசனைப் பற்றித் தெரியும். அதனால் அவர் சொன்னார், ‘‘முருகேசா, தவறு செய்வது இயல்பு. அதைத் தொடர்ந்து செய்வது மிகவும் தவறு. மறதிக்குக் காரணம் சோம்பல், சிரத்தையின்மை, உள்ளதை உணராமை இப்படிப் பல காரணங்களைச் சொல்லலாம். அன்று உணவுப் பொதி தொலைந்தது அதற்கான காரணத்தை நீ அறியவில்லை. அறிந்திருந்தால் அதைத் திருத்தலாம். பின் பல இலட்ச ரூபா பெறுமதியான பொருட்களை ஏற்றும்போது அதன் இலக்கத்தைக் கவனித்துக் குறித்து வைத்திருத்தல் வேண்டும். அவன் தந்த இலக்கத்தை நீ பார்த்து அது சரியானதா என உறுதி செய்திருக்க வேண்டும்.

அதையும் நீ செய்யவில்லை கவனமாக இருந்திருந்தால் இப்படியான தவறுகள் ஏற்படமாட்டாது. எனது தந்தை தொண்ணூறு வயதிலும் நடந்த சம்பவங்களைச் சரியாகச் சொல்வார். அதற்குக் காரணம் அவதானம். முக்கியமான விடயங்களை அடிக்கடி நினைவுபடுத்தல் வேண்டும். அதற்காக அவற்றைக் குறித்து வைத்திருத்தல் வேண்டும். உனக்கு வயது குறைவு. அவதானமாக வாழாவிட்டால் அன்றாட உணவுக்கே அல்லற்படுவாய். மிகமிகக் கவனமாக இரு'' என்று சொன்னார். முருகேசன் தலையாட்டிவிட்டுச் சென்றார்''.

''சபையோர்களே, வாழ்வில் நடைபெறும் முக்கிய விடயங்களைக் குறித்து வைத்திருங்கள். நேரமுள்ள நேரம் அதைத் திருப்பிப் பாருங்கள். சோம்பலின்மையும், அவதானமும் முயற்சியும் மறதியை நீக்கும் மருந்துகளாகும்'' என்றார் பேராசிரியர் நந்தகுமாரன்.

பேராசிரியர் நந்தகுமாரன் ஆறாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறினார், ''இழுக்காமை யார் மாட்டும் என்றும் வழுக்காமை வாயின் அ∴து ஒப்பது இல்'', ''சபையோர்களே, ஒருவருக்கு ஒருபோதும் மறதியால் ஏற்படும் சோர்வு இல்லாமல் இருந்தால், அதற்கு ஒப்பான தன்மை வேறு எதுவும் இல்லை. முருகேசனுக்குக் கதிரேசன் தொடர்ந்து கூறினார், ''மறதி என்பது ஒரு சோர்வு. அது சோம்பல் போன்றது. சோம்பேறி எக்கருமத்தையும் விருப்போடு செய்யாமையால் தான் அவன் வாழ்க்கையில் எப்போதும் தோல்வியைச் சந்திக்கிறான். பெரும்பாலும் தோல்வி சோம்பேறியால் தான் வருகிறது. சோம்பேறி எதிலும் அக்கறை இல்லாது இருப்பதால் நடைபெறும் சம்பவங்களை மறந்து விடுகிறான். கடையை நீயே பூட்ட வேண்டும். இன்னொருவன் பூட்டித் திறப்பைத் தந்தால், அது சரியாகப் பூட்டப்பட்டிருக்கா என்பதைப் பார்த்து உறுதி செய்தல் வேண்டும். அவற்றைச் செய்ய உனது சோம்பற்பட்ட மனம் விரும்பவில்லை''

சோம்பல் முதலில் உடலை இயங்காமல் பண்ணும். மூளையை யோசிக்க விடாது. கவனக் குறைவை உண்டாக்கும். அதனால் மறதி ஏற்படும். மறதி என்ற சோர்வு ஒருவனுக்கு இல்லாதிருந்தால் அவன் அரசனைப் போலச் சகல செல்வங்களையும் பெற்று வாழ்வான்'' என்று கூறினார் என்று சொல்லித் தனது உரையை நிறைவு செய்தார் பேராசிரியர் நந்தகுமாரன்.

பேராசிரியர் நந்தகுமாரன் ஏழாவது குறளை இசையுடன் பாடி அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், ''அரிய என்று ஆகாத இல்லைபொச் சாவாக் கருவியால் போற்றிச் செயின்'' ''சபையோர்களே, ஓர் உயிர் பாவிக்கும் கருவிகளில் மறவாமை என்ற கருவி தான் மிக மிகச் சிறந்தது. அக்கருவியால் செய்ய முடியாத செயல் எதுவும் இவ்வுலகில் இல்லை. முருகேசன் தயங்கியவாறு

நிற்பதைக் கண்ட கதிரேசன் சொன்னார், முருகேசா, பழக்கம் தான் உயிர்களை வாழ வைப்பதும், கெட்டழிய வைப்பதும். அதனால் தான் பெரியவர்கள், ‘‘தொட்டிலில் பழக்கம் சுடுகாடு வரை’’ என்றனர். ஒருவர் பழகிய பழக்கத்தைத் தொடர் முயற்சியால் மாற்றலாம். எண்ணம் தான் வாழ்வு. அதனால் நல்ல எண்ணங்களை தினமும் எண்ணி அதை ஓயாது நினைத்து மனத்தை தேற்றி உறுதியாக்க வேண்டும். ஒருவர் இயலாது என்று விட்ட ஒரு செயலை இன்னொருவர் நேர்த்தியாகவும், அழகாகவும் செய்து முடிப்பார்’’.

‘‘அதற்குக் காணரமாக இருப்பது நினைவுகள். நினைவுகள் அழியும்போது மனம் பாதிக்கப்படுகிறது. மனம் பாதிக்கப்பட்டால் முடிவுகளைத் தவறாக அறிவிக்கும்’’.

‘‘கடவுள் யாரையும் குறைபாடு உடையவர்களாக படைக்கவில்லை. பெற்றோர் செய்யும் தவறுகளால் தான் பிள்ளைகள் வலுவில்லாதவர்களாகப் பிறக்கின்றனர் என்று திருமந்திரம் கூறுகிறது. நீ எந்தக் குறைகளுமில்லாமற் பிறந்தவன். நீயே குறைகளை உண்டாக்குவதாற்றான் நீ வாழ்வில் துன்பங்களை அனுபவிக்கிறாய். உனது மூத்த சகோதரனிடம் சென்று உனது ஐந்து பிள்ளைகளும் பிறந்த ஆண்டு, திகதி, கிழமை, நேரம் என்பவற்றைக் கேட்டுப்பார். உடனே சொல்வர். நீ உனது பிறந்த ஆண்டு, திகதி, நாள், நட்சத்திரம், நேரம் என்பவற்றை சொல் பார்ப்போம்? என்று கூறி நிறுத்தினார் கதிரேசன்’’.

‘‘பத்து நிமிடங்கள் கழிந்தும் முருகேசன் சொல்லாததால் கதிரேசன் சொன்னார், ‘‘முருகேசா, ஒரு செயலைச் செய்ய நினைக்கும்போது எதை எதைச் செய்ய வேண்டுமோ, அதையே நினைவில் வைத்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு முறையும் செய்யும்போது அதைப்பற்றிப் பிறரிடம் கேட்கலாகாது. அதுபோல நிகழ்வுகளையும் மனதில் வைத்திருத்தல் வேண்டும். அதற்கான முன்னேற்பாடுகளை நீ செய்தல் வேண்டும்’’ என்றார் கதிரேசன். சபையோர்களே, கதிரேசன் கூறியது சகல உயிர்களுக்குமத் பொருந்தும் என்று கூறி நந்தகுமாரன் தனது உரையை நிறைவு செய்தார்.

பேராசிரியர் நந்தகுமாரன் எட்டாவது குறளை இனிமையாகப் பாடி அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், ‘‘புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்’’ ‘‘சபையோர்களே, பெரியவர்கள், அறிஞர்கள் சொன்னவற்றை நாம் மதித்துச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் எமக்கு வரப்போகும் ஏழு பிறப்புகளிலும் துன்பங்கள் தான் வரும். ஒரு பிறப்பில் செய்பவை தான் மறுபிறப்புக்குக் காரணியாக அமைகிறது. ஒழுக்கமாக வாழ்ந்து தான தருமம் செய்து கடவுளை நம்பித் தொழுபவர்களுக்கு பிறப்புக்கள் இல்லை என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். அது உண்மை. ஒரு செயலைச் செய்ய விரும்பும் ஒருவன் அதைச் செய்யும் முன் பெரியவர்களிடம் சென்று நல்ல நாளைக் கேட்டுத் தெரிந்து, அந்த நாளில் தான் சுபகருமங்களைச் செய்தல் வேண்டும்’’.

‘‘உங்களுக்குத் தெரிந்த ஆரூரன் என்ற பன்றிக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை. பெரியவர்களையும் மதிப்பதில்லை. தான் பெரிய தனவந்தன் என்ற நினைப்பில் தான் விரும்பியவற்றைத் தனக்கு விரும்பிய நேரம் செய்து வந்தது. அவன் பெரும் தனவந்தன் என்பதால் தனது மகளின் திருமணத்தை மிக மிக ஆடம்பரமாக நடத்த எண்ணி ஒரு நாளைக் குறித்தது, அன்று அட்டமி. அதை யாரும் ஆரூரனுக்கு சொல்ல விரும்பவில்லை. கதிரேசன் ஆரூரனின் சகோதரனுக்குச் சொன்னார், ‘‘மகனே உனது சகோதரன் தனது மகளின் திருமணத்திற்கு குறித்த நாள் முழுவதும் அட்டமி இருக்கிறது. அன்று கன மழையும், இடி மின்னலும், சூறாவளியும் ஏற்படும் என்று பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளது’’.

‘‘ஒருவரது எதிர்காலம் கருவிலேயே தீர்மானிக்கப்படுகிறது. அதனால் நல்ல நாளில் தாலி கட்டினால் அந்த மணமக்கள் பெருவாழ்வு வாழ்வர் என்று அர்த்தமில்லை. அப்படியிருக்க ஏன் நாள் பார்க்கப்படுகிறது என்றால் இயற்கையின் அழிவுகள் இல்லாதிருக்கவும், சுப நாளில் தாலி கட்டாமையால் தான் தொடர்ந்து துன்பங்கள் வருகின்றன என்று எண்ணி வாழ்நாள் முழுவதும் துன்பப்படாமல் இருக்கவுமே. அதை உணராத உனது சகோதரனுக்குச் சொல்வதால் பலன் இல்லை. நீ நல்லவன். ஒழுக்கமானவன். நம்பிக்கைக்குரியவன் என்பதால் சொன்னேன்’’ என்று கூறிவிட்டுச் சென்று விட்டார். சபையோர்களே, திருமண நாளன்று பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பலத்த சூறாவளி வீசியது. இடியும் மின்னலுடனும் பெருமழை பொய்தது. இதற்காகத் தான் நல்ல நாள் பார்க்கப்படுகிறது’’ என்று கூறித் தனது பேச்சை நிறைவு செய்தார் பேராசிரியர் நந்தகுமாரன்.

பேராசிரியர் நந்தகுமாரன் ஒன்பதாவது குறளை இனிமையாகப் பாடி விட்டு, அக் குறளிற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்ல ஆரம்பித்தார், ‘‘இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக; தாம்தம் மகிழ்ச்சியின் மைந்துஉறும் போழ்து’’, ‘‘சபையோர்களே, ஒருவர் தான் செய்த ஒரு செயலால் மிக்க மகிழ்ச்சியுடன் கர்வம் கொள்ளும் போது அந்தக் கர்வத்தால் கடமையை மறந்து அழிந்தவர்களை அவர் நினைத்துப் பார்க்க வேண்டும். ஆரூரன் செயல் வீரன். தான் நினைத்ததை நினைத்தபடி செய்து முடித்து விடுவான். அதனால் தான் அவன் பெரியவர்களை விடத் தன்னை உயர்வாக மதித்தான். கதிரேசனும் கமம் செய்பவர். அதனால் வரும் வருமானத்தில் பெரும் பகுதியைச் செலவு செய்து விடுவார். அதனால் தான்னைவிடக் கதிரேசன் கீழானவர் என்றே ஆரூரன் நினைப்பான். ஆனால் தனது மகளின் திருமணம் குழம்பியது அவனுக்குப் பெருங் கவலையைக் கொடுத்தது. அப்போது கதிரேசன் நினைத்துப் பார்த்தான் அவர் தம்பிக்குக் கூறியபடி நடந்தாலும் ஏனையோர் அவர் கடவுளைப் போன்றவர், சொன்னது கட்டாயம் நடக்கும் என்று சொல்வதாலும், அவரது மனம் கலங்கியது’’.

‘‘அவனது சகோதரன்’’, அண்ணா, நீ இங்கு தான் வசிக்கிறாய். இங்கு வாழ்வோரில் உன்னைத்தவிர ஏனையோர் கதிரேசனுடன் ஆலோசிக்காது எந்தச் செயலையும் செய்வதில்லை. அவ்வாறு அவர்கள் செய்யும்போது இடையூறுகளும் வந்ததில்லை. சிவலிங்கத்தின் மகளுக்குத் திருமண நாளைக் கதிரேசன் குறித்துக் கொடுத்தவர். அது உங்களது மகளது திருமண நாளுக்கு முதல்நாள் நடைபெற்றது. அது எவ்வளவு சிறப்பாகவும், விமர்சையாகவும் நடைபெற்றது. எம்மவர் நாள், நட்சத்திரம் பாராது எக் கருமத்தையும் செய்ததில்லை. நீ தான் கர்வம் காரணமாக யோசிக்காது செய்தாய். நம் முன்னோர் சொன்ன வார்த்தைகள் அமிர்தம் போன்றவை. ஒவ்வொரு செயலுக்கும் அவர்கள் காரண காரியங்களைச் சொல்லியிருக்கிறார்கள். மகிழ்ச்சியால் கர்வம் கொண்டு ஒரு செயலில் தோல்வியடைந்தால் அதே போன்ற செயலைச் செய்யும்போது என்னென்ன தவறு விட்டேன் என எண்ணிப் பார்த்தல் வேண்டும். அத்துடன் அப்படியான செயல்களைச் செய்து அழிந்தவர்களை எண்ணிப் பார்த்துத்தான் செய்யும் செயலைக் கர்வப்படாது செய்தல் வேண்டும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை இனியாவது பின்பற்று’’.

‘‘மாப்பிள்ளை வீட்டார் ஒருபோதும் பெய்யாத பெருமழையும், சூறாவளியும், இடிமின்னலும் அன்று மட்டும் நடந்ததால் பொம்பிளை இராசியில்லாதவள் என்று சொல்கின்றனர். அதனால் அவர்களுடன் அவதானமாகப் பேசுங்கள். கர்வத்துடன் பேசினால் உனது மகளின் திருமணம் நடைபெறாது, என்று சொன்னபின் ஆரூரனுக்குப் பயம் வந்தது’’ என்று கூறி நந்தகுமாரன் தனது உரையை நிறைவு செய்தார்.

பேராசிரியர் நந்தகுமாரன் பத்தாவது குறளை இனிமையாகப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார். ‘‘உள்ளியது எய்தல் எளிதுமன்; மற்றுந்தான் உள்ளியது உள்ளப் பெறின்’’, ‘‘சபையோர்களே எந்தச் செயலும் இலகுவானதல்ல. நாம் இலகுவானது என்று நினைப்பதைச் சில சமயங்களில் செய்ய முடியாதிருக்கும். இது கடினமான செயல் செய்ய முடியாது என நினைப்பது இலகுவாகச் செய்து முடிக்கவும் கூடும். செயல்வீரனுக்கு எல்லாச் செயல்களும் இலகுவானவைதான். ஏனென்றால் செயல்வீரன்தான் செய்ய நினைத்த செயலைச் செய்து முடிக்கும் வரை அதையே எண்ணியவாறு இருப்பான். நினைவுதான் கனவாக வரும். அந்தக் கனவு அவனை உற்சாகப்படுத்திச் செயலை வெற்றியடையச் செய்யும். தொடர்ந்து அதையே சிந்திப்பதனால், வெற்றியடைய என்னென்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், இச் செயலைச் செய்து வெற்றியடைந்தவர் யார்? அவரது வரலாறு எப்படியானது என்று மனம் எந்நேரமும் சிந்தித்துக் கொண்டே இருக்கும்’’.

‘‘சபையோர்களே, குமரன் என்ற வரிக்குதிரைக்கு ஐந்து சகோதரர்கள். தகப்பன் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். தாய் தகப்பன் இறந்த துக்கத்தால் பிதற்றியபடி இருந்தாள். குமரனுக்கு அன்றன்று உணவுக்கே கஷ்டமாக இருந்தது. அவன்

கதிரேசனிடம் சென்று சொன்னான், ‘‘ஐயா, எனது நிலைமை உங்களுக்குத் தெரியும். நான் கட்டாயம் உழைத்தே ஆக வேண்டும். வர்த்தகம் செய்வது தான் எனது விருப்பம். அதற்கான முதல் என்னிடம் இல்லை. பாடசாலை விட்டபின் வியாபாரம் செய்ய உதவுங்கள்’’ என்றான்.

‘‘இதைத்தவிர வேறு எதையும் செய்ய முடியாது. பாடசாலைவிட்டதும் தில்லையம்பலத்திடம் பொர்ருட்களைக் கடனாக வாங்கித் தருகிறேன். விற்று முடிய முடியப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பொருட்களை வாங்கு. மகனே, நான் சொல்வதைக் கவனமாகக் கேள். எல்லோருடனும் அன்பாகப் பழகு. கலப்படம் செய்யாதே. நிறை குறைக்காதே. எவ்வேலையிலும் நான் ஒரு பிரசித்தி பெற்ற வர்த்தகனாக வரவேண்டும் என்று எண்ணியபடி இரு. நீ பெரும் வர்த்தகனாவாய். தில்லையம்பலம் உனது இனத்தவன். அதனால் மிகவும் கவனமாக இரு. உறவினர் என்று நினைக்காது உனது முதலாளி என்று மட்டும் நினை’’ என்று கூறினார். அதற்குக் குமரன் சம்மதித்தான்’’.

‘‘ஆரம்பத்தில் பொருட்களைத் தலையில் சுமந்து சென்று விற்பனை செய்தான். அவனது செயல்கள் அனைவருக்கும் பிடித்தமையால் அவர்கள் தங்கள் வீடுகளில் நடைபெறும் வைபவங்களுக்குக் குமரனையே பொருட்களைக் கொண்டு வந்து தருமாறு கூறினர். எவ்வாறு வியாபாரத்தைப் பெருக்கலாம் என்ற சிந்தனைதான் அவனது மனதில் எப்போதும் இருந்தது’’.

சிங்காரம் என்ற வயோதிப யானைக்கும் அவரது மனைவிக்கும் குமரன் தான் துணை. அவன் அவர்களைத் தனது பெற்றோரைப் போலப் பேணியதால் மிக்க மகிழ்ச்சியடைந்த சிங்காரம் தன்னிடமிருந்த பல இலட்ச ரூபாவைக் கொடுத்து ஒரு வியாபார நிறுவனத்தை ஆரம்பித்து வைத்தார். ஐந்து வருடங்களில் அந் நிறுவனம் மிகப்பெரிய மொத்த சில்லறை வர்த்தக நிறுவனமாக மாறியது.

குமரன் பெரும் வர்த்தகனானதும் தில்லையம்பலம் தனது ஒரே மகளைக் குமரனுக்குத் திருமணம் செய்து வைத்தார். இப்போ அவனின் கனவு நிறைவேறியது. மிக்க மகிழ்வுடன் வாழ்கிறான். அதனால் சபையோர்களே, நீங்கள் எந்தச் செயலைச் செய்தாலும் அச் செயலையே ஓயாது எண்ணியபடி இருங்கள். அதனால் பெருவாழ்வு பெறலாம். என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் பேராசிரியர் நந்தகுமாரன்.

## 17

பேராசிரியர் நந்தகுமாரன் பேசி முடித்ததும், இடைவேளை விடப்பட்டது. இடைவேளை முடிந்ததும், மகாநாட்டின் தலைவரான கதிரேசன் மேடைக்கு வந்து சபையோர்களை வணங்கிவிட்டுப் பேசத் தொடங்கினார். சபையோர்களே, முதாலாவது மகாநாட்டைவிட இரண்டாவது மகாநாடு சிறப்பாகவும், விமரிசையாகவும் நடைபெறுகிறது. உலகெங்கும் ஒளிபரப்புச் செய்யப்படுவதால், உலகெங்கிலும் உள்ள அறிஞர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்த வண்ணம் உள்ளனர். பேச்சாளர்கள் பழையவற்றை அதாவது

முன்பு பேசியோர் பேசியவற்றைப் பேசாது புதுப்புதுக் கருத்துக்களைக் கதைவடிவில் கூறி வருவது மிக்க பயனுடையதாக இருக்கிறது. பாடசாலைகள் குறளின் விரிவுரைகளைப் பதிவு செய்து மாணவர்களுக்கு ஒளிபரப்புகின்றனர். பிறர் பேசுவதைப் பேசாமையால், அனைவரும் விரும்பிக் கேட்கின்றனர். இன்று செங்கோண்மை என்ற அதிகாரத்தைப்பற்றி தமிழறிஞரின் மாணவரான கமலநாதன் அவர்கள் பேசுவார்'' என்று கூறி விடைபெற்றார் கதிரேசன்.

''சபையோர்களே, நான் தமிழறிஞரின் மாணவன். அவரைப்போலப் பேச வல்லவர்கள் யாரும் இல்லை. அவரின் துணையுடனும், ஆசியுடனும் பேச வந்துள்ளேன். குறைகள் இருப்பின் மன்னிக்கவும். நான் பேச எடுத்துக் கொண்ட அதிகாரம் செங்கோண்மை. மிகமிக அற்புதமான ஒரு அதிகாரம். பகவத்கீதையில் அர்ச்சுனனுக்குக் கண்ணன் கூறியது போன்ற அறிவுரைகளைத் திருவள்ளுவர் அரசர்களுக்குக் கூறுகிறார்''.

கமலநாதன் முதலாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத் தொடங்கினார், ''ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும் தேர்ந்து செய்வ.்.தே முறை'', ''சபையோர்களே நாட்டை அரசாளும் அரசன் குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் செய்த குற்றங்களை ஆராய்ந்து பக்கம் சாராது இரக்கப்படாது நடுவுநிலையில் நின்று தகுந்த தண்டனை அளிப்பதே நீதியாகும். இரத்தினபுரி என்ற வளம்மிகுந்த நாட்டை விஜயசிங்கம் என்ற மன்னன் நீதிநெறி வழுவாது ஆண்டு வந்தான். அவனுக்குப் பிள்ளைகள் இல்லாமையால் தனது சகோதரனின் மகனைத் தத்தெடுத்து இளவரசருக்குரிய நடைமுறைகளோடு வளர்த்து வந்தான்''.

''சகோதரனின் மகன் விக்கிரமனுடன் குருகுலத்தின் சபைப் புலவரான சுந்தரனாரின் மகன் மணிமாறனும் கற்று வந்தான். விக்கிரமனை விட மாறன் போர்ப்பயிற்சி உட்படச் சகல கலைகளிலும் வல்லவனாக விளங்கினான். தமிழப்புலமை மிக்க மணிமாறன். அரசனைப் புகழ்ந்து, அவனது செயல்களைப் பாராட்டிப் பல பாடல்களைப் பாடுவான். விக்கிரமனுக்கு எப்படித்தான் பயிற்சி அளித்தாலும், அவனால் கற்கவும், போர் செய்யவும் முடியவில்லை. குருவான வாசுதேவர் எப்போதும் மணிமாறனின் வீரச்செயல்களைப் புகழ்ந்தபடி இருப்பார். இதுவும் விக்கிரமனுக்குப் பிடிப்பதில்லை''.

''ஒரு நாள் விக்கிரமனும் மணிமாறனும் கங்கையில் நீராடச் சென்றனர். விக்கிரமன் தான் அணிந்து வந்த பெறுமதிமிக்க ஆபரணங்களைக் கழற்றி ஒரு பையில் வைத்துக் கங்கைக் கரையில் வைத்துவிட்டு நீராடச் சென்றான். அவனோடு மணிமாறனும் சென்றான். விக்கிரமன் அன்று நெடுநேரம் நீராடியமையால் மணிமாறன் கங்கைக் கரையில் விக்கிரமனின் வருகைக்காகக் காத்திருந்தான். சிறிது நேரம் கழித்து விக்கிரமன் நீராடிவிட்டு வந்து பார்த்தபோது கழற்றி வைத்த ஆபரணங்களைக் காணவில்லை. அதை மணிமாறன் தான் எடுத்திருப்பான் என்று அரசனிடம் புகாரிட்டான்''.

‘‘அரண்மனைக் காவலர்கள் புலவரின் வீட்டைச் சோதனையிட்டபோது, மணிமாறனின் ஆபரணங்கள் புலவரின் வீட்டின் பின்புறத்தில் புதைத்து வைத்திருப்பது தெரிய வந்தது. அரசன் விசாரியாது மணிமாறனுக்குச் சிறைத்தண்டனை விதித்தான். அவனது குருவான வாசுதேவர் அரச சபைக்கு வந்து, அரசனை வணங்கி, ‘‘மன்னா, முறைப்படி ஆராயாது குற்றமற்றவனான மணிமாறனுக்குச் சிறைத்தண்டனை வழங்கிவிட்டீர்கள். அவன் உத்தமன், வீரன், அறிவாளி, சுத்தவீரன் தீய செயல்களை ஒருபோதும் செய்யமாட்டான். அதனால் நானும் எனது சீடர்களும் நாட்டைவிட்டு உடனே வெளியேறுகிறோம்’’ என்று கூறிவிட்டு அரசனது பதிலை எதிர்பாராது சென்று விட்டார். அது அரசனுக்குப் பிடிக்கவில்லை. எனினும் பேசாது இருந்தான்’’.

சற்று நேரத்தில் பல கிளிகள் பறந்து வந்து அரசனின் முன் இருந்த ஆசனங்களில் அமர்ந்தன. அதன் பின் பல புறாக்கள் பறந்து வந்தன. சில காகங்களும் பறந்து வந்தன. சில நாய்கள் வந்து ஊளையிட்டன. பரபரப்புடன் மந்திரிகளும், பிரதானிகளும், சோதிடர்களும் அங்கு வந்தனர். சோதிடர் சொன்னார், ‘‘நடக்கக் கூடாதனவெல்லாம் நடக்கப் போகின்றன. நாய்கள் ஊளையிடுவது நல்ல சகுனமல்ல. வெளியே மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்’’.

‘‘அரசன் சொன்னான், என்னைப் பற்றி யாரும் சரியாகப் புரிந்து கொள்ள-வில்லை. நான் குற்றம் செய்தவர் யாராக இருந்தாலும், முழுமையாக ஆராயாது தீர்ப்புச் சொல்ல மாட்டேன் என்பது உங்களுக்குப் புரியாதா…? பட்டத்து யானையிடம் ஒரு மாலையைக் கொடுத்து அவிழ்த்து விடுங்கள்’’ என்றான். யாருக்கும் எதுவும் புரியவில்லை. யானைப்பாகன் யானையிடம் ஒரு மாலையைக் கொடுத்து அவிழ்த்து விட்டான். யானை பலமுறை பிளிறிவிட்டுச் சிறைக்குள் சென்று மணிமாறனுக்கு மாலைசூட்டி அழைத்து வந்தது. அரசன் சொன்னான், ‘‘நான் எதையும் ஆராயாது செய்வதில்லை. விக்கிரமனின் நடத்தை எனக்குப் பிடிப்பதில்லை. நாட்டை ஆளும் பொறுப்பை அவனுக்குக் கொடுத்தால் அனைவரும் பெரும் துன்பமடைவர். இவ்வளவு நாளும் அன்பாக விக்கிரமனை வளர்த்த எனது மனைவி, நான் அரச பொறுப்பை மணிமாறனுக்குக் கொடுத்தால் பெரும் துன்பப்படுவள்’’.

‘‘எனது சகோதரனும் அவனது குடும்பத்தினரும், மந்திரி பிரதானிகளும், மக்களும் தவறாக நினைப்பர். அதனால் தான் இவ்வாறு செய்தேன். எனக்குப் பின் நாட்டை ஆளப் போபவன் மணிமாறன். அது விரைவில் நடைபெறும்’’ என்றான். சபையோர்களே, நீதி வழுவாத மன்னன், நீதியைக் காக்க எதையும் செய்வான். அதை மற்றவர்களுக்குச் சொல்லிவிட்டுச் செய்யத் தேவையில்லை. அதனால் வரும் தீங்குகளையும் மன்னன் சொன்னமையால் அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

கமலநாதன் இரண்டாவது குறளை இனிமையாகப் பாடினார். பின்பு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறினார், ''வான்நோக்கி வாழும் உலகு எல்லாம் மன்னவன்கோல்நோக்கி வாழும் குடி'', ''சபையோர்களே, பூமியில் வாழும் உயிர்களெல்லாம் மழையை நம்பியே வாழ்கின்றன. மழை காலம் தவறாது பெய்யா விட்டால் உயிர்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் அழிந்துவிடும். எந்த உயிரும் உயிரோடு இருக்கமாட்டாது. அதுபோல குடிகள் மன்னனது செங்கோலை நம்பியே வாழ்கின்றனர். இரத்தினபுரியின் அடுத்த மன்னன் விக்கிரமன் என்று தெரிந்து கொண்ட மந்திரி பிரதானிகளும் மக்களும் பெரும் கவலை கொண்டனர். விஜயசிங்கன் நீதியான மன்னன். எப்பொழுதும் யாரும் அவனைக் கண்டு பேசலாம். குறைகள் இருப்பின் தெரிவிக்கலாம். விக்கிரமன் தீயவன். தீயவர்களுடன் சேர்ந்து தீய செயல்கள் பலவற்றையும் செய்பவன். அவன் அரசனானால் பெரும் பெரும் துன்பங்கள் வந்து சேருமென்று அரண்மனையின் சோதிடர் கணித்துக் கூறிவிட்டபின் மக்கள் அச்சத்துடன் வாழ்ந்தனர்''.

''அவைப்புலவரும், சோதிடரும் இதுபற்றிக் கதைக்க பூஞ்சோலைக்குச் சென்றனர். சோதிடர் சொன்னார், ''அரசனின் செங்கோல் வளையாதிருந்தாற்றான் மாதம் மும்மாரி பொழியும், நேற்றும் நல்ல மழை பெய்தது. ஆறுகள் யாவும் கரைபுரண்டு ஓடுகின்றன. வழமையைவிட விளைச்சலும் அதிகரித்துள்ளது. சகுனங்களும் தீயனவாக இல்லை. ஆனால் மன்னரின் போக்குத்தான் பிழையாக உள்ளது''.

''புலவர் சொன்னார், ''மன்னன் நீதி நெறி தவறாதவன். நான் மன்னனுடன் முப்பது வருடமாகப் பழகி வருகிறேன். ஒருபோதென்றாலும் அவன் சுடு சொற்களை சொன்னதில்லை. மன்னனது நடத்தை மாறவில்லை. எதையோ கண்டறியத்தான் மன்னன் இவ்வாறு நடந்து கொள்கிறானே தவிர தீமை செய்யமாட்டான். மன்னன் செய்வதெல்லாம் நன்மைக்கு என்று தான் நான் நினைக்கிறேன்'' என்றவர். சபையோர்களே, நீதி தவறாத மன்னன் எடுக்கும் முடிவு சில சமயம் கொடுமையானதாக இருந்தாலும், இறுதியில் அது பெரு நன்மையையே அளிக்கும் என்று தெரிந்து கொண்டவர்கள்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் கமலநாதன.

கமலநாதன் மூன்றாவது குறளைப் பாடி விட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், ''அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்'', ''சபையோர்களே, ஒரு நாட்டின் நன்மைக்கும் தீமைக்கும் சான்றாக இருப்பது மன்னனின் வழுவாத செங்கோலாகும். அந்தணர்கள் ஓதும் வேதத்திற்கும், மக்கள் அறத்தைப் பேணவும் அடிப்படையானது செங்கோல் தான். அதனால் செங்கோல் தான் உலகைக் காக்கிறது என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். அன்று முதலமைச்சர் சிவன்கோவிலுக்கு வந்தபோது பிரதம குருவான அந்தணர் அவரை இன்முகத்துடன் வரவேற்று விட்டுச் சொன்னார். ''அமைச்சரே மன்னன் அன்று நடந்து

கொண்ட விதத்தைப் பார்த்து நான் அதிர்ச்சியடைந்து போனேன். புலவரின மகன் மணிமாறன் உத்தமன். தீய செயல்களை மனதால் கூட எண்ணாதவன். சுத்த வீரன். அவன் கோவிலுக்கு வந்தால் கோவிலில் வாழும் புறாக்களும், பசுக்களும், காளைகளும் பட்சிகளும் வந்து அவனைச் சுற்றி நிற்கும். புறாக்கள் அவனது தோளில் அமரப் போட்டியிடும். பசுக்கள் நக்கும். தெருநாய்களெல்லாம் ஊளையிடும். அதனால் அவன் வருகிறான் என்று தெரிந்து கொள்வேன்''.

''விக்கிரமன் அப்படியானவன் அல்ல. தீயவன் உயிர்களுக்குத் தீங்கு செய்பவன். அதனால் அவனைக் கண்டதும் கோவிலில் வாழும் உயிரினங்கள் ஓடி மறைந்து விடும். ஒரு நாள் கோவில் யானைக்கு அவன் கரும்பு கொண்டு வந்து கொடுத்தான். யானை வாங்கவில்லை. அதனால் கோபங் கொண்ட அவன் யானையை உடை வாளால் வெட்டப் போனான். அன்றைக்கு அவன் தப்பியது பெருஞ்செயல். பின் அவன் வரும் வேளைகளில் யானையைக் கட்டி வைத்திருப்போம். அவன் அரசனானால் கோவிலில் பூசைகள் கூட நடைபெறாது என்று கவலைப்பட்டேன். சிவன் காப்பாற்றி விட்டார்'' என்றார். சபையோர்களே, ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டாலும் அக்குடும்பத்தின் தலைவன் நல்லவனாக, வல்லவனாக, பிற உயிர்களுக்கு உதவுவனாக இருந்தால் தான் குடும்பம் செழிக்கும். அதனால் உத்தமர்களாக வாழுங்கள்'' என்று கூறித் தனது உரையை முடித்தார் கமலநாதன்.

கமலநாதன் நான்காவது குறளைப் பாடிவிட்டு, அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், ''குடிதழீஇக் கோல் ஓச்சும் மாநில மன்னன் அடிதழீஇ நிற்கும் உலகு'', ''சபையோர்களே, குடிமக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து அதற்கான தீர்வுகளை வழங்கி நல்லாட்சி செய்யும் அரசனைப் பின்பற்றிக் குடிகள் வாழும். முதல் அமைச்சருக்கு அந்தணர் சொன்னார், ''எங்கள் மன்னன் மிகவும் நல்லவர். இரக்க சுபாவம் மிக்கவர். ஓர் உயிர் பசியால் வாடக்கூடாதென்று நினைத்து நாட்டின் பல பாகங்களிலும் அன்னசத்திரம் அமைத்து ஏழை எளியவர்களுக்கு உணவளித்து வருகிறார். அதில் பெரும்பாலும் ஊரவர்கள் உண்பதில்லை. வழிப்போக்கர்களும், யாத்திரை மேற்கொள்வோரும், அயல்நாடுகளில் உள்ள வறியவர்களும் தான் உண்கின்றனர். கோவில்களில் பொங்கிப் படைத்தால் அதை வாங்கியுண்ண யாரும் வரார். வீடுகளுக்கு கொண்டு சென்று கொடுத்தல் வேண்டும்.''

''அவ்வாறு மன்னனோடு ஒட்டி உறவாடி இன்பமாக வாழ்ந்த மக்கள் விக்கிரமன் அரசனானால் என்ன செய்வதென்று துன்பப்பட்டனர்'' என்ற போது முதலமைச்சர் சொன்னார்,'' நானும் துன்பப்பட்டேன். அடுத்த அரசன் விக்கிரமன் என்று அறிந்த பின், அவனை அரசானாக்க வேண்டாம் என்று எப்படிக் கூற முடியும். அரசர் எதையும் ஆராய்ந்து முறைப்படி செய்பவர். ஏன் இப்படியான ஒரு நடவடிக்கையை எடுத்தார் என்று கலங்கினேன். அரசர் மகா புத்திசாலி. அதனால் தான் யாரும் செய்யாத

செயலைச் செய்து நாட்டு மக்களைக் காப்பாற்றினார். நான் அரசர் நல்லதொரு முடிவை எடுக்க வேண்டும் என்று எந்நேரமும் கடவுளை வேண்டினேன். அது பலித்துவிட்டது. கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்'' சபையோர்களே, அரசனின் முடிவைக் கேள்விப்பட்டு ஆச்சரியமும் மகிழ்வும் அடைந்த மக்கள் அதைப் பெருவிழாக்களாகக் கொண்டாடி வருகிறார்கள். குடிமக்களை அணைத்துக் கொண்டு நல்லாட்சி புரிந்தால் மக்கள் அரசனைத் தெய்வமாகப் போற்றுவர்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் கமலநாதன்.

''இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்டபெயலும் விளையுளும் தொக்கு'' கமலநாதன் ஐந்தாவது குறளைப் பாடி அதற்கான உரையையும், விளக்கத்தையும் சொன்னார். ''சபையோர்களே, நீதி முறைப்படி நல்லாட்சி செய்யும் மன்னனது நாட்டில் பருவ மழைகாலம் தப்பாது பெய்யும். அதனால் உணவுப் பொருட்கள் அளவுக்கதிகமாக விளையும். இலங்கையை எல்லாளன் என்றொரு நீதி தவறாத மன்னன் ஆண்ட காலத்தில் ஒருநாள் பருவ மழை பெய்யாத நாளில் ஒரு மூதாட்டி நெல்லை அவித்துக் காயப் போட்டாள். அப்போது அகால மழை பெய்து அவளது நெல்லைத் தள்ளிச் சென்று விட்டது. அதனால் கவலைப்பட்ட மூதாட்டி மன்னினடம் சென்று முறையிட்டாள். மன்னன் மழைத்தெய்வமான வருணனை அழைத்து இனிமேல் பகலில் மழை பெய்யக்கூடாது என்று கட்டளை இட்டானாம். அதன்பின் பகலில் மழை பெய்வதில்லை என்று வரலாறு கூறுகிறது''.

''நீதி தவறாது நாட்டை ஆளும் மன்னன் உள்ள நாட்டில் பருவமழை பொய்க்காது என்பர். இரத்தினபுரியிலும் ஒருபோதும் பருவமழை பொய்த்ததில்லை. அதனால் சிலர் பறவைகளுக்கென்று வயல்களில் தானியங்களை அறுவடை செய்யாது விட்டு விடுவர். அயல்நாடான நாவலடி மக்கள் அறுவடையன்று வயல்களுக்கு வந்தால் அவர்களுக்கு வேண்டியளவு தானியங்களை இலவசமாக இரத்தினபுரி மக்கள் கொடுப்பர். அவர்கள் இரத்தினபுரி மக்கள் கொடுத்த தானியங்களை மாட்டு வண்டியில் ஏற்றிச் செல்வர். சபையோர்களே, மன்னனது ஆட்சியைப் பொறுத்தே மழையும், தானிய விளைச்சலும் ஏற்படும்'' என்று கூறி முடித்தார் கமலநாதன்.

கமலநாதன் ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும் சொன்னார், ''வேல்அன்று வென்றி தருவது மன்னவன்கோல் அதூஉம் கோடாது எனில்'' சபையோர்களே, ஒரு மன்னனுக்கு வெற்றியைப் பெற்றுத் தருவது வேல் போன்ற கொடூரமான ஆயுதங்கள் அல்ல. நீதிநெறி தவறாது ஆட்சி செய்யும் முறையே வெற்றியைப் பெற்றுத் தரும். இரத்தினபுரி மன்னன் விஜயசிங்கனின் ஆட்சியில் எந்தக் குறைகளும் இல்லாமையால் மக்கள் வசதியாக வாழ்ந்தனர். ஓய்வான வேளைகளில் விநோதமான போர்ப்பயிற்சிகளை மேற்கொள்வர். குழுக்களாகப் பிரிந்து போட்டியிடுவர். அவர்களுக்கு பயிற்சியாளர்களாக முப்படைத் தளபதிகளும் செயலாற்றுவர்''.

‘‘நாடு முழுவதும் இளைஞர்கள் பயிற்சிப் பட்டறைகளை அமைத்து விளையாட்டாகப் பயிற்சி பெறுவர். படித்த பெண்களும் விரும்பி ஆயுதப் பயிற்சி பெறுவர். இரத்தினபுரிக்கு அருகில் உள்ள நாடு நாவலடி. இரத்தினபுரியின் வளர்ச்சியால் நாவலடி மன்னன் கவலைப்பட்டான். தனது நட்பு நாடுகள் ஐந்தின் அரசர்களுடன் சேர்ந்து படையெடுத்து இரத்தினபுரியைக் கைப்பற்ற நினைத்தான். ஐந்து நாடுகளும் திடீரென்று படையெடுத்தன. இரத்தினபுரி மன்னனின் உளவாளிகள் காற்றுப் புகாத கோட்டைக்குள்ளும் நுழைந்து அங்கு நடைபெறுபவற்றை அறிந்து விடுவார்கள்’’.

‘‘நாவலடி நாட்டு படைத்தளபதி வியூகம் வகுத்தபடி ஐந்து நாட்டுப்படைகளும் செயற்பட்டன. அவை நான்கு பக்கங்களாலும் வந்தன. அவர்கள் உள்ளே நுழைந்தபோது நான்கு பகுதிகளிலும் காவல் இல்லாது இருந்தது. உள்ளே பெரியதொரு கலைவிழா நடைபெறுவதாகச் செய்தி பரப்பப்பட்டமையால் மக்களும் படைவீரர்களும் மகிழ்வுடன் முன்னேறிச் சென்ற போது பெரியதொரு பள்ளம் தென்பட்டது. அவர்கள் என்ன செய்யலாமென திட்டமிடும் முன் இரத்தினபுரியின் காலாற்படை அவர்களைச் சூழ்ந்து தாக்க படைவீரர்கள் அனைவரும் அப்பள்ளத்தில் வீழ்ந்தனர். அதனுள் இருந்த சேற்றில் சிக்கினர். அப்பொழுது ஒரு மூதாட்டி வந்து சொன்னாள், ‘‘எங்கள் மன்னருக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுப்பது ஆயுதங்கள் அல்ல. மக்களின் சக்தி. இங்கு எல்லோரும் மன்னர்கள் முடிந்தால் உயிரோடு உங்கள் நாட்டிற்கு திரும்புங்கள் பார்ப்போம்’’ என்றாள்.

‘‘சபையோர்களே, மக்களால் விரும்பப்படும் மன்னனை யாராலும் வெல்ல முடியாது. நாலாபக்கங்களாலும் வந்த படைகள் அனைத்தும் இரத்தினபுரிப் படைகளாலும், மக்களாலும் சிறைபிடிக்கப்பட்டனர். நல்லவர்களை வெல்லவே முடியாது’’ என்று கூறித் தனது உரையை முடித்தார் கமலநாதன்.

கமலநாதன் ஏழாவது குறளைப்பாடி அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத் தொடங்கினார், ‘‘இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை முறை காக்கும் முட்டாச் செயின்’’ ‘‘சபையோர்களே, நீதியாக அரசாளும் அரசன் உலகத்திலுள்ள அனைத்து உயிர்களையும் காப்பாற்றுவான். அவனை அறம் காப்பாற்றும். அதாவது நீதியும் அவனது மக்களும் காப்பாற்றுவார்கள். இரத்தினபுரியைக் கைப்பற்றினால் ஐந்து நாட்டினதும் வறுமை அகன்று விடும் என்று நினைத்து வந்த அரசர்களும், படைவீரர்களும் பொறிக்குள் அகப்பட்ட எலிகளைப்போல தடுமாறியபடி இருந்தபோது விஜயசிங்கன் வந்து சொன்னான், ‘‘நீதிநெறி தவறாது நீங்கள் உங்கள் நாட்டை ஆண்டிருந்தால் அந்த நீதிநெறி உங்களைக் காப்பாற்றியிருக்கும். அரசனுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுப்பது படைவீரர்களோ, ஆயுதங்களோ அல்ல. நீதிநெறி தவறாது செய்யும் ஆட்சிதான். நீதியாக ஆண்டால் கடவுள் நீதியின் பக்கம் நிற்பார். மக்கள் அனைவரும் போர்வீரர்களாக மாறுவர். மழை தவறாது பொழியும். தானியங்கள் தாராளமாக விளையும். ஐந்து நாட்டு மன்னர்களையும் கைது செய்து சிறையில் அடைக்கப் போகிறேன். ஒவ்வொரு நாட்டையும்

எனது பிரதிநிதிகள் என்னைப்போல ஆட்சி செய்வர் என்றான்''. அதனால் மக்களாகிய நீங்கள் அனைவரும் நீதியாகவும், நேர்மையாகவும் வாழுங்கள். நீங்கள் நினைத்தவை யாவும் உதவுவார் இன்றி நிறைவேறும்'' என்று கூறிக் கமலநாதன் தனது உரையை நிறைவு செய்தார்.

கமலநாதன் எட்டாவது குறளைப்பாடி அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், ''எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன் தண்பதத்தான் தானே கெடும்'', ''சபையோர்களே, மக்களால் கைது செய்யப்பட்டு விலங்கிடப்பட்டு தன் முன் நிற்கும் ஐந்து அரசர்களையும் பார்த்து விஜயசிங்கன் சொன்னான், ''மக்களுக்கு ஆயிரம் குறைகள் இருக்கும். அவற்றை முறையிட்டுத் தீர்வுக்கான பலமான ஒருவர் இருத்தல் வேண்டும். சகல உயிர்களையும் இறைவனைப்போல காப்பவன் தான் அரசன். ஒரு பக்தன் தனது குலதெய்வத்தை விரும்பிய போதெல்லாம் கண்டுகளித்து தம் விருப்பத்தை தெரிவிக்கின்றனர். அதனாற்றான் அரண்மனையை கோவிலென்றும் அரசனைக் கடவுளென்று முன்னோர் கூறியுள்ளனர். பக்தன் தனது குலதெய்வத்தை நேரில் காண்பது போல மக்கள் அரசனை நேரில் கண்டு தமது குறைகளைக் கூறி அதற்கு நிவாரணம் பெறல் வேண்டும்''.

''உங்கள் ஐவரில் ஒருவரையேனும் நேரில் காணமுடியுமா…..? மக்களின் குறைகளை அறிந்தால் தான் அதைத் தீர்த்து வைக்க முடியும். அத்துடன் மக்களை நேரில் சந்தித்தால் அவர்களது குறைகளைக் கேட்டறிந்து நீதி வழங்க முடியும். நேரில் காணாவிட்டால் ஆராய்ந்து பாராது நீதியென்ற அநீதியைத் தான் வழங்க முடியும். அப்படியான அரசர்கள் தான் நீங்கள், உங்களை அழிக்க பகைவர்கள் தேவையில்லை. நீங்களே உங்களுக்குப் பகைவர்களாகி நீங்களே உங்களை அழித்துக் கொள்வீர்கள்'' என்று கூறினான். அதனால் சபையோர்களே, ஒரு தீய செயலைச் செய்யும்போது அச்செயல் உங்களை அழித்துவிடுமென்று எண்ணினால் உங்களுக்கு எந்தக் கெடுதலும் வராது'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் கமலநாதன்.

கமலநாதன் ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், ''குடிபுறம் காத்து ஓம்பிக் குற்றம் கடிதல் வடு அன்று வேந்தன் தொழில்'', கைகளில் விலங்கிட்டபடி சோர்ந்து கவலையுடன் நின்ற அந்த ஐந்து மன்னர்களையும் பார்த்து, விஜயசிங்கன் கோபத்துடன் சொன்னான், ''ஓர் அரசனின் தொழில் என்னவென்று உங்களில் யாருக்காவது தெரியுமா…? குடிமக்களுக்குத் தன்னாலும், பிறராலும் துன்பங்கள் வராது காப்பதோடு, தீய செயல்களைச் செய்பவர்களைத் தண்டிக்கவும் வேண்டும். இது தான் வேந்தனின் தொழில். அவ்வாறு நீங்கள் செய்தீர்களா…? நீங்களே அவர்களைக் கொடுமைப்படுத்தினீர்கள் அப்போ. இப்போது ஐந்து நாடுகளையும் அரசாள்பவன் நான். ஐந்து நாட்டு மக்களும் எனது நாட்டு

மக்களாவர். அதனால் அவர்களுக்குத் துன்பம் செய்த உங்களை நான் தண்டித்தே தீர வேண்டும். அது எனது கடமை மட்டுமல்ல, எனது தொழிலும் ஆகும். உங்களை உங்களது நாடுகளுக்கு முன்நிறுத்தி விசாரிக்க வேண்டுமென முடிவெடுத்துள்ளேன். இது எனக்குப் பாவத்தையோ, பழியையோ தராது. புண்ணியத்தைத் தான் தரும் என்றான். அதனால் சபையோர்களே, தற்போது அரசனது ஆட்சி இல்லாவிட்டாலும், ஒவ்வொருவரது மனத்திலும் மனச்சாட்சி உண்டு. மனச்சாட்சிக்கு விரோதமாகச் செயற்பட்டால், கடவுள் உங்களைத் தண்டிப்பார்'' என்று கூறித் தனது பேச்சை நிறைவு செய்தார் கமலநாதன்.

கமலநாதன் பத்தாவது குறளைப் பாடி, அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், ''கொலையின் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ் களைகட்டு அதனோடு நேர்'', ''சபையோர்களே, விஜயசிங்கன் சொன்னான், ''உங்களைத் தங்கள் நாட்டு மன்னர்கள் என்று மக்கள் யாராவது கூறட்டும்'' உடனே உங்களை விடுதலை செய்து நாடுகளின் அரசாட்சியையும் உங்களிடம் ஒப்படைத்து விடுகிறேன். உங்கள் அமைச்சர்களை, பிரதானிகளை, அந்தணர்களை அழைத்துக் கேளுங்கள். அரசன், கொடிய குற்றங்களைச் செய்பவர்களுக்கு மரண தண்டனை விதிப்பது, விவசாயி தனது வயலில் விளைச்சலை முற்றாகக் குறைத்துவிடும் எனக் கருதிக் களை எடுப்பதற்குச் சமமானது என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் அரசரை விவசாயி என்று நினைக்கிறார்கள். நீங்கள் நாட்டு மக்களுக்குச் செய்த துரோகங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. நீங்கள் களைகள், உங்களைக் கொல்வது பாவமல்ல, புண்ணியம். களையைப் பிடுங்கினால் களைகளின் வம்சம் காலப்போக்கில் அழிந்துவிடும். ஆனால் உங்களைக் கொல்வதன் மூலம் உங்கள் வம்சம் அழியாது''.

''ஒருவன் தனது வம்ச வரலாற்றை அறிந்து வைத்திருத்தல் வேண்டும். வம்ச வரலாறு என்பது தனது இனவரலாறு அல்ல. முன்பு அரசாண்ட மன்னர்களின் வரலாறு. சிபிச்சக்கரவர்த்தியின் வரலாறு உங்களுக்குத் தெரியுமா…? ஒரு புறாவின் உயிரைக் காக்கத் தனது உடலில் இருந்து தசையை வெட்டிக் கொடுத்தவன். சோழ மன்னன் தனது மகனின் தேர்ச்சில்லுள் அகப்பட்டு பசுக்கன்று இறந்தமையால், தனது மகனைப் படுக்க வைத்து தேரைச் செலுத்தினவன். இப்படி எத்தனையோ மன்னர்கள் உயிர்களுக்காக இரங்கியுள்ளனர். அப்படி உங்களை நான் செய்யச் சொல்லவில்லை. ஈவு இரக்கம் உள்ளவனாக, நீதி நியாயம் தெரிந்தவனாக வாழ்ந்திருக்கலாம். உங்களது நாடுகளில் வாழ்ந்த ஒரு பெரியவர் வந்து உங்களை விடுதலை செய்யும்படி கூறட்டும். உடனே விடுதலை செய்து விடுகிறேன்'' என்றான். அதனால் சபையோர்களே, நீங்கள் மற்றவர்களுக்கு உதவிகள் செய்யாவிட்டாலும் பரவாயில்லை. அவர்களுக்குத் தீமை செய்யாமலாவது வாழுங்கள்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் கமலநாதன்.

## 18

சபையோர்களே, கமலநாதனின் பேச்சு அருமையாக இருந்தது. அவர் குறளுக்குப் பொருத்தமான கதைகளைக் கூறியபோது, அதற்கேற்றவாறு வாழும்படியும் உபதேசித்தார். அவ்வாறு வாழுங்கள். கமலநாதன் அவர்கள் தான் தமிழறிஞரின் மாணவன் என்பதை உறுதி செய்துள்ளார். செங்கோண்மையைப் பற்றிப் பேசிய அவரே கொடுங்கோண்மை பற்றியும் பேசுவார் என்று கூறித் தனது ஆசனத்தில் அமர்ந்தார் கதிரேசன்.

‘‘சபையோர்களே, செங்கோண்மையின் தொடர்ச்சி தான் கொடுங்கோண்மை. அதனால் தான் மகாநாட்டுக்குழு என்னைப் பேசுமாறு கேட்டுக் கொண்டது. அதற்காக நன்றியைத் தெரிவிக்கின்றேன். நீதியாக நாட்டை ஆளும் மன்னனுக்கு மக்கள், பெரியார்கள், முனிவர்கள், அந்தணர்கள், அயல்நாட்டு மன்னர்கள், அந்நாட்டு மக்கள் எல்லோரும் ஆதரவாக இருப்பர். யாரும் போர் தொடுக்க விரும்பார். குடிமக்களைத் துன்புறுத்தும் அரசர்களுக்கு அங்கு வாழும் சகல மக்களும் பகைவர்களாகத் தான் இருப்பர். நாவலடி மிகப் பெரிய நாடு. அதன் மன்னன் மகாசேனன். அவனது தந்தையின் காலத்தில் அந்நாட்டில் மாதம் மும்மாரி பொழிவதால் தானியக் களஞ்சியமாகவே அது இருந்தது. கற்றவர்கள் பலர் இருந்தமையால் அசரசபையில் பல்வேறு விதமான கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். அதன் கிழக்குத் திசையில் பெரிய கடல் இருப்பதால் கப்பலில் பொருட்களை ஏற்றிச் செல்வர். பிறநாடுகளில் உள்ள அரிய பொருட்களை வணிகர்கள் கொண்டு வந்து விற்பனை செய்வர். மக்கள் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தனர்’’.

கமலநாதன் முதலாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், கதையையும், விளக்கத்தையும் கூறினார். ‘‘கொலை மேற்கொண்டாரின் கொடிதே அலைமேற்கொண்டு அல்லவை செய்தொழுகும் வேந்து’’.

மகாசேனன் அரசனாக முடிசூடியதும், அவனோடு குருகுலத்தில் கற்ற உருத்திரபுர இளவரசன் குலோத்துங்கனும், பவளபுரி இளவரசன் சோமநாதனும் நாவலடிக்கு வந்தனர். அங்குள்ள செல்வமும், அழகும் தங்களது நாட்டில் இல்லை என்பதால் அவர்கள் அங்கு வந்து மகாசேனனுடன் சேர்ந்து தீய செயல்களைச் செய்யத் தொடங்கினர். அவர்கள் மூவரும் குருகுலத்தில் கற்கும்போதே தீய பல செயல்களைச் செய்தமையால் குருதேவரால் தண்டிக்கப்பட்டவர்கள்.

அன்று காலை அரசசபை கூடியபோது உருத்திரபுர மக்களும், நாவலடி மக்களும், பவளபுரி மக்களும் வந்திருந்தனர். விஜயசிங்கனின் முதல் அமைச்சர், உருத்திரபுரத்தின் பிரதம குருவான அந்தணர், பவளபுரியின் புலவர் ஆகியோரும் வந்திருந்தனர். விஜயசிங்கன் அவர்களைப் பார்த்துச் சொன்னான் ஒவ்வொருவராக உங்களுக்கு நேர்ந்த அவலங்களைச் சொல்லுங்கள்’’.

‘‘நாவலடி நாட்டின் புலவர் எழுந்து சொன்னார், ‘‘அரசே, நான் நாவலடி நாட்டின் புலவன். எனது பெயர் சுந்தரவதனன். எனது மகள் ரதிதேவி. ரதியைப் போன்ற அழகி. அவள் நன்றாகப் பாடுவாள். முறைப்படி நடனம் பயின்றவள். பல அரசகுமாரர்கள் அவளை விரும்பிப் பெண் கேட்டனர். ஒரு நாள் அரசசபையில் கலைவிழா நடைபெற்றது. எனது மகள் பாடியவாறு ஆடினாள். கலைவிழா முடிய அவளைக் காணவில்லை. இன்றும் தேடுகிறேன் என்றபோது நாவலடியைச் சேர்ந்த ஒரு முதியவர் எழுந்து சொன்னார், ‘‘புலவரின் மகளை அல்ல, எனது பேர்த்தியையும் மூன்று மாதங்களாக காணவில்லை. அரசனைக் கேட்டார். அவள் காதலித்தவனோடு சென்றுவிட்டாள் என்கிறார். எமது நாட்டில் உள்ள இளைஞன் ஒருவன் காணாமற் போகவில்லை. உருத்திரபுர மன்னன் குலோத்துங்கன் காமவெறியன். அங்கும் இப்படியான சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. விசாரியுங்கள் மன்னா’’.

விஜயசிங்கன் சொன்னான், ‘‘உங்களுக்கு மரணதண்டனை அளிப்பதாகத் தீர்மானித்து விட்டேன். ஆசைகளுக்காளாகி முறையற்ற செயல்களைக் குடிமக்களுக்குச் செய்யும் அரசன், கொலைத்தொழிலைச் செய்பவனை விடக் கொடியவன்.’’ என்று கூறினான் என்ற கமலநாதன் தனது உரையை நிறைவு செய்தார்.

கமலநாதன் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு, அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், ‘‘வேலொடு நின்றான் இடு என்றது போலும் கோலொடு நின்றான் இரவு’’, ‘‘சபையோர்களே, செங்கோல் ஏந்தி ஆட்சி செய்யும் அரசன் முறையற்ற வழிகளில் குடிமக்களிடம் பொருளைப் பறிப்பது, வழிப்பறிக் கள்வன் வழியில் வேலோடு நின்று பயணிகளை வெருட்டிப் பணம் பறிப்பதைப் போன்றதாகும். என்று சொன்ன விஜயசிங்கன் அடுத்தவர் சொல்லலாம் என்றான்.

ஒரு காளை மாடு எழுந்து சொன்னது, ‘‘அரசே, நான் உருத்திரபுரத்தைச் சேர்ந்த வணிகன. எனது முன்னோர் கடலில் சென்று வாணிபம் செய்பவர்கள். அதையே நானும் செய்து வருகிறேன். முன்பு ஆண்ட குலோத்துங்கனின் தகப்பனார் நல்லவர். தொழில் செய்வோரை ஊக்குவிப்பவர். நான் பிற நாடுகளிலிருந்து அரிய பொருட்களைக் கொண்டு வந்து நன்னொடையாக கொடுத்தால் வாங்கமாட்டார். பெறுமதியிலும் பார்க்க கூடுதலான பணத்தைத் தருவார். ஆனால் குலோத்துங்கன் அப்படியானவன் அல்ல. வணிகவரியைக் கூடுதலாக வசூலிப்பான். கப்பலின் இறங்குதுறைக்கு வந்து நான் கொண்டு வரும் பெறுமதி மிக்க பொருட்களை எடுத்துச் சென்று விடுவான். பணம் தரமாட்டான். அதனால் எமது பரம்பரையினர் செய்து வந்த கடல் வாணிபத்தை விட்டு விட்டேன். அதனால் பெரும் கஷ்டப்படுகிறேன்’’ என்று கூறிவிட்டு அமர்ந்தான்.

‘‘அரசனே, ஆயுதங்களுடன் நின்று வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டால் மக்கள் எவ்வாறு வாழ முடியும். வணிகன் வாணிபத்தைக் கைவிட்டால் மக்கள் உணவுப்பொருட்கள் இன்றிப் பரிதவிப்பர். இதைச் செய்ய எப்படி உனக்கு மனம் வந்தது’’

என்று கேட்டான் விஜயசிங்கன். ‘‘சபையோர்களே, அரசனைக் கடவுள் என்பர். தற்போது அரசமுறை இல்லாதபோதும் அரச திணைக்களங்கள் உண்டு. அததான் தலைவர்கள் பக்கம் சார்ந்து, இலஞ்சம் பெற்று வந்தால் நாடு உருக்குலைந்துவிடும்’’ என்று கூறிக் கமலநாதன் தனது உரையை நிறைவு செய்தார்.

கமலநாதன் மூன்றாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், ‘‘நாள்தொறும் நாடி முறை செய்யா மன்னவன் நாள் தொறும் நாடு கெடும்’’, ‘‘சபையோர்களே, வணிகன் தனது நிலையைக் கூறிவிட்டு அமர்ந்ததும் விஜயசிங்கன் சொன்னான், ‘‘வணிகரே, உடனடியாக வாணிபத்தைத் தொடங்கும். அதற்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் நான் செய்து தருகிறேன். அடுத்து யாராவது கூறலாம்’’ என்றான்.

அப்போது ஒரு வரிக்குதிரை எழுந்து மன்னவனை வணங்கியது. ‘‘மன்னா, நான் நாவலடி நாட்டின் முதலமைச்சர் வரகுணன். தாங்கள் வேந்தர்களுக்கெல்லாம் வேந்தன். மாமன்னர். மன்னா, அரசனுக்குக் கடவுளுக்கு உள்ள பொறுப்புக்கள் அனைத்தும் உண்டு. கடவுள் கணநேரம் கூட வீணாக கழியவிடாது மக்களுக்கு அருள்கிறார். அதுபோல மன்னனும் தினமும் தனது நாட்டில் நடைபெறும் நன்மை தீமைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளைச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாது இன்பக் களியாட்டங்களில் பங்குபற்றி இன்புற்றிருக்கும் மன்னன் தனது நாட்டைத் தினமும் சிறிது சிறிதாக இழப்பான் என்று அரசியல் ஞானிகள் கூறியுள்ளனர். அதுதான் எமது நாட்டில் நடந்தது. மன்னன் நாட்டில் நடைபெறும் எந்த விடயங்களையும் கவனிப்பதில்லை. புலவரின் மகள் மட்டுமல்ல பல பெண்கள் காணாமற் போனமையால் மக்கள் கொதித்தெழுந்தபோது தாங்கள் நாட்டுள் வர மக்கள் மகிழ்வுடன் தங்களை வரவேற்றனர்’’ என்று கூறும்போது விஜயசிங்கன் சொன்னான், ‘‘அமைச்சரே, உம்மைப் பற்றி விசாரித்தேன். யாரும் குறையாகக் கூறவில்லை. அதனால் நாட்டின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும். தேவையான உதவிகள் உமக்குச் செய்து தரப்படும்’’ என்றான். சபையோர்களே, ஒரு குடும்பத்தலைவன் அக்குடும்பத்தின் அரசனாவான். அவன் தனது குடும்பத்தில் நடைபெறுபவற்றை தினமும் கண்காணிக்க வேண்டும். இல்லாவிட்டால் குடும்பம் கெட்டழிந்து விடும் என்று கூறினார் கமலநாதன்.

கமலநாதன் நான்காவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், ‘‘கூழும் குடியும் ஒருங்கு இழக்கும் கோல்கோடிச் சூழாது செய்யும் அரசு’’, ‘‘சபையோர்களே, விஜயசிங்கன் சொன்னான், ‘‘அடுத்தவர் சொல்லலாம்,’’ என்றதும் ஒரு நரி எழுந்து மன்னா பவளபுரி மன்னனின் பெரும் ஆதரவாளன், எனது பெயர் மூர்த்தி. பவளபுரி மன்னனான சோமநாதனின் உதவியாளன். அவனுக்கு துர்ப்புத்திமதிகள் கூறுவது நான் தான். யாரிடம் பொருள் இருக்கிறது. யார் யார் என்னென்ன கதைக்கின்றனர். அமைச்சர்கள் என்னென்ன செய்கிறார்கள் என்று

அறிந்து அதைத் திரித்துக் கூறுவேன். எனது எதிரிகளைப் பற்றியும் எனக்குப் பொருளைத் தந்தவர்களின் எதிரிகளைப் பற்றியும் தப்பாகக் கூறி அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பேன். அரசர் கைது செய்யப்பட்தை அறிந்த நாட்டு மக்கள் ஒன்றுகூடித் திரண்டு வந்து என்னைப் பிடித்துப் பலமாகத் தாக்கிவிட்டுக் கட்டி வைத்தனர். நான்கு நாட்களாக உணவும் தண்ணீரும் தரவில்லை. நான் செய்த கொடுமைகள் அனைத்தையும் தங்களிடம் விபரமாக கூறாவிட்டால் எனது குடும்பத்தினரைக் கொன்று விடுவதாகப் பயமுறுத்தினர். அதனாற்றான் சொல்கிறேன், எனது நடத்தையால் நான் எனது குடும்பத்தார்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் இழந்து விட்டேன். எனது பெறுமதியான ஆடம்பரமான வீட்டைக் கொள்ளையடித்து விட்டுக் கொழுத்தி விட்டார்கள். எனக்கு ஏற்பட்ட நிலை தான் எமது அரசருக்கும் ஏற்பட்டது. அரசரும் ஆராயாது நான் சொல்வதை நம்பிச் செயற்பட்டதால் குடிமக்களையும் அரசையும் ஒன்றாக இழந்து விட்டார்'' என்றது. அதைக் கேட்ட விஜயசிங்கன் மூர்த்திக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதித்தான். அதனால் சபையோர்களே, குடும்பத்திலோ அல்லது நீங்கள் கடமையாற்றும் நிறுவனங்களிலோ ஆராயாது எதையும் நம்பாதீர்கள்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் கமலநாதன்.

கமலநாதன் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், ''அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை'', ''சபையோர்களே, இன்னும் யாராவது ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லலாம் என்று விஜயசிங்கன் சொல்ல ஒரு யானை எழுந்து நின்று தனது தும்பிக்கையை உயர்த்தி அரசனுக்கு வணக்கம் செலுத்திவிட்டுச் சொன்னது, ''மன்னா, நான் நாவலடி என்ற நாட்டில் அமைந்துள்ள் சரித்திரப் பிரசித்த வாய்ந்த சிவன் கோவிலின் பூசகர். மகாசேனனின் தந்தையின் காலத்தில் கோவிலுக்கு மக்கள் திரள்திரளாக வந்து வணங்குவர். மன்னர் அவர்களுக்குப் பிரசாதமாக சத்தான உணவு வகைகளைக் கொடுப்பார். கோவிலில் எந்த நேரமும் சபைக்கூட்டம் இருக்கும். கடைகள் பல இருக்கும். ஆனால் மகாசேனன் மன்னனாக முடிசூடிய பின் எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. நாட்டில் பஞ்சம் ஏற்பட்டமையால் மக்கள் இடம்பெயர ஆரம்பித்தனர்''.

''பரம்பரையாக எமது குடும்பமே சிவன்கோவிலில் பூசை செய்து வந்தமையால் என்னால், சிவனை விட்டுப் பிரிந்து செல்ல முடியவில்லை. ஏழ்மையுடன் சிவனை நம்பியிருக்கிறேன். ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளைப் போன்றது என்றும், அரசனது ஆட்சியை வேரொடு கலையும் ஆயுதம் என்றும் எனது தந்தை சொல்வார். அது நடந்து விட்டது'' என்று பெருமூச்சுவிட்டார் குருக்கள். சபையோர்களே யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்யாதீர்கள். செய்தீர்களானால் அவர்கள் படும் துன்பங்கள் காலகதியில் உங்களை வந்து சேரும்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் கமலநாதன்.

கமலநாதன் ஆறாவது குறளைப் பாடி அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், ''மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அ∴து இன்றேல்

மன்னாவாம் மன்னர்க்கு ஒளி'', ''சபையோர்களே, அந்தணர் தொடர்ந்து சொன்னார், ''மன்னா, எமது அரசர் கோவில்களுக்கான மானியங்கள் அனைத்தையும் நிறுத்திவிட்டார். எனினும் வியாபாரிகளும், தனவந்தர்களும் தம்மால் இயன்றளவு பொருட்களைக் கொடுத்து வந்தனர். அதனால் அவர்களுக்கும் பலவிதமான வரிகளைச் செலுத்துமாறு மன்னன் கட்டளை இட்டான். வரிகளைக் கட்டிய போதும் சின்னப்பா செட்டியார் என்ற முயல் சிவனுக்கும் எனக்கும் எந்தக் குறையும் விடவில்லை. கோவிலுக்கு வரும் ஏழைகளுக்கும் உணவளித்தார். எல்லோரும் அரசனை வாயில் வந்தபடி மண் அள்ளிப் போட்டுத் திட்டினர். எந்த ஊர் அரசனாவது எமது நாட்டை கைப்பற்றமாட்டானா என கோவிலில் வந்து அழுது அழுது சிவனிடம் முறையிட்டனர். மன்னா, பொன் விளைந்த எமது பூமி பாழ்நிலமாகி விட்டது. ஓர் அரசனின் ஆட்சியை நிலைநிறுத்துவது அவனது நீதியான ஆட்சிமுறையாகும். அதனாற்றான் தாங்கள் மிகுந்த புகழுடன் வாழ்கிறீர்கள். தங்களைப் பற்றி யாரும் குறை சொல்வதில்லை. குறை சொன்னால், சொல்பவரைக் கொன்றுவிடுவார்கள். ஆனால் எமது அரசரை எப்போது யார் கொல்வார்கள் என்று எதிர்பார்த்து இருக்கிறார்கள். தாங்கள், எங்களைப் பட்டினியில் இருந்து காப்பாற்றிய சின்னப்பா செட்டியாரிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டுக் கண்காணியுங்கள். மிக்க தயவுடன் கேட்கிறேன்'' என்றார் அந்தணர். நல்லவர் ஒருவருக்கு உதவி செய்தால் வாழ்நாள் முழுவதும் அவரைப் போற்றுவார். அதனால் உதவி செய்து வாழுங்கள்'' என்று தனது பேச்சை நிறைவு செய்தார் கமலநாதன்.

கமலநாதன் ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறத் தெடங்கினார், ''துளிஇன்மை ஞாலத்திற்கு எற்று அற்றே; வேந்தன் அளி இன்மை வாழும் உயிர்க்கு'', ''சபையோர்களே, அந்தணர் மேலும் சொன்னார், ''மன்னா, மன்னனது செங்கோல் கோணாதிருந்தால், இயற்கையும் கோணாது. மன்னா, நீ அறநெறிப்படி அரசாள்வதால், இங்கு எந்தக் குறைகளும் இல்லை. எமது மக்கள், உனது நாட்டிற்கு வந்துதான், சுவைமிகுந்த சத்தான உணவுகளை உண்கின்றனர். சிலர் இங்குள்ள கோவில் மடங்களில் தங்கியிருக்கின்றனர். மழை பொய்த்தமையால் வயல்கள் வெடித்துப் பிளவுபட்டுள்ளன. அதனால் மக்கள் அன்றன்று உணவு கிடைக்காது துன்பப்படுகின்றனர். அதற்குக் காரணம் அருளில்லாத அரசனின் ஆட்சி முறைதான். மழை பெய்யாதது பெரும் துன்பம். அதைவிடத் துன்பமானது அரசனது ஆட்சிமுறை. அரசன் நிலம் விளையாதிருந்தாலும், வரியைக் கட்டுமாறு கட்டளையிட்டுள்ளான். கட்டாதவர்களின் பெறுமதியான பொருட்களை அரசனின் ஊழியர்கள் எடுத்துச் சென்று விடுகின்றனர். கமம் செய்வோரின் எருதுகளை அவிழ்த்துச் சென்று விற்று விடுகின்றார்கள். இப்படியான சம்பவம் வேறு. எந்த நாடுகளிலும் நடக்கவில்லை என்று விம்மி விம்மி அழுதார் அந்தப் பிராமணர். அதற்கு மேல் அவரால் பேசமுடியவில்லை. விஜயசிங்கன் தனது ஊழியன் ஒருவனை அழைத்து, அப்பிரமாணருக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்யுமாறு பணித்தான், என்று கூறிக் கமலநாதன் தனது உரையை நிறைவு செய்தார்.

கமலநாதன் எட்டாவது குறளைப் பாடி, அதன் உரையையும், விளக்கத்தையும், அதற்கான கதையையும் சொல்லத் தொடங்கினார், ‘‘இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா மன்னவன் கோல்கீழ்ப் படின்’’, ‘‘சபையோர்களே, அரசனின் மானியத்தைப் பெறச் சென்ற அந்தணர் சிறிது நேரத்தில் மிக்க மகிழ்வுடன் அரசனின் அருகில் வந்து அவனை வணங்கினார். அவரால் பேசமுடியவில்லை. சிறிது நேரம் தளதளர்த்த அவர் பின் சொன்னார், ‘‘மன்னா, இவ்வளவு பொருட்கள் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆறு மாதங்களுக்குப் போதுமான உணவு. குடும்பத்தினர் அனைவர்க்கும் போதிய உடைகள், ஆபரணங்கள், தேவையான பொருட்கள் யாவும் அரசனின் வண்டிகளில் ஏற்றப்பட்டு எனது நாட்டிற்குச் செல்கிறது. இப்பொருட்கள் முடியத் திரும்பவும் வந்து தேவையான பொருட்களை பெறுமாறு கட்டளை இட்டுள்ளீர்கள். நான் பூசை செய்யும் சிவனாகவே தங்களைக் கருதுகிறேன். இந்த ஜென்மத்தில் உங்களை எந்த எதிரிகளாலும் வெல்ல முடியாது’’.

‘‘நீதி நெறி தவறி கொடூர ஆட்சி நடத்தும் எமது மன்னனான மகாசேனனின் ஆட்சியில் பெரும் தனவந்தர்கள் கூடப் பெரும் ஏழைகள் போலத்தான் பல துன்பங்களுடன் வாழ்ந்து வந்தனர். மன்னன் எப்போ என்ன வரி விதிக்கிறானோ, கேட்ட பணத்தைக் கொடுக்கா விட்டால் மந்தைகளைக் கவர்வானோ…? இல்லை நிலங்களைப் பறிப்பானோ என்ற துன்பங்களுடன் தான் எமக்கு உதவி செய்த செல்லப்பா செட்டியாரும் வாழ்ந்தார். தர்மவானான அவர் ஒருபோதும நிம்மதியாகப் பேசியதை நான் காணவில்லை’’ என்று அந்தணர் கலங்கினார்’’ என்று கூறிக் கமலநாதன் தனது பேச்சை நிறைவு செய்தார்.

கமலநாதன் ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு, அதன் உரையையும், விளக்கத்தையும், அதற்கான கதையையும் கூறத் தொடங்கினார், ‘‘முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி ஒல்லாது வானம் பெயல்’’, ‘‘சபையோர்களே, அந்தணன் சென்ற பின்பு விஜயசிங்கன், ‘‘இன்னும் யாராவது சொல்ல இருந்தால் சொல்லலாம். இல்லாவிட்டால் விசாரணையை முடிக்கலாம் என்றான். அப்போது லோகேசன் என்ற குரங்கு எழுந்து மன்னனை வணங்கி விட்டுச் சொன்னது, ‘‘மன்னா, எனது நாடு உருத்திரபுரம். எமது மன்னா குலோத்துங்கன். அவரை குதிரைப்படைத் தளபதியான சிங்கவர்மன் தனது தங்கையைக் காட்டி அவளோடு தகாத உறவை வைக்கச் செய்து தான் நினைத்தபடி செய்து வந்தான். எமது வனத்தில் சந்தன மரங்கள் ஏராளமாக நின்றன. அவற்றையெல்லாம் தறித்து பிற நாடுகளுக்கு விற்பது அவனது பிரதானமான தொழில். எனது தந்தை மரங்களின் மீது அதீத விருப்பம் கொண்டவன். அவன் மரங்களைத் தறிப்பதை விரும்பாமையால் எனது தந்தை எனது இனத்தவர்களுடன் சென்று மரங்களைத் தறிக்கக்கூடாது என்று தடுத்தார். அவன் எதுவும் பேசவில்லை சென்றுவிட்டான்’’.

‘‘அன்று இரவு அவனுடன் பிரச்சனைப்பட்ட அனைவரையும் வீடு புகுந்து கைது செய்து விட்டான். ஒரு வருடங் கழிந்தும் அவர்களுக்கு என்ன நடைபெற்றது என்று தெரியவில்லை. எமது அரசன் ஒருவர் சிறு குற்றம் செய்தாலும் மரணதண்டனை விதிப்பவர். அதனால் யாரும் அதைக் கேட்கவில்லை. இப்போது எமது நாட்டை நீங்கள் கைப்பற்றி விட்டீர்கள். அதனால் நீங்கள் தான் எமது அரசர். மன்னா, குடிமக்களுக்குத் தன்னாலும் பிறராலும் துன்பம் வராமற் காக்க வேண்டும். அத்துடன் தீய செயல்களைச் செய்வோரைத் தண்டித்தல் வேண்டும். இது அரசனது கடமை. அவர்களுக்கு தண்டனை அளிப்பதால் பாவம் ஏற்படாது. எமக்கு பிறரால் துன்பம் இல்லை. அரசரால் தான் துன்புறுத்தப்பட்டோம். அதனால் எமது அரசனான தாங்கள் விசாரித்துத் தண்டனை அளித்தல் வேண்டும். இப்போது நாட்டில் மழை பெய்வதில்லை, மன்னனின் ஆட்சி பொய்த்து விட்டது’’.

‘‘மன்னன் முதலமைச்சரைப் பார்த்தான். அவர் சொன்னார், ‘‘மன்னா, அவர்களைப் பிடித்தன்றே கொன்று புதைத்துவிட்டனர்’’ அதற்கு அரசன் சொன்னான், ‘‘ஐந்து அரசர்களுக்கும் மரணதண்டனை விதித்தாயிற்று. இருந்தும் விசாரிப்பது ஏனென்றால் இப்படியான குற்றங்களை யாரும் செய்யக்கூடாது என்பதற்காகவே’’ என்று விஜயசிங்கன் கூறினான், என்று கூறிக் கமலநாதன் தனது உரையை நிறுத்தினார் .

கமலநாதன் பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினார், ‘‘ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர் காவலன் காவான் எனின்’’, சபையோர்களே, ‘‘வேறு யாராவது ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்லுங்கள்’’ என்று மன்னன் சொல்ல, மகேந்திரன் என்ற கவரிமான் எழுந்து மன்னனை வணங்கிவிட்டுச் சொன்னது, ‘‘மன்னா, நான் பசுக்களையும், ஆடுகளையும் வளர்ப்போர் சங்கத் தலைவன். மன்னா, எமது மன்னன் நீதியாக நாட்டை ஆள்வதில்லை. கோவில்களுக்கு மானியம் வழங்குவதில்லை. குருகுல மாணவர்களை விரும்புவதில்லை. மக்களை எவ்வேளைகளிலும் கொடுமைப்படுத்துவான்’’.

‘‘மழை பெய்வதில்லை. அதனால் புற்கள் யாவும் கருகிவிட்டன. மந்தைகளை மேய்க்க முடியவில்லை. தென்னை மரங்கள் பல பட்டு விட்டன. மழை இல்லாததால் அவை காய்ப்பதில்லை. அதனால் கால்நடைகளுக்கு முக்கிய தீனியாக இருக்கும் புண்ணாக்கும் கிடைப்பதில்லை. கால்நடைகள் யாவும் புல்லும் உணவும் இல்லாமல் எலும்பும் தோலுமாக நிற்கின்றன. அதைக் கண்களாற் பார்க்க முடிவதில்லை. சுமார் ஐநூறு பேர். கால்நடைகளை பண்ணையாக வளர்க்கின்றனர். அவர்களால் அவற்றிற்குத் தீனி கொடுக்க முடியவில்லை. அதனால் மூவர் தற்கொலை செய்து கொண்டனர். இந்தத் துன்பமான நிலையை தாங்கள் தான் நீக்க வேண்டும்’’ என்று விக்கி, விசும்பி அழுதான். அதைக் கண்ட சபையோரும் கண்கலங்கினர். விஜயசிங்கன் முதலமைச்சருக்கு சொன்னான், எமது புற்தரைகளில் கால்நடைகளை மேய விடுங்கள். அவற்றுக்குத்

தேவையான உணவு முழுவதையும் கொடுங்கள்'' என்றதும் மகேந்திரனும் கால்நடைகளை வளர்ப்போரும் மன்னனை விழுந்து வணங்கினர்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் கமலநாதன்.

**19**

சபையோர்களே, கமலநாதன் மிக மிக அருமையாகப் பேசினார் என்றும் அவர் கூறிய விளக்கங்களும் கதையும் மிகவும் பொருத்தமானவை என்றும் உலகநாட்டு வனங்களில் உள்ள அறிஞர்கள் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் திரையில் பாருங்கள். அது நிறைவடைந்ததும் காயத்திரிதேவி என்ற மயில் வெருவந்த செய்யாமை பற்றிப் பேசுவார் என்று கூறிவிட்டு தனது ஆசனத்தில் அமர்ந்தார். உலகில் உள்ள பிரசித்தி பெற்ற வனங்களில் உள்ள அறிஞர்கள் அன்றைய மகாநாடுபற்றி விமர்சித்து முடிந்ததும் காயத்திரிதேவி வந்து சபையோரை வணங்கிவிட்டு பேச ஆரம்பித்தாள்.

''சபையோர்களே, திருக்குறள் மகாநாடுகள் பல இடங்களில் நடைபெறுகின்றன. ஆனால், அங்கு பேசுவோர் திருக்குறளை ஆராயாதவர்களும், திருக்குறளைப் பற்றி நூல்களை எழுதாத பிரமுகர்களும் தான். அதனாலும் பேசியவற்றையே திரும்பத் திரும்ப பேசுவதாலும், பார்வையாளர்கள் மிகமிகக் குறைவு. அதன்பின் அதன் ஏற்பாட்டாளர்கள் தற்போது வாழ்பவர்களுக்குப் பழைய நூல்களைப் படிப்பதும், அது பற்றிப் பேசுவதும் பிடிப்பதில்லை என்று விமர்சிக்கின்றனர். நன்கு ஆய்வு செய்து பேசும் விடயத்தை கருத்தாளத்துடன் பேசினால் பெருங்கூட்டம் வந்து சேரும் என்பதைத் தமிழறிஞரும் அவரது குழுவினரும் நிறுவியுள்ளனர். தினமும் ஏராளமான பார்வையாளர்கள் வருவதால் ஆசனன்களைக் கொண்டு வருவதே சிரமமாக இருப்பதாக விழாக்குழுவினர் கூறுகின்றனர்''.

''நான் இன்று பேச எடுத்துக்கொண்ட விடயம் வெருவந்த செய்யாமை என்ற குறளின் அத்தியாயமாகும். செய்யக்கூடாதவற்றைச் செய்யும் அரசர்களுக்கு வரும் துன்பங்களைப் பற்றி இவ்வதிகாரம் விளக்கமாகக் கூறுகிறது. தற்பொழுது அரசர்களின் ஆட்சி இல்லாத போதும், அமைச்சுக்கள், திணைக்களங்கள் இருக்கின்றன. அவற்றின் தலைவர்கள் தீயவற்றைச் செய்யக்கூடாது என்ற காயத்திரி தேவி முதாலாவது குறளைப் பாடியபடி ஆடினாள். இசைக்குழு இசை அமைத்தது.

''தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து'', ''ஒருவர் ஒரு குற்றத்தைச் செய்தால், அதைச் செய்ததற்கான காரணங்களையும், அதற்கு உதவியவர்களையும், அதனால் விளைந்த தீமைகளையும் தக்கபடி அரசன் ஆராய்ந்து மீண்டும் அவர் அக்குற்றத்தைச் செய்யாதபடி தகுந்த தண்டனையை அரசன் வழங்க வேண்டும்''. சபையோர்களே, இரத்தினபுரி அரசன் விஜயசிங்கன் சகல துறைகளிலும் வல்லவன். அவன் கைப்பற்றிய பவளபுரிக்கு தனது பிரதிநிதியாகச்

செயற்பட்ட ஒருவரைத் தெரியுமாறு பவளபுரி மக்களை வேண்டினான். பவளபுரியின் முன்னாள் அரசனான சோமநாதனுடன் இணைந்து செயற்பட்ட உருத்திரன் என்பவனை, பவளபுரி மக்கள் தேர்வு செய்தனர். விஜயசிங்கன், அவனை ஏன் மக்கள் தெரிவு செய்தனர் எனத் தனது உளவாளிகள் மூலம் அறிந்து கொண்டான். உருத்திரன் தீயவன். மன்னனோடு சேர்ந்து தீய செயல்கள் பலவற்றையும் செய்தவன். கொடியவனான அரசன் மக்களைக் கொடூரமாகத் தண்டிப்பான்''.

''அப்படி இருந்தும் ஏன் அவனைத் தமது அரச பிரதிநிதியாக மக்கள் தெரிவு செய்தனர் என்பதையும் அறிந்து கொண்ட பின்புதான் தனது பிரதிநிதியாக அவன் பவளபுரியை ஆள்வான் என்று அறிவித்தான். பிரமுகர்களையும், மக்களையும் மிரட்டியே அவன் தன்னை தெரிவு செய்யுமாறு கூறியமையால் அவன் முன்பு போல மக்களைக் கொடுமைப்படுத்தினான். வரி அறவிட்டான். தனவந்தர்களை மிரட்டிப் பொன்னும் பொருளும் பெற்றான். அதனால் விஜயசிங்கன் அவனை தனது அரண்மனைக்கு அழைத்துப் பத்து தினங்களுக்கு நூறு நூறு கசையடி அடிக்குமாறு கட்ளை இட்டான்''.

இரத்தினபுரியின் காவலர்கள் தினமும் அவனை அழைத்து நூறு கசையடிகளை அடித்தனர். உருத்திரனால் எழுந்து நிற்கக் கூட முடியவில்லை. இரத்தினபுரி வைத்தியர்கள் மருந்து கொடுத்து அவனது காயங்களை மாற்றியபோதும் அவனால் முன்புபோல இயங்க முடியவில்லை. சில நாட்களில் முழுமையாக அவன் குணமடைந்ததும் உருத்திரனை அழைத்து மீண்டும் அவனுக்கு அப்பதவியை வழங்கிப் பவளபுரிக்கு அனுப்பி வைத்தான். அதனால் மனம் வருந்திய புலவர் சங்கீதனனார் என்ற மான் விஜயசிங்கனின் அரண்மனைக்கு வந்து மிக்க கவலையுடன் உருத்திரனைப் பதவியிலிருந்து நீக்குமாறு கோரியது. அதற்கு விஜயசிங்கன் சொன்னான், ''புலவரே ஒருவன் ஒரு குற்றம் செய்தால் அதற்கு பொருத்தமான தண்டனையை வழங்கிய பின் அவன் மீண்டும் அக்குற்றத்தைச் செய்யாவண்ணம் இருத்தல் வேண்டும். இனிமேல் உருத்திரன் தவறு செய்யமாட்டான் என்று கூறினான். அதன்பின் புலவர் இரத்தினபுரியின் புலவரைச் சந்தித்துத் தனது கவலையை வெளிப்படுத்தியபோது இரத்தினபுரிப் புலவர் சொன்னார் ''சங்கீர்த்தனனே உருத்திரனுக்கு எமது அரசன் கொடுத்த தண்டனை அவனது ஏழு பிறப்புக்கும் அச்சத்தைக் கொடுக்க வல்லது. இனி அவன் குற்றஞ் செய்ய மாட்டான்''.

புலவர் பவளபுரிக்குத் திரும்பி வந்தபோது உருத்திரன் இதுவரை காலமும் மக்களிடம் வஞ்சித்துப் பெற்ற பொருட்களையெல்லாம் திருப்பிக் கொடுத்திருந்தான். இரத்தினபுரிப் புலவர் சொன்னது உண்மையென்று சங்கீர்த்தனனார் உணர்ந்து கொண்டார்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் காயத்திரிதேவி.

காயத்திரிதேவி இரண்டாவது குறளைப் பாடி, அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறினாள், ''கடிது ஓச்சி மெல்ல எறிக, நெடிது ஆக்கம் நீங்காமை வேண்டு பவர்'', ''சபையோர்களே, தொடர்ந்து அரசாள விரும்பும் அரசன்,

குற்றம் செய்தவரை மிகக் கடுமையாகத் தண்டிப்பவரைப் போலக் காட்டிக் கொண்டு, மென்மையாகக் கண்டிக்க வேண்டும் என்று அரசனின் கோட்பாடுகளை விளக்கும் நூல்கள் கூறுகின்றன. விஜயசிங்கன் சோமநாதனைக் கடுமையாகத் தண்டித்தபோதும், அவனது பதவியைப் பறிக்காது அவனிடமே கொடுத்தமையால் அவன் பெரு மகிழ்ச்சியடைந்தான். தான் வஞ்சித்துப் பெற்ற பொருட்களையெல்லாம் திருப்பிக் கொடுத்துவிட்டு நீதியாக அரசாண்டான். அதனால் பவளபுரி மக்கள் விஜயசிங்கனைப் பாராட்டினர், வாழ்த்தினர். ஓர் அரசன் தனது தனது ஆட்சி நீடித்திருக்க வேண்டுமென்று நினைத்தால் கண்டிப்புடன் ஆள வேண்டும். அக் கண்டிப்பு மென்மையானதாக இருக்க வேண்டும்'' என்று கூறிக் காயத்திரிதேவி தனது உரையை நிறைவு செய்தாள்.

''வெருவந்த செய்து ஒழுகும் வெங்கோலன் ஆயின் ஒருவந்தம் ஒல்லைக் கெடும்'', சபையோர்களே, குடிமக்களை அச்சுறுத்தி அவர்கள் அஞ்சும்படி கொடுமை-களைச் செய்யும் அரசன் விரைவில் அழிந்து போவான். சபையோர்களே, பவளபுரியின் புலவரான சங்கீர்த்தனன், இரத்தினபுரியின் புலவரைச் சந்தித்துச் சொன்னார், ''புலவரே, முதலில் நான் தங்களுடன் கதைக்கும்போது, எமது அரசனின் பிரகிருதியான உருத்திரன், முன்னைய அரசனான சோமநாதனுடன் சேர்ந்து, எம்மைச் சித்திரவதை செய்தமையே நினைவுக்கு வந்தது. பல்வேறு வகையாலும் மக்களைத் துன்புறுத்தினர். கலைவிழாக்கள், இலக்கிய விழாக்கள் நடைபெற்றதால், அரசனை வணங்கித் துதிபாடுபவர்களுக்கே, முதன்மையான இடம் வழங்கப்படும். திருவாசக விழா, திருமந்திர விழா என்பன விமரிசையாக நடைபெறும். திருவாசகத்தை ஒழுங்காகப் பாடத் தெரியாதவர்களே, கௌரவிக்கப்பட்டனர். திருமந்திர விழாவும் அப்படித்தான் கொண்டாடப்பட்டது''.

''அரசனைப் புகழ்ந்து துதிபாடினால் போதும். அவர் கௌரவிக்கப்படுவர். நூல்கள் எழுதாதவர்களுக்குப் பரிசளிக்கப்படும். குடிமக்களை அற்ப உயிர்களாகவே கருதினர். தனவந்தர்களைக் கடத்திச் சித்திரவதைப்படுத்தி அவர்களது பொருட்களைப் பறித்தனர். அவ்வாறு பறித்தவர்களில் ஒருவனாக உருத்திரன், அரச பிரதிநிதியானதும், முன் செய்ததையே செய்தான். அதனால் பயந்தோம். இப்போது சகல துன்பங்களும் நீங்கி விட்டன. குற்றம் செய்தவன் மீண்டும் அக் குற்றத்தைச் செய்யாவண்ணம் தகுந்த தண்டனையளித்து, மீண்டும் அவனை அரச பிரதிநிதியாக்கிய மன்னன், அதீதமான புத்திசாலி என்று பாராட்டினார்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் காயத்திரிதேவி.

காயத்திரிதேவி நான்காவது குறளைப் பாடிவிட்டு, அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னாள், ''இறைகடியன் என்று உரைக்கும் இன்னாச்சொல் வேந்தன் உறைகடுகி ஒல்லைக் கெடும்'', ''சபையோர்களே, தம்மை ஆள்கின்ற அரசன் மிகவும் கொடியவன் என்று குடிமக்கள் மனம் வருந்தி அழுதால், ஆளும் அரசனின் ஆயுள் குறைவடையும். எதிரிகள் அவனை இலகுவாக வென்றுவிடுவர் என்று கூறிய பவளபுரியின் புலவர் தொடர்ந்து சொன்னார், நான் காலையிலும்,

மாலையிலும் சிவன் கோவிலுக்குச் சென்று சிவனைத் துதித்துப்பாடி நாம அர்ச்சனை செய்வேன். அப்போது இந்தக் கொடுங்கோலனை அழித்து மக்களுக்கு நல்வாழ்வு கொடு என வேண்டுவேன்''.

''மன்னனான சோமநாதன் விசேட தினங்களில் சிவன் கோவிலுக்கு வந்து தான் தொடர்ந்து ஆளவேண்டும், தனது ஆயுள் நீடிக்க வேண்டும் என்று பூசைகள் செய்து பிரார்த்திப்பான். அப்போது அன்னதானம் கொடுக்கப்படும். உணவை உண்ண வந்த மக்கள் அனைவரும் மனதுள் அழுதழுது இந்தக் கொடியவனை அழித்துவிடு சிவனே' என்றே வணங்குவர். அதன்படி நடந்து விட்டது. தற்போது பிரதிநிதியாக இருந்து ஆட்சி செய்பவனையும் திட்டித் தீர்த்தோம். கொல்லும்படி பிரார்த்தித்தோம். ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. உருத்திரனையே அரசனாக்க வேண்டும். அவன் நூறு வயதுவரை ஆரோக்கியமாக வாழவேண்டும் என்று பிரார்த்திக்கிறோம். அதற்குக் காரணம் உருத்திரன் தற்பொழுது மக்களின் மனம் மலர ஆட்சி செய்வதேயாகும் என்றார்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் காயத்திரிதேவி.

காயத்திரிதேவி ஐந்தாவது குறளை இனிமையாகப் பாடி, அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னாள். ''அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம் பேஎய்கண் டன்னது உடைத்து'',''சபையோர்களே, பவளபுரியின் புலவர் சொன்னார், ''புலவரே, மக்களைக் காணமுடியாது. விவசாயிகளும், கலைஞர்களும், பெரியவர்களும் அரசனைச் சந்தித்துத் தமது குறைகளை முறையிடலாம் எனச் சென்றால் அங்குள்ள பொறுப்பான அதிகாரிகள் அவர்களை அமரும்படி சொல்லிவிட்டுச் சென்று விடுவர். அமர்ந்தவர்கள் விடியும் வரை காத்திருந்துவிட்டுச் செல்வர். அவனை ஒருமுறை தான் கண்டேன். இலக்கிய விழா ஒன்றை நடத்தினான். மக்களோடு மக்களாகச் சென்று வெட்ட வெளியில் காத்திருந்துபோது மன்னன் தனது பரிவாரங்களுடன் வந்தான்.

''அவனைப் பார்த்தேன். பெரியதொரு மீசை. சிவந்த கண்கள். கொடூரமான முகம். ஒரு கொலைக்காரனைப் போல அவனது தோற்றம் இருந்தது'' தொடர்ந்து அவன் அழைத்த பிரமுகர்கள் பலர் வராது இரத்தினபுரிக்குத் தப்பிச் சென்று விட்டனர். ஒரு விருதை அல்லது வெகுமதியைப் பெறுவதானால் தகுதியானவனிடமிருந்து பெறவேண்டும். இவனது செல்வம் பேய் காத்து வைத்திருக்கும் செல்வமாகும். அதை நாம் பெற விரும்பவில்லை. அரசனது செல்வம் பேய் காத்திருக்கும் செல்வம் என்று ஓலை எழுதி வைத்துவிட்டுச் சென்று விட்டனர். அவர்களை உடனே கைது செய்து சிரச்சேரஞ் செய்யுமாறு ஆணையிட்டான். அவன் நாட்டில் உள்ள பெரியவர்களை மதிப்பது போல நடிப்பது பிற நாடுகளின் நன்மதிப்பைப் பெறவே என்று புலவர் கூறினார்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் காயத்திரிதேவி.

‘‘கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம் நீடு இன்றி ஆங்கே கெடும்’’,‘‘சபையோர்களே, பவளபுரியின் புலவர் தொடர்ந்து சொன்னார், ‘‘புலவரே கடுமையான சொற்களைப் பேசுபவனாகவும், இரக்கமில்லாதவன் ஆகவும், இருக்கின்ற அரசனது பெருஞ்செல்வம் நீடித்து நின்று அவனுக்கும் அவனது பரம்பரைக்கும் உதவாது அழிந்துவிடும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சோமநாதன் மக்களிடம் ஈவு இரக்கம் காட்டாது கவர்ந்த பணம் கணக்கிலடங்காதது. அவன் தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் அளவுக்கதிகமாக ஆடம்பரச் செலவுகளைச் செய்வான். குடிகளுக்கு உதவமாட்டான்’’.

‘‘கோவில்களில் தனது நலன் கருதிப் பூசைகள் செய்து மக்களுக்கு அன்னதானம் கொடுத்தால் மக்கள் பயத்தின் காரணமாகவே உண்பர். விஜயசிங்கன் படையெடுத்து வரக் குடிமக்கள் படைவீரர்களாக மாறிச் சோமநாதனை கைது செய்து விஜயசிங்கனிடம் ஒப்படைத்தனர். அவனது பெருஞ்செல்வத்தை உருத்திரன் தனதாக்கிக் கொண்டான். அதைப் பறிமுதல் செய்த விஜயசிங்கன் அதை உருத்திரனிடம் ஒப்படைத்து விட்டுத் தான் சொல்லும் வரை வரி அறவிடக்கூடாது என்று கட்டளை இட்டான். சோமநாதன் மக்களிடம் பறித்த பணம் மக்களிடமே சென்று விட்டது. இது தான் விதி. இதை உணராதவர்கள் ஒரு காலத்தில் உணர்வர் என்று புலவர் கூறினார்’’ என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் காயத்திரிதேவி.

‘‘சுடுமொழியும் கை இகழ்ந்த தண்டமும் வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம்’’, ‘‘சபையோர்களே, பவளபுரியில் கோகுலன் என்ற மானுக்கு நேர்ந்த துன்பத்தை புலவர் சொல்ல எனது நெஞ்சம் பரிதவித்துப் போனது. இவ்வளவு கெட்ட கொடுங்கோல் மன்னன் உலகில் உள்ளானா என்ற வியப்பும் உண்டானது. இரண்டு நாட்களாக கோகுலனும் பிள்ளைகளும் உணவில்லாமல் பரிதவித்தனர். அந்த கொடுமையைத் தாங்க முடியாத கோகுலன் ஒரு தோப்புள் நுழைந்து உணவுப்பொருட்களைத் திருடும்போது அகப்பட்டு விட்டது. அது உருத்திரனுக்கு சொந்தமான தோப்பு. அவனுடையது என்று தெரியாமையால் தான் கோகுலன் திருட நுழைந்தது’’.

‘‘அகப்பட்டவுடன் உருத்திரன் அரச சபைக்குக் கொண்டு சென்றான். அரசனான சோமநாதன் அதன் நிலையைச் சற்றும் சிந்திக்காது’’ இந்த நாட்டில் திருடினான் எனின் தண்டனை கிடைக்கும் என்று தெரிந்தும் திருடியிருக்கிறாய். அதற்காக உனக்கு இருபது கசையடி வழங்கப்படும். உனக்கு வயதிற்கு வந்த மகன் இருக்கிறானா? என்று சோமநாதன் கேட்டபோது, ‘‘ஆம் அரசே. அவன் உயர்தர வகுப்பில் கற்கிறான்’’ என்றவுடன் அவனைக் கைது செய்த சோமநாதன் ‘‘மாடு போல வளர்ந்திருக்கிறாயே தவிர உனக்குக் குடும்பத்துக்கு உதவ வேண்டுமென்ற சிந்தனை இல்லை. நீ உழைத்திருந்தால் உனது தந்தை திருடியிருக்கமாட்டார்’’ என்று கூறி அவனுக்கும் பத்து கசையடி கொடுக்குமாறு கட்டளை இட்டான்’’.

‘‘இவ்வாறு ஆராயாது குடிமக்களுக்கு சோமநாதன் தண்டனைகள் கொடுத்ததாலும், இரக்கம் சிறிதும் இல்லாது ஏசுவதாலும் மக்கள் அவனை வெறுத்தனர். விஜயசிங்கன் படையெடுத்து வந்தபோது கோகுலன் தான் ஒரு குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்று சோமநாதனைக் கைது செய்தான். அதனால் சபையோர்களே யாரையும் கோபமாகப் பேசாதீர்கள். தண்டனையும் கொடாதீர்கள். அது உங்களின் முன்னேற்றத்தை தேய்க்கும் வாளாகும்’’ என்று கூறித் தனது பேச்சை நிறைவு செய்தாள் காயத்திரிதேவி.

காயத்திரிதேவி எட்டாவது குறளைப் பாடிவிட்டு, அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானாள், ‘‘இனத்து ஆற்றி எண்ணாத வேந்தன் சினத்து ஆற்றிச் சீறின் சிறுகும் திரு’’, ‘‘சபையோர்களே, பவளபுரியின் புலவர் தொடர்ந்து சொன்னார், ‘‘புலவரே அரசன் என்பவன் ஆணவ மிகுதியால் தான் சொல்வது தான் சரி. தன்னுடைய சொற்படிதான் எல்லாம் நடைபெற வேண்டும் என நினைக்கலாகாது. முன்னோர் அரசனுக்கு உதவியாகவும் நல்லவற்றைச் சொல்லவும், ஆலோசனைகள் வழங்கவும் அமைச்சர்களையும், பெரியவர்களையும், படைத்தளபதிகளையும் நியமித்து அவர்களுடன் கலந்தாலோசித்தே முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர். இது காலங்காலமாக பின்பற்றி வரும் ஒரு மரபாகும். அந்த மரபு இப்பொழுது உறுதியாக்கப்பட்டுள்ளது’’.

‘‘எமது அரசனான சோமநாதன், யாரினதும் ஆலோசனைகளைக் கேட்பதில்லை. நாவலடி மன்னனும், உருத்திரபுர மன்னனும் தேவையில்லாது இரத்தினபுரி மீது படையெடுக்க ஆயத்தமானார்கள். எமது மன்னனும் அதற்கு உடன்பட்டார். இரத்தினபுரி செல்வம் கொழிக்கும் நாடு. அங்கில்லாத திரவியங்கள் எங்கும் இல்லை. நாட்டில் கொள்ளையிட்டு ருசி கண்ட எமது மன்னன் இரத்தினபுரியில் குவிந்து கிடக்கும் திரவியங்களைக் கொள்ளையிடலாம் என்று நினைத்தே போரில் சேர்ந்து கொண்டான்’’.

‘‘அதை படைத்தளபதிகள் உட்பட யாரும் விரும்பவில்லை. முதலமைச்சர் சொன்னார், ‘‘மன்னா, இரத்தினபுரியின் படைவீரர்கள் மிகப்பெரிய பலசாலிகள். அங்கு வாழும் இளைஞர்களின் பொழுதுபோக்கே போர்ப் பயிற்சிதான். அரசனான விஜயசிங்கன் புத்திமான் பலவான். அவனது அமைச்சர்கள் முக்காலமும் உணர்ந்த ஞானிகள். எதைக் கூறிய போதும் சோமநாதன் அதைக் கேட்கும் நிலையில் இல்லை. விஜயசிங்கன் ஒன்றைச் சொன்னால் அது வேதவாக்கு. அதை நிறைவேற்ற படைவீராகளும், மக்களும் தம்முயிரையும் கொடுப்பர். கெடுகுடி சொற்கேளாது, சாகிறவன் மருந்து குடியான் என்ற முதுமொழியை நினைத்து முதலமைச்சர் பேசாது சென்று விட்டார்’’.

‘‘படைத்தளபதிகளுக்கு போர் செய்ய விருப்பமில்லை. அதனால் வீரர்கள் பலர் போர் செய்யாது சரணடைந்தனர். போர் செய்யாமலே பவளபுரி கைப்பற்றப்பட்டது. என்று புலவர் சொன்னார்’’ என்று கூறித் தனது பேச்சை நிறைவு செய்தாள் காயத்திரிதேவி.

காயத்திரிதேவி ஒன்பதாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லத் தொடங்கினாள், ‘‘கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல்; அதுவல்லது இல்லை நிலவுக்குப் பொறை’’, ‘‘சபையோர்களே, பவளபுரியின் புலவர் சொன்னதைக் கேட்டுச் சிரித்த இரத்தினபுரியின் புலவர் சொன்னார், ‘‘புலவரே, உங்கள் மன்னன் பெரும் மூடன். எமது மன்னன் பெரும் புத்திசாலி. எப்போதும் தயார் நிலையிலேயே முப்படைகளும், உதவி செய்யும் நிறுவனங்களும், தொண்டர்களும், அதற்கான கருவிகளும் இருக்கும். சகலதையும் மன்னன் அடிக்கடி பார்வையிடுவான். அவற்றிற்குப் பொறுப்பானவர்கள் தினமும் அவற்றைப் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிப்பர். ஒரு வருடத்திற்கு முன்பு பெருமழை பெய்தது. கொடிய சூறாவளி வீசியது. ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. மக்கள் உணவின்றி தவித்தனர். இவையாவும் சில மணி நேரம் தான் மடங்களிலிருந்து தேவையான உணவு பொதி செய்யப்பட்டு வந்தது. ஆயிரக்கணக்கான தொண்டர்கள் வீடுகளைப் புனரமைத்தனர். வீதிகளில் மரங்கள் பாறியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது’’.

‘‘மன்னன் அமைத்து வைத்த குழுக்கள், இயந்திரங்கள் போலச் செயற்பட்டன. மன்னனும், அமைச்சர்களும், படைத்தளபதிகளும் களத்தில் இருந்தனர். ஓரிரு நாட்களில் யாவும் சகஜ நிலைக்குத் திரும்பியது. மழைநீர் வடிந்தோட வாய்க்கால்கள் வெட்டப்பட்டு இருந்தமையால் மழைநீர் குளங்களைச் சென்றடைந்தது. ஒரு துளி மழைநீர் கூட எமது நாட்டில் வீணாவதில்லை. எல்லா விடயங்களுக்கும் முன்கூட்டியே தக்க பாதுகாப்புகள் செய்தமையால் ஓரிரு நாட்களில் நாடு வழமைக்குத் திரும்பி விட்டது. இவற்றை அறியாததால் தான் மூன்று நாட்டு மக்களும் தோல்வி அடைந்தனர்’’. என்று புலவர் கூறினார். என்று கூறித் தனது பேச்சை நிறைவு செய்தாள் காயத்திரிதேவி.

காயத்திரிதேவி பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறலானாள், ‘‘கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல்; அதுவல்லது இல்லை நிலவுக்குப் பொறை’’, ‘‘சபையோர்களே, இரத்தினபுரியின் புலவர் பவளபுரிப் புலவருக்கு சொன்னார், கற்றும் அறிவில்லாத கொடுங்கோலரசன் கற்காதவர்களையே பாதுகாப்பாக வைத்திருப்பான். அது பூமிக்குப் பாரமானது. அவர்கள் கூறும் ஆலோசனைகள் அழிவுக்கே வழிவகுக்கும். எமது அரசன் அறிவு மிக்கவன். அவன் யார் எதைச் சொன்னாலும் அமைதியாக இருந்து கேட்பான். சிறு குழந்தைகளுடனும் தானும் குழந்தை போல விளையாடுவான். ஒரு முறை ஏழு அல்லது எட்டு வயதுச் சிறுவனைக் கோவிலில் கண்டு உரையாடினான். அக்குழந்தை சொன்னது, ‘‘அப்பா இரவில் எங்கோ சென்று விட்டு வருகிறார். அது ஆபத்தனாது என்று அம்மா ஏசுவா’’. என்று சொன்னது. அது குழந்தை என்று எண்ணி எமது மன்னன் அசட்டையாக இருக்கவில்லை’’.

‘‘அது பற்றி ஆராயுமாறு தனது உளவாளிகளுக்குச் சொன்னான். அவர்கள் ஆராய்ந்த போது அக்குழந்தையின் தந்தையின் தந்தை நாவலடி மன்னனது

உளவாளிகளுடன் தொடர்பு கொண்டவன் எனக் கண்டுபிடித்துக் கைது செய்யப்பட்டனர். அதன் பின்பு பவளபுரி மக்கள் மீதும் கண்காணிப்பு இருந்தது. பவளபுரியின் குதிரைப் படைத்தளபதி எமது குதிரைப் படைத்தளபதியோடு உரையாடிப் பல விடயங்களை அறிந்து கொண்டார். அதை இன்றுவரை உங்கள் மன்னனால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்குக் காரணம் உளவுத்துறையில் திறமையானவர்களை நியமிக்காமையே'' என்று இரத்தினபுரியின் புலவர் கூறினார் என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தாள் காயத்திரிதேவி.

## 20

காயத்திரிதேவி பேசி முடித்ததும் மேடைக்கு வந்த கதிரேசன் சொன்னார், ''இன்றுடன் திரவியவனத்தின் இரண்டாவது திருக்குறள் மகாநாடு நிறைவு பெறுகிறது. இன்று கண்ணோட்டம் என்ற அதிகாரம் பற்றித் தமிழறிஞர் பேசுவார். அவரது பேச்சு முடிந்ததும் சபையோர் இம் மகாநாடு தொடர்பான கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறலாம். மூன்றாவது மகாநாடு விரைவில் நடத்தப்படும். இப்பொழுது தமிழறிஞரைப் பேச வருமாறு அன்புடன் அழைக்கின்றேன்'' என்றதும் சபையோர் கரகோசம் செய்தனர். அது அடங்கச் சில நிமிடங்கள் எடுத்தன.

தமிழறிஞர் மேடைக்கு வந்து சபையோரைக் கரங்குவித்து வணங்கினார். பின் ''சபையோர்களே, கண்ணோட்டம் என்பது இரக்கத்தைக் குறிக்கும். ஓர் உயிர் இன்னோர் உயிர் துன்பப்படுவதைக் கண்டு இரக்கம் கொண்டு, அந்த உயிரின் துன்பங்களைப் போக்க வேண்டும். இரக்கம் கொள்ளாத உயிர், உணர்ச்சிகள் அற்ற கல்லுக்குச் சமமானதாகும். ஓர் உயிரின் மீது வைக்கும் அன்பு தான் இரக்கமாக மாறுகிறது. சமயங்கள் யாவும் அன்பு தான் கடவுள் என்கின்றனர். ஓர் உயிரின் மீது வைக்கும் அன்பு இறைவனைச் சென்றடையும் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அதனால் ''சபையோர்களே, எல்லா உயிர்கள் மீதும் அன்பு கொள்ளுங்கள். இனி நான் கண்ணோட்டம் என்ற அதிகாரத்தின் முதலாவது குறளைப் பாடி அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் கூறுகிறேன்.

''கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை உண்மையான் உண் இவ் உலகு'', ''சபையோர்களே, கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற இரக்கம் ஒவ்வொரு உயிரின் மனதிலும் இருக்கின்ற காரணத்தால்தான் இவ் உலகு அழியாமல் இருக்கின்றது. ஓர் உயிரின் மீது கொள்ளும் இரக்கம், அவ்வுயிரைப் பல வழிகளாலும் வாழச் செய்கின்றது. வாழ்க்கையில் ஒரு பிடிப்பை உண்டாக்குகிறது. அன்பு, நேசம், பாசம், பற்று, மகிழ்ச்சி என்பவற்றை உருவாக்குகிறது. ஓர் உயிர் துன்பப்படும்போது உதவி செய்தால் அவ்வுயிருக்கு மேற்சொன்ன யாவும் உண்டாகி வாழ்வில் பிடிப்பு உண்டாகும்''.

‘‘இராகுலன் என்ற பன்றிக்குப் பத்து பிள்ளைகள். ஐந்து பிள்ளைகள் படிக்கிறார்கள். இராகுலன் மதுப்பிரியன். வருமானத்திற்கு மேல் குடித்து விடுவான். அவனது மனைவி ஈஸ்வரி. அவள் கூலி வேலை செய்து தான் தனது பிள்ளைகளைக் கற்பித்து வந்தாள். ஐந்து பிள்ளைகள் படிக்கிறார்கள். ஐவரும் கெட்டிக்காரர்கள். மூத்தவன் ரமேஸ் ஏ.எல் வகுப்பில் மருத்துவப் பிரிவில் கற்கிறான். அவன் சில நாட்களாகப் பாடசாலைக்கு வரவில்லை. அதனால் மனம் வருந்திய அவனது ஆசிரியரான நடேசன் என்ற மான் மிகவும் வருந்தியது. இராகுலனது வீட்டிற்குச் சென்றபோது அவரின் தாயாரான ஈஸ்வரி சொன்னாள், ‘‘ஐயா, அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியும். உழைப்பதைக் குடித்துவிட்டு வந்து வீட்டில் சண்டையிடுவார். பிள்ளைகள் இரண்டு நாட்களாகப் பட்டினி கிடக்கிறார்கள். அதனால் ரமேஸ், கஜேந்திரன் என்ற யானையின் வர்த்தக நிலையத்தில் வேலை செய்கிறான்’’ என்றாள்.

அவளது பேச்சைக் கேட்டு நடேசன் அதிர்ந்து போனான். எதிர்காலத்தில் வைத்தியராக வரவேண்டியவன் தந்தையின் போக்கால் கெட்டழிந்து போனான் என நினைத்தான். அவரது இதயம் சுக்குநூறானது. கண்கள் நிரம்பின. அவர் நேராகக் கஜேந்திரனது வர்த்தக நிலையத்திற்கு வந்தார். கஜேந்திரனின் மகளும் நடேசனிடம் கற்பதால் மிகுந்த மரியாதையுடன் எழுந்து வந்து வணங்கினார், ‘‘ஐயா, ஒரு முக்கிய விடயமாக நான் தங்களைச் சந்திக்க வந்தேன்’’ என்றபோது கஜேந்திரன், ‘‘சொல்லுங்கள் ஐயா’’ என்றார்.

‘‘எனக்கு மிகவும் பிடித்தமானவனான ரமேஸ் என்பவர் ஏ.எல் படிக்கிறான். நல்ல கெட்டிக்காரன். தந்தை பெருங்குடிகாரன். அதனால் உணவுக்கே மிகவும் சிரமப்படுகிறார்கள். அதனால் அவன் உங்களது வர்த்தக நிலையத்தில் விற்பனையாளராகச் சேர்ந்துள்ளான். நீங்கள் ஒரு சமூக சேவகன். பக்திமான். நல்லவர். அதனால் அவன் கற்பதற்கு உதவி செய்ய வேண்டும்’’ என்றார்.

‘‘படிக்கும் வயதில் நான் ஊழியனாக உன்னைச் சேர்க்கமாட்டேன் என்று கூறியபோது அவனது தாயார், ‘‘அவன் கடந்த ஐந்து வருடங்களாகப் பாடசாலைக்குச் செல்லவில்லை என்று கூறியதால் தான் சேர்த்தேன். சரியான கெட்டிக்காரன். கணக்கில் புலி, பல பொருட்களைக் கொடுத்துவிட்டு எழுதிக் கூட்டாது மனதால் கூட்டிச் சொல்வான். கணக்காளர் எழுதிக் கூட்ட முன்பே மனதால் கூட்டிச் சொல்லி விடுவான். அப்படியானவன் படிக்கவில்லை என்று தாய் சொன்னதை நம்பிவிட்டேன்’’ என்றார்.

‘‘நீங்கள் அவன் படிக்க உதவி செய்ய வேண்டும். இரவில் உங்களது கணக்குகளை அவன் செய்து தருவான்’’ என்ற நடேசன் கஜேந்திரனின் முகத்தைப் பார்த்தார். அதில் கவலை கொண்டிருந்தது. கண்கள் கலங்கியிருந்தன.

‘‘நீங்கள் ஓர் உத்தமமான ஆசிரியர். ஒவ்வொரு மாணவனின் கல்வியிலும் அக்கறை கொண்டவர். அவனை வைத்தியனாக்குவது எனது பொறுப்பு’’ என்றார்.

‘‘மிக்க நன்றி ஐயா, உங்களைப் போன்றவர்களின் மனதில் கண்ணோட்டம் என்று சொல்லப்படும் இரக்கம் இருப்பதால் தான் இந்த உலகம் அழியாமல் இருக்கிறது’’ என்று கலங்கினார் நடேசன்’’ என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

தமிழறிஞர் இரண்டாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், விளக்கத்தையும் சொன்னார், ‘‘கண்ணோட்டத்து உள்ளது உலகு இயல்; அ∴து இலார் உண்மை நிலைக்குப் பொறை’’, ‘‘சபையோர்களே, கண்ணோட்டம் என்ற இரக்கம் சிலரது மனதில் இருப்பதால் தான் உலகம் இன்பமாகத் தெரிகிறது. இரக்கமில்லாதவர்கள் பூமிக்குச் சுமையாக இருக்கிறார்களே தவிர அவர்களால் அவர்களுக்கோ, அவர்களது இனத்தவர்களுக்கோ பயனில்லை. அவர்கள் பூமிக்குப் பாரமானவர்கள். நடேசன் சொன்னார், ‘‘ஐயா, தாங்கள் பலருக்கு உதவி செய்திருக்கிறீர்கள். பாடசாலைகளுக்கு நீங்கள் செய்த உதவிகள் பல. அப்படிப்பட்ட நீங்கள் உதவுவீர்கள் என்ற நம்பிக்கையில் தான் நான் இங்கு வந்தேன். மிக்க நன்றி ஐயா, உங்கள் வம்சம் ஏழேழு பிறவிகளிலும் சுபீட்சமாக வாழும்’’ என்று கூறி நடேசன் கண்ணீர் மல்க அவரை வணங்கினார்’’ என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

தமிழறிஞர் மூன்றாவது குறளைப் பாடி அதற்கான உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொன்னார், ‘‘பண் என் ஆம் பாடற்கு இயைபு இன்றேல் கண் என் ஆம் கண்ணோட்டம் இல்லாத கண்’’, ‘‘சபையோர்களே, பாட்டோடு பொருந்தாத இசையால் பயனில்லை. அது போலக் கண்ணோட்டம் என்று சிறப்பித்துக் கூறப்படும் இரக்கம் இல்லாதவர்களால் எந்தப் பயனும் இல்லை. ஆதிகாலத்தில் நாட்டை ஆண்ட அரசர்கள் நல்லவர்கள், தீயவர்கள், கற்றவர்கள், மேலானவர்கள், போன்றவர்களின் கண்களைப் பார்த்தே அவர்களின் குணாதியங்களை முடிவு செய்வர். கண்களைப் பார்த்து அவரது முடிவுகளை அறிய முடியாத அரசர்கள் அரசர்கள் அல்ல பேடிகள் என்று பெரியோர் சொல்வர்’’.

‘‘கஜேந்திரன் சொன்னார், ‘‘ஐயா, நீங்கள் கடமை தவறாத உத்தமமான ஆசிரியர். உங்களிடம் கற்ற மாணவர்கள் பெரும் பேறு பெற்றவர்கள். தயாள குணம்மிக்க உங்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்யாவிட்டால், நான் வணங்கும் கடவுளே என்னைத் தண்டிப்பார். விதிவசமாக என்னிடம் பணம் சேர்ந்துவிட்டது. அதை நல்லமுறையில் பயன்படுத்தி வருவதால், இறைவன் எனக்கு எந்தக் குறைகளையும் வைத்ததில்லை. ஒரு கிணற்றில் நூறு வாளி தண்ணீரை எடுத்தாலும், உடனே அது ஊறிவிடும். அதுபோலத் தான் எனது பணமும், ரமேசுக்குச் செலவு செய்ய வேண்டிய பணம் நேற்றே எனக்குக் கிடைத்துவிட்டது. அதனால் அதைப்பெற யார் வருவார் எனக் காத்திருந்தேன். எனது

மனத்தை முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்ததால், ஒரு செயல் நடைபெற முன்பே, எனக்கு அதை இறைவவன் அறிவித்து விடுவார்'' என்றார் கஜேந்திரன்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

தமிழறிஞர் நான்காவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், கதையையும் சொல்லலானார், ''உளபோல் முகத்து எவன் செய்யும் அளவினால் கண்ணோட்டம் இல்லாத கண்'',''சபையோர்களே, எல்லோருடைய முகத்திலும் கண்கள் இருக்கின்றன. ஆனால் எல்லோரது முகத்திலும் உள்ள கண்களில் கண்ணோட்டம் என்ற இரக்கம் இருப்பதில்லை. கண்ணோட்டமில்லாத கண்களால் யாருக்கும் எப்பயனும் வராது''.

நடேசன், கஜேந்திரனுக்குச் சொன்னார், ''ரமேசின் இனத்தவர்கள் பலர் நல்ல நிலையில் இருக்கிறார்கள். அவர்களிடம் சென்று ரமேசின் தாய் உதவி கேட்டபோது அவர்கள் பேசக் கூடாத வார்த்தைகளால் அவளைத் திட்டி அனுப்பினர். ரமேசின் தந்தை செய்யும் குற்றங்களுக்கு மனைவி காரணகர்த்தா அல்ல. ரமேஸ் சிறுவன். அவனது முன்னேற்றத்தைத் தடைசெய்யவே அவர்கள் அவ்வாறு நடந்து கொண்டனர். கண்ணோட்டம் இல்லாத கண்கள் இராட்சதக் கண்கள். அதில் இரக்கம் உண்டாகாது. அதனால் தான் தங்களைக் கண்டு இதற்கொரு தீர்வு காண வந்தேன். நான் உங்களைச் சந்திக்க வந்தது யாருக்கும் தெரியாது. உங்கள் பதிலால் எனது நெஞ்சம் நிறைந்து விட்டது'' என்று வணங்கினார் நடேசன், என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

தமிழறிஞர் ஐந்தாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், அதற்கான கதையையும் கூறத் தொடங்கினார், ''கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அ.்.து இன்றேல் புண்என்று உணரப்படும்''. ''சபையோர்களே, ஆபரணங்கள் பல வகைப்படும். பெண்கள் ஆபரணங்கனைள அணியாத உறுப்புக்களே இல்லை. கை விரல்கள், கால் விரல்கள், கழுத்து, மார்பு, இடை, காது, மூக்கு இப்படி எங்கெங்கு ஆபரணங்களை அணியமுடியுமோ அங்கங்கெல்லாம் அணிகின்றனர். ஆனால் அணிய வேண்டிய முக்கியமான இடங்களுக்கு ஆபரணங்களை அணிவதில்லை. கண்களுக்கு ஆபரணம் கண்ணோட்டம் என்ற இரக்கம். அந்த ஆபரணத்தை முறைப்படி அணிந்தால், அன்பு, கருணை, பாசம், பற்று, விருப்பு என்ற பல்வேறுபட்ட விலை மதிக்க முடியாத ஆபரணங்கள் தானாக வந்து சேரும். அடுத்தது நாக்குக்கு உரிய பெறுமதி மிக்க ஆபரணம் உண்மை. இரண்டு ஆபரணங்களையும் அணிந்தால் உலகம் உங்கள் கைக்குள் வந்து சேரும். வாழ்வில் எந்தக் குறைகளும் வராது.

''அப்போது கஜேந்திரன் சொன்னார், ''என்னை வந்து சந்திப்பவர்கள் எல்லோரும் தமக்குப் பெருந்துன்பங்கள் ஓயாது வருகின்றன என்று கூறுவர். ஆனால் எனக்கு ஒருபோதும் துன்பம் வருவதில்லை. ஒருமுறை எமது வனத்திற்கு ஒரு சுவாமியார்

இமய மலையில் இருந்து வந்தார். அவர் ஒரு வருடமாக உணவு உண்ணவில்லை. இங்குதான் ஒரு வீட்டில் உணவு உண்பேன் என்று கூறிவிட்டு வந்தார். சுவாமியார் அடியார்கள் பலருடன் வந்தார். பிராமணர்கள் தமது வீடுகளில் விதம் விதமான உணவுகளைச் சமைத்து வைத்திருந்தனர். காட்டில் உள்ள பெரியவர்கள், ஞானிகள், தவசிகள், முனிவர்கள் அனைவரும் உணவுடன் சுவாமியாரை வரவேற்கத் தயாராக இருந்தனர்.

‘‘சுவாமியார் நேரே எனது வீட்டுக்கு வந்து ‘‘சாப்பாட்டைக் கொண்டு வா’’ என்றார். நான் அவரை எதிர்பார்க்கவில்லை. எனினும் சாப்பாட்டைத் தயாரித்து வைத்திருந்தேன். அவரும் சீடர்களும் வந்து தங்கி இளைப்பாறிவிட்டு உணவை உண்டு விட்டுச் சென்றனர். செல்லும்போது சுவாமியார் சொன்னார், ‘‘எல்லோரும் தத்தமது செல்வநிலையைக் காட்டப் பெறுமதியான ஆபரணங்களை அணிந்திருந்தனர். கஜேந்திரனும் மனைவியும் பெரிதாக ஆபரணங்கள் அணியவில்லை. கஜேந்திரனின் மனைவி தாலிக்கொடியை மட்டும் அணிந்திருந்தாள். கண்களில் கண்ணோட்டம் இருந்தது. அதைவிடப் பெறுமதியான ஆபரணம் உலகில் எதுவும் இல்லை. அதனால் தான் நான் இங்கு உணவை உண்டேன்’’ என்று கூறினார்’’ என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

தமிழறிஞர் ஆறாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், அதற்கான கதையையும் கூறலானார், ‘‘மண்ணோடு இயைந்த மரத்து அனையர்; கண்ணோடு இயைந்து கண் ஓடாதவர்’’,‘‘சபையோர்களே சுவாமியாரின் வருகையை ஒட்டித் திரவியவனம் விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகள் யாவும் கூட்டித் துப்பரவு செய்து மாவிலை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கோவில்களில் பெரிய அளவில் பூசைகள் நடைபெற்றன. சந்திகளில் மேடைகள் அமைத்து பல்வேறு விதமான கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஒவ்வொருவரும் தத்தமது வீட்டுக்குத்தான் சுவாமியார் வருவாரென எதிர்பார்த்து விசேட அலங்காரங்கள் செய்திருந்தனர்’’.

‘‘சுவாமியார் திரவியவனத்தின் எல்லையில் இருந்து தனது சீடர்களுடன் நடந்து வந்தார். வரும்போது வனவாசிகள் கைகூப்பி வரவேற்றனர். சுவாமியார் ஒரு சிலரின் முகத்தை மட்டும் பார்த்து நடந்து வந்து கஜேந்திரனின் வீட்டுக்குள் நுழைந்தார். கஜேந்திரன் சுவாமியார் தனது வீட்டுக்கு வருவார் என்று எதிர்பார்க்காதபோதும் சுவாமியாரை வரவேற்பதற்கான நடவடிக்கைககளை மேற்கொண்டிருந்தார். சுவாமியார் கஜேந்திரனின் வீட்டுக்குச் சென்ற பின் வனவாசிகள் வெளியே கூடி நின்றனர்’’.

சுவாமியார் புறப்பட்டபோது அடியார்கள் அவரைச் சூழ்ந்து நின்றனர், ‘‘அடியார்களே, நான் வரும்போது உங்களின் கண்களைத்தான் பார்த்துக் கொண்டு வந்தேன். பெரும்பாலான கண்களில் அதன் ஆபரணமான கண்ணோட்டம் இல்லை. கண்ணோட்டம் இல்லாத கண்கள் பட்ட மரத்திற்குச் சமமாகும்’’ என்று கூறிவிட்டுச்

சென்றார் என்று கஜேந்திரனின் கூறினார்'' என்று கூறித் தனது உரையை நிறைவு செய்தார் தமிழறிஞர்.

தமிழறிஞர் ஏழாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், அதற்கான கதையையும் கூறலானார், ''கண்ணோட்டம் இல்லவர் கண் இலர்; கண் உடையார் கண்ணோட்டம் இன்மையும் இல்'' ,''சபையோர்களே கண்ணோட்டம் என்று சொல்லப்படும் இரக்கம் இல்லாத குருடர்களாவர். கண்ணோட்டம் உள்ளவர்களே கண்களை உடையவர்களாவர். சபையோர்களே, ஈஸ்வரி கூலி வேலை செய்பவள். அவள் தனது கணவனான இராகுலனது மூத்த சகோதரன் பெரிய வர்த்தகன். கோடீஸ்வரன். ஈஸ்வரி தனது கணவனின் நிலையைக் கூறி தனது மூத்த மகன் படிப்பில் கெட்டிக்காரன் அவனது கல்விக்கு உதவுங்கள் என்று பல முறை இரந்து கேட்டும் அவர்கள் உதவவில்லை.

ரமேஸ் படிப்பில் கெட்டிக்காரன். அவர்களது பிள்ளைகளுக்குப் படிப்பே ஏறாது. ரமேஸ் படித்துப் பெரியாளானால் தமக்கு அவமானம் எனக் கருதினர். அவள் அதை வந்து நடேசனிடம் கூறிய போது அவன் சொன்னான், ''அம்மா கடவுளை நம்புங்கள்.'' அவர் ஆவன செய்வார். ஏனையோர் உதவிகள், சமூகசேவைகள் செய்வதற்கும் கைம்மாறாக எதையும் பெற நினைப்பர். கடவுள் அப்படியல்ல. உங்களுக்கு உதவுவார். உங்களது கணவரின் சகோதரனும் அவனது மனைவியும் குருடர்கள். அவர்களுக்கு உலகின் நிலை தவறாகத்தான் தெரியும். கவலைப்படாதீர்கள்'' என்று நடேசன் ஆறுதல் கூறினார் என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

தமிழறிஞர் எட்டாவது குறளைப் பாடிவிட்டு அதன் உரையையும், விளக்கத்தையும், அதற்கான கதையையும் சொல்லத் தொடங்கினார், ''கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு உரிமை உடைத்து இவ்வுலகு'', ''சபையோர்களே, ''அம்மா கவலைப்படாதீர்கள். இங்கு ஆயிரக்கணக்கான வீடுகள் இருக்கின்றன. வீட்டுக்காரர்கள் ஒவ்வொருவரும் சுவாமியார் தமது வீட்டுக்குத்தான் வருவார் என நினைத்து வீடுகளைப் பெருக்கி சுத்தம் செய்து அலங்கரித்து வாசலில் தோரணங்கட்டி, பூரண கும்பம் வைத்து வரவேற்பதற்குத் தயாராக இருந்தனர்.'' கஜேந்திரன் பெரிதாகச் சுவாமியாரை எதிர்பார்க்கவில்லை. சுவாமியார் வீதியால் வரும்போது கூடி நின்றவர்களின் கண்களைத் தானே பார்த்துக் கொண்டு வந்தவர். கஜேந்திரனின் மனைவியின் கண்களில் தான் கண்ணோட்டம் இருந்ததைக் கண்டு அவர் அங்கே சென்றார். தத்தமது கடமைகளைச் சரிவரச் செய்து கொண்டு இரக்கமுள்ளவர்களாக வாழ்பவர்களுக்குத் தான் இவ் உலகம் சொந்தமானது. உரிமை உள்ளது. அவர்களுக்குத்தான் கடவுளின் அனுக்கிரகமும் கிடைக்கும். உங்கள் கணவரின் சகோதரன் பெரும் தனவந்தனாக இருக்கலாம் ஆனால் கண்ணோட்டம் இல்லையே. நான் ரமேசுக்கு வேண்டிய ஆலோசனைகள் யாவும் வழங்கியுள்ளேன். அவன் கட்டாயம் மருத்துவராவான். அதைப்பற்றி இனிக்

கவலைப்படாதீர்கள்'' என்று நடேசன் கூறினான் என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை பூர்த்தி செய்தார்.

தமிழறிஞர் ஒன்பதாவது குறளைப் பாடி அதன் உரையையும், விளக்கத்தையும், அதற்கான கதையையும் கூறலானார், ''ஒறுத்து ஆற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடிப் பொறுத்து ஆற்றும் பண்பே தலை'', ''சபையோர்களே, மிகவும் மோசமாகத் தன்னைத் தண்டித்தவர்களையும் மன்னித்து, இரக்கம் காட்டிப் பொறுத்துக் கொள்வது கண்ணோட்டம் உள்ளவர்களின் முறையாகும். சபையோர்களே, கஜேந்திரன் எந்த ஒரு செயலையும் ஆராயாது செய்யமாட்டார். ''தனது செயலில் தவறுகள் இருந்து யாராவது சுட்டிக்காட்டினால் அதை ஏற்றுக் கொள்வார். அவர் யாரையும் எதிரியாக நினைத்ததில்லை. ஆனால் அவரைப் பலர் எதிரியாக நினைக்கின்றனர். அதற்குக் காரணம் அறியாமையாகும்.''

கஜேந்திரன் தான் செய்யும் செயல்கள் அனைத்தையும் தெய்வத்திடம் ஒப்படைத்து விடுவார். பின்பு தெய்வ அருள் பெற்றவர் போலச் செய்வார். அதனால் செய்யும் தொழில்கள் யாவும் வெற்றியையே தரும். திரவிய வனத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு கொடுக்க விரும்பினார். அதற்காக இருநூறு ஏக்கர் வயலையும், தென்னந்தோப்பு ஒன்றையும் வாங்க விரும்பி இரண்டிற்கும் முற்பணம் கொடுத்தார். திடீரென்று முற்பணம் வாங்கியவன் தான் வயலையும் தோப்பையும் விற்கவில்லை என் கூறித் தான் வாங்கிய முற்பணத்தைத் திருப்பிக் கொடுக்க வந்தான். அவர் அதை வாங்காது கோவில் உண்டியலில் போடுமாறு கூறினார்''.

''வயலையும் தோப்பையும் இன்னொருவன் வாங்கிவிட்டான். கஜேந்திரன் கோபம் கொள்ளவில்லை. அது தனது மனைவியின் சகோதரனின் சதி எனத் தெரிந்து கொண்டார். அவரது மனைவியின் சகோதரன் வர்த்தகன். பட்டணத்தில் பெரியதொரு வியாபார நிலையம் வைத்திருந்தான். ஒரு நாள் இரவு மின்ஒழுக்குக் காரணமாக அந்த வர்த்தக நிலையம் முற்றாக எரிந்து சாம்பலாகிவிட்டது. அவருக்குப் பல இலட்ச ரூபா கடன் இருந்தது. கடன் கொடுத்தவர்கள் நெருக்கச் செய்வதறியாது அவர் கஜேந்திரனிடம் வந்த போது கஜேந்திரன் அவருக்கு உதவி செய்தார்.''

பலர் அவரை ஏசினர். அவரது மனைவி கூட அதை விரும்பவில்லை. அதனால் அவர் தனது மனைவிக்குச் சொன்னார்,'' எல்லாம் கடவுளின் செயல். அவனின்றி ஓர் அணுவும் அசையாது. தோப்பையும், வயல்களையும் வாங்கியவன் இப்போது என்னிடம் வந்து அதை வாங்குமாறு வற்புறுத்துகிறான். எனது குணம் உனக்குத் தெரியும். நான் எனக்குத் தீங்கு செய்தவனுக்கும் தீங்கு செய்வதில்லை. அதனால் கடவுள் எனக்கு தீங்கிளைக்க யாரையும் விடுவதில்லை'' என்று கூறினார் என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்.

தமிழறிஞர் பத்தாவது குறளைப் பாடிவிட்டு அதற்கான உரையையும், கதையையும், விளக்கத்தையும் கூறலானார், ‘‘பெயக்கண்டும் நஞ்சு உண்டு அமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்’’. ‘‘சபையோர்களே, எல்லோராலும் மதிக்கத்தக்க நாகரிகமான கண்ணோட்டத்தை உடையவர், தன்னோடு நன்கு பழகியவர் தம் கண்ணெதிரிரே நஞ்சினையிட்ட உணவைக் கொடுத்தாலும் அதை விரும்பிப் பெற்று உண்பர். சபையோர்களே, எல்லோரையும் நம்பி அவர்கள் மீது இரக்கம் கொண்டு வாழும் நாகரிகமான கண்ணோட்டத்தை உடைய வேந்தன் என்ற குரங்கு எல்லோருக்கும் உதவி செய்யும். அதன் நண்பன் கேசவன் என்ற நரி. ஆதவன் என்ற நரியை ஒருபோதும் கேசவனுக்குப் பிடிக்காது. வேந்தன் ஆதவனுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்து கொடுக்கும். ஆதவன் விபத்தொன்றில் அகப்பட்டு முன்னங்காலை இழந்திருந்தமையால், வேந்தன் அவன் பிள்ளைகள் கற்க உதவி செய்யும். ஆதவனின் பிள்ளைகள் கெட்டிக்காரர்கள். கேசவனின் பிள்ளைகள் கற்றலில் மிகவும் பின்தங்கியவர்கள்’’.

‘‘வேந்தன் தனவந்தர்களிடம் சென்று ஆதவனின் பிள்ளைகளுக்கு உதவுமாறு வேண்ட, அவர்கள் பல்வேறு விதமான உதவிகளையும் செய்து வந்தனர். இது வேந்தனுக்குப் பிடிப்பதில்லை. சொன்னாலும் அவன் கேட்கமாட்டான் என்பதால் அவனைக் கொல்ல வேண்டும் என்று நினைத்து நஞ்சூட்டப்பட்ட ஒரு பழத்தைக் கொண்டு சென்று, வேந்தனுக்குக் கொடுத்தது’’.

‘‘வேந்தன் அதை மிக்க மகிழ்வுடன் பெற்றுக் கொண்டது. அப்போது அங்கு வந்த வேந்தனின் நண்பனான குமார் என்ற மான், ‘‘நண்பா, கேசவன் நல்லவனல்ல. அவனுக்கு நீ ஆதவனின் பிள்ளைகளுக்கு உதவுவது பிடிக்காது. அவனோடு நீ நெருங்கிப் பழகியும் அவனது குணத்தை அறியவில்லை. இப்பழத்தை உண்ணாதே’’ என்று இரகசியமாக வேந்தனின் காதுக்குள் சொன்னது. வேந்தன் அதை நம்பவில்லை. தன்னோடு நெருங்கிப் பழகும் அவன் அப்படிச் செய்ய மாட்டான் என்று நினைத்தான். அத்துடன் கேசவன் கண்ணெதிரே நிற்கும்போது, அதை வீசுவது முறையல்ல என்று நினைத்து உண்ணத் தொடங்கியது’’.

குமாரோடு வந்த பாலன் என்ற பருந்து மரத்தில் இருந்து வேந்தனின் செயலைக் கவனித்துக் கொண்டிருந்தது. வேந்தன் பழத்தை வாயில் வைத்தபோது பாலன் பறந்து வந்து வேந்தனின் கையில் இருந்த பழத்தைத் தட்டிப் பறித்துக்கொண்டு வானில் பறந்தது. வேந்தன் அதைக்கண்டு சிரித்தான். பின் பாலன் கேட்டிருந்தால் கொடுத்திருப்பான். இவ்வாறு விளையாடுவது அவனது செயல் என்று சிரித்தது’’ என்று கூறித் தமிழறிஞர் தனது உரையை நிறைவு செய்தார்’’.

‘‘தமிழறிஞர் உரையாற்றி முடிந்ததும், மேடைக்கு வந்த கதிரேசன், ‘‘சபையோர்களே இம் மகாநாடு பற்றிய உங்களின் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுங்கள். தமிழறிஞர் விளக்கமளிப்பார்’’ என்று கூறிவிட்டுச் சென்றார்.

புலி ஒன்று எழுந்து சொன்னது, ''ஐயா, நான் பூங்காவனத்தச் சேர்ந்த மாதவன். மிகமிகச் சிறப்பாக இம் மகாநாடு நடைபெற்றது. எல்லோரும் காலையிலிருந்து மாலைவரை மகிழ்வுடன் உரைகளைக் கேட்டோம். பொதுவாக மகாநாடுகளில் மக்களால் மிகச் சிறந்த பேச்சாளர்கள் என மதிக்கப்படுபவர்களை அழைத்துத் தான் பேசும்படி கூறுவர். அவர்கள் புதிதாக எதையும் பேசமாட்டார்கள். முன்னர் பேசியவற்றையே பேசுவர். கேட்கச் சகிக்காது. இங்கு நல்ல விளகக்கங்களும், பொருத்தமான கதைகளும் கூறப்பட்டன. புதுமையான மகாநாடு. அடுத்த மகாநாட்டை விரைவில் நடத்தவும்'' என்று கூறிவிட்டு அமர்ந்தார்.

தமிழறிஞர் எழுந்து வந்து சொன்னார், ''நான் தமிழகம் சென்றபோது, ஒரு மகாநாட்டில் பேசியவர் திருக்குறளைப் பல்வேறு விதமான கலைவடிவங்களாக்க வேண்டும் என்று பேசினார். அதன்படி நாம் திருக்குறளைப் பல்வேறுபட்ட கலைவடிவங்களாக்கி வருகிறோம். முக்கியமாக அதைக் கதைவடிவங்களாக்கியுள்ளோம். கதைகள் காலத்தால் அழியாதவை. எப்படிப்பட்ட பேச்சாளனும், பேசுபவர் மேடையைவிட்டு இறங்கியதும் அது காற்றோடு கலந்து விடும். அதனால்தான் திருக்குறளைக் கதைகளாக்கும்படி வேண்ட, எமது பேச்சாளர் அனைவரும் அவற்றைப் பல்வேறு விதமான கதைகளாக்கினர். அவை உங்களுக்குப் பிடித்ததால் எமக்கு உற்சாகம் பிறந்துள்ளது. இதைப்பின்பற்றி ஏனைய பேச்சாளர்களும் பேச வேண்டும் என்பது தான் எமது விருப்பம்''.

அப்போது மாதவன் எழுந்து, ''ஐயா, குறுக்கிட்டுப் பேசுவதற்காக என்னை மன்னிக்கவும். சாதாரண மக்களுக்கு உங்களது கதைவடிவம் பிடித்துள்ளது. ஆனால் பெரும் அறிஞர்களுக்கும், தொலைத்தொடர்பு சாதனங்களை வைத்திருப்போர்க்கும் பிடிப்பதில்லை. அவர்கள் இம் மகாநாடு பற்றி எதுவும் கூறுவதில்லையே'' என்று கூறி அமர்ந்தான்.

தமிழறிஞர் சொன்னார், ''அதற்கு நாம் என்ன செய்வது? அறிஞர்கள் என்று சொல்வோரின் கூட்டங்கள் மகாநாடுகளுக்குத் தான் அவர்கள் சென்று அதை ஒளிபரப்புச் செய்கின்றனர். நாம் அழைத்தாலும் வருவதில்லை. இங்கு அவர்கள் பேசும் கூட்டங்களுக்கே பலரும் வருவதில்லை. எமது கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கில் வருகின்றனர். இரண்டாயிரம் வருடங்களாகத் திருக்குறளையே சொல்லி வருகின்றனர். தமிழறிஞரின் வீடுகளில் திருக்குறள் உண்டு. அதற்குச் சொன்ன உரையையே திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றனர். உரையைச் சொல்ல மேடைகள் தேவையில்லை, புத்தகமே போதும்''.

''எழுத்தாளர்களும் திரும்பத் திரும்ப அதையே எழுதி நூலாக வெளியிடுகின்றனர். இதைத் தவிர்ப்பதற்காகத்தான் நாம் குறளுக்குக் கதைகளைச் சொல்கிறோம். அதை அனைவரும் விரும்பியபோதும், அறிஞர் என்று தாம் தாம் நினைப்பவர்கள் தான் இதை ஏற்கவில்லை. உண்மையில் இவர்கள் அறிஞர்கள் என்றால்

எமது கதைகளை விமர்சித்தல் வேண்டும். விமர்சிக்கக்கூட இயலாதவர்களைப் பற்றிப் பேசுவதால் பயனில்லை. ஐயாயிரம். ஆண்டுகளுக்கு முன் ஓலைச்சுவடிகளில் எழுதிய நூல்களே இன்றும் வழக்கில் உள்ளன. அதுபோல இக்கதைகளும் இன்னும் ஐயாயிரம். ஆண்டுகள் சென்ற பின்பும் நிலைத்திருக்கும்''. என்றபோது சபையோர்கள் கைதட்டி ஆரவாரஞ் செய்தனர்.

அடுத்து ஒரு யானை எழுந்து நின்று, ''எனது பெயர் வசந்தன், நான் முல்லைவனத்தில் இருந்து வந்துள்ளேன். என்னுடன் ஐம்பது பார்வையாளர்கள் வந்திருக்கிறார்கள். எமது வனத்தைச் சேர்ந்த நண்பரொருவர் தனது கைத்தொலை-பேசியில் இம் மகாநாட்டை ஒளிபரப்புச் செய்வதால் பலர் அதைக் கண்டு களிக்கின்றனர். மிகமிக அருமையான மகாநாடு. அடுத்த மகாநாடு எப்போது ஆரம்பமாகும் என்று அறியத் தாருங்கள்'' என்று கூறி அமர்ந்தார். அதற்குத் தமிழறிஞர் பதில் அளித்தார், ''விரைவில் நடத்துவோம். பேச்சாளர்கள் பேசவேண்டியவற்றை நன்கு ஆயத்தம் செய்தல் வேண்டும். அதற்காகச் சில மாதங்கள் தேவைப்படுகிறது. விரைவில் அறிவிப்போம்'' என்று கூறிச் சபையோரை வணங்கி விடைபெற்றார்.

அடுத்துத் தலைவரான கதிரேசன் வந்து பேசினார், ''இன்றுடன் இம் மகாநாட்டை நிறைவு செய்கிறோம். பலரும் பாராட்டினார்கள். பேச்சாளர்கள் நன்கு திட்டமிட்டுப் பொருத்தமான கதைகளை உருவாக்கிப் பேசினர். கதை சொல்வதென்பது இயலாத காரியம். வியக்கத்தக்க செயல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவரால் எழுதப்பட்ட குறள்களுக்கு இதுவரை யாரும் கதை கூறவில்லை. இன்று எமது பேச்சாளர்கள் கூறியுள்ளனர். இது சரியா, பிழையா என்று எமக்குத் தெரியாது. இது பற்றி உலகெங்கும் பரந்துவாழும் அறிஞர்கள் கூட எதுவும் சொல்லவில்லை. மௌனம் சம்மதம் என்பது போலப் பேசாதிருத்தல் சரியானதென்பதன் விளக்கமாக எடுத்துக் கொள்கிறோம். இவ்வளவு நாட்களும் தொடர்ந்து வந்து மகாநாட்டிற்கு ஆதரவு தந்தமைக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன்'' என்று கூறி மகாநாட்டை நிறைவு செய்தார் கதிரேசன்.